# நல்லை குமரன் மலர் 1994



வெளியீடு:
யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற
சைவ சமய விவகாரக்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ7

உ

ஓம் குமாராய நம

# நல்லை குமரன் மலர்




பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்று
30-9-1994
யாழ்ப்பாணம்

# 1994

## சைவசமய விவகாரக் குழு,

*மாநகராட்சி மன்றம்,*

*யாழ்ப்பாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

மாநகராட்சி மன்றத்தின்

# சைவசமய விவகாரக் குழு உறுப்பினர் - 1994

காப்பாளர்: திரு. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.

தலைவர்: வைத்தியகலாநிதி இ. தெய்வேந்திரன்
சுகாதார வைத்திய அதிகாரி,
மாநகராட்சி மன்றம், யாழ்ப்பாணம்.

செயலாளர்: திரு. இ. இரத்தினசிங்கம்
பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர்

பொருளாளர்: திரு. இ. தாமோதரம்பிள்ளை
மின்சாரப் பொறியியலாளர்

நிர்வாக உறுப்பினர்: திரு. செ. இராசரத்தினம்
பிரதம எழுதுநர், மின்சார இறைவரி

திரு. த. சிவசுப்பிரமணியம்
பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தர்

திரு. க. ஸ்ரீ கிருஷ்ணகுமார்
பாதுகாப்பு உத்தியோகத்தர்

திரு. து. சோமசுந்தரம்
சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்

திரு. க. தயாபரன்
எழுதுவினைஞர், மாநகராட்சி மன்றம்

திரு. நா. ரகுமார்
சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்

கௌரவ பதிப்பாசிரியர்: ''தமிழ்மணி''
திரு. தெல்லியூர் செ. நடராசா
குமாரசாமி வீதி, யாழ்ப்பாணம்.

அச்சுப் பதிப்பு: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குமரன் அடியிணையில்...


* சமர்ப்பணம் 5
* எமது நோக்கு 7
* ஓம் ஸ்ரீ மகா கணபதியே போற்றி 11
* ஓம் ஸ்ரீ வித்தகனே போற்றி 13
* அன்பாசி 15
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர்
* ஆசியுரை 17
மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள்
* ஆசிச்செய்தி 21
பேராசிரியர் க. குணரத்தினம்
* ஆசியுரை 23
திரு. வே. பொ. பாலசிங்கம்
* ஆசிச் செய்தி 25
திரு. க. கனகராசா
* துள்ளி வருகுது வேல் 27
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
* நாவலரும் நல்லூரும் 29
திரு. க. சிவராமலிங்கம்
* தந்தைக்குக் குரு 33
திரு. சி. வேலாயுதம்
* முருகன் பெருமை 39
திரு. நா. க. சண்முகநாதபிள்ளை
* புனித நகரமாக்கப்படவேண்டிய நல்லூர் 41
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
* எல்லாம் அற என்னை இழந்தநலம் 45
பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி
* கழல்பணிய வினைநீங்கும் 47
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
* தீக்கூர்ந்த திருமேனியன் 49
பேராசிரியர் வி. சிவசாமி
* திருவிழாக்களின் நியமங்கள் 53
கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்
* நல்லூரும் நாவலரும் – சில வரலாற்று நினைவலைகள் 57
கலாநிதி சி. க. சிற்றம்பலம்
* திருமந்திரம் காட்டும் மனிதநேயம் 62
திருமதி கலைவாணி இராமநாதன்
* ஆறுமுக தத்துவம் 71
திருமதி நாச்சியார் செல்வநாயகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* எளிலான் ஒளி வேலான் 75
சொக்கன்
* ஆணவம் போக்கி அருளவோர் அவதாரம் 77
கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை
* ஓடக்காரன் 81
கவிஞர் சோ. பத்மநாதன்
* நல்லைக் குருமணி மணி ஐயா 83
பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா
* சூரன் பெற்ற பெருமை 89
திரு. த. சிவகுமார்
* நம்பி கை தொழுவோம் 93
திரு. ஆறு திருமுருகன்
* ஞான வழிநின்ற நல்ல குருநாதன் 97
திரு. நல்லையா விஜயசுந்தரம்
* வீசாயோ வேலை நீ 101
மானிப்பாயூர் வே. த. இரத்தினசிங்கம்
* மகா கும்பாபிஷேகம் - சில விளக்கங்கள் 103
ஆடியபாதன்
* திருமுருகன் திருவருள் 115
திரு. சி. சி. வரதராசா
* பல்கலைப் புலவர் திரு. க. சி. குலரத்தினம் 117
யாழ்ப்பாடி
* ஏற்றிடுவோம் வாரீர் 123
திரு. வே. த. இரத்தினசிங்கம்
* நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தானம்
பவ வருஷ மகோற்சவ விசேஷ தினங்கள் 139
* நன்றி 140

## உரிமம்

இம் மலரின்கண் பல்வேறு எழுத்தாட்சியாள அறிஞர் உரைகள் பொதிந்துள. இவற்றை ஆக்கியளித்த இப் பெருமக்களுக்கு தமது உளங்கனிந்த நன்றியை சைவவிவகாரக்குழுவும், கௌரவ பதிப்பாசிரியரும் தெரிவித்துக்கொள்ளுகின்றனர்.

இம் மலரில் வெளிவந்த ஆக்கங்களில் பொதிந்துள்ள கருத்துக்கள் — அபிப்பிராயங்கள் — அமைப்புக்கள் யாவும் அவற்றையாக்கியளித்தவர்களுடையதே யாகும் என்பதை மிக விநயமாகத் தெரிவிப்பதோடு—எழுத்தாட்சியாளர் தம் உரைகளைக் காலந்தாழ்த்தாது முன்னதாகவே அனுப்பி உதவுமாறும் வேண்டுகின்றனர்.

எல்லோரும் இன்புடன் வாழ்க — எல்லோர்க்கும் இறையருள் பொலிக.

வணக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

"உலகில் மெய்ப்பொருள் ஒன்றுதான் உளது. அதற்குப் பல பெயர்களை இட்டு சான்றோர் அழைக்கின்றனர்" என்று வேதம் கூறுகின்றது. கடந்து நிற்கும் சக்தி ஒன்று தான். அவர் பிரபஞ்சத்தைக் கடந்தும் இருக்கின்றார். பிரபஞ்சத்தின் உள்ளே பிரபஞ்சமாகவும் இருக்கின்றார். கடந்தும் உள்ளும் இருக்கின்றதாலே நாம் அவரை கடவுள் என்கிறோம்.

"ஏகம் ஸத் விப்ரா பகுதா வதந்தி!"

என்கின்றது வேதம். என்றென்றைக்கும் அழியாது இருப்பதால் இதுவே மெய்ப்பொருள் என்று உறுதியாக கூறப்படுகின்றது. பிரபஞ்சரூபமாகவும் அதற்கு அப்பாற்பட்டதாகவும் உணர்வோடு நிலைபெற்றிருப்பதாகவும் அதனிடத்திருந்து உயிர்கள் யாவும் உணர்வு பெறுவனவாகவும் அந்த மெய்ப்பொருள் ஆனந்தமே வடிவெடுத்து இயங்குவதாகவும் ஆநந்தம் வேறு - தெய்வம் வேறு என்று கூறக்கூடியதாக இல்லை என்பதும் பரம் பொருளாகும். சச்சிதானந்தமாய இப்பரம் பொருளை "*சதாசிவம்*" என்று சைவமும் "*மகாவிஷ்ணு*" என்று வைஷ்ணவமும் "*பராசக்தி*" என்று சாக்தமும் "*மஹாகணபதி*" என்று காணபத்தியமும் "*குமரன்*" என்று கௌமாரமும் "*பரப்பிரம்மம்*" என்று வேதாந்தமும் "*அல்லா*" என்று இஸ்லாமும் "*பரலோக பிதா*" என்று கிறீத்துவமும் "*டோ*" என்று சீன மதமும் கூறுகின்றன. பெயர்கள் வேறுபட்டாலும் பொருள் ஒன்றுதான். தெய்வம் என்பது அகண்ட சச்சிதானந்தம் என்பதை எல்லா மதங்களும் ஒப்புகின்றன.

"யம் சைவா: ஸமுபாஸதே சிவ இதிப்ரஹ்மேதி வேதாந்தினோ
பௌத்தா புத்த இதி ப்ரமாணபடவ: கர்தேஹி நையாகிகா:!
அர்ஹன்னித்யத ஜைனசாஸனரதா: கர்மேதி மீமாம்ஸகா:
ஸோஅயம்வோ விததாது வாஞ்சிதபலம் த்ரைலோக்ய நாதோ ஹரி:!!"

"சைவர் சிவமென்றும் வேதாந்திகள் பிரம்மமென்றும் பௌத்தர்கள் புத்தன் என்றும் நையாயிகர் கர்த்தர் என்றும் சைனர் அர்ஹன் என்றும் மீமாம்சகர் கர்மமென்றும் வணங்கும்பொருள் மூவுலகுக்கும் இறைவன் அத்தகைய ஹரி நமது விருப்பத்தை நிறைவேற்றுக" என்பதே இதன் பொருளாகும்.

பிரம்மமென்னும் மெய்ப்பொருளே நிர்க்குணப் பிரம்மமாகவும் சகுண பிரம்மமாகவும் விளங்குகின்றது. "ஹரிநமது விருப்பத்தை நிறை வேற்றுக" என்றுமேலே சுலோகம் கூறுவதும் அரியும் ஹரியும் ஒன்றே என்பதன் பொருள்தான்.

"ஏகே தேவ: கேசவோ வாசிவோவா"

என்று கூறப்படுவதுடன் ஸ்கந்த உபநிஷத் கூறுவதையும் நோக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சிவாய விஷ்ணு ரூபாய சிவரூபாய விஷ்ணவே
சிவஸ்ச ஹ்ருதயம் விஷ்ணு: விஷ்ணோஸ்ச ஹ்ருதயம் சிவ:
யதாந்தரம் ந பஸ்யாமி ததாமே ஸ்வஸ்திராயுஹி
யதாந்தரம் ந பேதாஸ்யு: சிவ கேசவயோர்ததா!!''

இன்னும் இப்படி பலவற்றை எடுத்தோதலாம். எல்லாம் ஒன்றேதான். ஆயினும் ஒவ்வொருவரும் தத்தம் மனத்தில் தமக்குரிய இஷ்டதெய்வமாக ஏதேனுமொரு தெய்வத்தைக் கொள்ளலாம். இங்கு பல விடயங்களை பேரறிஞர் தர வெளியிட்டுள்ளோம். குமரன் யார் என்பதுணர்ந்தோர் பேதங்களை பேசமாட்டார். இவைகளையெல்லாம் தெளிவுற விளக்கந்தரும் விடயங்கள் இம் மலரில் இடம்பெற்றுள. தமது வழிபடு தெய்வமாக எடுத்துக் கொள்ளும் மூர்த்தியை சதா காலமும் வழிபட மனத்தில் முதலில் உணர்வும் உணரும் பொருள் புறத்திலும் அதன்பின் தோற்றங்களுக் கப்பால் அகண்டாகார நிலையையும் அறியலாம். சாதனையாளருக்கு உதவும் முகமாக சில வழிபாடுகளும் தரப்படுகின்றன. நாதோபாசனை இக்கலியுகத்திற்கு சிறந்ததாகும்.

பக்திக்கு வழியை எடுத்தாளும் ஸ்ரீமத் சுவாமி விவேகாநந்தர் கூறுவதை நோக்குக .

''ஆண்டவனின் திருநாமத்தைப் பலகாலமும் சிந்திப்பதே பக்திக்கு வழி. மந்திரங்கள் சொற்கள்தான். எனினும் அவற்றை மீண்டும் மீண்டும் சொல்வது பயன்தரும். பண்டைய நாளில் நடந்த போரில் அஸ்திரங்கள் அல்லது பாணங்களுக்கு இருந்த சக்தியெல்லாம் மந்திரங்களால் ஏற்பட்டவையே. நம்முடைய சாஸ்திரங்களெல்லாவற்றிலும் இது ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. இவைகளெல்லாம் வெறும் கற்பனை என நினைப்பது மூடர் செயலேயாகும்''

நல்லைக்குமரன் மலர் மலர்ந்து உங்கள் கரங்களில் தவழ்வது அக்குமரனின் அருளாகும். முருகன் குமரன் அருள் எல்லோருக்கும் பொலிகவென வேண்டி அவன் பாதமலர் பணிந்து இம் மலரை சமர்ப்பிக்கின்றோம்.

''ஓம் பத்ரம் கர்ணேபி; ச்ருணுயாம தேவா:
பத்ரம் பச்யேம அக்ஷபிர் யஜத்ரா:
ஸ்திரை ரங்கை ஸ்துஷ்டுவாகும் ஸஸ்த நூபி
வ்யசேம தேவஹிதம் யதாயு:
ஓம் சாந்தி:! சாந்தி:! சாந்தி:!

''தேவர்களே! நாங்கள் காதுகளால் நல்ல வார்த்தைகளையே கேட்டுக் கொண்டிருக்க அருள்புரியுங்கள். கண்களால் நல்லவைகளையே காண வேண்டுகிறோம். எங்களுடைய உடலும் உறுப்புகளும் ஊனம் இல்லாமல் திடமாக இருக்க வேண்டும். சர்வேசுவரனை ஆராதித்திருக்க பக்தி நிறைந்த நிறை வாழ்வை எங்களுக்கு அருளுங்கள். ஆத்மா, தெய்வம், உலகியல் பற்றிய இன்னல்கள் இல்லாமல் அமைதியாக அடக்கத்துடன் நாங்கள் நலமுடன் வாழ அருள்புரியுங்கள்''

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
ஓம் ஸ்ரீஞானதீபாய நமஹ
நன்றி — வணக்கம்

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

கௌரவ பதிப்பாசிரியர்
சைவசமய விவகாரக்குழு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது நோக்கு



யாழ்மாநகராட்சி மன்றம் நல்லைப் பெருமானின் உற்சவகாலங்களில் ஆலய சுற்றாடலை சீர்மைப்படுத்தி - வழிபடவரும் பக்தர்களுக்கு இயன்றளவு சுற்றாடல் வசதிகள் - சுகாதார வசதிகள் போன்றவற்றை அமைத்து வந்தநாட்களில் சைவச்சிறார்களுக்கு ஊக்கமும் உணர்வும் அளிக்கவிரும்பி சைவஞ்சார்ந்த கேள்விக்கொத்துக்களை வெளியிட்டு, அவற்றுக்கு மாணவ இளைஞர்களை பங்காற்றத்தூண்டி - ஊக்கமளிக்க பரிசுகள் வழங்கி வந்தமை யாவரும் நன்கறிந்ததே. இந்ததொண்டுகளை இம் மாநகராட்சிமன்று தொடர்ந்தாற்றி வருகின்றது.

தமிழ்இளஞ்சிறார்- பிரதானமாக சைவச்சிறார் ஆன்மீகத்துறையில் ஈடுபாட்டை பெரிதாக கொள்ளமுடியாத கல்வியமைப்பு இந்த இடைக்காலத்தில் ஆட்சிக்கு வந்த அரசமைப்புகள் கொண்டுவந்து இவர்களது முன்னேற்றம் பாதிக்கப்படுவதை இங்குள்ள பெற்றோர் நன்குணரும் சந்தர்ப்பங்கள் பலவேற்பட்டன. இவற்றை - முன்னாட்களில் பாடசாலைகளில் எங்கள் சமயவளர்ச்சிக்கு கிடைத்த ஆதரவுகள் குன்றி வருவதையும் அவதானித்து, விழாக்காலங்களில் நல்லையில் இம்மன்று நடாத்தி வந்த சமய வினாவிடை போட்டிகளை விரிவுபடுத்த செயற்படுத்தக்கூடிய திட்டங்களை ஆராய்ந்துவந்தோம். எதிர்பாராத சந்தர்ப்பத்தில் இந்நோக்குகளைக் கொண்ட எம்மைச்சார்ந்த அன்பர் ஆதரவும் தர முன்வந்தமை இத்துறையில் எம்மை மேலும் சிந்திக்கத்தூண்டியது. எங்கள் சிந்தனையில் தோன்றியவற்றை செயற்படுத்தமுடியாத சூழல் அமைந்திருந்தபோதிலும் ''முயற்சி திருவினை ஆக்கும்'' என்பதற்கமைய, மிகவும் குறைந்த அளவிலாகுதல் சில செயற்பாட்டை ஆக்கவிழைந்தோம். அதன் விழைவாகவே ''**நல்லை குமரன் மலர்**'' பிறந்தது.

மாதந்தோறும் - இன்றேல் மூன்று மாதத்திற்கொரு முறை, ஆறுமாதத்திற்கொரு முறை எனச் சிந்தித்து - நிதிவசதி பிற வசதிகள் அமைவதன் இடர்கள் காரணமாக ஆண்டுக்கொரு முறை விழாவுடன் இம்மலரை வெளியிடலாமென முடிவு செய்தோம். இக்காலகட்டத்தில் புனிதநோக்கங்களுக்கு பேருக்கமளிக்கும் உந்துசக்தியாக எங்கள் மன்றின் ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் கைகொடுத்தாதரித்ததும் மன்றில் அமைந்திருந்த சைவ சமயசார்பான - ஆலய உற்சவகால தொண்டுக்குழுவை - அத்தொண்டர்கள் ஏகமாக உளங்கொண்டு செயலாற்ற முன்வந்ததை துணையாகக்கொண்டு ''சைவசமயவிவகாரக்குழு'' வாக அதனை மாற்றியமைத்து செயற்பட்டோம். உற்சவகாலத்தில் கேள்விக்கொத்துக்களுக்கு இளஞ்சிறார் விடையளிப்பதுடன் நிற்காது, வினாவிடைப் போட்டி, கட்டுரைப்போட்டி, கவிதைப்போட்டி என்று பல்வேறு துறைகளிலும் செயற்பாட்டுகளை விரிவடையச் செய்தும் ஆன்மீகத் துறைபரப்பும் ஆரம்பசாதனமாக குமரன்மலரை செயற்படுத்துவதென்றும ஊக்க முழுமுடையார் உதவியுடன் ஆரம்பித்தோம்,

''வைத்தியத்துறைக்கும் ஆன்மீகத்துறைக்கும் தொடர்பில்லையே! இப்படியான செயற்பாடு இத்துறையால் கவனம் ஈர்க்கப்பட்டதேன்?'' என்ற வினாஎழுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பப்பட்டதற்கும் துணைநிற்கவந்தவர் ஒருவரும் எமது கருத்தையே கெண்டிருந்தமையும் இதற்கேற்றபதிலைக் கூறவைத்தது,

வணங்க வேண்டிய தவச்செல்வங்கள் - வழிகாட்டிய முன்னையவர்கள் - நாம் வாழ்ந்து வரும் முன்னோர் அடிச்சுவடுகள் – நால்வரோடு சித்தர்களும் ஞானப்பழங்களும் தெய்வநம்பிக்கையையும் சிவமணத்தையும் சைவத்தையும் பரப்பிய சிவயோகிகளும் பன்னூல்களிலும் பொழிந்து கிடக்கும் ஆத்மீகதத்துவார்த்த விளக்கங்களும் மற்றவர் அறியாது மறைந்து கிடக்கும் மாணிக்கமலைகள் அருளும் செயல்களும் பன்னூல்களிலும் – பரவிக்கிடக்கும் திருமுறைகளில் கூறப்படும் ஆத்மீக சிகிச்சைகளும் எல்லாவற்றுக்கும் மேலாக புண்ணிய சரித்திரங்களும் புனிதநூல்களும் தந்த ஊக்கமுமே வைத்தியத்துறையை இந்த ஆன்மீகத்துறைக்குள் இழுத்துவிட்டது. திருமுறைகளை முறையாகப்பாடுவதால் - பாடுவதைக் கேட்பதால் - பாடுவிப்பதால் எத்தனையோ வித நோய்களுக்கு அவையே மருந்தாக அமைந்துள்ள செயல்களை முன்னோர் கூறிவைத்துள்ளதால் மட்டுமன்றி எங்காலத்தில் பல இடங்களிலும் நடந்த செயற்பாடுகளாலும் உற்றுணர்ந்து அறிந்துமுள்ளோம். ''உருவேறத் திருவேறும்'' என்பதற் கொப்ப ஒரு பாடலை முறையாக - பண்ணோடு நிரை தப்பாது பாடக் கூடிய ஒருவர் பாட, குறித்தநோய் அந்நோயாளருக்கு தொல்லை கொடுப்பதிலிருந்து அவர்விடுபட்டுள்ளது அனுபவம் தரும்பாடமாகின்றது. பழைய திருமுறைகளில் எத்தனையோ சம்பவங்கள் உள. புதிதாகவும் நடந்து வருகின்றன. திருமுறைகளைப் பண்ணோடு- முறைப்படி பாடி பயிற்சிபெற இளைஞருக்கு சந்தர்ப்பம் வழங்கவும் இந்த சைவ விவகாரக் குழு செயலாற்றத் தொடங்கி இப்பொழுது ''பண்ணிசை வகுப்பு'' ஒன்றையும் ஆரம்பித்துள்ளது பெருமைதரும் விடயமாக இருக்குமென நம்புகின்றோம்.

சலரோகம் என்னும் நோயால் இன்று மக்கள் படும்வாதனை மிகவதிகம். அதற்கு நிவாரணமாக பின்வரும் அம்பிகை வர்ணனைச் சுலோகம் உறுதியாக சுகந் தரும் என்பதை அனுபவம் உணர்த்திய சித்தத்துறை வைத்தியர் எடுத்துரைக்கின்றார். இதனை தினமும் மூன்றுமுறை - ஒன்பதுமுறை - இயன்றவர்கள் இருபத்தொரு முறை உருப்போட்டால் பலன் உடனுக்குடன் கிடைக்கும்.

''கதைர் - மாணிக்யத்வம் ககனமணிபி: ஸாந்த்ர - கடிதம்
கிரீடம் தே ஹைமம் ஹிமகிரி – ஸுதே கீர்த்தயதிய:/
ஸ நீடேயச்சாயா - ச்சுரண - சபலம் சந்த்ர - சகலம்
தனு: சௌனாஸீரம் கிமிதி ந நிபத்னாதி திஷணாம்!!

இது தேவியின் கிரீடவர்ணனை. இதன் பொருள் – ''இமயமலையின் (அரசன்) பெண்ணே! மாணிக்கங்களாக உன் சேவையின் பொருட்டு உருவமடைந்துள்ள பன்னிரு ஆதித்தியர்களால் நெருக்கமாக இழைக்கப்பட்ட உன்னுடைய தங்கக்கிரீடத்தை எவன் வர்ணிக்கப் புகுகின்றானோ அவன் கிரீடகோளத்திலுள்ள மாணிக்கங்களின் காந்தியால் விசித்திர வர்ணமுள்ளதாகத் தோன்றும் சந்திரகலையை இந்திரனுடைய வில் என்ற கருத்துதை வர்ணனையில் எப்படிப் பொருத்தாமலிருக்க முடியும்'' என்பதாகும். இந்தப்பாடலை மேற்றரப்பட்ட சமஸ்கிருதமொழியில் உருப்போட இயலாதவர்களுக்காக அதனையே தமிழில் தந்துள்ள ஒரு பேரறிஞர் விளக்கப்பாடல் தரப் படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அந்தரம்மணித் தபனர் பலமணியின் வடிவெடுத்து
அமரும் உனது அம்பொன் முடிமேல்
இந்துகலை நவமணியின் ஒழுகு பல நிறம் அடைந்து
இலகும் அதிசய வடிவினால்,
சந்த்ரகலை நன்றுநன்று என்பர்சிலர்; அன்றுஅன்று
சந்த்ரகலை இந்த நிறமோ
இந்த்ரசிலை என்பர் சிலர்; ஆதலால்
யாது என வழுத்த உமையே''

இப்படியாக குன்மரோகம், க்ஷயரோகம், பயம் – இப்படியாக எந்தத்துறைக்கும் ஈடிணையற்ற நிவாரணம் வழங்கும் வல்லபமுள்ள பாடல்கள் திருமுறைகளிலும்புனித நூல்களிலுமுண்டு என்பதை எடுத்துக் காட்டவும் மூலிகைகளில் எத்தனை எத்தனை வகைகள் – என்னென்ன ரோகங்களுக்கு அவைகள் உதவும் – என்னென்ன முறைகளில் அவைகளிலிருந்து நோய்களைத் தீர்க்கும் மருந்துகளை ஆக்கலாம் என்றெல்லாம் மக்களுக்கு வழங்க இவ்வெளியீட்டைப் பயன்படுத்தலாம் என்னும் உளத்தே எழுந்த ஆர்வமும் ஒன்றாகும். மேலைநாட்டு வைத்தியத்துறைக்கும் இவற்றுக்கும் சம்பந்த முண்டாவெனும் வினா எழும்பும் என்பதும் புரிகின்றது. நூல்களைப் பரக்கப் படிக்கும் ஆற்றலை நாம் வளர்த்தால் – ''எந் நாட்டவர்க்கும் இறைவா போற்றி'' என்று அன்று மாணிக்கவாசகர் பாடிய பாடலின் சுவை – கருத்து நன்கு புரியும். தென்னாடுடைய சிவனையே அங்கு அவர் விளித்துள்ளார்.

மக்களுக்காக, மக்களால் அமைக்கப்பட்ட மன்றுதான் மாநகராட்சி மன்றம். சூழ்நிலை காரணமாக நிலைகளில் மாற்றம் இருக்கலாமாயினும் இது மக்கள் மன்றமேயாகும். – மக்களுக்கு எந்தெந்த வழிகளில் தொண்டுகளாற்றலாம் – சேவைகள் புரியலாம் என்பதை சிந்தித்து செயற்படுத்துவது இம் மன்றிலுள்ளோர் பெருங்கடன் என்பது எம்துணிவு. எங்களுக்கு இவற்றை முறைப்படி செயலாக்க உதவி புரியும் குணப்பண்பும் செயற்பண்பும் ஊக்கமும் உடைய ஆணையாளர் அமைந்ததும் முருகன் அருட்பிரவாகமே தான் என்பதும் ஐயப்பாடற்றதாகும். பண்ணிசைத்துறை பாவலர் பலரும் வைத்தியத்துறை இத்தகைத்தய பணியில் பெரிதும் ஈடுபடலாம் என்பதையும் உறுதி செய்துள்ளனர். மக்கள் ஊக்கமும் உரனுந்தரின் இம்மலரை அரையாண்டு அல்லது ஆண்டில் நான்கு மலர்கள் அல்லது மாதமொரு மலராக தருதற்கும் உளமுண்டு. மக்களுக்காக, மக்கள் நலங்களுக்காக அமைந்த இம்மன்றம் இத்துறையில் சிறப்புற அமைவதற்கு மக்கள்தான் முன்வர வேண்டும் – அவர்கள் ஊக்கமும் உரனுந்தரவேண்டும். இன்று சைவச் சிறார்கள் கொண்டுள்ள ஊக்கத்தினை வளர்க்க பெற்றோரும் பெரியோரும் பெரிதும் உழைக்க வேண்டும். ''தெய்வத்தாலாக தெனினும் முயற்சிதன் மெய்வருந்தக் கூலிதரும்'' என்பதற்கமைய வாழ்ந்த தவயோகி ஒருவர் தம் வாழ்வில் வாழ்ந்து காட்டிய முறைகளை ஆராய்ந்தால் எத்தனையோ உண்மைகளை உணரலாம். நாற்பதாம் ஆண்டிலிருந்து அவரை நன்கறிந்த ஒருவர் அவர்பற்றிக் கூறியவற்றை செவிமடுத்துள்ளதோடு அந்தத் தவயோகியின் வாழ்வு பற்றி நாமும் அறிந்துள்ளோம்.

மக்கள்வாழ வழிகாட்டும் வாழ்வுப் பிரசுரங்கள் அவசியம். நல்லை கந்தனின் விழாக்காலத்திலாகுதல் ஆண்டுக்கொருமுறை இம்மலரை வெளிக் கொணர்ந்துதவும் பாக்கியங் கிடைத்தமைக்கு முருகன் திருப்பாதத்தை வணங்குகின்றோம். தொண்டுக்குத் துணைநிற்க மக்களையும் வேண்டி பெருமான் அருளையும் கோரி நோக்கத்தை நிறைவுறுத்துகின்றோம்.

நன்றி

வைத்தியகலாநிதி இ: தெய்வேந்திரன்
– தலைவர் –
சைவசமய விவகாரக்குழு

யாழ். மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தர்ஸன்

மானிப்பாய்



எல்லோர்க்கும்

நல்லைக் குமரன் அருள் பொலிக

# சுந்தர்ஸன்

மத்திய சந்தை — மானிப்பாய்.



## ஓம் ஸ்ரீ மகா கணபதியே போற்றி

| | |
|---|---|
| ஓம் கஜானனாய நம: | ஓம் ஆனைமுக அழகனே போற்றி |
| ஓம் விக்னராஜாய நம: | ஓம் இடரழிக்கும் அரசே போற்றி |
| ஓம் சித்திப்ரதாய நம: | ஓம் தொடுத்தசெயலை நிறைவு செய்பவனே போற்றி |
| ஓம் கணாதிபாய நம: | ஓம் உயிர்க்கூட்டத் தலைவா போற்றி |
| ஓம் பார்வதீதனயாய நம: | ஓம் பார்வதி புத்திரனே போற்றி |
| ஓம் ஹேரம்பாய நம: | ஓம் போற்றுதற்குரிய வீரா போற்றி |
| ஓம் ஏகதந்தாய நம: | ஓம் ஒற்றைச் கொம்பனே போற்றி |
| ஓம் வரப்ரதாய நம; | ஓம் விரும்பியதை நல்குபவனே போற்றி |
| ஓம் ஓம் அக்ரபூஜ்யாய நம: | ஓம் முதன்மை வணக்கத்துக்குரியவனே போற்றி |
| ஓம் பாலகப்ரியாய நம: | ஓம் குழந்தைகளுக்கு அன்பனே போற்றி |
| ஓம் நித்யப்ரஹ்ம சாரிணே நம: | ஓம் தாய்குலத்தை மாதாவாக பார்ப்பவனே போற்றி |
| ஓம் அஸ்வத்த மூல வாஸாய நம: | ஓம் அரசநிழலில் அமர்ந்திருப்பவனே போற்றி |
| ஓம் யோகிஹ்ருந் நிவாஸாய நம: | ஓம் யோகிய ருள்ளத்தில் வீற்றிருப்பவனே போற்றி |
| ஓம் மோதக பக்ஷகாய நம: | ஓம் மோதகப்பிரிய உண்பியே போற்றி |
| ஓம் தூர்வாங்குரா ராத்யாய நம: | ஓம் அருகம்புல் கொண்டு அர்ச்சிக்கப்படுவோனே போற்றி (வணங்கப்படுவோர்) |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஓம் வித்யா ராஜாய நம: | ஓம் கல்விக்கு அரசனே போற்றி |
| ஓம் மூஷகவாஹனாய நம: | ஓம் பெருச்சாளி வாகனனே போற்றி |
| ஓம் விநாயகாய நம: | ஓம் நற்றலைமை தவமே போற்றி |
| ஓம் அக்ஞான நாசகராய நம: | ஓம் அறியாமையை நீக்குபவனே போற்றி |
| ஓம் பித்ருபக்திமதே நம: | ஓம் தந்தையிடம் பேரன்புபூண்டவனே போற்றி |
| ஓம் வீரகணபதயே நம: | ஓம் ஆற்றலணித் தலைவா போற்றி |
| ஓம் ஞானகணபதயே நம; | ஓம் ஞானியர் குழுத்தலைவா போற்றி |
| ஓம் ஸித்தஸேவிதாய நம: | ஓம் பக்குவப்பட்டவர் போற்றும் தலைவா போற்றி |
| ஓம் க்ரந்தக்ருதே நம: | ஓம் நூல் ஆக்குபவனே போற்றி |
| ஓம் லம்போதராய நம: | ஓம் தொந்திவயிற்றோனே போற்றி |
| ஓம் மஹேச்சவரா மோதகரா்ய நம: | ஓம் மகேஸ்வரனை மகிழ்வித்தவனே போற்றி |
| ஓம் ஓங்கார ரூபாய நம: | ஓம் என்னும் மந்திர வடிவினனே போற்றி |

"கஜானனம் பூதகணாதிஸேவிதம்
கபித்த ஜம்பூபலஸாரபக்ஷிதம்!
உமாஸுதம் சோக வினாசகாரணம்
நமாமி விக்னேச்வர பாதபங்கஜம்!!"

யானை முகத்தனை, உயிர்க் கூட்டங்களால் சேவிக்கப்படுபவனை, விளாம்பழ நாவற்பழ ரசத்தை அருந்துபவனை, உமையின் மைந்தனை, துயரத்தை அழிக்க ஏதுவாயிருப்பவனை, விக்னங்களையெல்லாம் அழிப்பவனை, அவனுடைய தாமரை திருவடிகளில் வணங்குகின்றேன்.





# ஓம் ஸ்ரீ வித்தகனே போற்றி

| | |
|---|---|
| ஓம் குமாராய நம: | ஓம் குமரக்கடவுளே போற்றி |
| ஓம் பாலசுந்தராய நம: | ஓம் குழந்தை முருகனே போற்றி |
| ஓம் கார்த்திகேயாய நம: | ஓம் கார்த்திகை மாதர் வளர்ந்தவனே போற்றி |
| ஓம் குக்குடத்வஜாய நம: | ஓம் சேவற்கொடியுடை செம்மலே போற்றி |
| ஓம் கலிப்ரத்யக்ஷதேவாய நம: | ஓம் கலிகால கண்கண்ட தெய்வமே போற்றி |
| ஓம் குகாய நம: | ஓம் உள்ளக்குகையிலிருப்பவனே போற்றி |
| ஓம் கௌரீதனயாய நம: | ஓம் அம்பிகையின் மைந்தனே போற்றி |
| ஓம் கிரிநிவாஸாய நம: | ஓம் மலையில் வசிப்பவனே போற்றி |
| ஓம் அக்னிஸூனவே நம: | ஓம் தீயில் தோன்றியவனே போற்றி |
| ஓம் தண்டபாணயே நம: | ஓம் கரதண்டமுடையவனே போற்றி |
| ஓம் ஞானபண்டிதாய நம: | ஓம் ஞானவடிவ வித்தகனே போற்றி |
| ஓம் ஸ்கந்தாய நம: | ஓம் துள்ளிக்குதிப்பவனே போற்றி |
| ஓம் வல்லி தேவசேனாபதயே நம: | ஓம் வள்ளிதெய்வயானை பதியே போற்றி |
| ஓம் சரவணபவாய நம: | ஓம் நாணற்காட்டில் தோற்றியவனே போற்றி |
| ஓம் வேதத்வோபதேசகாய நம: | ஓம் வேதத்தினுட் பொருளை உபதேசித்தவனே போற்றி |
| ஓம் தாரகஜேத்ரே நம: | ஓம் தாரகன் என்ற அரக்கனை வென்றவனே போற்றி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஓம் மஹேச்வரகுரவே நம: | ஓம் சிவனார்க்கு குருவே போற்றி |
| ஓம் ஷடானனாய நம: | ஓம் ஆறுமுகனே போற்றி |
| ஓம் ஸ்வாமிநாதாய நம: | ஓம் தந்தைக்குத் தலைவனாயவனே போற்றி |
| ஓம் சிகிவாஹாய நம: | ஓம் மயில்வாகன முடையவனே போற்றி |
| ஓம் வேதமந்த்ரஸ்வரூபாய நம: | ஓம் வேதமந்திரத்தின் வடிவினனே போற்றி |
| ஓம் ஸேனான்யே நம: | ஓம் தேவபடைத் தலைவனே போற்றி |
| ஓம் ருத்ரஸம்பவாய நம: | ஓம் சிவனார் மகனே போற்றி |
| ஓம் ரூபலாவண்ய விக்ரஹாய நம: | ஓம் அழகுத்தெய்வம் முருகனே போற்றி |
| ஓம் ஸுராராத்யாய நம: | ஓம் தேவர்களால் வணங்கப்படுபவனே போற்றி |
| ஓம் நாத பிந்து கலாதீதாய நம | ஓம் இயற்கைக்கப் பாற்பட்டவனே போற்றி |
| ஓம் ஸுப்ரஹ்மண்யாய நம: | ஓம் பிரமத்தைச் சார்ந்திருப்பவனே போற்றி |






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் வழங்கும்

## அன்பாசிச் செய்தி

சைவ செம்மனச் செல்வர்களே!

யாழ். மாநகராட்சி மன்ற சைவசமய, விவகாரக்குழு அன்பர்கள் இம் முறையும் "நல்லைகுமரன் மலர்" சஞ்சிகையை வெளியிட விருப்பதறிந்து பெரிதும் மகிழ்வுறுகிறோம். சமயத் தொண்டுகள் பல அவ்வப் போது மலர்ந்து பின்னர் வாடிவிடுவதும் உண்டு. அவை போலல்லாது கந்தப்பெருமானின் கருணை நிதி உந்தப்பெற்று அன்பர்கள் உள்ளங்களில் இவ்வகை நற்கருமங்களை ஆற்ற எண்ணங்கள் உதித்தெழும், சத்சங்கமாக ஒன்றிணைந்து செய்வன நனிதே நிறைவுறும். அவ்வகையில் ஆண்டுதோறும் இக்கைங்கரியத்தைத் தளர்வுறாது செய்து வருவது ஒரு சாதனை. கலியுகவரதனாம் கந்தப்பெருமானைப் புகழ்ந்தும் பாடியும், முருகன் திருவருட் பெருமை கூறும் கட்டுரைகள் பொதிந்து திகழும் சிறு நூலாக அமைவுறினும் பக்தியோடு படிக்கும் அடியார்கள் உள்ளங்களில் உறைந்து நிற்கும் இந்நூல் வீட்டில் இருந்தால் எல்லோரும் படித்தின் புறுவர். பிள்ளைகளுக்கும் சமயப்பற்று உண்டாகும். இம் மன்ற அன்பர்களின் தொண்டுகள் மேன் மேலும் வளரவேண்டுமென கந்தப்பெருமானின் திருவருளை உளமார வேண்டி எல்லோருக்கும் எமது மனமார்ந்த நல்லாசிகளை வழங்குகின்றோம்

ஸ்ரீலஸ்ரீ குருமஹாசந்நிதானம்

நல்லைதிருஞானசம்பந்தர் ஆதினம்,
பருத்தித்துறை வீதி,
நல்லூர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லையில்லாத அருட்கடலான
நல்லைக் கந்தன் கருணையே பொலிக!

தேவைக்கேற்ப கடன்பெறு வசதியும்
வைப்புக்கேற்ப தாராள வட்டியும்
நாடித்தந்து நற்பணி செய்யும்
நலங்கள் நிறைந்த தனித்துவ வங்கி

## மக்கள் வங்கி

- நடைமுறை — முதலீட்டு — சேமிப்புக் கணக்கு
- சிறுவர் நிரந்தர — சேமிப்புக்கணக்குகள்
- நிலையான வைப்புகள் — சேமிப்புச் சான்றிதழ்
- கூட்டுறவு அபிவிருத்தி, சுயவேலைக் கடன்கள்
- விவசாய, கைத்தொழில் விரிவாக்கக் கடன்கள்
- மகளிர் அதிர்ஷ்டக் கணக்குகள், சிறுவர் உண்டியல்
- முதியோர் யாத்திரைக் கணக்குகள்

வாய்ப்பும் வசதியும் இன்னும் பலப்பல!

பொருண்மிய பலத்தைப் புதுக்கி உயர்த்தும்
அருந்துணையாக அரும்பணி செய்வது

## மக்கள் வங்கி

அருகிலுள்ள கிளைகளில் ஆலோசனை பெறுவீர்!
வழமையாளராகி வசதிகளைப் பெருக்கிடுவீர்.

# மக்கள் வங்கி

(இலங்கையில் அதிகூடிய கிளைகளையும் கோடிக்கணக்கான வழமையாளரையும் கொண்டு பணிசெய்யும் சிறந்த வங்கி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவையாதீனகர்த்தா

மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்

வழங்கும்

# ஆசியுரை

"பக்தஸ்ய யஃ கார்த்திகேயே காகுத்ஸ்த்த புவி மாருவஃ ஆயுஷ்மான் புத்ர பௌத்ரைஸ்ய ஸ்கந்த ஸாலோக்யதாம் விரஜேத்"

விஸ்வாமித்ரரிஷி ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்திக்கு ஸ்ரீ சுப்பிரமண்ய ஸ்வாமியின் அவதார மகிமைகளைக் கூறியபின் மேற்குறித்த பல சுருதியைக் கூறி சுப்பிரமண்யப்பெருமானை துதி செய்யுமாறு ஆணையிட்டார்.

"ராமா இந்த பூலோகத்தில் எவன் கார்த்திகேயனிடம் சதா பக்தி செலுத்துகிறானோ அவன் தீர்க்காயுளோடு புத்ர பௌத்ரர்களுடன் இவ்வுலக சம்பத்துகளோடு சுகம்பெற்று ஈற்றில் ஸ்கந்தலோகத்தையடைந்து இன்புறுவான" என்பதே பல சுருதியின் கருத்து.

மஹரிஷிகள் அனைவரும் ஸ்கந்த உபாசனை செய்து இன்புற்ற வரலாறுகள் ஏராளமுண்டு. சங்கராசார்ய சுவாமிகள் தனக்குண்டான உபாதைகளை ஸ்கந்த சுவாமியை ஆராதித்து புஜங்க ஸ்தோத்திரம் மூலமாகப் பேறுபெற்றார். இதே போன்று பாண்டவர்களும், காளிதாசர், அருணகிரிநாதசுவாமிகள், பாம்பன் சுவாமிகள், இப்படியிப்படியே அரச வம்சத்தினரும், கவிஞர்களும், பக்தர்களும் ஸ்கந்தனது அஷ்டோத்தரம், சகஸ்ரநாமம், திரிசதி எனும் அர்ச்சனாதிகளையும், மாலாமந்ரம், ஹிருதய ஸ்தோத்ரம் ஷட்கம், ஸ்கந்தலஹரி, குமாரஸ்தவம், ஸ்கந்தகாயத்ரி போன்றவற்றைப் பாராயணம் செய்தும், ஜீவன்முக்தி, விஷநிவர்த்தி, சத்ருநாசம், இஷ்டகாம்ய சித்திகள் என்பனவெல்லாம் பெற்று சுகமடைந்தனர். இவர்கள் அனைவரும் எம்மையும் அவ்வாறு அனுசரித்து சித்திகளைப் பெறுமாறும் ஆற்றுப்படுத்தியுள்ளனர்.

இந்து தர்மத்திலுள்ளது போல் மந்திரங்களும், ஸ்தோத்திரங்களும், அருட்பாடல்களும் உலகில் வேறு எந்த மதங்களிலுமில்லை. இவையனைத்தும் பாராயணத்திற்கே உரியன.

ரிஷிகள் தொடக்கம் நாயன்மார்கள்வரை பாராயணங்களாற்றான் மனிதன் திருவருட்சக்திகளை விரும்பிய வகையில் பெறும் வாய்ப்பைப் பெறுவான் என்பதைத் திரும்பத் திரும்ப வலியுறுத்தியுள்ளனர். மேலைத்தேசத்தவர்களும் இதை உணர்ந்து விட்டனர். ஓர் ஆங்கிலேயகவி, இதனை

"More things are wrought by Prayer, than this wored dreams of" எனக் கூறியுள்ளார்.

பாராயணம் மூலம் மனிதனது எண்ணங்கள் புனிதங்கொண்டு நரம்பு மண்டலங்களில் சக்திமிக்கதான வீர்யம் பரிணமித்து உற்சாகசக்தியூட்டி ஞானசக்திக்குரிய திறன்களை ஊற்றெடுக்கச் செய்கிறதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் நல்ல வளங்களோடும், சாமர்த்தியத்துடனும், ஒழுக்க சீருடனும், திட காத்திரத்தோடு நல்லுணர்வுகளோடும் வாழ பாராயண பழக்கம் நன்றாகவே உதவும் என்பதனை, இந்தியாவின் அதிசிறந்த அறிவாளியும், வானியல்கணிதம், கேந்திரகணிதம் ஆதியாம் துறைகளில் பட்டம் பெற்றவரும், அமெரிக்கா நாடு கலாநிதிப் பட்டம் கொடுத்து மதிக்கப்பட்டவருமான பேராசிரியை K. N. சரஸ்வதி அவர்கள் கூறியுள்ளார்.

*"Chanting reverberates in the total being (your body - mind - and soul), in the heart, and along with the blood" it transforms you; it helps to improve your personality to transcend and excel yourself.*

பாராயண பிரார்த்தனைகளிற்காகவே ஆலயங்கள் எழுந்தன. ஈழத்திலும் பல்வேறு மூர்த்திகளுக்கான ஏராளமான ஆலயங்களைக் காணமுடிகிறது. இருப்பினும், குறிப்பிட்ட சிற்சில ஆலயங்களே ஆன்மாவை லயிக்கச் செய்கிறது. அவற்றுள் நல்லூர் கந்தசுவாமி கோவிலும் ஒன்றாகும். இங்கே பூசகர்களுக்கும் சிவாச்சார்யர்களுக்குமிடையே குரோதங்கள் ஏற்படாது. தர்மகர்த்தாவிற்கும் உபயகாரர்கட்குமிடையே தகராறுகள் தோன்ற மாட்டாது. நித்யபூசை தொடக்கம் மகோற்சவகால பூசைகள்வரை நெறிதவறாது, எதை எப்போ எவ்வகையில் எதற்காகச் செய்ய வேண்டுமேன ஆராய்ந்து அந்த நியதிக்குள் பூசை உற்ஸவாதிகள் நடைபெறுவதால், கோயில் வளர்ச்சி பெறுகிறது. ஆத்மீகம் பெருக்கெடுக்கிறது. மனம் லயப்படுகிறது. இறைவனையே கண்ணாரக் கண்டு கொள்ளத்தக்கதான இயல்புகளைத் தருகிறது. தூதுவர்களோ, தரகர்களோ இல்லாமல் நாமே எமது விருப்பத்தின்படி ஸ்தோத்திர பாராயணங்களைச் செய்து கடவுளிடம் வரங்களைப்பெறும் வாய்ப்பும் இங்குண்டு. நல்லைக் கந்தவேள் ஆலயத்தில் இவ்வாறான சக்தி அந்த சக்திவேலில் பரிணமித்திருக்கிறது.

சக்திவேல்பற்றிச் சிந்திக்கும்போது, அது அசுர சக்திகளின் நாசத்தின் பொருட்டும், தெய்விகசக்தியின் உயர்ச்சிக்கும், சர்வலோகங்களையும் இரட்சித்தருள, இச்சா சக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி எனும் ஸ்வரூபங்களைக்கொண்ட உள்ளடக்கத்தைக் கொண்டிருக்கிறதென்றும்; பிரம்மா, விஷ்ணு, உருத்திரர் அதில் வாசஞ் செய்கிறார்களென்றும், சத்வம், ரஜஸ், தமஸ் என்னும் முக்குணங்களுடன் ஆன்மதத்துவம், வித்யாதத்துவம், சிவதத்துவம் என்பனவற்றை தன்னுட்கொண்டும்; கார்ஹபத்தியம், ஆவஹநீயம், தக்ஷிணாக்னி எனும் அக்கினி ரூபமாகவும்; இருக், யசுர், சாம, அதர்வ வேத வடிவாகவும், சர்வதேவர்களும் வாசஞ்செய்வதாகவும், குமாரதந்திரம் இருபத்தெட்டாவது அத்தியாயத்தின் முதல் ஆறு ஸ்லோகங்களால் உறுதி செய்கிறது. குமாரதந்திரத்தில், "சக்திவேற் பூசைகள்" இல்லையாயின், அரசர்கட்கு வேண்டிய பிரபாவசக்தி உத்ஸாகசக்தி, மந்திரசக்தி இம் மூன்றும் அவர்கட்கு இல்லாமல்போய் அழிவார்கள் எனவுமுண்டு. முருகப்பெருமானால் அருளப்பட்டது குமாரதந்திரம். நல்லூர்க் கந்தனாலயத்தில் இத்தகைய சக்திவேல் எழுந்தருளி உலகை உய்விக்கும் தன்மையை நாம் காண்கின்றோம். இக்கோவிலில் சகல பூசை உற்சவங்களும் ஆரவாரமேதுமின்றி, காலத்திற்கேற்றவாறு புதுப்புது விண்ணாணங்கள் நுழையாதவாறு மிகுந்த கண்காணிப்புடன் யாவும் இயக்கம் பெறுவதும் நாம் செய்த தவப்பயனேயாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக க்ஷேமங்களுக்காகவும், சகல ஜீவராசிகளின் சுகத்தின் பொருட்டும் நடைபெறும் மஹோற்சவங்களில் கூட, அது சிருஷ்டி, திதி, சம்ஹாரம், திரோதானம், அனுக்கிரஹம் என்ற மார்க்கத்திற்கேதுவாக யாவும் நடைபெறுவதால் தனி மனித காம்ய சித்திகளின் பொருட்டு காம்ய பூசைகளான யாகம் அங்குரம ரக்ஷாபந்தனம் கூடிய சங்காபிஷேகங்களோ அல்லது வேறு அது இதுவென்றோ இங்கு மகோற்சவ காலத்தில் நடைபெறமாட்டாது. இது நல்லைக்குமரன் ஆலயத்தின் தனிச் சிறப்பு.

இத்தகைய ஆலயத்தின் மகோற்சவத்தை முன்னிட்டு யாழ் மாநகராட்சி மன்ற சைவசமய மன்றப் பிரிவினர், மக்களுக்கு நன்மைபெறத் தகுந்த வகையில நன்கு ஆய்ந்து, ஆய்வுகள் செய்து, உயரிய நோக்கோடு அருமையான சிவதொண்டின சார்பாக இம் மகோற்சவ மலரை வெளியீடு செய்கிறார்கள். அரிய மனிதப்பிறவி எடுத்தும் அனுதினமும் அலைக்கழிக்கப்பட்டு. துன்ப துயரங்களால் வாட்டப்பட்டு தாபங்களில் தத்தளிக்கும் மாந்தர்களை - அவர்கள் தம் பிறவி, பிணி, மூப்பு, மரணம் எனும் சம்சாரங்களிலிருந்து விடுபட்டு, சம்பத்தையும் சுகத்தையும அவர்கள் பெற இம்மலர் துணை செய்து ஆற்றுப் படுத்தும்.

மூலப் பிரகிருதியிடமிருந்து புத்தியும், புத்தியிலிருந்து அகங்காரமும், அகங்காரத்திலிருந்து சப்தமும், சப்தத்திலிருந்து ஆகாசமும் ஆகாசத்திலிருந்து ஸ்பர்ஸமும், ஸ்பர்ஸத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து ரூபமும், ரூபத்திலிருந்து நெருப்பும், நெருப்பிலிருந்து ரஸமும், ரஸத்திலிருந்து சலமும், சலத்திலிருந்து கந்தமும, கந்தத்திலிருந்து இப்பூமியும், தோன்றியதென கந்தபுராணம் எடுத்துக் கூறுகிறது. ஜயம, தபம், யாகம், ஆலய சேவை, பிரார்த்தனை என்பனவற்றால் இப்பூமியினகண் பயன் பெறலாமென இறைவன் வாக்கு. இவ்வாறு பயன் பெறவேதான் இறைவனும் ஆலயங்கள் சான்னித்தியம் கொண்டு எமக்கனுசரனையாக விளகுகிறார். இறைவனே இப்பூமியில் திருவவதாரஞ் செய்த வரலாறுகள் ஏராளமுண்டு. முருகப் பெருமான் கூட சரவணப் பொய்கை மூலம் இப் பூமியில் அவதாரங்கொண்டார். நல்லூர்க் கந்தனாலயத்திலும் இறைவன் சான்னித்தியங்கொண்டு திருவருள் சுரப்பதை நன்றாக நாம் உணர்கின்றோம்.

வேல் முருகன் புகழ்பாடும் நீள்பெருங் கோவிலான நல்லூர்கந்தனாலய மகோற்சவத்தை முன்வைத்து யாழ் மாநகரசபை மன்ற சைவசமயப் பிரிவினர் இந்த மலர் மூலம் சைவப்பெருமக்களை முருகப்பெருமானின் திருவருட் சக்திகளைப் பெறும் வண்ணமாக, அவர்ளை அவ்வழியில் ஆற்றுப்படுத்திநிற்கும் தர்மச் சேவையை உலகம் பாராட்டுவது போல் யானும் பாராட்டி, இம் மன்ற சைவசமயப் பிரிவினர் நீடுழி வாழ்ந்து மீண்டும் மீண்டும் இவ்வாறு சேவைபுரிய முருகப் பெருமான் அவர்களுக்குத் திருவருள் சுரக்க — வேண்டுமெனப் பிரார்த்தித்து, ஆசீர்வதிக்கின்றேன்.

சுபம் பவது

மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்
மாவையாதீனகர்த்தா

12-8-94

# இலங்கை வங்கி

பெரும்பாலும் உயர்ந்த வட்டியும் உச்ச நன்மைகளும் ஒன்றாகச் செல்வதில்லை. ஆனால் இலங்கை வங்கி சிறுவர் சேமிப்புத் திட்டத்தில் இவை இணைந்து செல்கின்றன.

## சிறுவர் சேமிப்புக்கணக்கின் பிரதான நன்மைகள்

- சாதாரண சேமிப்புக் கணக்கைவிட 2% அதிகரித்த வட்டி.
- கணக்கு வைத்திருப்பவர்களுக்கு ஊக்குவிப்புச்கள் மற்றும் பரிசுகள் பெறுவதற்கான வாய்ப்புக்கள்.
- உங்கள் பணவைப்புக்களுக்கு அதி உன்னத பாதுகாப்பு.
- மாணவர்களுக்குக் கடன் வசதிகள்
- நாடு முழுவதுமுள்ள சகல இலங்கை வங்கிக் கிளைகள் மூலம் சௌகரியமான வங்கி நடவடிக்கைகள்.
- ஒவ்வொரு சிறுவரது எதிர்காலத்துக்கும் முக்கியமானதாகக் கருதப்படும் நன்கு திட்டமிடப்பட்டதும், உறிதிப்படுத்தப் பட்டதுமான நிதியியல் பாதுகாப்பு:

## இன்றே உங்கள் அருகிலுள்ள இலங்கை வங்கிக் கிளையுடன் தொடர்பு கொள்ளுங்கள்

ஒவ்வொரு சிறுவரும் சேமிப்புக் கணக்குடன் வளர வேண்டும் என்பதே எமது விருப்பம்

இலங்கை வங்கி உலகளாவிய ரீதியில் இணைந்த தேசத்தின் வங்கியாளர்

யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர்
பேராசிரியர் க. குணரத்தினம் வழங்கும்

## ஆசிச்செய்தி

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் சென்ற ஆண்டிற் போலவே இந்த ஆண்டிலும் 'நல்லை குமரன் மலரை' வெளியிட முன்வந்திருக்கிறது. இது யாவராலும் வரவேற்று ஆதரிக்கப்படவேண்டிய முயற்சியாகும்.

இன்றைய உலகு, வாழ்க்கை வசதிகளையும் வாய்ப்புகளையும் பெருக்கி வளம்படுத்துவதிலே பெரிதும் அக்கறைகாட்டி வருகிறது. ஆய்வுகளும் அபிவிருத்தித் திட்டங்களும் அவ்விதமான இலக்குகளை அடிப்படையாகக் கொண்டே முன்னெடுக்கப்படுகின்றன. போட்டிகளும் பூசல்களும் போர்களும் நிகழ்கால வாழ்வின் இயல்பான கூறுகளாக மாறி வருகின்றன. இந்த ஆரவாரங்களிடையே மக்களிற் பெரும்பாலோர் அமைதியை இழந்து தத்தளிக்கும் நிலைமையும் தோன்றியுள்ளது.

இந்தத் தத்தளிப்புகளுக்கும் தடுமாற்றங்களுக்குமிடையே அன்பு, அருள், அறம், நீதி ஆகிய பண்புகளை வேண்டி எங்கும் தேடலும் சிலரிடையே காணப்படுகிறது. இவர்கள் பண்டைக்காலத்திலிருந்து மரபு வழியாக வரும் நெறிகளையும் ஒழுக்கங்களையும் திருப்பிப் பார்த்து, அவற்றின் பெறுமதிகளைப் பரிசீலனை செய்வதும், அவற்றிலிருந்து ஏதாவது ஆறுதல் பெற முயல்வதும் இயல்பானதே. இந்த இயல்பூக்கத்தின் பேறாக பாரம்பரியமான சமயாசாரங்களையும் விழாக்களையும் சம்பிரதாயங்களையும் கடைப்பிடிப்பதில் ஆர்வமும் ஈடுபாடும் நம்மவரிடையே குன்றாது பேணப்பட்டு வருவதையும் நாம் அவதானிக்கிறோம்.

அவ்வாறான விழாக்களுள் நல்லூர்க் கந்தசுவாமி கோயிற் பெருந்திருவிழா முதன்மையானது. யாழ்ப்பாணத்தவர்களைப் பொறுத்தவரையில் இத் திருவிழா நிகழும் இருபத்தைந்து நாட்களும் சிறப்பான எழுச்சித் திருநாட்களாக விளங்குகின்றன. அந்தத் திருவிழாக்கால உணர்வுகளையும் எண்ணங்களையும் நினைவுகளையும் செழுமைப்படுத்தும விதத்தில் யாழ் மாநகராட்சி மன்றத்தில சைவசமய விவகாரக் குழு வெளியிடவுள்ள 'நல்லை குமரன் மலர் – 1994' அமைவதாக என்று இறையருளை வேண்டி வாழ்த்துகின்றோம்.

யாழ். பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்

பேராசிரியர் க. குணரத்தினம்
துணைவேந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகா! குகா!! சண்முகா!!! சரணம்

உங்களுக்குத் தேவையான

★ அபிஷேகத் திரவியங்கள்
★ புதுமனை அத்திபாரச்சாமான்கள்
★ நாள் சரக்குகள் - கோரோசனை - குங்குமப்பூ - கஸ்தூரி
★ விவாகமுகூர்த்தப் பொருள்கள்
★ கோவில் சங்காபிஷேகச்சாமான்கள்
★ காண்டாமிருகக் கொம்பு
★ புனுகு, ஜவ்வாது, அத்தர், பன்னீர், சென்றவகைகள்
★ செந்தூரம், பஸ்பம், ஆசவம், அரிஷ்டவகைகள்
★ தைலவகைகள், சந்தனாதி முதலியன
★ ஊதுபத்திவகைகள், வாசனைத்திரவியங்கள்
★ ஆயுள்வேத மூலிகைவகைகள்

நியாயமானவிலையில் எப்பொழுதும் பெற்றுக்கொள்ள

நாடுங்கள்

ஆ. இராசையா அன் சன்ஸ்

மருந்துச்சரக்கு வியாபாரம்
( 69 ), 209, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாநகர ஆணையாளர் வழங்கும்

## ஆசியுரை

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் சைவசமய விவகாரக் குழுவினால் வழமைபோல் இவ்வாண்டும் சைவநறுமணம் பரப்பும் நோக்குடன் நல்லை குமரன் மலர் வெளிவருவது கண்டு மகிழ்வெய்துகின்றேன்.

நல்லூர்க் கந்தனின் வருடாந்த உற்சவ காலத்தில் இளைய தலைமுறையினரிடையே சமய அறிவை மேம்படுத்தும் முகமாக சைவசமயம் சார்ந்த பலவிதமான போட்டிகளை நடாத்தி தங்கப்பதக்கமும், சான்றிதழ்களும் வழங்கிவரும் பாரம்பரியம் மேன்மேலும் வளர்ச்சிபெற்று மாணவ மாணவியரிடையே ஆன்மீக உணர்வ ஊற்றெடுப்பதற்குக் கால்கோளாக அமையவேண்டுமென அவாவுகின்றேன்.

பல்வேறுபட்ட துறையறிஞர்களின் கருத்துக்கோவைகளுடன் வெளிவர இருக்கும் நல்லை குமரன் மலர் நன்கு மலர்ந்து நறுமணம் பரப்ப வேண்டுமெனவும், குழுவினரது சமயத்தொண்டு தொடரவும், துலங்கவும் நல்லைக்கந்தன் சேவடிகளைத் தியானித்து எனது ஆசியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

யாழ்ப்பாணம்.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தெய்வம் முருகனைப் போற்றி வாழ்வோம்

பாலர் வகுப்பு முதல் பட்டதாரி வகுப்புவரையான

சகல நூல்களுக்கும்

★ பிறந்ததின வாழ்த்து மடல்கள்

★ திருமண வாழ்த்து மடல்கள்

★ வாராந்த - மாதாந்த சஞ்சிகைகள்

★ காகிதாதிகள் - அலுவலக பாடசாலை உபகரணங்கள்

ஆகியவற்றுக்கும்

புத்தகங்கள் கட்டுவிக்கவும்

யாழ் நகரில் கலையகமாக மிளிரும் தாபனம்

V

# பூபாலசிங்கம் புத்தகசாலை

245, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

4, ஆஸ்பத்திரி வீதி,
(பஸ் நிலையம்)
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவநெறிப்புலவரின்

## ஆசிச்செய்தி

வேலுண்டு வினையில்லை – வேலையுண்டு வினையுமுண்டு

நல்லூரில் கோயில் கொண்டு வெற்றி வேற்கை கொண்ட முருகன் நெஞ்சில் ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும் என்பது அனுபவம் தந்த பாடம். அதே நல்லூரில் முருகன் கோவில் நிழலிலே யாழ். மாநகராட்சிப் பணி மனையில் அனுக்கிரக மூர்த்திகள் பலர் துணைநிற்க மக்கள் தேவைகள் எவையெனக்கண்டு நற்பணிகள் பல நிறைவேற்றி வைக்கப்படுகின்றன. அங்கே அன்பு நிலவுகிறது; பணிவு மிளிர்கிறது; தொண்டுள்ளம் துலங்குகிறது; காட்சிக்கு எளியராய் கடுஞ்சொல் அல்லராய செவிகைப்பச் சொல் பொறுக்கும் பண்பினராய் விளங்குகிறார்கள்; சிவனார் கோவில் விநாயகர், முருகன் போல ஒருத்தருக்கு சளைக்காதவவ்வவ் மூர்த்திகள்.

நல்லூர் மண் அத்துணை சிறப்புக்கொண்டது. மக்கள் நலனை மனத்தே பதித்து சித்தர்கள் ஊசாடிய மண் அது. ஸ்ரீமுக வருட நல்லைக் கந்தன் மகோற்சவத்தின் போது வண்ணமும் பொலிவும், திட்பமும் சுவையும் கொண்ட அலராத மலரொன்றை அவர்கள் மலர்த்தினார்கள். என்றென்றும் பெட்டகத்தே பேணிப்போற்றத் தக்கதாக அது அமைந்துள்ளது. ''நல்லைகுமரன் மலர்'' பவ வருடத்திலும் மலரவுள்ளதென வந்த சேதி எமக்கு உவகை தருகிறது. உள்ளத்து உணர்வை ஒளியாது தெரியச் செய்ய வேண்டுமென்ற உந்துதலில் எழுத்தில் வடிக்கிறோம்.

நல்லூர்க்கந்தன் ஆலயத்தில் வேலுண்டு அதனால் வினையில்லை; மாநகராட்சிப் பணிமனையில் வேலையுண்டு, அதனால் வினையுமுண்டு இன்றெமைக் கைகொடுத்து காப்பதுவும் அதுவே. பணிகள் மிகுந்தாலும் துணிவுகொண்டுதோள் கொடுக்கும் பான்மை எங்கும் நிலவட்டும்.

இவ்வண்ணம்
க. கனகராசா. ஜே. பி.

காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.



# இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்

## நல்லூர்ப் பிரிவு

யாழ். போதனா வைத்தியசாலை முன்பாக நோயாளர் நலன்கருதி
செஞ்சிலுவைச்சங்கம் நல்லூர்ப்பிரிவால் நடாத்தப்படும்
நோயாளர் முச்சக்கரவண்டிச் சேவையை

நாடுங்கள்

↓

# செஞ்சிலுவைச் சங்கம்

நல்லூர்ப் பிரிவு
காங்கேசன்துறை வீதி,
கொக்குவில்.

---

ஓம் சரவணபவாய நம:

★ இன்றைய நாகரீகத்திற்கு ஏற்ற

★ அழகு சாதனப் பொருள்கள்

★ அன்பளிப்புப் பொருள்கள்

★ சூட்கேஸ்

★ கவரிங் நகைகள்

சில்லறையாக - மொத்தமாக

பெற்றுக்கொள்ள

★

# ஸ்ரீ உமா வண்ணச்சோலை

30, நவீன சந்தை - உட்புறம் யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துள்ளி வருகுது வேல்

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
- துர்க்கா தேவஸ்தானம் -

"வரங்கொண்ட உமை முலைப்பால் மணங்கொண்ட செவ்வாயும்
பரங்கொண்ட களிமயிலும் பன்னிரண்டு கண்மலரும்
சிரங்கொண்ட மறை இறைஞ்சும் சேவடியும் செந்தூரன்
கரங்கொண்ட வேலும் என் கண்ணைவிட்டு நீங்காவே"

நல்லைக் கந்தன் திருக்கோவிலுக்குச் சென்று வழிபடும் அடியவர்களுக்கு ஞானக் காட்சி வழங் குகின்ற திருக்கைவேலின் அற்புதத்தையும் மகிமையையும் உணர்த்துவதாக அமைவதே இக் கட்டுரையாகும். அருள் கொழிக்கும் திருவடிவமும் ஆறுதிருமுகங்களும், பன்னிரு கரங்களும், கருணை ததும்பும் திருவிழிகளும், இருபுறமும் வள்ளியும் குஞ்சரியும் மயில் வாகனமும், திருக்கைவேலும் ஒன்றாய் இணைந்ததாய் காட்சிதரும் அருட் பெரு வடிவமே கந்தப் பெருமானின் திருக்கோலமாகும். வழிபடும் அடியவர்கள் "வேலைச் சிந்திப்போம். வினைகள் சிந்திப்போம்" என்ற த்யான உணர்வோடு முருகவழிபாடு செய்து நிறைவடைவது கண்கூடு. அன்பர்களின் அகத் தாமரையில் தெய்வ விளக்கொளியாகக் காட்சிதரும் இத் திருக்கை வேலுக்கு முருகவழ்பாட்டில் முதன்மையான இடமுண்டு. வேலும் மயிலும் துணை என்று தியானிப்பவர்கள் சைவ மக்கள். அத்தியானத்திலே ஆறுமுகத்தைக் காணலாம். மணிநுதலைக் காணலாம் பன்னிரு கருணை விழி மலரைக் காணலாம், ஆறிருதடந்தோளைக் காணலாம், திருக்கை வேலைக் காணலாம், திருவடி இணையைக் காணலாம், கோலமயிலைக் காணலாம. அருணகிரிநாதர் போன்ற அடியவர்கள் இத்தகைய அழகுக் கோலத்தைப் புறத்திலும் அகத்திலும் கண்டு வழிபட்டனர்.

முருக வழிபாட்டிலே வேல்வழிபாடு தனிச் சிறப்பு வாய்ந்தது. எத்தனையோ பக்தர்கள் வேலைமாத்திரம் வைத்துப் பூசிக்கின்றனர். அவன் கையிலுள்ள வேல் ஆராயும் நீதி வேலாகும். உயிர்களின் வினாக்களை அப்புறப்படுத்தி உண்மையான பக்தியை அறிவதற்குக் கருவியாக அமைந்தது வேல். மக்களாய்ப் பிறந்தோர அனைவருக்கும் ஏற்படுகின்ற துன்பத்துக்குக் காரணம் அறியாமையேயாகும். இதனையே அஞ்ஞானம் என்றுஞ் சொல்வர். இது எம்மோடு அநாதியாகவே கூடியுள்ளது. செம்பிலே களிம்பு எவ்வாறு அமைந்துள்ளதோ அதேபோல் உயிரோடு இந்த அறியாமையுஞ் சேர்ந்துள்ளது பிறவித் துன்பத்துக்கு இதுவே காரணமானது. இதையே சைவசித்தாந்தம் ஆணவம என்று கூறுகிறது. ஆணவம் இருளிலும் பார்க்க கொடியது. இருள தன்னையாவது காட்டிக்கொள்ளும். ஆனால் ஆணவம் தன்னையுங் காட்டிக்கொள்ளாது, - திருவருளையும் காணவிடாது. இந்த நிலையில் உயிர் மயங்குகிறது. ஆனால் ஈட்டிய நல்வினை வசத்தால் திருவருளுடனும் பழகுகின்ற வாய்ப்பு உண்டாகிறது. கூகையின் கண்ணுக்குச் சூரியனுடைய ஒளி தோன்றாதது போல ஆணவத்தால் மறைக்கப்பட்டிருக்கும் உயிர்களுக்கு இறைவனைக் காண முடியாது. ஆனால் பக்குவமுள்ள உயிர்களுக்கு மெய்ஞ்ஞானம் தோன்றி அஞ்ஞானம் மறைகிறது. இந்த மெய்ஞ்ஞானத்தை உணர்த்து

பவரையே ஞானகுரு என்று சொல்வர். குரு என்பது ஞானமயம், ஞானம் வெளியி லில்லை, நம்முள்ளே உயிர்க்குயிராய் நிற்கிறது. எல்லா ரூபமும் தெய்வ ரூபமாகை யால் ஒவ்வொரு ரூபத்திற்குள்ளும் ஞானம் வெளிப்பட்டுப் பேசும்போது குருமொழி யாகும். குருவடிவாக முருகன் எழுந்தருளி உள்ளத்திற் காட்சி கொடுத்ததை அருணகிரி யார் பாடுகிறார்.

"திருவடியும் தண்டையும் சிலம்பும் சிலம் பூடுருவப்
பொருவடி வேலுங் கடம்பும் தடம்புய மாறிரண்டும்
மருவடி வான வதனங்களாறும் மலர்க் கண்களும்
குருவடி வாய்வந் தென் உள்ளங்குளிரக் குதிகொண்டனவே"

இருள் அகல வேண்டுமாயின் சூரியன் உதயமாகவேண்டும். அதேபோல் அஞ்ஞானம் அகல வேண்டுமாயின் மெய்ஞ்ஞானம் உதயமாக வேண்டும்.

முருகப்பெருமான் திருக்கையிலேந்திய வேலையே ஞானசக்தி என்று குறிப்பிடு வார்கள். வேலும் ஞானமும் பெயரால் வேறுபடுவதே ஒழியப் பொருளால் ஒன்றே தான். சக்தியைப் பற்றிக் குறிப்பிடுமிடத்தில் "தடையிலா ஞானம்" என்கிறது சைவ சித்தாந்தம். எனவே "வேலுண்டு வினையில்லை" என்று பாடுவோம். நல்லைக் கந்தனின் பெருந்திருவிழா நாட்களில் வேலின் பக்கம் எமது சிந்தனையைத் திருப்பு வோம். பகைமையைச் சாய்த்து நீதியை நிலை நாட்டியது இந்தவேல். பாரதியார் இந்த நூற்றாண்டில் வாழ்ந்த கவிஞர் நாட்டின் விடுதலைக்கும் வெற்றிக்கும் வேல் முருகன் துணை செய்வான் என்ற நம்பிக்கையோடு பாடினார்.

"வெற்றி வடிவேலன் அவனது
வீரத்தினைப் புகழ்வோம்
சுற்றி நில்லாதே போ — பகையே
துள்ளிவருகுது வேல்"

என்பது அவர்பாடல். நாமும் இவ்வழியில் நல்லைக் கந்தன் திருவருளை யாசித்து நிற்போமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலரும் நல்லூரும்

திரு. க. சிவராமலிங்கம்

"உன்னை யான் வணங்கிக் கேட்கும்
ஒரு வரம் நல்லூர் தந்த
பொன்னை-எம் மொழியைக் கல்விப்
பொருளினைத் தேச மாண்பை,
மின்னையே நிகர்த்த செஞ்சொல்
மிளிர்த்தியே வளர்த்துக் காத்தான்
தன்னை – நாவலனைப் போற்றத்
தருமொழி தாராய் அம்மா!"

— தான்தோற்றிக் கவிராயர்

இத்தலைப்பில் கட்டுரை எழுதும்படி பணிக்கப்பட்டேன். இப்பணிப்பை இறைவன் கட்டளையாகவே கருதுகிறேன். எத்தனை எத்தனை அறிஞர்கள், சான்றோர்கள், சமய ஆர்வலர்கள் இப்பொருள் பற்றிச் சிந்தித்து எழுதினார்கள் – பேசினார்கள் – வாதிட்டார்கள்! இவைகளால் தெளிவு பெறாத என் கல்லா நெஞ்சின் கரைவே இக்கட்டுரை என்று கொள்க.

1822 டிசம்பர் 18 இல் பிறந்த நாவலர் பெருமான், 1847 டிசம்பர் 31 இல் – அவரது 25 ஆம் வயதில் – வண்ணைவைத்தீஸ்வரன் கோயிலில் சைவப்பிரசங்கம் ஆற்றத் தொடங்கினார். அன்று தொடங்கி இப் பெருமானார் "சைவத் தமிழ்ப் பெரும் பணி செயற்கரும் செய்கை செய்த தீரர்" எனப் போற்றப்படும் நிலைக்கு கொண்டு சென்றது. செந்தமிழ்ச் சிறப்பால், சீரிய தொண்டால், மாற்றாரும் மதிக்கும் சீலத்தால், பரமன் தொண்டு மட்டுமன்றி, அல்லற்பட்டு நின்ற சமுதாயத்துக்கு – சாதி குலம் சிந்தியாது – செய்த சமூகத் தொண்டால் ஆட்சி ஒழுங்கானால் தொல்லைகள் நீங்கும் என்ற சிந்தைத் தெளிவால் அரசியலிலும் பங்கு கொண்ட பண்பால், தமிழ் நெஞ்சங்களில் என்றும் நிலைத்தவர் நாவலர் பெருமான். 57 ஆண்டுகள் வாழ்ந்தவர். 57 தலைமுறைகளும் செய்ய முடியாதவற்றை செய்து முடித்தவர். இவை எல்லாம் தெரிந்தவைதான். ஆனால் எடுத்த பொருளுக்குப் பொருத்தமான காலம் 1872 தொடக்கம் 1875 வரையுமே எனக் கொண்டு சிந்தித்தல் பொருந்தும். இக்காலப் பகுதியில்தான் நாவலர் பெருமானின் சிந்தனையும் செயற்பாடுகளும் நல்லையம்பதிபற்றிய பெருங் கவனத்தை ஈர்த்திருக்கிறது.

நாவலர் பெருமானின் "யாழ்ப்பாணச் சமயநிலை." 'நல்லூர் கந்தசுவாமி கோயில்' பத்திரிகை I, II என்ற பிரசுரங்கள், அவரின் உள்ளத்தைப் படம்பிடித்துக் காட்டுவனவாகும். "ஆகமம் ஆகி நின்று அண்ணிப் பானை" "நின்றும் இருந்தும் கிடந்தும்" நடந்தும் போற்றிய நாவலர் பெருமான் ஆகமப் பற்றும், அதன் வழிவாழும் சமய நெறியும் தன் குறிக்கோளாகக் கொண்டவர். இந்தக் குறிக்கோள் எங்கும் இவரை "வீரம் எம்மால் விளம்பும் தகையதோ"? என்று எண்ணி மலைக்கும் வீரனாகவே காட்டி நிற்கிறது. அருட்பா மறுப்பின் போதும் தில்லையில் அந்தணர் தவறிய காலத்தும், இவர் காட்டிய உறுதி ஒன்றே போதும் இவரின் சைவ, வீரத்தைக் காட்ட. ஆகமத்துக்குப் புறம்பான எதையும் நாவலர் பெருமான் ஏற்கத் தயாராய் இருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. இதை நினைக்கும் போது ''முன்னவற்கு முன்னவனே முன்னின்று நெற்றிக் கண்ணைக் காட்டிய போதும் குற்றம் குற்றமே'' என்று கூறிய நக்கீரனார் வீரத்தை எண்ணாமல் இருக்க முடியவில்லை.

கருவறையில் சிவாவிக்கிரகமே அமைய வேண்டும் என்ற இவரின் ஆகமச்சான்று பொதிந்த வாதம் ஏற்றுக் கொள்ளப்பட்டதும், 1871 இல் இந்தியாவில் இருந்து முருகன் தெய்வாயனை வள்ளி நாயகி விக்கிரகங்கள் தருவிக்கப்பட்டமையும், இடையில் நிகழ்ந்த மாற்றங்களால், அவ்விக்கிரகங்கள் நல்லையில் இடம்பெறாமல், தென்மர் ஆட்சி, விடத்தற்பளை வயற்கரைக் கந்த சுவாமி கோயிலில் பிரதிட்டை செய்யப்பட்டமையும் வரலாறு. இந்த நிகழ்வு நாவலர் உள்ளத்தைப் பெரிதும் தாக்கியது என்பது உண்மையே. இத்தாக்கம் ஏன் ஏற்பட்டது? ஆகமக்கருத்துக்களை, ஆலய அமைப்பை, நித்திய நைமித்திகங்களை பாமரரும் தெரிந்து பயன் பெற வாய்ப்பாகப் பல நூல்கள் பிறந்தன. சமய நிலையில் எம் மக்கள் எங்கே நின்றார்கள் என்பதை ஆவணப்படுத்த ஒருவாய்ப்பு. பிறந்த நன்மைகள் இவை. ஆனால் நாவலர் பெருமானின் எதிர்ப்பை நல்லைக் கந்தன் சம்பாதித்துக் கொண்டானா? நாள் தோறும் பல பக்தர்களின் அருட்பாக்களின் அன்பு மழையில் தோய்ந்து, அவர்கள் வேண்டும் வரங்களை பன்னிருகைகளாலும் அள்ளிக் கொடுக்கும் இவன் ஏன் நாவலர் உள்ளத்தை- ஆகமவழிப்பட்ட உள்ளத்தை – புரிந்து கொள்ளவில்லை என்று கேட்பதா? இல்லை.

''பெருக் காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோ டெட்டும் மற்றும்
கரக்கோயில் கடி பொழில் சூழ் ஞாழற் கோயில்
கருப்பதியில் பொருப்பனைய கொடுடிக் கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட்டேத்தும்
இளங்கோயில் மணிக் கோயில் ஆலக்கோயில்
திருக்கோயில் சிவனுறையுங் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சித் தீவினைகள் தீரும் அன்றே''

என்று அப்பர் பெருமானின் திருமுறை கூறுவதையும், இன்னும்.

''இருளாய உள்ளத்தின் இருளை நீக்கி
இடர்பாவம் கெடுத்து ஏழையேனை உய்யத்
தெருளாய சிந்தைதனைத் தெருட்டித் தன் போல்
சிவலோக நெறியறியச் சிந்தை தந்த
அருளானை ஆதி மா தவத்து ளானை
ஆறங்கம் நால் வேதத்து அப்பால் நின்ற
பொருளானைப் புள்ளிருக்கு வேளூரானைப்
போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே''

என்று அப்பரே கூறும் இறை வாக்கை நாவலர் பெருமான் அறிந்திருக்கவில்லையா? இங்கேதான் எமது சிற்றறிவுக்கு வேலை தருகிறார்கள் இருவரும் – நல்லை முருகனும், நல்லைநகர் நாவலரும் – என்று நினைக்கிறேன்.

''சித்தமும் செல்லாச் சேட்சியன்''– ஆனால் ''பக்தி வலையில்'' படுகபவன். இது மணிவாசகர் திருவுள்ளம், ஆக, நாவலர் தவறிவிட்டாரா? இல்லவே இல்லை. இதுவும் ஒரு திருவிளையாடல். காலத்துக் குக் காலம் எம்பெருமான், எமக்கெல்லாம் புத்துணர்வும், புரிந்துணர்வும் நிறைவதற்காக ஆடிக்காட்டும் ஆடல் ஊசி மருந்து. Tonic என்பார் என் ஆசிரியர் பிரான் வித்துவான் கார்த்திகேயனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை கறி வேண்டும் என்றதை யும், ஊன் உகந்ததையும், சந்தனக் கட்டையாக முழங்கையைத் தேய்த்த தையும், தலை முடியை இறை முன்பு எரித்ததையும் எந்தச் சிந்தையுடன் ஏற் கிறோமோ – ஏற்காதவர்கள் பற்றிய கவலை வேண்டாம் – அந்த மனத் தெளி வுடன் நல்லூரையும் நாவலரையும் நோக்குவோமானால் இருவரையும் புரிந்து கொள்ளலாம்.

ஆகம நெறி நின்று பிறளாது அரனை வழிபடுவதே என்குறிக்கோள் என்று வாழ்ந்த நாவலர் பெருமான் வாயிலாக, ஆகமப் பெருமையையும், ஆகமாந்திகளின் ஒல்காப் புகழையும் சைவ உலகுக் காட்டிய முருகப் பெருமான்; அயரா அன்பு, பக்தி என்ற நிலைவரும்போது ''ஆறங்கம் நால் வேதம்'' இவற்றுக்கு அப்பாற் பட்டும் நிற் பவன் தான் என்பதையும் காட்டி நிற்கின் றான் என்று நினைத்தால் தவறாமோ? ''எல்லாம் அவன் செயல், எனக்கென்ன தெரியும்?'' என்று நினைக்க வேண்டிய நாம். நாவலர் பெரும் சிந்தையையும், நல்லை முருகன் அருள் உளத்தையும் அளக்க வல்லோமோ?

எறிபத்தர் செயலையும், கோச்செங் கணான் செயலையும் நினைந்துருகிய சேக் கிழார் பெருமான் சிவமொழியாம்,

''...........................................................

...........................................................

நாளுமற் றவர்க்கு நல்கும் நம்பர்
தாம் அளக்கி லன்றி
நீளும் இத் தொண்டின் நீர்மை
நினைக்கில் ஆர் அளக்க வல்லார்?''

என்ற திருநிறை சொற்களை நினைக்காமல் இருக்கமுடியவில்லை.

''நாவலர் அவரே யாவர்
நமதுசை வாகம த்தின்
காவலர் அவரே; இன்பக்
கனிதமிழ் அமுதம் ஊறும்
பாவலர் அவரே; எங்கள்
பைந்தமிழ் உலகை யாளும்
கோவலர் அவரே; வெற்றி
கொட்டுக முரச மிங்கே''

— சுத்தானந்த பாரதியார்

○

**ஸ்நானத்துக்குரியமண்**

மலையருகு, ஆற்றங்கரை, புண்ணியபூமி, பிரமவிருட்சத்தினடி, தருப்பை யினடி முதலிய சுத்த தானத்திலே எட்டங்குல வளவின்கீழே அஸ்திரமந்தி ரத்தினாலே கிரகித்துக் கொண்ட மிருத்திகையே ஸ்நானம் முதலியவற்றுக்கு உரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாடுகளில் இருந்து தருவிக்கப்பட்ட

சேட், சூட், பேபிகவுண், ஸ்கேட் & பிளவுஸ்

மற்றும்

பஞ்சாபி, சர்வார்கமிசு

திருமணத்திற்கு வேண்டிய

பட்டுச்சேலைகள்

மனத்திற்கு ஏற்ற தெரிவுகள்.

இன்றே நாடுங்கள்

# கீதன் வண்ணச் சோலை

39, சிறப்பு அங்காடி, யாழ்ப்பாணம்.

---

**சிறந்த ரகம்!** இறக்குமதி செய்யப்பட்ட

லோங்ஸ், சேட்

சேட்டிங், சூட்டிங்

**நிதான விலை!** மங்கள

வைபவங்களுக்கேற்ற

கூறைச்சேலைகள்

காஞ்சுபுரம்

பட்டுவேட்டி சால்வைகள்

மலிவான விலையில் பெற்றுக் கொள்ள

ஒரே இடம்

# கிருஷிகா ஆடை அகம்

## KIRUSHIKA TEX

69A, சிறப்பு அங்காடி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தைக்குக் குரு

*திரு. சி. வேலாயுதம்*

வியாச முனிவர் கலிபிறக்கப் போகின்றதே என ஏங்கிய முனிபுங்கவர்க்கு

''ஸ்கந்தஸ்ய கீர்த்திம் அதுலாம்
கலி கல்மஷ நாசினீம்''

என்று தெளிவுறக்கூறினார். இதன் பொருள் ''கந்தப் பெருமானுடைய இணையற்ற கீர்த்தி ஒன்றுதான் கலியில் வரும் பாவங்களைப் போக்க வல்லது'' என்பதாகும். வேண்டத்தக்கது அறிவோனும் வேண்ட முழுதும் தருவோனுமான வேற்படை விமலன் கலியுக வரதனாய் அவதரித்த மாட்சியை

''அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி ஆகக்
கருணை கூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்(கு) உதித்தனன் உலகம் உய்ய.''

என்கிறார் கச்சியப்பசிவாச்சாரியார்.

தமிழ் மொழி என்றும் இளமை மாறாத மொழி. முருகன் என்றும் அகலாத இளமையுடையவன். தமிழ் மொழியில் உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டு. முருகனின் தோள்களும் பன்னிரண்டே. முருகனுக்குத் திருமுகம் ஒவ்வொன்றிலும் மூன்றுகண்களாக மொத்தம் பதினெட்டு நயனங்கள். தமிழில் மெய்யெழுத்துக்கள் பதினெட்டு. அரன், உமை, அயிலவன், ஆனைமுகன் அனைவர்க்கும் நயனங்கள் மூன்றேயாம். ''ஷட்வக்த்ரம் த்வாதச புஜம் அஷ்டாதச விலோசனம் ரூபம் அங்கீக்ருதம் சுபம் லோகாநாம்'' என்கிறது வடமொழி ஸ்காந்தம். உருவம் இல்லாத அலகில் சோதியன் ஆறுமுகங்கள், பன்னிரண்டு தோள்கள், பதினெட்டுக் கண்கள் கொண்ட இந்த அருள் உருவத்தை உலகம் உய்யும் வண்ணம் எடுத்துக் கொண்டான் என்பது மேற்கூறிய சுலோகத்தின் பொருளாகும்.

சூரியன் ஆறு கண்களாகவும், சந்திரன் ஆறு கண்களாகவும், அக்கினி ஆறு கண்களாகவும் முருகனுக்கு அமைந்தாற்போல தமிழில் மெய்யெழுத்துக்கள் பதினெட்டாக நின்றன. முருகவேளின் முகங்கள் ஆறு, தமிழில் இன எழுத்து ஆறு, வல்லினம் ஆறு, மெல்லினம் ஆறு, இடையினம் ஆறு. மு – ரு – கு என்ற எழுத்துக்களில் ஒவ்வொன்றும் மெய்யெழுத்துக்களில் ஒவ்வோர் இனத்தைச் சார்ந்திருப்பது நோக்கற்பாலது. கந்தவேள் கரத்தில் உள்ள வேல் வேறு எந்தத் தெய்வத்திற்கும் இல்லாத சிறப்புடைய ஆயுதம். எந்த மொழியிலும் இல்லாத தனிநிலை ஆயுத எழுத்து தமிழில மட்டுமே உண்டு. ஆய்தம் – ஃ. இச்சை, கிரியை, ஞானம் என்ற மூன்றும் மூன்று புள்ளிகளாகச் சேர்ந்துள்ளது. இது வேலின உருவை ஒத்தது. இவ்வுண்மையை

கண்ணிகர் மெய்யும் சென்னிக் கணநிகரினத்தின் கூறும்
திண்ணமை தோள்களேபோல்
திகழ்தரு முயிரும் வேறொன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றெண்ணுதற் கரியதான எஃகமும்
இயலிற் காட்டும்
புண்ணிய முனிக்கோன் செவ்வேல்
பொற்பதத் தடிமையாகும்.

என்கிறது செந்தமிழ்க்கவி. தேனூறு கிளவிக்கு வாயூறி நின்றவன் முருகன் எனக் குமரகுருபரன் கழறினான். தமிழான தத்துவப் பொருள் தரணிமிசை தோன்றிய செந்தமிழ்ச் செல்வம். தந்தைக்குபதேசம் செய்த செந்தமிழ்க் குமாரன்.

குமாரன் என்னும் சொல்லுக்கு மூன்று பொருள் உண்டு. மாரன் என்றால் மன்மதன். கு என்பது இகழ்ச்சியைக் காட்டும். தன் அழகால் மன்மதனை இகழ்ந்தவன் என்பது ஒரு பொருள். 'கு' என்றால் உலகம். 'மா' என்றால் திருமகள். 'ர' என்றால் தருபவன். உலகில் செல்வம் பலவும் தருபவன். இது இரண்டாவது பொருள். குமாரன் என்பது குமரன் என்ற சொற் பொருளைத் தரும். என்றும் அழிவில்லாத இளமையுடையவன் என்பது மூன்றாவது பொருள். முக்கண்ணனுக்கு கந்தன் பிரணவப் பொருள் உபதேசித்துச் சுவாமிநாதன் ஆனான், சுவாமி என்றாலும் நாதன் என்றாலும் பொருள் ஒன்றே. கும்பகோணத்தை அடுத்துள்ள சுவாமி மலையே தந்தைக்குத் தனயன் உபதேசித்த தலம். இத் தலத்திலே தந்தையைக் கோயிலின் கீழ்த்தளத்திலும், நம்பியை மேல் தளத்திலும் காணலாம். தந்தைக்கு உபதேசம் செய்ததால் முருகனுக்குத் "தகப்பன் சுவாமி" என்றொரு பெயரும் உண்டு.

ஒருகால் நாரதமுனிவர் ஒருவேள்வி செய்ய விழைந்தார். அரி, அயன், இந்திரன், அந்தணர், அருந்தவர் புடைசூழ பூவுலகத்தில் யாகம் தொடங்கியது. மந்திரம் மாறுபடவே யாக அக்கினியிலிருந்து செவ்வானம் போன்ற நிறத்துடன் ஓர் ஆட்டுக்கடா தோன்றியது. கோர உருவத்துடன் பெருஞ் சினங்கொண்ட ஆட்டுக் கடாவைக் கண்டு தேவர்கள், முனிவர்கள் அஞ்சி நடுங்கினர். உத்தரியமும் முடியின் மாலையும் இரிய இரிய ஓடிய நாரதமுனி வரும் தேவர்களும் கயிலையை அடைந்தனர். தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவன் என மணிவாசகர் இறுமாப்படைந்த முக்கண்ணனிடம் முறையிட எண்ணினர். போகும் வழியில் எந்தை கந்தவேள் இலக்கத்தொன்பது வீரர்களுடன் கூடி விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டனர்; கண்டதும் சந்திரனைக் கண்ட கடல்போல் உவகை பொங்க உளம் மகிழ்ந்தனர். நம்பினோர்க்கு அருளும் எம்பிரான் முன் சென்று அவரது திருவடித் தாமரையில் வீழ்ந்து ஓலமிட்டுத் துதித்தனர்,

"மூவர்கள் முதல்வா ஓலம், முக் கண்
ணன் புதல்வா ஓலம்
சேவலங் கொடியாய் ஓலம்; சிறந்த
சிற்பரனே ஓலம்
தேவர்கள் தேவே ஓலம்; தெய்வநா
யகனே ஓலம்
ஆவலுற் றருள்வாய் ஓலம்; அறுமுக
ஓலம்; ஓலம்."

என அரற்றிப் போற்றினர். அது கண்ட அயிலவன் அகமுருகி அபயமளித்தான். வீரவாகுதேவரை ஏவி ஆட்டுக்கடாவை கைப்பற்றினார். தேவர்கள் அகமகிழ்ந்தனர். அஞ்சாது யாகத்தை முடிக்குமாறு முருகன் பணித்தான். அறுமுகச் சிவனாரை அஜன் என்று வேதங்கள் அழைக்கும். ஜனன மற்ற முழுமுதற் பொருள் என்பது அந் நாமத்தின் பொருளாகும். முருகன் மும் மலத்தை அடக்கியவர் என்பதால் அவருக்கு மயில், ஆடு, யானை வாகனங்களாயின. ஆணவம் கன்மம், மாயா என மலங்கள் மூன்று. மயில் - ஆணவமலம், யானை - கன்மமலம், ஆடு - மாயாமலம். மும்மலம் நீங்காது போனால் ஆன்மாவுக்கு உய்வில்லை; பிறவிப் பெருங்கடல் நீந்தாது தத்தளிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் பிரமதேவர், இந்திரன், கின்னரர் தேவர், கிம்புருடர், சித்தர், வித்யாதரர் முதலிய கணங்களோடு கயிலாய மலையை அடைந்தார். முதற் கோபுர வாயிலின் வடபால் செவ்வேள் லீலைபுரிந்து கொண்டிருந்தார். பிரமனைத் தவிர எல்லோரும் யான் – எனது என்ற செருக்கற முருகனை வணங்கிச் சென்றனர். கயிலாய கிரியிலிருந்து சிவனை வணங்கி வெளியேறும் போதும் பிரமன் முருகனைக் குழந்தை தானே - என ஊதாசீனம் செய்து வணங்காது சென்றான். சிவன் வேறு, தான்வேறு அன்று- மணியும் ஒலியும் போல சிவனும் தானும் ஒன்று என்பதனையும் முருகனாய தன்னை ஒழித்துச் சிவனை வழிபடுவோர்க்கு திருவருள் உண்டாகாது என்பதைப் பிரமன் வாயிலாக உலகுக்கு உணர்த்த எண்ணிய முருகன் அயனின் செருக்கை அகற்றி நல்லருள் பாலிக்கவும் திருவுளங் கொண்டார். தருக்குடன் சென்ற பிரமனை அழைத்து "நீ என்ன தொழில் செய்கிறாய்?" என வினவினார். "சிவபெருமான் ஆணையினாலே படைக்கும் தொழில் செய்கிறேன்" எனப் பதில் கொடுத்தான் பிரமன். "படைப்புத் தொழிலை மேற்கொண்டிருக்கும் உனக்கு வேதம்வருமோ?" என்று வினாவினான் முருகன். "முக்கண்ணன் அளவற்ற வேதசிவாகமங்களை அருளிச்செய்து சிலவற்றை யான் உய்யும் பொருட்டு உணர்த்தினன்" என்றனன் நான்முகன். உடனே முருகன் "முதல் வேதமாகிய இருக்கு வேதத்தினைச் சொல்லக்கடவாய்" என்றனன். வேதங்களுக்கெல்லாம் முன்சொல்லப்படும் "ஓம்" என்ற மந்திரத்தைக் கூறி இருக்கு வேதத்தைக் கூற ஆரம்பித்தான் பிரமதேவன். அப்பிரணவ மந்திரத்தையே தமது திருமுகங்களில் ஒன்றாகவுடைய ஐயன் திருநகை செய்து "பிரமனே நில்! நீ முதலில் சொன்ன ஓம் என்ற பிரணவ மந்திரத்தின் பொருள் யாது?" என்று கேட்டான். பிரமன் பிரணவத்தின் பொருள் தெரியாது விழித்தனன். அவனது கண்கள் சுழன்றன. நாணமுற்று விக்கித் திகைத்தான். நிகழ்வைப் பாடல் பின்வருமாறு செப்பும்.

"முகத்தில் ஒன்றதா அவ்வெழுத் துடையதோர் முருகன்
நகைத்து முன்னெழுத்தினுக் குறை பொருளென நவில
மிகைத்த கண்களை விழித்தனன் வெள்கினன் விக்கித்
திகைத் திருந்தனன் கண்டிலன் அப்பொருள் திறனே".

"பிரணவப் பொருள் அறியாத நீ படைத்தல் தொழிலை எவ்வாறு செய்வாய்?" என்று செவ்வேள் சினந்து பிரம்மதேவனின் நான்கு சென்னியும் குலுங்கக் குட்டினார்.

"எட்டொணாதவக் குடிலையிற் பயன் இனைத் தென்றே
சட்டுரைத் திலன் மயங்கனும் இதன் பொருள் கருதாய்
சிட்டி செய்வதித் தன்மையதோவெனாச் செவ்வேள்
குட்டினான் அயன் நான்குமா முடிகளும் குலுங்க".

பிரமதேவனின் நான்கு தலைகளிலும் முருகன் பன்னிரு கரங்களாலும் குட்டினார். இதனை அருணகிரியார்,

நாலுமுக னாதியரி யோமென அதார முறை
யாதபிர மாவைவிழ மோதி பொருளோது கென
நாலுசிர மோடு சிகை தூளிபட தாள
மீது மிளையோனே

என்கின்றார்.

கந்தக் கடவுள் வீரவாகு தேவரை நோக்கி, "இருண்ட மனத்தனாய பிரமனைச் சிறையிடுக" எனப் பணித்தார். கந்த

வெற்பிலே கை, கால் விலங்குடன் சிறை வைத்தனர்.

அறுமுகன் அளவற்ற காலம் அயனைச் சிறை வைத்துச் சிருட்டித் தொழிலைப் புரிந்து கொண்டிருந்தார்.

திருமால் அயனைச் சிறையினின்றும் நீக்க வெண்ணி அரனிடம் வெள்ளியங்கிரிக் குச் சென்றார். அரனிடம் விருப்பினை விண்ணப்பம் செய்தார். செவிமடுத்த சிவ னார் புன்முறுவல் பூத்தார். ''தேவரீர் சிவன் வேறு, குமரன் வேறு என்று பின் னம் பேசுவோர் மடவோரே. என்னையும் குமார மூர்த்தியையும் பிரித்துணர்கிறவர் கள் ஒரு போதும் இன்பமடையமாட்டார் கள். இந்த உண்மையை உணர்ந்து உய் தற் பொருட்டே பிரம்மனைச் சிறையிலிட் டான் குமரன்'' என்றனன் அரனார். மேலும் கூறலானார். ''எம்மை வேதம் ஒரு முறையே பிரணவசப்தத்தால் அழைக் கிறது. நம் குமரனையோ ''சுப்ரஹ்மண் யோம்! சுப்ரஹ்மண்யோம்! சுப்ரஹ்மண் யோம்!'' என்று மூன்று முறை ''ஓம், ஓம் ஓம்'' எனப் பிரணவத்தில் இணைத்துக் கூவியழைக்கும். இதனை உணராது தருக் குற்ற பிரம்மனை எவ்வாறு சிறையினின் றும் விடுவிப்பது.'' எனக்கூறிய கருணைக் கடலாகிய கண்ணுதற் கடவுள் மனமிரங்கி நந்தியை குமரக் கடவுளிடம் அயனைச் சிறைமீட்க அனுப்பினார். நந்திதேவர் விண் ணப்பத்தை நிராகரித்தார் நல்ல திருக்கும ரன். இதனைக் கேள்வியுற்ற சிவனார் திருக்கயிலை நீங்கிக் கந்த வெற்பையடைந் தார். தந்தையைக் கண்ட மைந்தன் இருக்கை விட்டகன்று வணங்கி தந்தையைத் திவ்விய சிங்காதனத்தே அமர்த்தி மகிழ்ந் தான். பிரமனைச் சிறை மீட்க வந்த செய் தியைச் செப்பினார். பிதாவின் கருணையை உய்த்துணர்ந்த மயில்வாகனன் பிரமனைச் சிறையினின்றும் விடுவித்தான்.

சிறை நீங்கிய பிரமன் ''கருணைக் கடலே! தேவரீருடைய திருக்குமாரர் அடி யேனுக்கு அளித்த தண்டனை சிறைவாசம் அல்ல. தவச்சாலை வாசமே. அதனால் யான் – எனது என்னும் அகந்தை அழிந்து தீவினைகள் நீங்கின. சித்த சுத்தி விளைந் தது. அடியேன் புனிதனானேன்'' என் றான். அதுகண்ட அர்த்த நாரீசன், பிர மனை ஆசீர்வதித்துப் படைத்தற் தொழிலை முன்புபோற் செய்யப் பணித்த னர். ஈற்றிலே தன் திருக்குமாரனை மடி மீதிருத்தி உச்சிமோந்து ''பிரமனும் அறி யாத பிரணவத்தின் பொருள் உனக்குத் தெரியுமா? தெரிந்தால் சொல்வாயாக'' என்றார். இதனைச் செவிமடுத்த செவ் வேள் ''உலக மாதாவாகிய என் அன் னைக்கு பிறர் அறியாவண்ணம் உபதேசித் தருளிய பிரணவத்தின் பொருளை இரகசிய மாகக் கூறுவதன்றி யாவரும் கேட்கும் வண் ணம் சொல்வது முறையாமோ. காலம், இடம் அறிந்து முறைப்படி கேட்டால் சொல்வோம்'' என்றான்.

உபதேசிக்கும் குருவாயிருந்த சிவனுக்கு உபதேசம் கேட்கும் சீடனாகவும் இருக்க வேண்டுமென்ற ஆசை பிறந்தது. ''குழந் தாய்! நீ கூறியது முற்றிலும் உண்மை'' எனக்கூறி கைகளைக்குவித்து, சிரந்தாழ்த்தி வாய்பொத்திச் செவிசாய்த்து ''உலகங்களுக் கெல்லாம் நாதனே! குமாரக் கடவுளே!'' என்று பக்தியுடன் துதித்து நின்றார். இதனை அருணகிரியார்.

''நாத போற்றி யெனமுது தாதை
கேட்க அனுபவ
ஞான வார்த்தையருளிய பெருமானே''

எனப் பாடுகின்றார்.

புரமெரித்த விரிசடை விமலன் பக்தியு டன் வழிபட்டு நிற்க முருகன் தவிசின் கண் விற்றிருந்து கல்லாலின் கீழ் தென்முகப் பர மாசாரியாராக எழுந்தருளி சனகாதி முனி வர்களுக்கு மோனநிலையை. உபதேசித்த குருநாதருக்கும் குருவாக விளங்கி அகர முதலென வுரை செய் ஐம்பத்தோரட்சரத் தில் தொடங்கிக் குடிலை மந்திரத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளை அமுதமான மழலை மொழியால் அற்புதம் அற்புதமாக உபதேசித்தார்.

"அரவு புனைதரும் புனிதரும் வழிபட
மழலை மொழிகொடு தெளிதர —
வொளிதிகழ்
அறிவை யறிவது பொருளென
அருளிய பெருமானே"

எனத் தித்திக்க, ஞான உணர்வோடு பாடல் பீறிடுவது தந்தைக்குக் குருவின் அற்புத வெள்ளத்தை அகிலமெலாம் குளிர்விக்கு மன்றோ!

"ப்ர" என்றால் விசேடமானது. "நவம்" என்றால் புதுமை. அநுபவிக்க அநுபவிக்க புத்தம் புது விசேட உண்மைகளை உணர்த்துவது பிரணவம் பிர + நவம். என்றும் வாடாமல், காலத்தால் தேயாமல் எப்போதும் புதுமையாகவே இருக்கும் ஆன்ம தத்துவம் தான் பிரணவம். உலகை "மாயா" என்கிறோம். மா — ஒடுக்கம் யா — தோற்றம். உலகு எதில் தோன்றியதோ அதில் ஒடுங்கும் இப் பேருண்மையை விளக்கும்வேலை வணங்குவதே எமக்கு வேலை. கருதிக் கருதிக் கவலைப் படுவார் கவலைக் கடலைக் கடியும் வடிவேலனை நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் என்றும் வணங்கி உய்தியடைவோம். குருவைச் சிந்தை கொண்டவர் சீரடைவர். சீவன் முக்தி பெறுவர்.

தோகைமேல் உலவுங் கந்தன்
சுடர்க்கரத் திருக்கும் வெற்றி
வாகையே சுமக்கும் வேலை
வணங்குவது எமக்கு வேலை.

○

## பிராணாயாமம்

*பிராணவாயுக்களைத் தடுத்தலே பிராணாயாமம் என்பது தடுத்தலையே ஆயாமம் என்பர். அது இரேசகம், பூரகம், கும்பகம் என மூன்று பகுதிகளை உடையது. அகத்துள்ள அசுத்தவாயுவை புறத்தே கழித்தலை இரேசகம் என்பர். புறத்துள்ள சுத்தவாயுவைக் கொண்டு இயன்றமட்டும் சரீரத்தை நிறைவித்தலை பூரகம் என்பர். புறங்கழித்தலையும் உட்கொள்ளுதலையும் ஒழித்து உள்ளே உள்ள வாயுவைத் தடுத்து வைத்திருத்தலை கும்பகம் என்பர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய நாகரீகத்திற்கு ஏற்ற

❊ அலங்காரப் பொருட்கள்

❊ தையல் பொருட்கள்

❊ பரிசுப் பொருட்கள்

❊ பாடசாலை உபகரணங்கள்

மலிவாகப் பெற்றுக்கொள்ள

# கண்ணன் அழகு மாடம்

72, சிறப்பு அங்காடி
( நவீன சந்தை ) யாழ்ப்பாணம்.

---

நவநாகரீகத்திற்கு ஏற்ற

சிறந்த தையலகம்

V

# லக்ஷ்மி தையலகம்

44A, நவீன சந்தை
( சிறப்பு அங்காடி ) யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன் பெருமை

நயினைக் கவிஞர்
நா. க. சண்முகநாதபிள்ளை

அண்டமெலாம் ஆக்கியளித் தொழித்துமறைத் தருளி எங்கும்
நின்றதொரு சத்திதனை நினைந்துருகித்; தமிழர் ஆய்ந்து
கண்டபெருந் தத்துவத்தை வடிவமைத்து; இளமைக் கோலம்
கொண்டமுழு முதற்பொருளாய் முருகனென வணங்க வைத்தார். 1

முழுமுதலைத் தனிப்பொருளை முயற்சியூடு முகிழ்த்துப் பூத்து
எழுபொலிவைக்; கலியுகத்திற் கேற்றபேறாய் இயக்க எண்ணிக்;
குருவடிவும் தனிவேலும் குக்குடமும் மயிலும் மாதர்
இருபுறமும் புடைசூழ இறையாக்கி இறைஞ்சி நின்றார். 2

திருவுருவின் உள்ளொளியும் திகழ்ஞானப் பேறும் ஓங்கிப்
பெருகிவர; முருகனிடம் பெற்றவளம் பெருக வென்று;
அருவுருவத் திருமேனி அமைத்தெழில்சேர் கோயில் கட்டி
வருவினையும் வந்தபெரும் வல்வினையும் தீர்த்து வென்றார். 3

நெஞ்சத்தின் வஞ்சமெலாம் நெகிழவைக்கும் முருகன் தந்த
தஞ்சத்தில் சகம்முழுதும் தழைத்தோங்க வல்ல நல்ல;
செஞ்சொல்லால் பாமாலை செய்துவந்து சேவித் தேத்தி
அஞ்சுதலே இல்லாது அடியார்கள் எல்லாம் பெற்றார். 4

முருகாவென் றோதுதலை மந்திரத்தின் மூல மாக்கி;
கருவான வேற்படையைக் காப்பாகக் கருத்தில் ஏற்றி;
இருமாதர் புடைசூழும் எழிலோடு மயிலும் சேவல்
வருபேறு கண்ணுற்றார் நண்ணுற்றார் முத்தி என்றார். 5

நெடும்பகைகள் சூழ்வினைகள் நீள்பிணிகள் நலிவு தாழ்வு
கொடுங்கோண்மை கூற்றுவன்தன் கொடுமரண பயங்கள் துன்பம்
கடுங்கோபம் காமஇச்சை களவுகொலை பொய்கள் போக்க
எடுங்கோவேல்; தொழுங்கோவென் றிறுமாந்து வெற்றி கொண்டார். 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிமலனென அமரனென நீதியென எண்ணின் அல்லால்,
அமலனென அப்பனென ஆறுமுகன் கந்தன் என்ன,
சமரமறப் பலநாமம் தான்பெற்று; அன்பர் தங்கள்
பிமரமறத் தடுத்தாண்டு பீடுயர முருகன் வைப்பான். 7

உருவவழி பாடியற்றல் ஒப்புநோக்கில் உயர்ந்த தாகக்
கருதுநெறி சைவநெறி கதித்தோங்கி; முருக பக்தி
பெருகிவரத்; தவப்பேறும் பேரின்பப் பேறாம் பேறும்;
மருவிவரும் மககள்குலம் மன்பதையில் நாளும் வாழும். 8

பற்றோடு தன்னுருவை மெய்யுருவாய்த் தலைமேற் கொண்டு;
முற்றாகத் தம்மைமுழு முதல்தனக்குத் தந்த வர்க்கு
வற்றாத கருணைமழை பொழிந்துயர முருகன் வந்தான்
சற்றேனும் தயங்காது அவனடியே சரணம் என்போம். 9

எவ்வாறு முருகனவன் இறமையினை உணர்ந்தார் கொலோ
அவ்வாறு அவரறிவுக் கெட்டியவா றருகில் வந்து
இவ்வாறு வாழ்விப்பான் என்றில்லா ஏமம் தந்து
ஒவ்வாத ஊழ்களைவான் முருகனவன் பெருமை ஈதே. 10

## பஞ்சநிர்த்த தருப்பணம்

பஞ்சதீர்த்தங்களாவன:- தேவதீர்த்தம், ஆரிடதீாத்தம், மானுடதீர்த்தம், பூததீர்த்தம், பிதிர்தீத்தம் என்பனவாகும், இவற்றுள், தேவதீர்த்தமாவது கைந்நுதி, இத்தேவதீர்த்தத்தினாலே தேவர்களுக்கு தருப்பணம் செய்க, ஆரிடதீர்த்தமாவது விரல்களினிறைச்சந்தி, இவ்வாரிட தீர்த்தத்தாலே இருடிகளுக்குத் தருப்பணம் செய்க, மானுடதீர்த்தமாவது கனிட்டிகை மூலம் இம்மானுடதீர்த்தத்தினாலே மனுக்களுக்குத் தருப்பணம் செய்க, பூததீர்த்தமாவது மணிக்கட்டு. இப்பூததீர்த்தத்தாலே பஞ்சபூதங் களுக்கு தருப்பணம் செய்க, பிதிர்தீர்த்தமாவது தர்ச்சனி அங்குட்டங்களின் நடு, பிதிர்தீர்த்தத்தினாலே பிதிர்களுக்குத் தருப்பணம் செய்க. ( தருப்பணம் – உவப்பித்தல் )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித நகரமாக்கப்படவேண்டிய நல்லூர்

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை

எமது நாட்டிலுள்ள முருகன் திருத்தலங்களுள் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் முக்கியதொரு இடத்தைப் பெறுகின்றது. கதிர்காமம், செல்வச்சன்னிதி, வெருகல், உகந்தை என்பன கிராமச் சூழலில் அமைந்துள்ளன. நல்லூர் ஆலயம் நகர் சூழலில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இதனால் இங்கு வரும் அடியார்கள் சாதாரண நாட்களிலோ, விழாக் காலங்களிலோ தங்குவதற்கு மடங்கள் அல்லது தங்குமிட வசதிகள் அமைத்துக் கொடுக்கவேண்டிய தேவை பெருமளவில் ஏற்படவில்லை. எனினும் விழாக்காலங்களில் அடியார்கள் ஆலயத்திற்கு இலகுவாகச் சென்றடையக் கூடிய பாதை ஒழுங்கும் போக்குவரத்து வசதியும் மற்றும் அடிப்படை வசதிகளும் கொண்டதாக இருக்க வேண்டும். மற்றும் அடியார்கள் கோயிற் புறத்தே வசதியாகத்திரண்டு நிற்பதற்கும் அகலமான வெளிவீதிகளும், ஒழுங்கமைப்பிட்ட திறந்த நிலப்பரப்பும் தேவையாகும்.

இலங்கையில் பல நகரங்கள் இன்று புனித நகரங்களாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. கதிர்காமம், மகியங்கனை, அநுராதபுரம் போன்றன இவ்வகையில் அடங்கும். திருக்கோணேஸ்வரத்தைப் புனித பிரதேசமாக்க முயன்ற போதும் அம்முயற்சி வெற்றியளிக்கவில்லை. வடக்கு கிழக்கில் எந்தவொரு சைவத் திருத்தலமும் புனித பிரதேசமாகப் பிரகடனப்படுத்தவோ, அபிவிருத்தி செய்யப்படவோ இல்லை. நல்லூர் ஆலயமும் இதன் சுற்றுப்புறமும் சமய நோக்கிலும் வரலாற்று நோக்கிலும் தமிழர்களின் முக்கியமான தொருவிடமாகும். இதனால் இப்பிரதேசத்தை ஒரு புனித நகரமாக வரையறை செய்து இதன் பொருளாதார பௌதீகப் பண்புகளை அபிவிருத்தி செய்வது தேவையாகிறது. இப்புனித நகருள் அடங்கும் பரப்பு ஆய்வுகள் மூலம் தீர்மானிக்கப்படலாம்.

ஒவ்வொரு நகரத்திலும் அதன் சமூக கலாசார பொருளாதார செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அங்கு நடைபெறும் விழாக்கள் உதவியாக அமைகின்றன. உதாரணமாக கண்டி நகரில் நடைபெறும் வருடாந்த எசல பெரஹரா அந்நகருக்கு சமய கலாசார முக்கியத்துவத்தைக் கொடுப்பதுடன் சர்வதேச உல்லாசப் பயணிகளையும் அது அங்கு ஈர்ப்பதாக உள்ளது. இது அந் நகரின் பொருளாதார செயற்பாட்டில் குறிப்பிடத்தக்க பங்கு வகிப்பதைக் காணலாம். இதே போன்று நல்லூர் ஆலயத்தின் வருடாந்த உற்சவமும் யாழ்ப்பாண நகரில் சமய கலாசார பொருளாதார செயற் பாடுகளில் முனைப்பானதொரு இடத்தை வகிக்கக்கூடியவழியை நாம் உருவாக்கலாம். இலங்கைச் சைவ மக்கள் மாத்திரமல்லாமல் சர்வதேச ரீதியாக வாழும் முருகனடியார்களை இங்கு வருவதைத் தூண்டும் முறையில் செயற்பாடுகளை முன்னெடுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயச் சுற்றாடலின் இன்றைய பௌதீகநிலை மேலும் அபிவிருத்தி செய்யப்படும் இடத்தில்தான் உற்சவத்தின் சிறப்பும் ஆலயச்சூழலின் பண்பும் பெருமளவுக்கு பொலிவு பெற்று விளங்கும். நல்லூர்ச் சுற்றாடலின் பௌதீக அமைப்பில் அமைந்துள்ள வீடுகள், கட்டிடங்கள் ஆகியன சைவ கலாசார விழுமியங்களையும் திராவிட கட்டிடக்கலையையும் பிரதிபலிப்பதாக அமைவது சிறந்ததாகும். இன்று இப்பண்புகள் காணப்படினும் மென்மேலும் அபிவிருத்தி தேவைப்படுகின்றது.

நல்லூர் ஆலயச் சூழலின் பாறைவலைப்பின்னலை நோக்குமிடத்து பாதைகள் போதியனவாக இல்லை. ஆலயத்தை மையமாகக் கொண்டு போக்குவரத்துப் பாதைகள் சுற்றுவடிவிலோ, சதுரவடிவிலோ, கதிர் வீசல் வடிவிலோ அமையவில்லை. பொருத்தமான போக்குவரத்துப் பாதை அமைப்பு ஆலய செயற்பாட்டை இலகுவானதாக்கும். உதாரணமாக, மதுரை மீனாட்சி அம்மன் கோவிலும் அதனைச் சூழவுள்ள வீதி, அமைப்பும் சிறந்த நகர்த் திட்டமிடலைச் சித்தரிப்பதாக நகரத் திட்டமிடலாளர்கள் கருதுகின்றனர். இங்கு பாதைகள் ஆலயத்தை மையமாகக் கொண்டு அடுக்கடுக்காக அமைக்கப்பட்டிருப்பதால் மக்கள் இலகுவாக ஆலயம் சென்றடைய முடிவதுடன் நகரசெயற்பாடுகளும் ஒழுங்காக இடம் பெற வழிவகுக்கிறது. இதே போன்று நல்லூர் ஆலயத்தை சுற்றியும் போக்குவரத்துப் பாதைகள் விருத்தியாக்கப்பட்டு இங்கு வரும் அடியார்கள் நடமாட்டத்தை நன்முறையில் ஒழுங்கமைக்கலாம். அண்மையில் சங்கிலியன் வீதிக்கும், பருத்தித்துறை வீதிக்கும் இடையில் அமைக்கப்பட்டபுதிய பாதை இதற்கு உதவுவதாக அமைகிறது. போக்கு வரத்தை மேலும் சீர்செய்ய பின்வரும் பாதைகள் அமைப்பதும், விருத்தி செய்யப்படுவதும் அவசியமாகின்றது.

1. கோயிலின் வடக்கு வீதியிலிருந்து சங்கிலியன் வீதி, வரை ஒருபாதை அமைய வேண்டும்.

2. அரசடிச் சந்திக்கும் கோயில் வீதிக்கும், இடையில் இருந்து ஓர் அகலமான பாதை மேற்கு நோக்கிச் சென்று அரசடி திருநெல்வேலிப் பாதையை அடையக் கூடிய வழியில் அமைய வேண்டும்.

3. நல்லூர் தெற்கு வீதியிலிருந்து செட்டித் தெருவீதியை, அடையக் கூடிய ஒருபாதை அமையவேண்டும்.

4. நல்லூர்க் கோயில் முகப்பிலும் கல்யாண மண்டபத்திற்கும் அண்மையிலும் பருத்தித்துறை வீதியிலுள்ள ''ட'' வளைவுகள் போக்குவரத்துக்கு இடைஞ்சலாகவும் விபத்துக்கள் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகளைக் கொண்டிருப்பதாலும் இவ்வளைவுகளில் தன்மை குறைக்கப்படல் வேண்டும். அல்லது மாற்றுப் பாதைகள் அமைத்து போக்குவரத்துக்கள் திசை திருப்பப்படல் வேண்டும்.

5. நல்லூர்க் கோயில் முகப்பிலிருந்து முத்திரைச்சந்தை முடக்கிலுள்ள பருத்தித்துறை வீதி அகலமாக்கப்பட்டு பாதசாரி நடைபாதை கொண்ட பெருஞ்சாலையாக மாற்றி கோவிலின் முகப்புப் பார்வை பரந்த காட்சியைக் கொடுக்கும் முறையில் வீதி அமைக்கப்படல் வேண்டும். இப்பாதைகள் அமைக்கப்படுமிடத்து கோயிலை அடையும் வழிகளும் அதிகரிக்கும்.

ஆலயவீதி அடியார்களை உள்ளடக்கக் கூடியதாகவும் தேர் சப்பறம் போன்ற இரதங்கள் இலகுவாக ஓடக்கூடிய முறையில் அமைந்திருப்பதும் கட்டாய தேவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வீதிகள் ஓரளவுக்கு அகலமாக இருப்பினும் அதன் மேற்கு வீதி, குறிப்பாக பருத்தித்துறை வீதிக்கு, வடக்காகவுள்ள வீதி, மிக ஒடுக்கமாக அமைந்திருப்பது சுவாமி வீதி, வலம் வருவதற்கும் அடியார்களின் வீதி, நடமாடலுக்கும் இடைஞ்சலாக இருக்கிறது. இதனால் சனநெரிசல் ஏற்படும் நிலை தென்படுகிறது. ஆகவே இவ் வீதி, அகலமாக்கப்படல் வேண்டும்.

ஆலய உற்சவ காலங்களில் வர்த்தக, கலாசார கல்வி கண்காட்சி செயற்பாடுகள் இங்கு இடம் பெறுவது வழக்கம். இச் செயற்பாடுகள் அடியார்களின் ஆலயவழிபாடு ஆலயச் சூழலில் நடமாட்டம் போன்றவற்றுக்கு இடைஞ்சல் இல்லாத முறையில் மேற்குறித்த செயற்பாடுகளை வெவ்வேறு இடங்களில் அமைத்து, நன்குகந்த முறையில் நிலம் ஒதுக்கப்பட்டு பயன்படுத்தப் படும்போது இச் செயற்பாடுகள் கோவிலின் புனிதத் தன்மையைப் பாதிக்காது.

மேற்குறித்த கருத்துக்கள் கருத்திலெடுக்கப்பட்டு நல்லூர் புனித நகரமாக விருத்தியாக்கப்படும் போது நல்லூர் ஆலயத்தின் சுற்றுப்பிரகார செயற்பாடுகளும் அடியார்களின் வழிபாடும் ஒழுங்காகவும் சீராகவும் முன்னேறமுடியுமெனக் கொள்ளலாம்.

○

### கல்விகற்க

*கற்கவேண்டியவற்றை முறைப்படி கற்காதவன் நூற்கேள்வி அடையப் பெறாதவன். எருதுபோல மூப்பு அடைகிறான். அவனுடைய சதை வளர்கிறது. கொழுக்கிறான். அவனுக்கு அறிவு வளர்வதேயில்லை. கற்காதவன் முகத்திலே கண்களுமில்லை – அங்கே இரண்டு புண்கள் தான் இருக்கின்றன. ''கற்கை நன்றே – கற்கை நன்றே – பிச்சை புகினும் கற்கை நன்றே'' என்று முன்னோர் கூறியுள்ளதை உணர்க.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணகத்து வனிதையரும் விரைந்து வரத்துடித்திடும்

மண்ணகத்து மாளிகைதான்

## விதுரா ஆடை அகம்

★ பெண்களுக்கான பிளவுஸ் - ரீசேட் பஞ்சாபி
ஸ்கேட் அன் பிளவுஸ் - வெளிநாட்டு ஸ்கேட்
பிளவுஸ் - சாறிவகைகள் காஞ்சிபுரம் - பெனாரிஸ்.

யாவும் ஒரேயிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

★ ஆண்களுக்கான சேட்வகைகள் - ரீசேட்டுகள்
சூட்டிங் வகைகள் யாவற்றுக்கும்

**விலையில் மலிவு — நயமுண்டு**
**துணிவகைகளோ நவீனமானவை**

புடவைராஜ்யத்தின் சிகரமென்னும்

புகழ்பெற்ற ஒருங்கிணைந்த தாபனம்

# விதுரா ஆடை அகம்

34, நவீனசந்தை - உட்புறம், யாழ்ப்பாணம்.

# எல்லாம் அற என்னை இழந்த நலம்

பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி

[ கந்தரநுபூதிப் பாடல்களில் வரும் பௌதீக அதீத (Metaphysical) உணர்வு பற்றிய ஒரு சிறு குறிப்பு ]

அருணகிரிநாதரின் பாடல்கள் இறைவனுள்ளத்தைச் சித்திரிப்பதில், தமிழிற்சிலபுதிய எல்லைகளைத் தொட்டவை. சைவப் பெருமரபினுள் வரும் 'இஷ்ட தெய்வ'' வழிபாட்டு நிலைநின்று, அத்தெய்வத்தினூடாகவே தனது முற்று முழுதான ஆன்ம விடுதலையை வேண்டும் ஒரு முக்கிய பண்பு இவரிடத்துக் காணப்படுகின்றது. திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரநுபூதி, கந்தரந்தாதி, திருவகுப்பு, வேல்விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம் என்பன இவரது பாடல்கள் என்பர். இவற்றினுள் முதல் மூன்றும் முக்கியமானவை. இவையே பராயண நிலையிற் பெரிதும் பயன்படுத்தப்படுபவை.

திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரநுபூதி ஆகிய பாடல்களை நோக்கும் பொழுது கந்தரநுபூதியை மற்றைய இரண்டினதும் சாரம் என்று கூறலாம். அருணகிரி, தமது மிக முதிர்ந்த ஒரு மனநிலையிலேயே கந்தரனுபூதியைப் பாடியிருத்தல் வேண்டுமெனச் சொல்வதற்கான தடயங்கள் அப்பாடலிற் காணப்படுகின்றன.

அநுபூதி என்பது ''அநுபவஞானம்'' என்பர். இறைவனை அறிவால் மாத்திரம் உணர்ந்து கொள்ளாமல், (தனது) அநுபவத்தினூடாகவே கண்டறிகின்ற பொழுது அறிவும் அனுபவமும் இணைகின்றன. இந்த மன அமைதியைக் கந்தரநுபூதிப் பாடல்கள் வெளிக்கொணருகின்றன.

கந்தரநுபூதிப் பாடல்களை நோக்கும் பொழுது முருகனை விளித்து அவனிடத்து ஒரு வேண்டுகோள் விடுக்கப்படுவது அல்லது அவனை விளித்து ஒரு குறிப்புரை (Comment) கூறப்படுவது ஆகிய ஓர் அடித்தள அமைப்புக் காணப்படுவதைக் காணலாம்.

முருகனை விழிக்கும் பொழுது இரு மட்ட ஈடுபாடு காணப்படுவதை அவதானிக்கலாம்.

- ஒரு மட்டத்தில் முருகனுடைய ஆளுமைக் கவர்ச்சியில் திளைத்தல்.
- மற்றைய மட்டத்தில் முற்றிலும் கருத்துருவ நிலையில் - பௌதீக நிலைக்கு அப்பாற்பட்ட ஒரு கருத்துருவ நிலையில் – முருகனைக் காணுதல்.

இந்த இரண்டாவது மட்டந்தான் அநுபூதி நிலையாக – அநுபவ ஞான நிலையாக காணப்படுகிறது.

முருகனுடைய தோற்றப் பொலிவிலே திளைக்கும் நிலையைப் பின்வரும் வரிகளிலே காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''காளைக்குமரேச னெனக் கருதித்
தாளைப் பணியத் தவமெய்தியவா''
..........

''கைவாய் கதிர்வேல் முருகன்கழல் பெற்(று)
உய்வாய்.........''

கந்தர் அநுபூதியில் அருணகிரியாரின் அநுபவ ஞானக் குறிப்புக்களே மேலோங்கி நிற்கின்றன.

தான் பெற்ற ஞானத்தின் தன்மையை அருணகிரி பின்வருமாறு சுட்டுகிறார்.

''எல்லாம் அறஅற என்னை இழந்தநலம்
சொல்லாய் முருகா சுரபூபதியே'' (2)

தான் பெற்ற அநுபவம் சொற்களினால் எடுத்துக் கூறுவதற்கு அப்பாற் பட்டதென்பதையும் தாம் பெற்ற கல்வி இந்த அநுபவத்துக்கு உதவியது என்பதையும் அவர் எடுத்துக் கூறும் முறைமை சொல்லாற் சுட்ட முடியாததைச் சொல்லுக்குள் கொண்டுவரும் திறனைக் காட்டுகின்றது.

யாம் ஓதிய கல்வியும், எம் அறிவும்
தாமே பெற வேலவர் தந்ததனால்
பூ மேல் மயல் போல் அற மெய்ப்பு உணர்வீர்
நாமேல் நடவீர், நடவீர் இனியே (17)

அத்தகைய அநுபவ ஞானந் தந்த நிலையை அவர் பின்வரும் பாடலிற் காட்டுகிறார்.

''யானாகிய என்னை விழுங்கி வெறும்
தானாய் நிலை நின்றது தற்பரமே''

வெட்ட வெளியில் நிற்கும் நிலை என்பது லோகநிலை நிற்கும் ஒரு பதிவாகும்.

கந்தர் அநுபூதி வந்த முறையினை அவர் எடுத்துக் கூறுகின்றார்.

தூசா மணியும், துகிலும் புனைவாள்
நேசா!, முருகா!, நினது அன்பு, அருளால்
ஆசா நிகளம் துகள் ஆயினபின்
பேசா அநுபூதி பிறந்ததுவே. (43)

நிகளம் – சங்கிலி (பிணித்துவைத்திருப்பது)
பேசா அநுபூதியைப் பேச்சினால் எடுத்துரைக்கும் கவிவல்லமை அருணகிரியாரிடத் திருந்தது.

குறியைக் குறியாது குறித்து அறியும்
நெறியைத் தனிவேலை நிகழ்த்திடவும்
எறிவற்று உலகோடு உரைசிந்தையு மற்று
அறிவற்று, அறியாமையும் அற்றதுவே

அறிவற்ற நிலையும், அறியாமையற்ற நிலையும் சமனாகின்றன.

இவ்வாறு சொல், பதம் கடந்த நிலைகளைச் சொல்லுக்குட் கொண்டு வருகின்ற பௌதிக அதீதச் சித்திரிப்புப் பண்பு, திருவிசைப்பா காலம்முதலே பக்திப்பாடல்களில் வளர்த்துவருவதை நாம் அவதானிக்கலாம். இந்தப்பண்பு தாயுமானவரில் பூரணத்துவத்தை எய்துகின்றது. என்பர். அருணகிரியாரிடத்தும் இப்பண்பு மிகத்துல்லியமாகத் தெரிகின்றது.

திருப்புகழின் சத்த ஓசையினுள் அமிழ்ந்து போய்க்கிடக்கும் இந்தப் ''பௌதீக அதீதக்'' கருத்துக்கள் கந்தரநுபூதியில் மிகச்சிறப்பாக வெளிவருகின்றன.

○

*பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்*
*இறைவன் அடிசேரா தார்.*

— திருக்குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழல் பணிய வினை நீங்கும்

பேராசிரியர் அ. சண்முகதாஸ்

வினை இரண்டு வகைப்படும்: ஒன்று நல்வினை; மற்றையது தீவினை. நல்வினைக்கும் தீவினைக்குமிடையே வேறுபாடு காணாத ஒரு நிலை ஏற்படுமாகில், அது மிகுந்த மகிழ் நிலையை உண்டாக்கும். ஓடும் செம்பொன்னும் இவர்களுக்கு ஒரே நிலையில் இருப்பன. இத்தகைய மகிழ் நிலையை அடைந்தவர்கள் சிலர் தம்முடைய பாசுரங்கள்மூலம் அவ்வனுபவத்தைப் புலப்படுத்தியுள்ளார்கள். சேக்கிழார் பெருமான் இத்தகைய மகிழ் நிலையின் வெளிப்பாடாகவே,

''மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை
எங்கள் பிரான் சண்பையர்கோன் அருளினாலே
இருந்தமிழ்நா டுற்றவிடர் நீக்கித் தங்கள்
பொங்கொளி வெண் திருநீறு பரப்பினாரைப்
போற்றுவார் கழல்எம்மாற் போற்றலாமே''

என்னும் பாடலை அமைத்துள்ளார். ''போற்றுவார் கழல் எம்மாற் போற்றலாமே'' என்பது மிக உயர்ந்த நிலை. மற்றவருடைய கழல் பணிய ஒருவர் தயாராக இருந்தால், அவருடைய மனப்பக்குவம் இருவினையொப்புடையது. நன்றாகக் கற்றவர்களுக்கு இந்நிலை ஏற்படும் என ஆன்றோர் கூறியுள்ளனர். அறிவு நிரம்ப, அதன் விளைவாகப் பணிவு தானாக வரும் நன்றாகப் பழுத்த மாங்கனிக் குலை கீழே தாழ்வதுபோல் இது நிகழும்.

கற்றல் கழல் பணியவைக்கும். இதனைத்தான் தமிழ் மறையாகிய திருக்குறளைத் தந்த வள்ளுவனும், ''கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழா அரெனின்'' என்று கூறினார். முற்றிய அறிவினைப் பெற்ற அடியவர்கள் இறைவனை நோக்கியபோது முதலில் அவனுடைய கழலையே கண்டார்கள். சிறீரங்கத்துக்கு வெளியே நின்று அரங்க நாதனை மனத்திலே நினைந்து அவன் உருவத்தை மனத்திலே உருவாக்கிப் பணிந்த தொண்டரடிப் பொடியாழ்வார் கோயிலுக்குட் சென்றபோது முதலிலே கண்டது அரங்கனுடைய அடிகளையே.

அமல னாதிபி ரானடி யார்க்கென்னை யாட்படுத்த
விமலன் விண்ணவர் கோன்விரை யார்பொழில் வேங்கடவன்
நிமலன் நின்மலன் நீதிவானவன் நீள் மதிளரங்கத் தம்மான் திருக்
கமல பாதம்வந் தென்கண்ணி னுள்ளன வொக்கின்றதே

என்று அவர் கண்ட கண்ணனின் கமல பாதம் தன் கண்களுள் ஏற்கெனவே கற்பனை செய்து வைத்துள்ள கழலுடன் ஒப்பாகின்றதெனக் கூறுகிறார்.

இறைவன் கழலை இடையறாது நினைப்பதால் என்ன பயன் கிட்டுமென அருணகிரிநாதர் அருமையாக எடுத்துக் கூறுகிறார். நாங்கள் பிறக்கும் பொழுது எங்களைப் படைக்கும் பிரம்மதேவன் எங்கள் தலையிலே என்ன விதியை எழுதி வைத்திருக்கிறானோ, அது மாறாமல் அப்படியே நடக்கும் என்று இந்துக்கள் நம்புகின்றனர். 'தலை விதியை மாற்றமுடியாது' என்ற கூற்றுக்களெல்லாம் இதனை அடிப்படையாகக் கொண்டே தோன்றின. ஆனால், இத்தகைய தலைவிதியையே முருகப்பெருமானுடைய கழலடி மாற்றிவிடுவது மாத்திரமல்ல அதனை முற்றாக அழித்துமே விடும். கந்தரலங்காரத்தில் அருணகிரியார் இதனைக் கூறும்பொழுது ஒன்று பட்டு, அது பட்ட இடத்திலுள்ள ஒன்றனை அழித்ததாம் எனப் பாடுகிறார். திருச்செந்தூரிலுள்ள வயல்களிலே வெட்டுக்கிளிகள் பட்டு, அந்த வயற்பொழிலே அழிந்துவிட்டது. பூக்களையுடைய கொடிபோன்ற பெண்களுடைய மனம் மயக்கம் பட்டு அழிந்தது. முருகப்பெருமானுடைய வேற்படை பட்டுக் கடலும் சூரனும் கிரௌஞ்ச மலையும் அழிந்தன. இதே போன்று அப்பெருமானுடைய திருவடிபட்டுத் தன்னுடைய தலையிலே பிரம்மதேவன் இட்ட கையெழுத்து அழிந்துவிட்டது என அருணகிரியார் எல்லோருக்கும் தன் தலையைக் காட்டிக் கூறுகிறார்.

சேல்பட்டழிந்தது சேந்தூர் வயற்-
பொழில் தேங்கடம்பின்
மால்பட்டழிந்தது பூங்கொடியார்மனம்
மாமயிலோன்
வேல்பட் டழிந்தது வேலையுஞ்
சூரனும் வெற்புமவன்
கால்பட் டழிந்ததிங் கென்றலை
மேலயன் கையெழுத்தே.

அருணகிரியாருடைய இப்பாடல் கழல் எவ்வாறு எமக்கு அருளுமென்பதைக் காட்டுகின்றது.

நடராஜப் பெருமானுடைய தூக்கிய திருவடி கண்ட அப்பர்பெருமானுக்கு இந்த மனிதப் பிறவியிலேயே விருப்பம் ஏற்பட்டுள்ளது.

குனித்த புருவமும் கொவ்வைச்
செவ்வாயிற் குமிழ்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த
பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே.

இறைவனுடைய எல்லாக் கோலவழகுகளுடன் எடுத்தபொற் பாதத்தினையும் அப்பர் சுவாமிகள் சேர்த்து விடுகிறார்.

தமிழிலே பேரிலக்கியங்கள் படைத்த சேக்கிழாரும் கம்பனும் தம்முடைய நூல்களிலே கடவுள் வாழ்த்துப் பாடும்போது இறைவனுடைய கழலடிகளை நினைக்கின்றார்கள்.

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சிலம் படிவாழ் த்திவணங் குவாம்

என்று திருத்தொண்டர் புராணத்திலே சேக்கிழார் பெருமான் மலர்சிலம்படிகளை வாழ்த்தி வணங்குகிறார். கம்பநாட்டாழ்வார்

''ஆதி அந்தம் அரி என யாவையும்
ஓதினார் அலகு இல்லன உள்ளன
வேதம் என்பன மெய்ந்நெறி
நன்மையன்
பாதம் அல்லது பற்றிலர் பற்றிலார்''

என்று பற்றிலாதவர்கள் பற்றுகின்ற பாதத்தினை எண்ணுகிறார். பாதம் பதத்தினை நல்கும் என்பதை உணர்ந்தவர் அப்பாதத்தினையே பிடிப்பர். எனவே, எம்முடைய வினைநீங்க கழல் பணிதல் வேண்டும். ○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீக்கூர்ந்த திருமேனியன்

பேராசிரியர் வி. சிவசாமி
சமஸ்கிருதத்துறைத் தலைவர்

மனிதவரலாற்றிலே "தெய்வமென்பதோர் சித்தமுண்டாகி" ய காலம் தொட்டு எல்லாவற்றிற்கும் மூலகாரணமாகவும், எல்லாமாகவும், எங்கும்நிறைந்தும், யாவற்றையும் கடந்தும் நிற்கும் இறைவனை மனிதன் உருவமாகவும் அருவமாகவும், அருவுருவமாகவும் கண்டு வந்துள்ளான். அவ்வந் நாட்டுச் சமூகச்சூழ்நிலைக் கேற்பச் சமய சிந்தனைகள் உருவாகின. உலகின் பல்வேறு நாடுகளிலே தோன்றிய சமயங்களிடையிலே ஒற்றுமையமிசங்களும், வேறுபாடான அமிசங்களும் காணப்படுகின்றன. ஆனால், உலக மத ஒருமைப்பாடுகளிலே இறைவன் அக்கினி வடிவினன், குறிப்பாக ஒளிமயமானவன் எனும் கருத்து மிக முக்கியமான கருத்தொன்றாகும்.

இக்கருத்தினை மையமாகக் கொண்டு இத்துடன் தொடர்பான கருத்துகளும் அழுத்திக்கூறப்பட்டு வந்துள்ளன. எனவே, இக்கருத்தின் தொடக்கநிலை எவ்வாறு ஏற்பட்டிருக்கலாமென்பதையும் ஒருவர் சற்றுக் கருத்திற்கொள்ளுதல் நன்றே. மிகப்பழைய காலத்திலே ஆதிமனிதன் இயற்கையோடு ஒன்றி வாழ்ந்த காலத்திலே அவனுக்கு இரவு – இருள் மிக அச்சத்தினை விளைவிப்பதாகவும் பகல் – ஒளி உற்சாகத்தினையும் மகிழ்ச்சியையும் ஊட்டுவதாகவும் விளங்கின. ஒளியுள்ளபொருள் அக்கினி (தீ) சூரியன், சந்திரன், விண்மீன்கள், மின்னல் முதலியன இயல்பான ஒளியுள்ளனவே. இவை அவனுக்கு மிகுந்த குதூகலத்தினை ஏற்படுத்தின; அதே வேளையில் இரவும், இருளும் அச்சத்தினை உண்டாக்கின. தன் வாழ்விற்கு மகிழ்ச்சி, நம்பிக்கை முதலியன வற்றை ஊட்டிய மேற்குறிப்பிட்ட ஒளியுள்ள இயற்கை அமிசங்களை அவன் தெய்வமாகக் கருதினான். சமஸ்கிருதத்திலே இறைவனைக்குறிக்கும் 'தேவ' எனும் பதம் "ஒளியுள்ளது" எனப்பொருள்படும். இம்மொழியோடு தொடர்புள்ள கிரேக்கம், லத்தீன் முதலிய பழைய ஐரோப்பிய மொழிகளிலும் இதே போன்ற சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது. எனவே, தேவர்கள் ஒளியுள்ளவர்கள் எனப்பட்டனர். ஆனால் இரவு பொதுவாக இருள்மயமாக, அச்சம்தருவதாக, பேய் பிசாசுகள் உலாவும் நேரமாகவும் கருதப்பட்டு வந்துள்ளது. மேலும், ஒளியும் இருளும் மாறி மாறி வருவன. உயிரினங்கள் இந்த எதிர்ப்பண்பினை இயற்கை நியதியில் மட்டுமன்றி, வாழ்வின் பல்வேறு நிலைகளிலும் சந்திக்கவேண்டியிருந்தன.

மனித நாகரீகம் வளர்ந்து மேம்பட்டு வர, இறைவன் பற்றிய கருத்துக்களும் அவ்வக்கால சூழ்நிலைகளுக்கும், சவால்களுக்குமேற்ப மாற்றமடைந்தும் வந்தன. மனோன்மணீய ஆசிரியரான பேராசிரியர் சுந்தரம்பிள்ளை

> "காலமென்பது கறங்குபோற்சுழன்று
> மேலது கீழாய் கீழது மேலாய்
> மாறிடும் தோற்றம்"

எனக் காலம் பற்றிக் கூறியுள்ளார். காலம் பற்றிய பழையகாலச் சிந்தனைகளை அதர்வ வேதத்திலுள்ள சில சூக்தங்களிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பாடல்களிலும்) தெளிவாக உள்ளன. இறைவன் "தீமயமானவன்" "தீபோன்றவன்" "ஒளியுள்ளவன்" என்ற கருத்து உலக மதங்கள் பலவற்றிலே அழுத்திக்கூறப்பட்டுள்ளது.

இங்கு இந்து சமய மரபினையொட்டியே இது பற்றிய சில கருத்துக்களும், எடுத்துக்காட்டுகளும் கூறப்படும். அக்கினி வழிபாடு வேதங்களிலே மிகமுக்கியமான இடத்தினை பெற்று வந்துள்ளது. அக்கினி தெய்வமாகவும் ஏனைய தெய்வங்களை வேள்விக்குக் கூட்டிக்கொண்டு வருபவராகவும், மனிதனுக்கும் தெய்வங்களுக்குமிடையிலானஊடகமாகவும், மனிதனின் மிகநெருங்கிய கண்கண்ட தெய்வமாகவும் வேதங்களிலே போற்றப்படுகிறார்.

இறைவனை எப்பெயரில் வணங்கினாலும், அவன் ஒளியுள்ளவன் என்றகருத்து வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது. காலம் செல்ல ஒளி அறிவினை, ஞானத்தினைக் குறித்தது, இருள் அறியாமையினை அஞ்ஞானத்தினைச் சுட்டிற்று, வேதங்களின் இறுதிப் பகுதி நூல்களாக விளங்கும் உபநிஷதங்களிலுள்ள பிரார்த்தனை ஒன்றிலே இறைவன் (பரமாத்மா) என்னை (ஜீவாத்மாவினை) இருளிலிருந்து ஒளிக்கு (ஜ்யோதிக்கு) கொண்டு செல்பவராக (தமஸோ மா ஜ்யோதிர்கமய) எனக்கூறப்படுகின்றது.

அக்கினி ஒளிகொடுப்பது மட்டுமன்றி எல்லாவற்றையும் அழித்துத் தூய்மைப் படுத்தும் ஆற்றலும் வாய்ந்தது. இறைவன் ஆன்மாக்களின்மீது கொண்டுள்ள இரக்கத்தினாலே அவைகளின் பாவங்களை அழித்து, முத்தியின் பாற்படுத்துகின்றான். சிவபெருமான் அக்கினி மயமானவன், தீமயமானவன் என்பது சைவத்திருமுறைகள் பலவற்றிலே காணப்படுகின்றன. "செந்தழல் மேனியன்" "செந்தழலொருவன்" "தீவண்ணன்" போன்ற பல பதங்கள் தேவாரம் முதலியனவற்றிலே நன்கு விரவி வந்துள்ளமை கண்கூடு. மணிவாசகப்பெருமான் "சோதியே சூழ்ஒளிவிளக்கே," "மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே," "ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ்சோதி," எனவும் இறைவனைப்பாடுகின்றார். இத்தகைய பெரிய அடிமுடியற்ற அனற்பிழம்பாக – சோதியாகவே சிவபெருமான், அகந்தைகொண்டு தமக்குள் பிணக்குற்ற திருமால், பிரமா ஆகியோரின் முன்னிலையிலே சிவராத்திரியின்போது தோன்றினார். இவர் தமது திருக்கரமொன்றிலே தீயை வைத்திருக்கிறார். அவரின் நெற்றிக்கண் அக்கினியே.

இவருடைய இந் நெற்றிக்கண்ணிலிருந்து தோன்றிய ஆறு பொறிகளும் சரவணைப் பொய்கையிலே ஆறு உருவங்களாகிக்கார்த்திகைப் பெண்களால் பராபரிக்கப்பட்டுப்பார்வதியினால்ஒருருவாக்கப்பட்டமுகனாக, ஷண்முகனாக விளங்குபவனும் கலியுகவரதனுமாகிய முருகப்பெருமான் இவ்வாறு "தீக்கூர்ந்ததிருமேனியாக" த் திகழ்கிறான். இந்த ஆறுமுகப்பெருமான் பற்றிய உயர்ந்த சமய தத்துவத்தினை கச்சியப்பர் தமது கந்தபுராணத்திலே இரத்தினச் சுருக்கமாக,

"அருவமுமுருவமாகி யனாதியாய்ப்
பலவாயொன்றாய்ப்
பிரமமாய் நின்றசோதிப் பிழம்ப
தோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்களாறும் கரங்கள்
பன்னிரண்டும் கொண்டே
ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்
தனன் உலகமுய்ய"

என எடுத்துக்கூறியுள்ளார். இந்து சமயத்தின் சாரம் என இச்சிறந்த செய்யுளைக் கொள்ளலாம். இதிலே பொதிந்துள்ள உயர்ந்த சமய தத்துவக்கருத்துக்கள் எக்காலத்திற்கும் பொருத்தமானவை.

இறைவன் பெருஞ்சோதியாக இங்கும் கூறப்படுகின்றார். அப்பெருஞ்சோதி உலகம் யாவும் உய்யும் வண்ணம் இயல்பான இரக்கத்தினால் ஆறுமுகங்களுடனும் பன்னி

ரண்டு திருக்கரங்களோடும் திருவவதாரம் செய்திருக்கின்றார். ஆறுதிருமுகங்களும் பன்னிரண்டு திருக்கரங்களும் அவரின் ஒப்பற்ற ஆற்றலைக் குறிப்பன. இப்பெயர்ப்பட்ட பெருமான் அசுரர்களைத் தண்டித்து தெய்வங்களைக் காப்பாற்றத்தான் திருவவதாரம் செய்தவர். எனவே, இத் தேவர்கள் யார்? அசுரர்கள் யார்? பௌராணிக மரபிலே குறியீடாக இவர்கள் முறையே நல்லோரையும் தீயோரையும் சுட்டுகின்றனர். இறைவனை எதிர்த்துப் போராடிய சூரபன்மன் - 1008 அண்டங்களை 108 யுகங்கள் ஆட்சிபுரிந்த மாபெரும் அசுர மன்னன் அழிந்தானா? இல்லை, ஆணவம் அடங்கப்பெற்று ஞானம் பெற்ற சேவலும் மயிலுமாய் இறைவனுக்கு நித்திய சேவை செய்கிறான்; ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களால் கட்டுண்டு பிறப் பிறப்புச் சுழற்சியினாலே அல்லற்படும் ஆன்மாக்களனைத்தையும் ஒப்பற்ற கருணையினால் இறைவன் ஆட்கொண்டு வீடு பேறு அளிக்கின்றான். இப்பெயர்ப்பட்ட ஆறுமுகன் யார்? அவன் எவருமில்லை; சிவனே என்பது தமிழிலுள்ள கந்தபுராணம் மட்டுமன்றி சமஸ்கிருதத்திலுள்ள ஸ்காந்தபுராணமும் ஒரே முகமாக அழுத்திக் கூறுகின்றன. எனவே, கலியுகத்திலே கண்கண்ட தெய்வமாகத்திகழும் இப்பெருமானை ஏத்தி வணங்கி அருள்பெறுவோமாக.

○

## உறுதி வேண்டும்

*உறுதியான மனநிலை வேண்டும். உறுதியான கற்பாறையை சூறாவளி அசைக்க முடியாது. மனம் உறுதியானால் எதற்கும் சலிப்பேற்படாது. பிறர் பேசும் இகழ்ச்சியோ புகழ்ச்சியோ உன்னைப் பாதிக்காது. உலக நிலை அறிஞர் மனதைப் பாதிக்காது - அறிஞர் -திண்மையுடன் வாழ்வோர் சலிப்படைவதேயில்லை. வாழ்வில் உறுதி வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய அறிமுகம் நாளைய நாகரீகம்

நங்கையர் விரும்பும் நவநாகரீகமான

★ சேலை வகைகள்

★ சேட், பஞ்சாபி, மற்றும்

★ புதிய ரக ஜவுளி வகைகளுக்கும்

நீங்கள் நாட வேண்டிய இடம்

## முகுந்தா ஆடை அகம்

21, சிறப்பு அங்காடி
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

★ ஆடவர்க்கு உகந்த சேட் வகைகள்

★ பெண்களுக்கு விருப்பமான
பாவாடை சட்டை பிளவுஸ் வகைகள்

★ சகல விதமான துணிவகைகளும்
எண்ணம்போல் தெரிவு செய்யலாம்

விரையுங்கள்

★

## ஓம் பிடவை அகம்

49, சிறப்பு அங்காடி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிழாக்களின் நியமங்கள்

கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்
தலைவர், இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஆலயம் என்ற சொல்லுக்கு ஆன்மா ஒடுங்கும் இடம் என்பது ஒருபொருள். ஆன்மாக்களது மலமாகிய ஆணவம் ஒடுங்கும் இடம் என்பது இன்னொரு பொருள். பாரெங்கணும் பரந்து விரிந்துள்ள இறைவன் தம்மை ஆன்மாக்கள் வழிபட்டு உய்யும் பொருட்டு எழுந்தருளி அருள் சுரக்கும் புண்ணிய இடமே ஆலயமாகும். எனவே தான் நீண்டகாலமாக ஆலயவழிபாடு எமது சமய மரபில் வேரூன்றிச் சிறப்படைந்து வருகின்றது. கலைமரபும் சமய மரபும் சங்கமமாகும் இடமே ஆலயங்கள். ஆலயங்கள் மனிதனைப் புனிதனாக்குந் தன்மையன. தெய்வ அருளாற்றல் அங்கு நிலவுவதால் வழிபடுபவர்களது இடர்களும் துயரங்களும் வினைகளும் வெந்து சாம்பராகி விடுகின்றன. உள்ளம் தூய்மையடைகின்றது. இத்தகைய நிலையில் அடியார்களது உள்ளம் தூய்மையடையும் போது தான் இறைவன் அவரவர் உள்ளங்களில் சாந்நித்தியம் கொள்ளுகின்றான்.

> சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
> பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்

என்ற மணிவாசகரின் கருத்து ஆலய வழிபாட்டிற்கு நன்கு பொருந்துவதாகும். இதனாலேயே நம் முன்னோர்கள் நாடு முழுவதும் ஆலயங்களை அமைத்து முறையாக வழிபட்டு மண்ணிலே நல்லவண்ணம் வாழ்ந்தார்கள். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற நிலையில் புனிதத்துவம் பெற்ற எண்ணற்ற ஆலயங்கள் தமிழ் நாட்டிலும் ஈழவள நாட்டிலும் எழுச்சிபெற்றன.

இத்தகைய ஆலயங்களில் நிகழும் நித்திய கிரியைகளையும் நைமித்திகக் கிரியைகளையும் ஒழுங்காக நிறைவேற்றுவதற்குத் துணை புரிவனவே ஆகமங்கள். ஆகமங்கள் வகுத்துக் கூறும் கிரியை மரபில் கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் ஆகிய நான்கும் குறிப்பிடத்தக்கன. ஆலயத்தில் நித்தியக் கிரியைகளில் ஏற்படும் குறைகளை நிவர்த்தி செய்து தெய்வ சாந்நித்தியம் மேலோங்கத் துணை புரிபவை உற்சவங்கள் ஆகும். இவ்வுற்சவங்களே திருவிழாக்கள் எனப் போற்றப்பட்டு வருகின்றன. ஆலயங்களில் வருடந்தோறும் இடம் பெறும் மகோற்சவங்கள் அவ்வாலய வழிபாட்டில் முக்கியத்துவம் பெறுகின்றன. இக்காரணத்தினாலேயே அவற்றுக்குரிய நியமங்கள் வகுத்துக் கூறப்பட்டுள்ளன.

உற்சவம் என்னுஞ் சொல் இறைவனது ஐந்தொழில்களில் ஒன்றான சிருஷ்டி எனப்படும் படைத்தலைக் குறிக்கும் என கிரியை நூல்கள் சுட்டுகின்றன. சைவாலயங்களில் நித்திய பூசை, உற்சவம் முதலானவை சிவாகம விதிப்படியே நடைபெறத்தக்கன. "எங்குமாகி யிருந்தவர் பூசனை துங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகமஞ் சொன்ன முறைமையால்'' என்ற ஆன்றோர் வாக்கு இதனை வலியுறுத்தும். வழிபாடானது அகவழிபாடு புறவழிபாடு என இருவகைப்படும். அகவழிபாடு அந்தர் யாகம் எனவும் உட்பூசையென்றும் மானச பூசை என்றும் கூறப்படும். புறவழிபாடு புறப் பூசை என்றும் பகிர்யாகம் என்றும் அழைக் கப்படும். புறவழிபாட்டிற்குள்ள – ஆல யம், தூபம், தீபம், திருமஞ்சனம், நைவேத் தியம் முதலான உபகரணங்களை யெல்லாம் அகத்தே மனத்தினாற் பொருத்திச் செய் வதே அந்தரியாக பூசையாகும். சிவாச்சாரி யார் அந்தரியாகப் பூசை நிறைவேற்றிய பின்னரே புறப்பூசை செய்ய வேண்டுமென் பது ஆகமவிதியாகும். எனவே திருக்கோயி லும் அங்கே நடைபெறும் பூசை, உற்சவம் ஆகியனவும் அகவழிபாட்டின் உண்மையை விளக்கி ஞானத்தை உண்டாக்குவதற்குக் கருவியாகவுள்ளன. புறவழிபாட்டில் முக்கி யத்துவம் பெறுவது திருவிழாவாகிய உற் சவமாகும். உற்சவம் உத்தம யாகம் எனச் சிறப்பிக்கப்படுகின்றது.

ஆகமங்கள் உற்சவத்தின் பெருமையை வெளியிடுகின்றன. ''விதிப்படி உற்சவம் செய்பவர்களுக்கும் செய்விப்பவர்களுக்கும் பாவம் நீங்கி ஞானமுண்டாகும்'' எனவும் ''எல்லா மங்களமும் உண்டாகும்'' எனவும், கூறப்பட்டுள்ளது. தீவினைச் சக்திகளின் அழிவின் பொருட்டு உற்சவம் செய்யப்பட வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது. அனைத்து உலகத்தின் நன்மைக்காகவும் அனைத்துத் தெய்வங்களைத் திருப்தி கொள் ளச் செய்யவும் அனைத்து உயிரினங்களின் நல்வாழ்வுக்காகவும் அனைவரது பாதுகாப் பிற்காகவும் உற்சவம் செய்யப்படுதல் வேண்டுமென விதிக்கப்பட்டுள்ளது. மண் ணினிற் பிறந்தார் பெறும் பயன் அண்ண லாரது விழாக்களை மன உறுதியோடும் நடத்துதலும் தரிசித்தலுமாகும் என்னும் உண்மை நன்கு பெறப்படுகின்றது.

உற்சவம் மூன்று வகையில் அமையும். தினம் தோறும் நித்திய பூசையின் முடிவில் செய்வது நித்தியோற்சவம் எனப்படும். வருடந்தோறும் குறித்த மாதத்தில் வரும் திதி, நட்சத்திரம் சங்கிராந்தி என்பனவற் றுள் ஒன்றை அந்தமாகக் கொள்வது நைமித்தியோற்சவமாகும். தாம் விரும்பும் காலத்தில் அடியார் ஒருவரினால் செய்விக் கப்படுவது காமியோற்சவமாகும். உற்ச வம் மாசோற்சவம், பக்ஷோற்சவம் என மூன்று விதமெனக் குமாரதந்திரம் கூறும். வாரோற்சவம், பக்ஷோற்சவம், மாசோற்ச வம் எனவும் உற்சவம் வகைப்படுத்தப்படு கின்றன.

உற்சவ மாதங்களும் முக்கியத்துவமுடை யனவாகும். உற்சவ மாதங்கள் சாவன மாதம், சாந்திரமாதம், நக்ஷத்திரமாதம் சௌரமாதம் என நான்கு வகைப்படுவன. இந்நான்கு மாதத்திலும் உற்சவத்தைச் செய்யலாம். அரசனது ஜன்ம நட்சத்திரம், எசமானது நட்சத்திரம், கிராம நட்சத்திரம் முதலானவற்றை தீர்த்த அந்தமாகக் கொண்டு நிச்சயிக்கப்படுவது சாவனோற்ச வமாகும். பிரதிஷ்டைக்குரிய நட்சத்தி ரத்தை அந்தமாகக் கொள்வது பிரதிஷ் டோற்சவமாகும். சூரியன் ஒவ்வொரு ராசி களிலும் செல்லும் பொழுது சங்கிராந்தி எனப்படும். சங்கிராந்தி நிகழுவதைக் கொண்டு அக்காலத்தில் தீர்த்தத்தை ஆரம் பித்தல் சௌரோற்சவத்தின் முக்கிய அம்ச மாகும். எல்லா மாதங்களிலும் பூரணை யையும் அமாவாசையையும் அந்தமாகக் கொண்டு தீர்த்தோற்சவத்தைச் செய்வது சாந்திரமாச உற்சவமாகும்–இது மிக உத்த மமாகும். மாதந்தோறும் வரும் குறிப்பிட்ட நட்சத்திரத்தை அந்தமாகக்கொண்டு அமை வது நட்சத்திர மாசோற்சவமாகும். திருவிழாக் காலத்தில் தானம், ஆலய சேவை, ஓமம், தீர்த்தம், வேதாத்திய யனம், தமிழ்வேத பாராயணம் முதலானவை அனைத்துப் பயன்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவன என்ற காரணத்தால் அக்காலத்திலே விசேடமாகச் செய்தல் வேண்டும். ஒவ்வொரு வருடத்திலும் எந்த மாதத்தில் எந்தத் திதியிலாவது நட்சத்திரத்திலாவது உற்சவம் செய்யப்பட்டு வந்ததோ அந்தத் திதி நட்சத்திரத்திலேயே உற்சவத்தைச் செய்தல் வேண்டும். சிவாச்சாரியாரும் ஆலய அறங்காவலர்களும் பக்தகோடிகளும் உற்சவ புண்ணிய காலங்களில் ஒருகால உணவருந்தி விதிப்படி விரதமநுட்டித்தல் முறையாகும். அக்காலங்களில் ஆசாரப்படி நியமமான வாழ்க்கையைக் கடைப்பிடிக்க வேண்டும். திருவிழாவுக்கென கொடியேற்றிய பின்னர் கொடியிறக்கம் வரை அவ்வூர் மக்கள் விவாக முதலிய சுபக்கிரியைகளும் பிரயாணமும் செய்தல் ஆகாது. ஒவ்வொரு தினங்களிலும் உற்சவத்திற்கான கிரியைகள் உரிய நேரங்களில் செய்யப்பட வேண்டியது நியமமாகும். காலங்கடந்து செய்யப்படும் கிரியைகளினாற் பயன் எதுவும் கிட்டாதாகையினால் காலந்தவறாது கால நியமப்படி சிரத்தையோடும் பக்தியோடும் கிரியைகளைச் செய்தல் வேண்டும். திருவிழாக் காலங்களில் ஆலயச் சூழல் புனிதமடைந்து விளங்குதல் அவசியமாகும். பக்த கோடிகள் அகப்புறத் தூய்மையுடன் வழிபாடு செய்வதற்கு இச் சூழ் நிலை மிகவும் அவசியமாவதோடு கோயிலில் எழுந்தருளியுள்ள தெய்வத்திற்கு நாம் செய்யும் சிறந்த தொண்டாகவும் அமையும். பக்த கோடிகள் பக்தியுடனும் சிரத்தையுடனும் அமைதியான சூழல் ஆலயத்தில் நிலவ உதவுவது உயர்ந்த சிவபுண்ணியச் செயலாகும்.

உற்சவம் சாகல்யம், பாவனம், சாந்தி, மாங்கல்யம் என நான்கு வகைப்படும். கொடியேற்றம் முதல் தீர்த்தம் வரை உள்ள உற்சவம் சாகல்யம் எனப்படும். சாகல்ய உற்சவத்தில் கொடி, தேர், தீர்த்தம் முக்கியத்துவம் பெறுவன. சாகல்ய உற்சவமானது சௌரம், சாந்திரம், சாவித்ரம், கௌமாரம், தைவிகம், பௌவனம், பௌதிகம், கௌணம், சைவம் என ஒன்பது வகைப்படும் அவை முறையே 27 நாட்கள் 17 நாட்கள், 15 நாட்கள், 13 நாட்கள் 9 நாட்கள், 7 நாட்கள், 5 நாட்கள், 3 நாட்கள், 1 நாள் கொண்ட திருவிழாக்களாக அமையுமென உத்தரகாரணாகமம் கூறுகின்றது. 27, 17, 15 நாட்களைக் கொண்ட உற்சவ வகைகள் உத்தமமானவை என்றும் அனைவருக்கும் நற்சுகத்தையளிக்குமெனவும் கூறப்படுகின்றது.

உற்சவங்களின் போது இடம் பெற வேண்டிய கிரியை நியமங்கள் பற்றி அச்சுவேலி சிவாகமஞான பானு சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள் தமது மகோற்சவ விளக்கம் என்ற நூலில் விரிவாக விளக்கியுள்ளார். உற்சவங்களினால் சிவப்பிரீதி, கிராமத்தின் பாதுகாப்பு, உலக நன்மை, தெய்வ சாந்நித்தியம், மக்களது நல்வாழ்வு, தெய்வங்களுக்குத் திருப்தி ஏற்படுத்துதல் போன்றவை பயன்களாக அமைவன.

உற்சவ காலங்களில் இறைவன் பிம்பம், தம்பம், கும்பம் ஆகிய மூன்று நிலைகளிலின்றும் அடியார்களுக்கு அருள் சுரப்பான். உற்சவமானது சாம்பவிதீட்சை எனக் கூறப்படும் சிவபெருமான் தீட்சையில் மண்டலம், கும்பம், அக்கினி, ஆசாரியர், சிஷ்யர் என்னும் ஐந்து இடங்களிலிருந்து அருள் செய்வார். சாம்பவி தீட்சையாகிய உற்சவத்திலும் அங்ஙனமே ஐந்து இடங்களின்றும் அருள் செய்வார். எனவே உற்சவகாலம் அனைவருக்கு முரிய தீட்சாகாலமாக அமைவதால் அதன் பெருமை அளவிடற்கரியது.

உற்சவ காலங்களில் ஆகம முறைப்படி மூர்த்திகளை முறைப்படி அலங்கரித்து வழிபடுவது மேலான புண்ணியமாகும். திருவிழாவின் போது விக்கினேசுவர அனுஜ்ஞை, கிராமசாந்தி, வாஸ்துசாந்தி, மிருத்சங்கிரகணம் 'அங்குரார்ப்பணம்' இரட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாபந்தனம், பேரீதாடனம், துவஜாரோகணம், திருவுலாக் கொண்டருளுதல், யாகம், வேட்டைத் திருவிழா, இரதோற்சவமாகிய தேர்த்திருவிழா, சூர்ணோற்சவம், தீர்த்தத் திருவிழா, யாககும்பாபிஷேகம், மெளனோற்சவம், சண்டேசுவரஉற்சவம், ஆசார்யோற்சவம், ஆகியவை குறிப்பிடத்தக்க கிரியைகளாவன.

எந்த முறைப்படி விழாவைச் செய்வதானாலும் செய்பவர், செய்விப்பவர், வழிபடுவோர் ஆகிய முத்திறத்தவரும் இறைவனுக்கு விழாச் செய்யும் கருமங்களின் உண்மைப் பொருளை உணர்ந்து பக்தி சிரத்தையோடு செய்யும் மெய்யன்பு வழிபாடே இன்றியமையாததாகும்.

## ஓங்கார நாதம் துயர்தீர்க்கும்

''மக்கள் தலைவன்ம ரத்தடித் தெய்வம் முதல் எழுத்தாளன்
மண்ணிலும் மாவிலும் நீற்றிலும் வடிவங்கள் அமைக்கலாம்
பூசைக்கு பூக்களோ தேவையில்லை. அறுகம்புல்லே போதும்
பூரித்தால் பலனுண்டு பாங்குடன் அள்ளியள்ளித் தருவாய்
தேடிவந்து தேங்காயுடைத்து ஆரத்திகொழுத்தி ஆடிப்பாடினால்
தேறுதல்தந்து தேற்றுவித்தாடி சலுகையுடன் சங்கடந்தீர்ப்பாய்
ஆயிரம்பேருண்டு இந்தருமை இராசனுக்கு அரசுகோல் எடுக்க
அகன்றசெவியா குறைகளைக்கேட்டு நலிவுகளை தீர்ப்பாய்
தென்றாந்தமிழில் உள்ளந்திறந்து உனக்குச் சொன்னால் போதும்
தெளிவுநிலை தந்தெமக்கு உய்யும் வழிகாட்டி துணையாவாய்
எல்லோர்க்கும் ஞானத்தந்தை எங்கிருந்தாலும் பிரணவ ஒலி
எங்கள் செவிகள் நல்லவற்றைக்கேட்டு உள்ளத்தில் நலநிலைவெழுப்பி
எல்லோரையும் இன்பமுடன் அரவணைத்து அன்புடன்வாழ
ஓங்காரமாக எழும்புநாதம் எங்கள் துயரெல்லாம் தீர்க்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நல்லூரும் நாவலரும்' - சில வரலாற்று நினைவலைகள்

கலாநிதி சி. க. சிற்றம்பலம்
தலைவர், வரலாற்றுத்துறை,
யாழ். பல்கலைக் கழகம்.

நல்லூர் என்ற நாமம் பல வரலாற்று நினைவலைகளை நம்மனக்கண் முன்னே அலைமோதவைக்கின்றது. ஐரோப்பியரான போத்துக்கேயர் ஈழத்திற்கு கி. பி. 1505இல் வந்தபோது இங்கே மூன்று தனி அரசுகள் காணப்பட்டன. இவைமுறையே கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய அரசுகளாகும். எனினும் இவ்வரசுகள் ஒன்றின் தனித்துவத்தினை மற்றையது அழிக்காதவாறு ஸ்திரம் பெற்றிருந்தன. இவற்றுள் யாழ்ப்பாண அரசின் ஆஸ்தான ஆலயமாக இதன் தலைநகரான நல்லூரில் சிறப்புப் பெற்றிருந்த ஆலயம் நல்லூர் முருகன் ஆலயமாகும். இதனை மையமாக வைத்தே நான்கு திசைகளிலும் ஏனைய ஆலயங்கள் அமைந்திருந்தன. இவ்வாலயம் 1619 இல் போத்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போது தரைமட்டமாகியது. இவ்வாலயம் ஆரம்பத்தில் அமைந்திருந்த இடம் தற்போதைய புனித ஜேம்ஸ் தேவாலயம் அமைந்துள்ள இடமாகும். டச்சுக்காரர் காலத்தின் பிற்பகுதியில் மதச்சுதந்திரம் கிட்டியபோதுதான் தற்போதைய நல்லூர் ஆலயம் உருவாக்கப்பட்டது. எவ்வாறு தலதா மாளிகை சிங்கள மக்கள் தனி அரசு அமைத்ததன் சின்னமாக அவர்களின் கலாசாரப் பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கின்றதோ அவ்வாறே இந்நல்லூராலயமும் தமிழ் மக்களுடைய தன்னாட்சியின் சின்னமாக - அவர்களின் கலாசாரப் பாரம்பரியத்தின் முத்திரையாக - விளங்குகின்றது என்றால் மிகையாகாது.

நல்லூருக்குச் சிறப்பளிக்கும் முருகன் ஆலயம் போன்று இதன் நாமத்துடன் இரண்டறக் கலந்தவர் நமது ஐந்தாங்குரவரான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலராவர். நல்லூரில், நமது தமிழரசின் தலைநகரில், அதுவும் முருகன் ஆலயச் சூழலில் பிறந்த தாற்போலும் அந்நிய கலாசாரப் படர்க்கையால் நமது கலாசாரம் பெரியசவாலை எதிர் நோக்கியபோது நமது கலாசார மறுமலர்ச்சியின் தந்தையாக அவரை ஆக்கிவிட்டது. இவ்வாறு நமது கலாசார மறுமலர்ச்சிக்காக அவர் மேற்கொண்ட பணிகளில் ஒன்று தான் நல்லூர் ஆலயமுன்றலில் இவ்வாலய முன்னேற்றத்திற்கு மட்டுமன்றி நமது கலாசார வளர்ச்சிக்குமாக அவர் ஆரம்பித்து வைத்த சைவப்பிரகாச மடாலயமாகும். இன்று இவ்வாலய முன்றிலில் பொலிவிழந்து காணப்படும் நாவலர் மணிமண்டபம் அமைந்திருந்த இடத்திற்றான் இம் மடாலயமும் அமைந்திருந்தது.

மேற்கூறிய முயற்சியை நாவலர் பெருமான் பின்வரும் காரணங்களுக்காக மேற்கொண்டிருந்தார்.

1. ஆகம முறைப்படி சைவக் கிரியைகள், சைவ ஆலயங்களில் நடைபெறும் நித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திய நைமித்திய பூசை வழிபாடுகள் என்பவற்றை நடாத்தி வைப்பதற்குத் தேவையான அறிவு, பயிற்கி ஆகியவற்றை இளஞ் சைவக் குருமாருக்கு அளித்தல்.

2. திருமுறைகளைப் பண்ணோடு ஓதப் பயிற்றல்.

3. சிவனடியார்கள் சிவபூசை, குருபூசை, மகேஸ்வர பூசை ஆகியனவற்றை நிகழ்த்துவதற்கு வசதியளித்தல்.

1874 ஆம் ஆண்டு நாவலரின் வேண்டுகோளினை ஏற்றுக் கொண்ட சைவ அன்பரான, சுப்பையா கார்த்திகேசு 'அம்மையின் வளவு' எனப் பெயர் கொண்ட 5 பரப்பும் 12 குளியும் கொண்ட இம்மண்டபம் அமைந்திருக்கும் காணியை நாவலரிடமிருந்து ரூபா. 2000/- தைப் பெற்றுக் கொண்டு அறுதியாக நாவலருக்குக் கையளித்தார். நாவலர் பெயருக்கு எழுதப் பட்ட இவ்வுறுதியை எழுதியவர் எஸ். கந்தப்பசேகரர் என்ற நொத்தாரிசு ஆகும். இவ்வுறுதியின் இல. 97. நாவலர் இக்காணியில் தற்காலிக கட்டடங்களை அமைத்து தமிழ் நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட சைவ அறிஞர்களைக் கொண்டும், தமது சைவக் கைங்கரியங்களுக்கு உதவி வந்த அன்பர்கள், மாணாக்கர்கள் ஆகியோரின் துணையுடனும் குறித்த வகுப்புகளை நடாத்தி வந்தார். ஆனால் இம்மடாலயம் தன்னை ஸ்திரப்படுத்திக் கொள்ளு முன்னர் நாவலர் காலமாகியது துர்அதிஷ்டமே.

நிற்க, 1968 ஆம் ஆண்டு சென்னையில் இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு நடைபெற்றபோது தமிழ் வளர்த்த பலருக்குச் சென்னைக் கடற்கரையில் சிலைகள் எடுக்கப்பட்டிருந்தும் நாவலர் பெருமானுக்குச் சிலை எடுக்கப்படாதிருந்ததைக் கண்டு மனம்வருந்திய ஈழத்து அன்பர்கள் ஈழத்தில் நாவலருக்குச் சிலை எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். இப்பணியில் நடைமுறைத் தமிழியக்கம் முனைப்புடன் செயற்பட்டது. இதன் செயலாளரான திரு. க. இளையதம்பி இதற்கு முன்நிற்க பணம் படைத்த பலரின் உதவியோடு இப்பணி செவ்வனே ஒப்பேறியது. இந்நற்பணியில் முன்னின்று உழைத்தவர்களில் மெய்கண்டான் அதிபர் திரு. நா. இரத்தினசபாபதி, செனட்டர் நீதிராஜா, பிரபல வர்த்தக அதிபர் திரு. ச. சின்னத்துரை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். நாவலர் சிலையை மணிவண்ணன் (மணி) உருவாக்கி, நாவலர் பணியை முன்னெடுத்துச் செல்ல 17-06-1968 இல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையும் உதயமாகியது.

நாவலர் சிலையை கொழும்பிலிருந்து ஊர்வலமாக எடுத்து வந்து நல்லூர் முருகன் ஆலய முன்றலில் உள்ள நாவலரின் உறுதிக் காணியில் பிரதிஷ்டை செய்வதும் உறுதியாயிற்று. இதற்குக் காரணம் இக் காணியிற்றான் நாவலர் முயற்சித்த சைவப் பிரகாச மடம் அமைந்திருந்த இடமாகும். அத்துடன் நல்லூர் நமது தமிழரசின் தலைநகராக விளங்கிய இடமாக மட்டுமன்றி பக்தர்கள் அதிகமாகக் கூடும் வசதிகள் கொண்ட இடமாக அது விளங்கியதும் இன்னொரு காரணமாகும். இதனால் நாவலர் பிறந்த நல்லூருக்குப் பெருமை சேரும் என கருதினர்.

1969 ஆம் ஆண்டு ஆனித் திங்கள் 24 ஆம் நாள் ஸ்ரீலங்காவின் தலை நகரான கொழும்பு விழாக்கோலம் பூண்டது. நாவலர் சிலை கொழும்பு வீதிகளில் பவனி வந்தது. பின்னர் சரஸ்வதி மண்டபத்தில் நாவலருக்கு அஞ்சலி செலுத்த வைக்கப்பட்டிருந்தபோது அங்கு திரண்டிருந்த ஜன சமுத்திரத்தின் மத்தியில் அன்றைய தேசாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், முக்கிய சிங்கள, முஸ்லிம், தமிழ்ப் பிரமுகர்கள் அணி திரண்டு ஈழத்துத் தேசிய மறுமலர்ச்சியின் பிதாவாகிய நாவலரின் பணிகள் பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயாரப் புகழ்ந்தனர். மறுநாள் காலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சிலையின் பவனி ஆரம்பமாகியது. நீர் கொழும்பு, சிலாபம், புத்தளம், குருநாகல், அநுராதபுரம், வவுனியா, கிளிநொச்சி வழியாக யாழ்ப்பாணக் குடாநாட்டை ஊர்தி வந்தடைந்தது. குடாநாட்டில் நாவலர் சிலை சாவகச்சேரி, சரசாலை, நெல்லியடி, பருத்தித்துறை, அச்சுவேலி, கோப்பாய், சுன்னாகம், உடுவில், சங்கானை, காரை நகர் ஆகிய இடங்களின் ஊடாக யாழ்ப் பாண மாநகர எல்லையை அடைய மாநகர சபை மட்டுமன்றி, சிங்களப் பொலிசாரையும் கொண்டிருந்த யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையமும் பிரமாதமான வரவேற்பை நல்கியது.

இதனைத் தொடர்ந்து நாவலர் மணி மண்டபம் அமைத்திருக்கும் இடத்தில் நாவலர் சிலை சிறப்பாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியில் அக்கால முன்னணி அரசியல் தலைவர்கள், பல்வேறு சமயப் பெரியார்கள், கலைஞர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியானது ஒரு கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருந்தது. இச்சிலையின் பிரதிஷ்டைக்குப் பின்னர் 1972 ஆம் ஆண்டில் நாவலர் வாழ்ந்த இடத்திற் தற்போதைய கலாசார மண்டபத்தை அரசாங்கம் அமைக்க நடவடிக்கை எடுத்தது. நாவலரை நினைவு கூர்ந்து, அவரைக் கனம்பண்ணி, அவரின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல அமைக்கப்பட்ட இக்கலாசார மண்டபம் இன்று பிற நடவடிக்கைகள் பலவற்றை நிறைவேற்றும் ஒரு தளமாக இருப்பது விசனிக்கத்தக்கது, - கண்டிக்கத்தக்கது.

நிற்க, திடீரென, மின்னாமல் முழங்காமல் 1.7.1985 இல் நாவலர் பணிகளை முன்னெடுத்துச் செல்ல அமைக்கப்பட்ட நாவலர்சபை ஓர் ஆலோசனைக் கூட்டத்திற்கு ஒழுங்கு செய்தது. இச்சபையின் இணைக்காரியதரிசிகளான திருவாளர்கள் கா. விஸ்வலிங்கம், நா. சோமகாந்தன் ஆகியோரால் கையெழுத்திடப்பட்ட அவ்வழைப்பிதழின் வாசகம் பின்வருமாறு அமைந்திருந்தது:-

> "வணக்கம். எமது சபை கடந்த 17 ஆண்டுகளாக நாவலர் பெருமானின் நினைவாகப் பல பணிகளைப் புரிந்து வருவதைத் தாங்கள் அறிவீர்கள். எதிர்காலத்தில் எமது பணிகளை மேலும் விரிவுபடுத்தி முன்னெடுத்துச் செல்ல வேண்டுமெனச் சபை பெரிதும் விரும்புகிறது. இவற்றிற்கான திட்டங்களையும் வழி வகைகளையும் பற்றிய ஆலோசனைகளை நாவலர் அன்பர்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்காக எதிர்வரும் 1.7.85 திங்கட்கிழமை (போயா விடுமுறையன்று) காலை 9.30 மணியளவில் நல்லூர் நாவலர் நிலைய மண்டபத்தில் ஓர் ஆலோசனைக் கூட்டத்தைச் சபை ஏற்பாடு செய்துள்ளது.
>
> தங்களை இக் கூட்டத்திற்குத் தவறாமல் சமூகந் தருமாறு தயவாக வேண்டுவதுடன் தங்கள் மேலான கருத்துக்களையும் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றோம். மிக்க நன்றி."

நாவலர் சிலையை அவ்விடத்திலிருந்து நகர்த்தவே இவ்வாலோசனைக் கூட்டம் என நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்படாததினால், நாவலர் சபை அங்கத்தவர்கள் இதில் அதிக அக்கறை காட்டவில்லை. இருந்தும் சுமார் முப்பது பேர் அளவில் இக்கூட்டத்திற் கலந்து கொண்டு நாவலர் சபைக் காரியதரிசிகள் நம்பிக்கையுடன் எதிர்பாராத தமது மேலான கருத்துக்களை வெளியிட்டனர். பிரதிஷ்டை செய்யப்பட்ட நாவலர் சிலை நாவலர் மணிமண்டபத்திலிருந்து நகர்த்தக் கூடாது என்பதே இக்கருத்தாகும். இச்சபையின் துணைத்தலைவர்களில் ஒருவரான சிவத்தமிழ்ச் செல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் நாவலர் சிலை அகற்றல் என்ற செய்தியானது தமக்கும் பேரதிர்ச்சியைத் தருவதாக முழங்கினார். பின்னர் தமது துணைத்தலைவர் பதவியையும் உதறியெறிந்தார். சிலையை நகர்த்த வேண்டாமென்று தீர்மானம் ஒன்றைச் சபையிலிருந்தோர் கொண்டுவர முயன்றபோது அப்படி ஒரு தீர்மானமும் தேவையில்லை என்றும், சபையின் மிகப் பெரும்பான்மையானோர் சிலையைநகர்த்தக் கூடாது என்ற கருத்துக் கொண்டிருப்பதால் அக்கருத்துக்குத் தாங்கள் மதிப்பளிப்பதாகக் கூறிக் காரியதரிசிகள் அங்கத்தவர்களை வழியனுப்பி வைத்தனர்.

இதிலுள்ள மர்மம் யாதெனில் மேற் கூறிய கூட்டத்தில் சிலை நகர்த்தக்கூடாது என்ற பெரும்பான்மையினரின் கருத்துக்கு மதிப்பளிப்பதாகவும் இது பற்றி ஒரு தீர மானமும் தேவையில்லை எனவும் கூறிய காரியதரிசிகளில் ஒருவரான திரு. நா. விஸ்வலிங்கம் அவர்கள் 3. 8. 1985 இல் நாவலர்சபையின் பொதுச் சபைக் கூட்டம் கொழும்பில் நடைபெற்றபோது அக்கூட்டத்தில் இச்சிலையை அரசாங்கத்தினாற் கட்டப்பட்ட நாவலர் கலாசார மண்டபத்திற்கு நகர்த்தும்படி அனுப்பிய தீர்மான மானது நாவலர் சபையின் நம்பிக்கை மோசடியைத் துலாம்பரப்படுத்தியது. ஒரு மாத காலத்தில் இத்தகைய தடுமாற்றத்திற்கு நாவலர் சபைக் காரியதரிசிகள் ஏன் உள்ளானார்கள் என்பது இன்றும் துலக்கப் பட வேண்டிய மர்மமாகவே உள்ளது. எனினும் காரியதரிசி கொழும்புக்கு அனுப்பிய தீர்மானத்தின் மிக வேடிக்கையான அம்சம் அதன் இறுதிப்பகுதிதான். அஃதாவது,

'நல்லூர் ஆலய வீதியில் அமைந்துள்ள மணிமண்டபத்தில் நாவலர் பெருமானின் பொருத்தமான நினைவுச் சின்னம் ஒன்றினை வைத்து அவ்விடத்தில் வழமை போல் புராணபடனம், திருமுறை ஓதல் முதலிய நிகழ்ச்சிகளை நாவலர் சபை தொடர்ந்து நடத்தி வர வேண்டுமெனவும் தீர்மானிக்கின்றது.'

மிக வேடிக்கையான வசனங்கள்! நாவலர் பெருமானின் பொருத்தமான நினைவுச் சின்னமாக அவரின் சிலையைத் தவிர வேறு எது அமைய முடியும்? சிலைபோன பின் சிலைக்காக அமைக்கப்பட்ட மணிமண்டபம் இருந்து என்ன பயன் என்று மற்றொரு தீர்மானத்தையும் யதேச்சாதிகார முறையில் ஒரு கால கட்டத்தில் கொண்டு வருவதற்குக் கட்டியம் கூறி நின்ற வசனங்களே மேற்கூறிய வசனங்களாகும். 3-08-1985 இல் கொழும்பில் நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டம் ஏகமனதாகக் காரியதரிசியின் தீர்மானத்தை ஆமோதிக்க 17-8-1985 இல் மாலை ஆறுமணிக்கு யாழ்ப்பாண மாநகர சபைக்குச் சொந்தமான குப்பை ஏற்றும் லொறியில் சைவப் பெருமக்களால் போற்றப்பட்டு, சாரணர்கள் கொடிகளை ஏந்தி முன்னே செல்ல, வழி எல்லாம் மகர தோரணங்கள் வரவேற்க, நாதஸ்வரக் கலைஞர்கள் கானமழை பொழிய, நாவலர் வாழ்வின் முக்கிய நிகழ்ச்சிகளைச் சித்தரிக்கும் ஊர்திகள் பின்தொடர மக்கள் வெள்ளம் அலைமோத, கோலாகல மான ஊர்வலமாக, எடுத்துவரப்பட்டு 1969 இல் மங்களமாக நிறுவப்பட்ட இச்சிலை யானது பின்னர் 1974 இல் யாழ் நகர் கண்டிருந்த உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டிற்குக் காற்கோளாக அமைந்திருந்த இப் பெருவிழா நாயகனின் சிலை எவருமறியாத வாறு அரசினால் அமைக்கப்பட்ட நாவலர் கலாசார மண்டபத்தின் முன்வாசலில். பொருத்தமற்ற இடத்தில், முடங்க வைக்கப்பட்டுள்ளது.

இச்சந்தர்ப்பத்தில் தன் வாழ்நாளை தனது சமுதாயத்திற்கே அர்ப்பணித்துப் பணிபுரிந்து செயற்பட்ட நாவலர் பெருமான் தம்மக்கள் பற்றி 1869 இல் மிக வேதனை

யுடன் கூறிய பின்வரும் வசனங்கள் நாவலர் ஏமாற்றவில்லை என்பதனை நிதர்சனப் படுத்துகின்றன. அஃதாவது:-

> 'பரசமயிகள் எனக்கு இடையூறு செய்யவுமில்லை. என்னை அவமதிக்கவுமில்லை. சைவ சமயிகளாலேயே அவமதிப்பும் இடையூறும் செய்யப்படுகின்றது'.

இருந்தும் நாவலர் சிலை நகர்த்தலைக் கண்டித்து பல பகிரங்கக் கடிதங்கள் வெளியாகின. நாவலர் பணிமன்றம் உதயமாகி 'நாவலர் குரல்' என்ற ஏட்டின் மூலம் நாவலர் சபையினரின் நடவடிக்கைகளைக் கண்டித்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விமான்களில் ஒரு சிலரைத் தவிரப் பெரும் பான்மையினர், 'நாவலர் சிலை மீண்டும் மணிமண்டபத்திற்கே மாற்றப்பட வேண்டும்' என்று கையெழுத்திட்டு ஒரு மகஜரையும், நல்லை திருஞானசம்பந்தர் ஆதின கர்த்தருக்கு அனுப்பியது. இச் செய்தி 20-10-1986 ஆம் ஆண்டு சஞ்சீவியில் காணப்படுகின்றது. இவையாவும் சிலை கடத்தலின் பின் நடைபெற்ற சம்பவங்களில் சிலவாகும்.

○

## சித்தாந்த சாஸ்திரங்கள்

*சித்தாந்த சாஸ்திங்கள் பதிநான்கு. இவற்றை உணர்ந்தாரே சிறந்தாசிரியராவார். பதிநான்காவன வருமாறு:-*

1) திருவுந்தியர்
2) திருக்களிற்றுப்பாடியார்
3) சிவஞானபோதம்
4) சிவஞானசித்தியார்
5) இருபாவிருபது
6) உண்மை விளக்கம்
7) சிவப்பிரகாசம்
8) திருவருட்பயன்
9) வினாவெண்பா
10) போற்றிப்ப∴றொடை
11) கொடிக்கவி
12) நெஞ்சுவிடுதூது
13) உண்மை விளக்கம்
14) சங்கற்பநிராகரணம் ஆகியனவாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமந்திரம் காட்டும் மனித நேயம்

திருமதி கலைவாணி இராமநாதன்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இந்துநாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

சங்கத் தமிழ் நூல்கள் காதலையும் போரையும் பாடின. சங்ககாலத்தை அடுத்தெழுந்த பதினென் கீழ்க் கணக்கு நூல்கள் அறத்தையும் ஒழுக்கத்தையும் பாடின. அத்தகைய அறநூல்கள் எழுந்த காலமாகிய கி. பி. 4ஆம் - 6ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்திலேயே திருமந்திரம் எழுதப்பட்டதாக ஆய்வாளர் கருதுவர். சித்தாந்த நூல்கள், தோத்திர நூல்கள் சாத்திர நூல்கள் என இருவகையாக நோக்கப்படும். திருமந்திரம் அந்த இருவகை அமைப்பிலும் அடங்கும் சிறப்பு வாய்ந்ததாகும். களப்பிரர் காலப் பகுதியில் எழுந்த திருமந்திரம் தத்துவ நூலாகமட்டுமல்ல—அறநூல் வரிசையிலும் வைத்தெண்ணப்படும் தகுதிவாய்ந்ததாக உள்ளது. திருமந்திரத்திலே பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம் எனவரும் பகுதிகளில் உலகம் தழுவிய மக்கள் வாழ்க்கை நலமும், சமூகநீதிகளும், தருமத்தின் சிறப்பும் விதந்துரைக்கப்பட்டுள்ளன.

## அன்புநெறி

திருமந்திரம் பற்றியும் அதன் ஆசிரியர் திருமூலர் பற்றியும் விரிவான ஆய்வுகள் இன்னும் வெளிவர இடமுண்டு. துடிசை கிழார், அ. சிதம்பரனார், மா, இராச மாணிக்கனார், இரா. மணிவாசகம் போன்றோர் தமிழில் இந்நூல் பற்றி சில ஆய்வுகள் நடத்தியுள்ளனர். திருமந்திரம் பத்தாம் திருமுறையாகச் சைவத்திருமுறை வரிசையில் இடம்பெற்றுள்ளது. இந்நூலின் கண் உள்ள முதலாம் தந்திரமானது 166 பாடல்களைக் கொண்டது. இப்பகுதி முழுதிலும் அறத்தின் இயல்புகளும் மனிதநேயத்தின் சிறப்புகளும் நயம்பட உரைக்கப்பட்டுள்ளன. அற அடிப்படைகள் முப்பொருள் உண்மைகளை மையமாகக் கொண்டவை எனலாம். இறைவன், உலகம், உயிர்கள் போன்ற அடிப்படைப் பொருள்களில் முதற்கண் நம்பிக்கை வைத்து ஒழுகுதல், அடுத்ததாக ஒவ்வொரு மனிதரும் இறைமையினை தம்மிடத்திலேயே விசுவாசித்து சகல உயிர்களிடத்தும், இயற்கைப் பொருள்களிடத்தும் அன்பு செலுத்துதலுமாகும். அன்புணர்வினைப் பேணும் சமூகமானது அவற்றின் ஆரம்பமாகத் தெய்வத்தை நம்புதல், கீழ்ப்படிதல், பிறர்க்குதவுதல், அன்பு செலுத்துதல், வேற்றுமை பாராட்டாதிருத்தல், கொல்லாமை, பிறன்மனைநயவாமை போன்ற ஒழுக்கங்களைப் பேணுவதும் அவசியம் எனப்பட்டது.

''திருநெறிய தமிழ்'' எனச் சம்பந்தரால் சிறப்பிக்கப்பட்ட தமிழிலே உருவாக்கப்பட்டநூல் திருமந்திரம் ஆதலால் 'மூலன் உரைசெய் மூவாயிரம் தமிழ்' எனவும், 'தமிழ் மூவாயிரம்' எனவும் இந்நூல் போற்றப்படும். 'என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாக தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுமாறே' என்றார் திருமூலர். இந் நூலுக்குத் திருமந்திர மாலை, தமிழ் வேதா கமம் என்ற சிறப்புப் பெயர்களும் உண்டு.

''திருக்கோவில் செல்வார் திருமந்திர நூல்
உருக்கமுடன் கொண்டு சென்றோதில்
பெருக்க அருள்முதலாம் ஐந்தும் ...
... ... ... ... அருள்வான் முக்கண்ணன்''

என அப்பர் சுவாமிகளும் திருமந்திரம் ஓதுவார் பலன்களை எடுத்துக்காட்டினார்.

''நிறைமொழி மாந்தர் ஆனயிற் கிளர்ந்த
மறைமொழி தானே மந்திரம்''
(தொல்காப்பியம்)

என்பதற்கமைய திருமந்திரமானது மறைமொழிகள் பலவற்றைத் தம்முள் கொண்ட பரமனது திருவருள் இரகசியங் களை மறைபொருளாகக் கொண்டுள்ளது. 'மறை' என்றால் 'பக்குவமற்ற மாந்தர் கட்கு எட்டாவண்ணம் புனிதமான சில விடயங்களை தன்னகத்தே மறைத்து வைத்திருத்தல்' எனப்பொருள் கொள்ள லாம். நிறைமொழி மாந்தருள் ஒருவரான திருமூலர் என்னும் சித்தரால் திருமந்திரத் திலே அனேகமான ஆன்மீகரகசியங்கள் மனிதநேயமிக்க மனிதர்கள் சிந்தனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

கடவுளைக் காணமுயல்பவர்கள் பக் தர்கள் எனில்-கடவுளைக் கண்டு தெளிந் தவர்கள் சித்தர்கள் எனலாம். 'சித்தர் போக்கு சிவன் போக்கு' என்றவாறு அன்புநிலை ஒன்றே அவர்களது உயர்ந்த கோட்பாடாகவுள்ளது. உயிர்களிடத்துறை யும் பரம்பொருள் ஒன்று – அது அன்பெனும் வடிவமானது – மனிதர்கள் அனைவரும் ஒரு வரை ஒருவர் நேசித்தல் என்பது சிவப் பொருளை நேசித்தல் என்பதே. அதனை-

''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலர்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலர்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே''

எனத் திருமூலர் அருமையாக எடுத் துரைத்தார், 'சித்தமவர் எத்தும் பரமன் பழையனூர் மேவிய அத்தன்' என்றார் சுந்தரர். அன்பு, மானிடத்துவம், சமத்து வம், சகோதரத்துவம் என்பவற்றினை எடுத்துரைக்கும் காலத்தால் முற்பட்ட அரு நூல்களில் தலையாயது திருமந்திரமாகும். அன்புசெலுத்தலாவது, அனைவரையும் சம நோக்குடன் நேசிப்பது; அறவழிக்குத் தீங்கு நேரும்போது அஞ்சாமையுடன் எடுத்துரைப் பது; தருமமே இறைமை என எண்ணிப் பிறர்க்குதவுதல்; சமுதாய சேவையே வழி பாடு என உணர்ந்து இவற்றினை நடை முறையிலே பின்பற்றியொழுகுதல். இவையே அன்பின் பரிமாணங்கள் என உணரப்பெறுவதே உன்னதமான சமயநெறி எனத் திருமந்திரம் போதிக்கின்றது. குறிப் பாக இந்நூலின் இரண்டாம் தந்திரம் இருநூற்றியெட்டுத் திருப்பாடல்களில் கல்வி யறிவு, கல்லாமை, பொருள்தேடல் பற்றி யும், முன்னூறு பாடல்களையுடைய மூன் றாம் தந்திரத்தில் இறைவன் இறைவி என்ப தனை ஒத்த இல் வாழ்வென்னும் தவநிலை யும், ஆறாம் தந்திரத்தில் சற்குரு துணையும், ஏழாம் தந்திரமானது உடலுக்கும் உள்ளத் திற்கும் ஆரோக்கியமும், ஆன்ம பலமும் புத் துணர்ச்சியும் வழங்கும் யோகப்பயிற்சி பற் றிய செய்திகளையும் நிறையவே கொண் டுள்ளன. இத்தகைய சிந்தனைகளினூடா கத் திருமந்திரம் மனிதநேயம் பற்றிய பல் வேறு கருத்துக்களையும் வாழ்க்கைமுறைக் குத் தேவையான பல பண்புகளையும் உலகினர்க்கு உணர்த்தி இருக்கின்றதெனக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறநெறி ஆட்சி

சகல மனிதர்களிடத்தும் அன்பு செலுத்துவதுடன் எல்லாருக்கும் எல்லாம் கிடைக்கும் வகையில் அன்றாட வாழ்வினை எவ்வாறு அமைக்கலாம் என்பதற்கு பின்வருமாறு திருமந்திரம் அறிவுரை வழங்குகின்றது:

''யாவர்க்குமாம் இறைவற் கொருபச்-சிலை
யாவர்க்குமாம் பசுவிற்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை-தானே''

என்ற நியதியிலே ஒவ்வொருவரும் வாழ்ந்துவருவாராகில் உலகில் 'இல்லாமை' என்பதே இல்லாத நிலை தோன்றிவிடும். அதனால் திருமூலர் தன்னைப்போலப் பிறரையும் நேசித்தல் அவசியம் என்பதனை:

''யான் பெற்ற இன்பம் - பெறுக இவ் வையகம்''

எனவும் வாழ்த்தினார், இவ்வாறே ''எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பது வேயல் லாமல் வேறொன்றறியேன் பராபரமே'' என இக்கருத்தினை தாயுமானாரும் வலியுறுத்தினார். இத்தகைய நோக்கமே சம்பந்தர் சுவாமிகளாலும்

''வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயது எல்லாம், அரன் நாமமே சூழ்க
வையகமும் துயர் தீர்கவே''

என்றிவ்வாறு திருநெறிய சிவநெறியின் மனிதமேம்பாட்டு சிந்தனைகள் காலந்தோறும் வெளிப்படுத்தப்பட்டு வந்துள்ளன. கச்சியப்ப சுவாமிகளும் நாட்டிலே நல்லாட்சியும் அறநெறியும் சிறந்து விளங்கினால் மக்கள் நலமடைந்து இன்புறுவர் என்பதனை

''வான்முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன் கோன்
முறை அரசு செய்க
குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க

என முறைப்படி எடுத்துரைத்தார். 'கோன் முறை அரசு செய்தாலே' அறம் வளரும், பாவம் தேயும். அறவழி நில்லாது ஆண்டவனை நினைவினிற் கொள்ளாது மருள் வழி ஒழுகும் மன்னனால் நாட்டிற்கும் சமூகத்திற்கும் பெருங்கேடு விளையும் – அத்தகைய அரசன் பல கற்றும் கல்லாதவர்க்கே சமமாவான். கல்லா அரசனைக் காட்டிலும் முறைமை வழுவாத காலன் மிக நல்லவன் என்பதனை திருமந்திரம்:-

''கல்லா அரசனும் காலனும் நேரொப்பர்
கல்லா அரசனில் காலன் மிக நல்லவன்''

எனக்கூறியது. ஔவையாரும் 'கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டிலும் – கடும் புலி வாழும் காடு நன்றே' என்று கூறியதும் இங்கு நோக்கத்தக்கது.

'முறை செய்து காக்கும் மன்னவன் — மக்கட்கு
இறை என்று வைக்கப்படும்'

என்றார் திருவள்ளுவர்.

## இயற்கையைப் பேணுதல்

நல்லாட்சி முறையின் அவசியமும் அவற்றினை வழங்குவதற்கு பொருட் பெருக்கத்தின் தேவைகளும் அவசியம் என்பது மேற்கூறியவற்றால் அறியலாம். தற்காலத்திலே காடழிக்கப்படுதலும் – இயற்கை மாசடைதலும் பல இன்னல்களை தோற்றுவிக்கின்றன. இவையெலாம் மரம்நடுவோம், காடு வளர்ப்போம், மழைவளம் பெறுவோம், சுத்தமான காற்றினால் சுகாதார வாழ்வை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்போம் என்றிவ்வாறு இயற்கை வளத்தைப் பெருக்கும் முயற்சிகளை ஊக்குவிப்ப தவசியம் என்பன போன்ற ஆரோக்கிய சிந்தனைகள் திருமந்திரம் எழுந்த காலத்திலும் ஓங்கி ஒலிக்கப்பட்டன. இக்கருத்தானது;

''அமுதூறும் மாமழையும் நீரதனாலே
அமுதூறும் பனைமரம் ... கமுகு
தெங்கு கரும்போடு வாழை
... ... பார்மிசை தோற்றும்''

என்னும்படி மரங்கள் கற்பகதரு எனத் திருமந்திரம் கூறியது. அனைத்து நாடுகளிலுமுள்ள மக்கள் சமாதானம் பேசுகிறார்கள். ஆனால் அவர்களது செயல்கள் பேச்சுக்கு மாறாக உள்ளன. அவர்கள் ஒருவகையில் சமாதானம் பேசுகிறார்கள். மறுகையில் அணுகுண்டை வைத்திருக்கின்றார்கள். முழு உலகமும் சூழல் மாசடைவதாக அலறுகிறது. நட்சத்திரப் போர் பற்றிய பேச்சு விண்வெளியை மாசுபடுத்தற்கான பயமுறுத்தலாகின்றது. அன்பும் சமாதானமும் முதலிலே மனித மனங்களிலே விதைக்கப்படவேண்டும். நல்லொழுக்கம் என்னும் நீரூற்றி அதனை வளர்க்க வேண்டும். மனித மனங்கள் வெறும் காடும் முட்களும் நிறைந்த பற்றைகளாக இருப்பதனை மாற்ற வேண்டும். அப்போதுதான் இயற்கை நியதிகளைப் பேணிக் காக்கும் பக்குவம் வளர முடியும் என்பது திருமந்திரம் போன்ற நூல்களின் உட்பொருளாகும்.

*கல்விபற்றிய சிந்தனை:*

கல்வி பற்றிய சமுதாய சிந்தனைக் கரு ஆலமும் திருமந்திரத்திலே உண்டு. ஒழுக்கக் கல்வியும் ஆன்மீகக் கல்வியும் மனிதனைச் சுயகட்டுப்பாட்டுடன் முறையான வாழ்வு வாழ வழிவகுக்கும். 'வறியவர்கட்கு உதவாத கல்வி – அதைக் கல்வி என்று சொல்லலாமா' என்றார் விவேகானந்தர். 'சுய கட்டுப்பாட்டைப் போதிக்காத கல்வி – அது கல்வி என்றே குறிப்பிடத் தகுதியற்றது'' என்றார் பகவான் சத்தியசாயி.

'கற்றும் சிவஞான மில்லாக் கலதிகள்
சுற்றமும் வீடார் துரிசறார்மூடர்
கள்...
கற்ற அன்பில் நிற்போர் கணக்
கறிந்தார்களே'

என்றது திருமந்திரம். கல்விகற்றவர் இதயத்திலிருந்து பிறரிடம் பரிவும் அன்பும் தானே சுரக்க வேண்டும். கற்ற பின் அன்பில் நிலைபெற்றவர்களே முறைமை அறிந்து வாழ்பவர்கள். ஏனையோர் என்ன கற்றும் கல்லாத மூடர்களே என்பது சித்தர் திருமூலர் உள்ளக்கருத்தாகும். சமூக சேவையே கல்வி முறையின் அத்திவாரமாக அமைய வேண்டும். கல்வியும் ஒழுக்கமும் சேர்ந்திருக்க வேண்டும் என்பதனை உணர்த்தவே 'வேதம் உரைத்தானும் வேதியன் ஆகான்' எனத் திருமூலர் விளக்கினார்.

'இன்றைய கல்வி முறையானது உள்ளத்தை புத்தக உள்ளடக்கத்தால் நிரப்புவதும் பரீட்சை மண்டபத்தில் அவற்றினை வெளியேற்றிவிடுதலும் பின்னர் வெற்று உள்ளத்தோடு வீடு திரும்புவதுமாக அமைகிறது. உண்மைக்கல்வி உள்ளத்தைப் பண்படுத்துவதனைத் தன்னகத்தே கொண்டுள்ளது. நீங்கள் கற்பவை முழுமையாக இருப்பதற்குரிய பூரணத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என மனித மேம்பாட்டுக் கல்வி விழுமியம் பற்றி சாயிபகவானும் விளக்கியுள்ளார். அப்பொழுதே ஒருவன் மனநிறைவுடன் கூடிய சிந்தனையிலும் சொல்லிலும் செயலிலும் முழுமையான அசைவை ஏற்படுத்தமுடியும். அத்தகைய முழுமையைக் கொண்ட மனிதர்களே இன்றைய நாட்டின் தேவையாகும். இதுவே

''கற்பன கற்று கலைமன்னு மெய்
யோகம்
முற்பதஞானம் முறைமுறை நண்ணியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பத மேவித் துரிசற்று மேலான
தற்பரம் கண்டுளோர் சைவசித்
தாந்தரே''

என்னும் திருமந்திர உண்மையுமாகும். எனவே கல்வியானது பண்பாளர்களை உருவாக்க வேண்டுமே தவிரப் - பணக்காரர்களை அல்லவாம். பொருளாசை மனிதனுக்கு இருக்க வேண்டும். முன்னேற்றத்திற்குப் பொருள் இன்றியமையாததே. 'பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை' என்பதும் ஞானிகளின் கணிப்பீடுதான். ஆனால், பொருளாசை தன்னையும் பிறரை அழிக்கும் பேராசையாக மாறக்கூடாது.

''மகிழ்கின்ற செல்வமும் மாடும்
உடனே
கவிழ்கின்ற நீர்மிசைச் செல்லும்
கலம்போல''

என்றும், ஆதலால் உடனுக்குடன் அறம் செய்ய வேண்டும், அப்படிச் செய்யாதார் செல்வம்:-

''எட்டிபழுத்த இருங்கனி வீழ்ந்தன்ன
ஒட்டிய நல்லறம் செய்யாதார்
செல்வம்''

என்பதனை உணர வேண்டும் எனவும் திருமூலர் கூறினார்.

## பொருட் செல்வமும் அற வாழ்வும்:

கிடைக்கின்ற பொருட்செல்வமானது அறச் செல்வத்தை வளர்க்க அனுசரணையாக அமைய வேண்டும் என்பதே திருமந்திரத்தின் இலட்சியம் எனலாம்.

''ஆர்க்கும் இடுமின் அவர் இவர்
என்னன்மின்
பார்த்திருந்துண்மின் பழம்பொருள்
போற்றன்மின்
... ... ...
காக்கை கரைந்துண்ணும் காலம்
அறிமினே''

என்றவர்று 'எள் எனினும் ஏழாகப் பகிர்ந்துண்'பது போன்ற இரக்கமும், தயையும் காக்கையிடமிருந்து ஒற்றுமை உணர்வையும் மனிதர்கள் கற்றுக்கொள்ள வேண்டும் என்றார் திருமூலர். அதனால்,

''அவ்வியம்பேசி அறம்கெட நில்
லன்மின்
வெவ்வியனாகி பிறர்பொருள் வவ்
வன்மின்
செவ்வியனாகி சிறந்துண்ணும்போது
தவ்விக் கொடுண்மின் தலைப்பட்ட
போதே''

என்றபடி துன்பம் செய்து அறமுறை வழுவுமாறு நிற்க வேண்டாம். பேராசைகொண்டு பிறர் பொருள்விரும்ப வேண்டாம். எல்லா வகையிலும் நற்பண்புடையராகி உண்ணும் போது வருவோர்க்கும் ஒருகை உணவு கொடுத்து ஆதரிக்க வேண்டும் என்ற திருமந்திரக் கருத்து பாரதியாரையும் கவர்ந்தது:

''வேதவானில் விளங்கி அறம் செய்மின்
சாதல்நேரினும் சத்தியம் பூணுமின்
தீதகற்றுமின் .................''

என்பதும் 'தனி ஒருவனுக்குணவில்லை எனில் ஜகத்தை அழித்திடுவோம்' என்பதும் எண்ணிப் பார்க்க வேண்டுவனவாம். பசித்தீயின் கொடுமையே சகல பாவங்களையும் விதைக்கிறது. மானம், குலம், கல்வி, தாளாண்மை, வண்மை, புகழ் முதலிய பத்தும் பசிவந்திடப் பறந்து போகும் என்றார் ஔவையார். ஆதலால் 'தானங்களிற் சிறந்தது அன்னதானம்' என்றாயிற்று. இவ்வாறு இரக்கம், அன்பு, கருணை என்பன மனிதரிடம் மேம்பட்டு விளங்கினால் வறுமை, பிணி அகலும் என திருமூலரும் விளக்கினார்.

## சகலரும் சமத்துவம்

சாதி, குலம் என்பதும் மனிதர் செய்த சதி என்பதே சித்தர் கொள்கை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பினால் உயர்வு தாழ்வு வருவதில்லை. மனிதரது செயல்களே அவர்களது உயர் வினை நிர்ணயிக்கின்றன. அதனால் 'தெய் வமும் ஒன்று அத்தெய்வத்தின் முன் சகல மாந்தரும் ஒன்று' தான் என்ற உண்மையி னைத் திருமந்திரம்:

''ஒன்றே குலம் ஒருவனே தேவன்
நன்றே நினைமின் நமனில்லை
நாளுமே''

என மனித சமத்துவத்தின் உயர்வினை எடுத்துக்காட்டியது. 'ஒன்றென்றிரு தெய் வம் உண்டென்றிரு' என்றார் பட்டினத் தார். 'நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்' என்பது சிவவாக்கியப் போதனை. 'உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது' என விபுலானந்த அடிகளும் விளம்பினார். 'தெய்வம் பலப்பல சொல்லி பகைத்தீயை வளர்ப்பவர் மூடர்' என்றார் பாரதியார். திருமூலரும்,

''உள்ளம் பெரும் கோயில், ஊனுடம்பு
ஆலயம் ......
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன்
சிவலிங்கம்''

என இயம்பினார். 'ஈசன் எனக் கருதி எல்லா உயிர்களையும் நேசத்தால் நீநினை' என்பது ஞானவெட்டியான் பாடலாகும். அன்பினால் உயிர்களை ஈசனின் அம்சம் என உணர்ந்து நேசிப்பதே உயர்ந்த தெய் வக்கொள்கை எனவும் சித்தர்கள் விளக்கி னார்கள். அவர்களது மனிதநேயம் கடலை விட - அகிலத்தைவிடப் பெரியது. வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடியவர் வள்ளலார். சாத்திரம், குலம், கோத்திரம், சடங்குகள், கடவுளர்கள் கோபம் என்ற போர்வையில் எல்லாம் போலிச் சமயவாதி கள் அப்பாவி மக்களை அறியாமை இருளில் அமிழ்த்துவதை திருமூலர் கண்டித்தார்.

'சாத்திரத்தைச் சுட்டெரித்தால் அவனே சித்தன்' என்றார் அகத்தியர். 'சாத்திரம் பேசும் சழக்கர்காள் கோத்திர மும் குலமும் கொண்டென் செய்வீர்' என அப்பர் சுவாமிகளும் வினாவினார். 'அன் பும் சத்தியமுமே உண்மையான கடவுள் - வீண் ஆரவாரமும், மூட நம்பிக்கைகளும் சாதி வேற்றுமைகளும் மக்களைக் கடவுளி டம் அழைத்துச் செல்லாதெனத் திருமூலர் போன்ற சித்தர்கள் அறிவுறுத்தினர். அத னால் கோபமடைந்த போலிச் சமயவாதி கள் சித்தர்களைக் 'கடவுள் மறுப்பாளர்கள்' என மறுத்து விமர்சனம் செய்தனர் - அவ மதித்தனர் - ஏளனம் செய்தனர். அன்பின் உயர்வினை அறியாத இத்தகையோரால் மனித சமூகம் சமயப் பிரிவுகளால் பிள வுண்டு சமரசத்தின் பேராலேயே சமூகநீதி மறுக்கப்பட்டு மனிதநேயத்தையும் மதியாத அறிவிலிகளால் உண்மைச் சமய வாழ்வும் மனிதநேயமும் சிதறிப்போவதாயிற்று. இந் நிலையினைச் சித்தர்களே ஓரளவு சரியான சமயத்தில் தடுத்தாட்கொண்டனர் என லாம். இவர்கட்கெல்லாம் திருமூலரும் ஒரு வழிகாட்டியானார்.

### சமரச சன்மார்க்கம்

பொதுவாகச் சித்தர்கள் சமயம் கடந்த ஞானசமரச நிலையிலே நிற்பவர்களாவார். இவர்களது சமயம் 'சமரச சன்மார்க்க நெறி' எனலாம். இவர்கள் அனைவரும் 'வேதாந்த சித்தாந்தச் சமரசநிலை கண்ட வித்தகச் சித்தர்கணம்' எனப்படுவோரா வர். அச் சமரசமார்க்கம் சிவமார்க்கமே என்பதில் சித்தர்கள் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார்கள். அதனால் சைவசம யமே சித்தர்களது உயர்நெறி எனப்பட்டது. சிவநெறியும் - அதன் தூய அன்பு நெறியும் சித்தர்களது சித்தாந்தமாகக் கருதப்பட்ட முறைமையே திருமந்திரத்தில் 'சொற்பத மேவி துரிசற்று மேலான நற்பதம் கண்டு ளோர் சைவசித்தாந்தரே' என உறுதி செய் யப்பட்டிருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்குட்படும் பரம் பொருளே
அன்பெனும் அணுவுள் அமைந்த பேரொளியே''

என அந்த அன்பின் அமுதத்தை வள்ளலார் போற்றினார். வாழ்வில் எப்போதோ ஒரு சமயத்திலே அறிவும் ஆற்றலும் ஒருவரை யறைக்குட்பட்டனவே என ஏன்றோ ஒரு நாள் புலப்படும்போது அறிவு தோற்று விட்ட நிலையிலே ஆணவம் அழிகிறது. அன்பு வெல்கின்றது. அந்த பணிவான அன்பு நிலையிலே இறைமையின் தோற்றம் தெரிகின்றது. அதனாலேயே 'அன்புதான் இன்ப ஜோதி. அன்புதான் உலகமகாசக்தி' எனப் புத்தபெருமானும் போற்றினார்.

அத்தகைய அன்பின் பரிமாற்றம் முதற் கண் இல்லறத்திலே கணவன் மனைவியர் உறவிலே மலர்கிறது. தாய்மையாகப் பின் பூரணத்துவம் அடைகிறது. 'தாயினும் இனிமையாக தண்ணருள் புரிவாய் போற்றி' என்றார் ஒரு முருகபக்தர். துறவியர் பலர் இல்லறம் மேற்கொண்மையினை பிறசமயத்தோர் சிலர் இழிவாக நோக்குவதுண்டு. துறவு என்பதன் பொருள் சரியாகப் புலப்படாமையே இந்நிலைக்குக் காரணம் எனலாம். துறவு என்பது காட்டுக்குப் போவதல்ல. நாட்டில் இருந்து வீட்டுக்காகவும், மக்களுக்காகவும், தேசத்திற்காகவும் உழைத்து அனைவர்க்கும் வழிகாட்டுவதுடன் – தன்னிடத்தேயுள்ள ஆசை, கோபம், மதம், மாற்சரியம் (வெறுப்பு) போன்ற துர்க்குணங்களைத் துறப்பதும் ஒரு துறவேயாகும். அதுமட்டுமல்ல – அதர்மம், அநியாயம், அறியாமை, சமூக அநீதி ஆகியவற்றிற்கெதிராக அறக்குரல் எழுப்புவதும், மக்களிடையே அன்பினை சமத்துவத்தை சகோதரத்துவத்தை வளர்ப்பதுடன் அவற்றிற்கு மாறான செயல்களைத் துறந்துவிடுவது எனவும் இதனைக் கூறலாம். இதன் சிறப்பினை,

''இருமை வகை தெரிந்து ஈண்டு அறம்பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு''

எனத் திருக்குறள் விளக்கியுள்ளது. தத்தம் கடமைகளைச் சரிவர ஆற்றுவதே அறம் என்பதற்கு ஒரு அர்த்தமாகவுள்ளது. 'கடமையைச் செய் பலனில் உனக்கு அதிகாரமில்லை' எனக் கீதை சொல்வது யாதெனில் பலனை எதிர்பார்ப்பவன் பிறருக்கு பணியாற்ற முடியாது. பலனைத் துறந்த செயலாக இருப்பின் அந்த ஒருவனால் அனைவருக்குமாக உழைக்க முடியும். இதனையே 'கடமை என்பது மக்கட்குச் சேவை செய்தல்' என்பதுதான் எனக் கீதையும் உணர்த்தியது.

சமுதாயத்திலே தனிமனிதனாகப் பிறந்து அதிலேயே வளருவதால் சமூகத்தை விட்டுவிலகி வாழ்வது இயலாத காரியம் எனலாம். சமூகம் நலமுடன் இருந்தால் தான் குடும்பம் நலத்துடன் இருக்கும். குடும்பம் நலமுடன் இருந்தால் 'தான்' என்ற தனிநபரும் நலமுடன் இருக்கமுடியும். 'நன்றே நினைமின் நமனில்லை' என்பது திருமந்திரவாக்காகும். துறவிகளும் 'ஒருமையுள் ஆமைபோல் உன்னைந்தடக்கி இருமையும் கண்டிருந்தார் புரையற்றே' எனத் துறவிகள் பெருமை பேசினார் திருமூலர். மிக உயர்ந்த துறவிகள் ஆமை போல எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் ஐம்புலன்களை அடக்கி அமைதியைத் தேடிக் கொள்ளும் உயர்ந்த பக்குவம் பெற்றவர்களாவார். தனியாக இருந்தாலும் கூட்டத்திலே இருந்தாலும் மனதை நிலைநிறுத்தித் தியானத்தில் ஈடுபடும் மனதிட்பம் வாய்ந்தவர்கள் ஆதலால் இல்லறத்திலும் துறவு நிலையைக் கண்டு பாதுகாக்கவும் அவர்களால் முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக நலன் பேணுவதனையே திருமந்திரமும் உயர் லட்சியமாகக் கொண்டு தனது தத்துவக் கருத்துக்கள் வாயிலாக மிக உயர்வான உலகம் தழுவிய மனிதநேயம் மலர்வதற்கு எத்தகைய செயல்கள் அவசியம் என்பதனை அழகுற எடுத்து விளக்கியுள்ளதெனில் மிகையாகாது.

○

*உசாத்துணை நூல்கள்:*


1. திருமூலர் திருமந்திர விளக்கவுரை, பகுதி 1, 11, திருநெல்வேலி சைவசித்தாந்தக் கழக வெளியீடு, 1974.
2. திருமந்திர விளக்கம், சுவாமி சுத்தானந்த பாரதியார், சுத்தாந்த பதிப்பகம், கொழும்பு, 1953.
3. சைவசமய வளர்ச்சி, டாக்டர் மா. இராசமாணிக்கனார், பாரிநிலையம், 1972.
4. Origin and Early History of Saivaism in South India, C. V. Narayanaswami Iyer, University of Madras, 1974.


## உலகில் நிலைக்க

உயிர்களை அழிப்பவர்கள் — தனதல்லாதனவற்றை பலாத்காரமாக தனதாக்கிக்கொள்கிறவர்கள் — பொய்யே எப்பொழுதும் பேசுபவர்கள் — மதுஅருந்துபவர்கள் — சூதாடுபவர்கள் — பிறர்மனைவிழைபவர்கள் — உலகிலே என்றும் நிலைக்கமாட்டார்கள். பாவம் எதனையும் செய்யாது — புண்ணியச் செயல்களை என்றும் புரிந்து — உள்ளத்தை தூய்மையாக வைத்திருப்போர் நிலைப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண வைபவங்களுக்கேற்ற

★ கூறைச் சேலைகள், பெனாரஸ்

★ காஞ்சிபுரம், தஞ்சூர் சில்க்

★ பட்டு வேட்டிகள்
மற்றும்
★ சேட்டிங் சூட்டிங்

★ ஸ்கேட் அன் பிளவுஸ்

யாவையும் உங்கள் எண்ணம்போல் தெரிவு செய்ய
யாழ்நகரில் தலை சிறந்த இடம்

# லலிதா பட்டுச்சோலை

5, 6 சிறப்பு அங்காடி யாழ்ப்பாணம்.

---

விண்ணகத்து வனிதையரும் விரைந்து வரத்துடித்திடும்
மண்ணகத்து மாளிகை தான்

நிரோசன் புடவை அகம்

★ பிளவுஸ், T சேட், பஞ்சாபி

★ ஸ்கேட் அன்பிளவுஸ், வெளிநாட்டு ஸ்கேட்

★ சாறிவகைகள், காஞ்சிபுரம், பெனாரிஸ்

அனைத்தும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
இன்றே நாடுங்கள்

# நிரோசன் புடைவை அகம்

41, நவீன சந்தை ( உட்புறம் ) யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுமுக தத்துவம்

திருமதி நாச்சியார் செல்வநாயகம்.
முதுநிலை விரிவுரையாளர்,
இந்துநாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

"அருவமும் உருவமாகி அநாதியாய்ப் பலவாயொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பது ஓர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறுங் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய"

என்பது கந்தபுராணம். அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்தபூர்த்தியாகி பேரறிவையும், பெருங்கருணையையும் உடையது சிவ பரம்பொருள். இத்தகைய பரம்பொருள் உலக உய்விற்காகவும், அடியார்களின் உய்விற்காகவும் தேவையான பொழுது அருட்கோலங்களைக் கொண்டு உலகத்தையும் அடியார்களையும் உய்வித்தமையை நாம் ஆகமங்கள், புராணங்கள், நாயன்மார்கள் அடியார்களின் வாக்குகள் முதலியவற்றிலிருந்து அறிய முடிகின்றது.

மேற்போந்தவற்றில் ஆறுமுக தோற்றம் பற்றிப் பலவிதமான கருத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றன. ஈசானம், தற்புருஷம் அகோரம், வாமம், சத்தியோசாதம் என்னும் சிவனுடைய ஐந்து முகங்களுடன் உமாதேவியாரின் ஒருமுகமும் சேர்ந்து சிவனும் சக்தியும் கலந்த ஒரு திருவுருவமாக ஆறுமுகப் பெருமான் தோன்றினான் என்பது ஒன்று. இறைவனுடைய ஐந்து முகங்களுடன், அதோ முகம் (கீழ் நோக்கிய முகம்) என்று சொல்லப்படும் பிரணவ முகத்தையும் சேர்த்து ஆறுமுகத் திருவுருவம் எடுக்கப்பட்டதென்பது இன்னுமொருகருத்து. வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, மேல் கீழ், என்ற எங்கும் நிறைந்த தன்மையைக் காட்டுவதே ஆறுமுகம் என்பது மற்றொரு கருத்து. மனிதனுடைய உடம்பில் தெய்வீக சக்தியை வளர்த்துச் செல்வதற்கான மூலாதாரம் சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களின் மூலமாக விளங்குபவன் என்றும், யோகிகள் அந்த ஆறு ஆதாரங்களிலும் அவனுடைய திருவருட் திறத்தை தரிசிக்கின்றார்கள் என்பதும் இன்னொரு கருத்து. காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் எனும் மனிதனின் ஆறு உட்பகைகளையும் அறுத்து அன்பு, உண்மை, திண்மை, அறம், பொருள், அறிவு ஆகிய தெய்வத்தன்மைகளை வளர்க்க அருளும் அருள் முகமாம் ஆறுமுகம் எனவும் கருத்துண்டு.

மேலே கூறப்பட்ட பல்வகைக் கருத்துக்களும் சிந்தனைக்குரியவை. அவற்றைச் சிந்தித்து தெளிந்து வாழ்க்கையை நடத்த வேண்டியது தமது கடனாகும்.

சிவனும் சக்தியும் கலந்த உருவினன் என்று நாம் சிந்திக்கும் பொழுது அவனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிபூரணத்தன்மை விளங்குகின்றது. இறைவனின் ஐந்து முகங்களுடன் கீழ்நோக்கிய முகமும் இணைந்த தன்மை தன் அடியவர்களின் துயர் தீர்க்க தன் மேல் நிலையிலிருந்து கீழ்நோக்கி வருபவன் என்பதை உணர்த்தி நிற்கின்றது. வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, மேல், கீழ் என்பது அவனுடைய சர்வவியாபகத் தன்மையை எடுத்துக் கூறுகின்றது. மனிதனின் ஆறு ஆதாரங்களிலும் தெய்வீக சக்திகள் உள இந்த ஆறு ஆதாரத்திலும் தெய்வீக சக்தியை வளர்த்து ஆக்ஞை என்ற முடிவான இடத்தில் சிவசொரூபத்தை அடைய முடியும் என்பது சைவங்கூறும் யோகசாதனை. எனவே, மனிதனில் இருக்கும் ஆறு ஆதாரங்கள்வழி யோக சாதனையின் மூலம் பூரணத்துவத்தை எய்தலாம் என்பதும் ஆறுமுகவடிவு உணர்த்தி நிற்கிறது.

இவை எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்தாற்போன்று மனிதன் தெய்வமாகலாம் என்ற தத்துவத்தைப் போதிக்கும் ஆறு பகை விலக்கி அறுவகைத் தெய்வக் குணங்களை வளர்ப்பதே ஆறுமுகம் என்பதும் கருத்தாகும்.

'அரிது அரிது மானிடராதல் அரிது' என்பது ஔவைப் பாட்டியின் தெய்வீக வாக்கு "விடிவாமளவும் விளக்கனைய மாயை" என்பது உமாபதி சிவத்தின் அருளுபதேசம். இந்தச் சரீரம் உபகரிக்கப் பட்டதன் நோக்கத்தை அறிந்து அதன் வழி நாம் செயற்பட வேண்டி அமைந்ததே சைவ வாழ்க்கையாகும். வாழ்க்கையில் ஒருவன் துன்பப்படுவதற்குக் காரணம் கீழான ஆசைகளாகும். எனவே அவற்றை முதலில் நீக்க வேண்டும். மனிதனின் வாழ்க்கையை அழிக்கும் ஒரு நெருப்பு கோபம். அதனை அவன் அடக்க வேண்டும். மனிதனுடைய இதயத்தைச் சுருக்குவது, அதாவது ஒருவனுடைய வாழ்வின் மாட்சிமையைக் கெடுப்பது குரோதம். ஈயாத பண்புள்ளவன் மனிதனல்ல. லோபி சமூகத்திற்குப் பயன்படாதவன். ஒருவன் தான் பிரபஞ்சப் பொதுவுடைமை என்பதை மறுக்க வைப்பது மதம், அதாவது அகங்காரம். எனவே ஆறு உட்பகைகளையும் அறுத்து ஆறு தெய்வீகத் தன்மைகளான அன்பு, உண்மை, திண்மை, அறம், பொருள், அறிவு என்பவற்றை வளர்த்து தனக்கும் தன் சமூகத்திற்கும் நாட்டிற்கும் சர்வதேசத்திற்கும் இன்னும் சொன்னால் பிரபஞ்சம் முழுவதற்கும் உரிய வாழ்க்கை வாழுவதே சைவ வாழ்க்கையாகும். இத்தன்மைகளை வளர்க்க நமக்கு வழிகாட்டும் திருவருள் வடிவே ஆறுமுகம்.

"ஆதியொடும் அந்தம் ஆகிய நலங்கள்
ஆறுமுகம் என்று தெளிவீயனே"

என்பது அருணகிரி வாக்கு. முன்னைப் பழமைக்கும் பழைமையாய், பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் விளங்கும் தெய்வீக அருள் நலம்பயக்கும் வடிவே ஆறுமுக வடிவு என்பது தெளிவாகின்றது.

"சிந்திக்கிலேன் நின்று சேவிக்கின்றிலேன்
தண்டைச் சிற்றடியை
வந்திக்கிலேன் ஒன்றும் வாழ்த்து
கிலேன் மயில்வாகனனைச்
சந்திக்கிலேன் பொய்யை நிந்திக்லேன்
உண்மை சாதிக்கிலேன்
புந்திக்கிலேசமும் காயக்கிலேசமும்
போக்குதற்கே"

என்ற அருணகிரிவாக்கு நம்மைச் சிந்திக்க வைக்கிறது. அதற்கு விடையும் அவரே தருகின்றார்.

ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்
ஆறுமுகம் ஆறுமுகம் என்று பூதி
ஆகம அணி மாதவர்கள்

என ஆறுமுக தத்துவமே மனிதனைச் சிந்திக்க வைத்து அதில் தெளிவை ஏற்படுத்தி மனதில் உள்ள காம, கோப, குரோத,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லோப, மத, மாற்சரியங்களை நீக்கி வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்க வழி சமைக்கிறது.

மனிதப் பிறப்பெடுத்த நாம் எம் வாழ்க்கைத் தத்துவத்தை அறுமுகதத்துவத்தின் மூலம் அறிந்து, தெளிந்து செயற்படாது விடின் எமக்கு இம்மையில் இன்ப வாழ்வும் மறுமையில் பேரின்ப வாழ்வும் கிடைப்பதரிதான தொன்றாகும். எனவே அறுமுகன் அருள் பெற்று குறையாத வாழ்வு பெற அவனைப் போற்றித் துதித்து வணங்குவோமாக.

## அரகர என்ன அறும்பிறப்பு

*திருமந்திரம் "அரகர" என்பதற்குரிய பயன்களை மிக அழகாக – தெளிவாக எடுத்துக் கூறுகின்றது.*

*"அரகர என்ன அரிதொன்றில்லை*
*அரகர என்ன அறிகிலர் மாந்தர்*
*அரகர என்ன அமரரும் ஆவர்*
*அரகர என்ன அறும்பிறப்பன்றே."*

## திருத்தணி மகிமை

*திருத்தணித் தலத்தின் மகிமையை கந்தப் பெருமானே வள்ளியம் மனுக்குக் கூறியதாக கந்தபுராணம் விவரிக்கின்றது.*

*"பாத கம்பல செய்தவ ராயினும் பவங்கள்*
*ஏதும் வைகலும் புரிபவ ராயினும் எம்பால்*
*ஆத ரங்கொடு தணிகைவெற் படைவரேல் அவரே*
*வேதன் மாலினும் விழுமிய ரெவற்றினு மிக்கார்".*

அண்ணா தொழிலகத்தின் மற்றோர் தயாரிப்பு

❀ திடீர் தோசைமா

❀ அண்ணா இட்லிமா

❀ ஜீவாகாரம்

இல்லத்தரசிகள் என்றும்

இலகு முறையில் பாவிக்க வசதியாகத்

தயாரிக்கப்பட்டுள்ளது.

அண்ணா தொழிலகத்தின் எல்லாக் கிளைகளிலும்

பெற்றுக்கொள்ளலாம்.

# அண்ணா தொழிலகம்

அண்ணா தொழிலகம்,

இணுவில்.

DEALERS IN BOOKS, STATIONERY,

OLD CURRENCIES, GREETING CARDS,

STAMPS AND PHOTOCOPY SERVICES.

*APPROVED DEALER'S*

*FOR*

NATIONAL PAPER CORPORATION

# SRIKANTH BOOK DEPOT

165, POWER HOUSE ROAD,

JAFFNA.

PHOTOCOPY SERVICES AT NALLUR

# எழிலான் ஒளி வேலான்

"சொக்கன்"

கங்கை யோடுபிறை சங்கை யாகமுடி
கவினுற வைத்தசிவன்
காத லோடுமடி மீதி லங்கியவன்
களிகொளச் செய்திடுவான்
துங்க மார்பரையின் தங்க மானஇடை
துள்ளி அமர்ந்திடுவான்
தூய இன்பமுற மேய வள்ளியிரு
தோள்கள் அணைத்திடுவான்
சங்க நற்றமிழை எங்க ளுக்கருளிச்
சால்புறச் செய்திடுவான்
சந்த மார்கவிதை தந்த பேரினுக்குச்
சாயுச் சியமருள்வான்
தெங்கு சோலைபல தங்கும் நல்லைநகர்
திகழ்ந்திடும் ஒளிவேலான்
தெய்வமார் எழிலான் உய்வ மென்னிலவன்
திருவடி சூடுவமே.

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது. — திருக்குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஞ்சீவி

பெயின்ற், ரெறாசோ, கிறிற்

பிளாஸ்ரர், கட்டிடப்பொருட்களும்

இங்கு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: S. தியாகராசா
ஒப்பந்தகாரர்

சேர். பொன். இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.

நல்லைக்கந்தன் உற்சவம் சிறப்புற
யாழ் மாநகராட்சி மன்றம் ஆற்றும் பணிகளுக்கு
எமது பாராட்டுக்கள்!!

தரமான கைக்கடிகாரங்கள், சுவர்மணிக்கூடு வகைகள்
நியாய விலையில் பெற்றுக்கொள்ள

## " அல்டி "

269/1, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.

ஒருவர்:- இந்த மணிக்கூடு கொழும்பிலை அன்றி
2500 ரூபாவிற்கு வாங்கி வந்தவ!

மற்றவர்;- இதுவா ... ... இந்த மணிக்கூடு யாழ்ப்பாணம்
' அல்டி ' யில் 2300 ரூபாவிற்கு விற்கிறார்கள்.

**ALDI**

269/1, Power House Road,

JAFFNA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணவம் போக்கி அருளவோர் அவதாரம்

கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை

"சான்றவர் ஆய்ந்திடத் தக்கவாம் பொருள்
மூன்றுள மறையெலாம் மொழிய நின்றன
ஆன்றதோர் தொல்பதி ஆருயிர்த் தொகை
வான்றிகழ் தளையென வகுப்பர் அன்னவே"

கந்தபுராணத்தில் காசிபருபதேசப் படலத்தில் மேற்படி செய்யுள் உள்ளது. ஆன்றோர் ஆராயத்தக்க பொருள் மூன்று உள்ளன. அவையே பதி, பசு, பாசம் என்பனவாகும். வேதாகமங்களெல்லாவற்றாலும் உணர்த்தப்படுவன இவையே. "நித்தியராய் வியாபகராய் ஞானாநந்தமயராய் உயிர்கள் பொருட்டு படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் செய்யும் சிவபெருமானே பதியெனப்படுவர்." ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களாகிய பாசங்களாலே பந்திக்கப்பட்டுள்ள ஆன்மாக்களே பசுக்கள் ஆகும்.

காசிப முனிவர் தம்முடைய மக்களாகிய சூரபத்மன், சிங்கமுகன், கஜமுகன் ஆகியோருக்கு உபதேசிக்கும்போது மேற்படி உண்மையை விளக்கிக் கூறித் தருமத்தைச் செய்யும்படி வலியுறுத்தினார்.

"தருமமே செய்திடில் அன்பு சார்ந்திடும்
அருளெனும் கிழவியும் அணையும் ஆங்கவை
வருவழித் தவமெனும் மாட்சி எய்துமேல்
தெருளுறும் அவ்வுயிர் சிவனைச் சேருமால்"

ஓர் உயிர் தருமத்தைச் செய்திடில் அன்பும் அருளும் உண்டாகும். தவம் உண்டாகும் இவை உண்டாக. அவ்வுயிர் சிவனை அடைந்து பேரின்பப் பெருவாழ்வை எய்தும். இவ்வாறு உபதேசித்த காசிபமுனிவர் இதனை விளக்குவதற்காக மார்க்கண்டேயருடைய கதையைக் கூறினார்.

சிவனடியார்கள் எமனுக்கும் அஞ்சுவதில்லை. அவர்களை மரணம் தீண்டுவதில்லை. மார்க்கண்டனது உயிரை எடுக்க விழைந்த காலன் கண்ணுதற் பெருமானின் காலாலுதைபட்டுக் காலமானான். ஆகவே தவத்தின் மிக்கது வேறொன்றில்லை என விளம்பினார்.

காசிபர் மேற்படி உபதேசித்தலைக் கேட்ட மாத்திரத்தில் நகைத்த மாயை தன்னுடைய மைந்தர்களாகிய சூரபத்மன் முதலியோரை நோக்கி உங்கள் தந்தையாரது உபதேசம் தக்கதே. ஆயினும் அவை முனிவர்க்கன்றி உம்போன்ற சிறுவர்க்காகாது. நீங்கள் இவ்வுலக இன்பத்தை அனுபவிக்கப் பிறந்தவர்கள் என்றாள்.

"அறிவினையுடைய உயிர்களுக்கெல்லாம் பிறவியால் ஆகும்பயன்கல்விப் பொருள், செல்வப்பொருள் என இரண்டாம். உயிரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னது இவ்விரண்டினுள் ஒன்றை அடையாதாயின் அவ்வுயிரினும் பேய்ப் பிறப்பே பெருமையுடையது. இவ்விரு பொருளுள்ளும் பொருட்செல்வமே சிறப்புடையது. கலைகளெல்லாவற்றையும் வருந்திக் கற்றுத் தெளிந்த பண்டிதராயினும் வறுமையுற்றிடில் பொருள் வேண்டிப் பகைவரையும் பணிய நேரும். ஆதலால் சிவனை நோக்கித் தவம் செய்து இம்மைப்பயனை எய்துங்கள்- தேவர்களையும் வென்று ஈரேழு பதினான்கு உலகங்களையும் ஆளும் அதிகாரத்தைப் பெறுங்கள் எனக்கூறித் திசைதிருப்பி விட்டாள் மாயை. ஆணவம் என்பது பொல்லாத அழுக்கு. ஆன்மாவோடு கூடப்பிறந்த சகச மலமாகிய ஆணவம் பற்றிக் கூறவந்த உமாபதிசிவாசாரியார்-

''அன்றளவி உள்ளொளியோ டாவியிடை யடங்கி
இன்றளவும் நின்ற திருள்''

என்பர். அநாதிக்காலம் தொட்டு உள்ளொளியாயிருக்கின்ற சிவஞானத்தோடே ஆன்மாவைப் பொருந்த வொட்டாமல் ஆன்மாவிடத்திலே பொருந்தி இருவினையொப்பு வருமளவும் ஆன்மாவை மறைத்து நிற்பது இருளாகிய ஆணவமலம் என்பது இதன் பொருளாகும்.

ஆணவமலத்தின் வடிவமாகிய சூரபத்மன் எவ்வாறு தர்மத்தைப் பற்றிச் சிந்திக்க முடியும். அதனால் அவன் அவநெறியிற் சென்றான். தவநெறியிற் செல்லவேண்டிய தேவர்களும் தவக்குறைவு காரணமாக தக்கன் வேள்விக்குச் சென்று சிவநிந்தனையைத் தேடிவிட்டனர். ஆகவே தேவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்களாகினர். இவர்களை எப்படி தண்டிப்பது என்பதை இறைவனே தீர்மானித்து விட்டான்.

''முதிர்தரு தவமுடை முனிவராயினும்
பொதுவறு திருவொடு பொலிவராயினும்
மதியின ராயினும் வலிய ராயினும்
விதியினை யாவரே வெல்லும் நீர்மையர்

என்பர் கச்சியப்ப சிவாசாரியார்''

சூரபத்மன் முதலியோர் சிவனை நோக்கிக் கடுந்தவம் செய்தனர். சிவன் அவர்கள் வேண்டிய வரமனைத்தையும் நல்கி ''எனது சக்தியைத் தவிர வேறொன்றும் உங்களை அழிக்கவல்லன அல்ல'' எனக்கூறி மறைந்தருளினார். அசுரர்கள் அண்டசராசரமனைத்தையும் வென்று தேவர்களையும் துன்பப்படுத்தி அடிமைகளாக்கி ஏவல் செயவைத்து இறுமாந்திருந்தனர்.

இந்நிலையில்தான் தேவர்களது வேண்டுதலை ஏற்ற சிவபிரான் தமது நெற்றிக் கண்ணினின்றும் முருகப்பெருமானைத் தோற்றுவித்தருளினார்.

''அருவ முமுருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிர மமாய் நின்றசோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிருமுருகன் வந்தாங் குதித்தனன் உலகமுய்ய''

உலகமுய்யத் திருவவதாரம் செய்த முருகப்பெருமான் வேறுயாருமல்லர். சிவனது மறுவடிவமேயாவர். சிவன்வேறு முருகன்வேறு அல்லர் என்பதனைச் சிவனே உமைக்கு உணர்த்துவதைக் கச்சியப்பர் பின்வருமாறு கூறுவர்.

''ஆதலின் நமது சத்தி அறுமுகன் அவனும் யாமும்
பேதக மன்றால் நம்போற் பிரிவிலன் யாண்டும் நின்றான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதமில் குழவி போல்வான் யாவையு
முணர்ந்தான் சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றி
னர்க்கருள வல்லான்''

எம் பெருமானாகிய சிவபிரானது குழந்தைப் பருவமே பாலமுருகனாகிய அழகிய தோற்றமென்பர். எனவே முருகனது திருவிளையாடல் அனைத்தும் அப்பனது அருள் விளையாடல்களேயாகும்.

சிவன் அவதாரம் செய்வதுண்டா? இல்லையே! அப்படியானால் இத்திருவிளையாடலின் நோக்கமென்ன?

காளமேகப் புலவர் விஷ்ணுவை நோக்கிப் பாடும்போது

''கண்ணபுர மாலே கடவுளரில் நீயதிகம்
உன்னைவிட நானதிகம் ஒன்றுகேள்
-முன்னர்
உன்பிறப்போ பத்து உயர் சிவனுக்
கொன்று மில்லை
என்பிறப்போ எண்ணிலடங் காவே.''

எனச் சிவனுக்குப் பிறப்பில்லை என்றார்.

அருணகிரிநாதரும் தாம்பாடிய கந்தரனுபூதியில்

''செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இற
வான்''

என வலியுறுத்துகின்றார்.

வேடர்குல வள்ளியைத் திருடும் திருவிளையாடல் செய்த முருகன் பிறப்பதுமில்லை; இறப்பதுமில்லை. அழியாத பரம்பொருள் அழிகின்ற ஊனுடலில் அவதாரம் செய்வதில்லை என்பது சைவசமயம்.

அகங்காரத்தின் வடிவமாகிய சூரபத்மனின் ஆணவத்தை அழித்து அருளவும், ஏனைய அசுரரைக் கொன்று தேவரைக் காக்கவும் திருவுளங் கொண்ட சிவபிரான் தாம் கொடுத்த வரத்துக்கமைய தமது சக்தியாகிய முருகப் பெருமானைத் தமது நெற்றிக்கண்ணிலிருந்து எழுந்த நெருப்புப் பொறிகளினின்றும் படைத்தருளினார். இவ்வாறு அவதாரம் செய்த முருகப்பெருமான் ஆடியதிருவிளையாடல்களுள் முக்கியமானவை வருமாறு.

பாலமுருகனாகிய இவர் அண்டசராசரங்களையும் மாற்றியமைத்தார். பூமியிலுள்ள ஆறு, மலை, காடு, கடல் என யாவையும் மாற்றிவைத்தார். இவைகண்ட இந்திராதி தேவர்கள் உண்மையுணராது அசுரனென எண்ணி முருகப்பெருமானுடன் போரிடச் சென்று மாண்டொழிந்தனர். இதை நாரதர் மூலமறிந்த தேவகுருவாகிய பிருகஸ்பதி முருகனை அடைந்து வணங்கித் தேவர்கள் குற்றமற்றவர்கள். அவர்களை மன்னித்தருளல் வேண்டுமென வேண்ட, முருகன் புன்னகைபூத்து தேவர்களை உயிர்த்தெழ வைக்கின்றான்.

தேவர்களது யாகத்திலிருந்து வெளிப்பட்ட ஆட்டுக்கடாவை அடக்கி, அதன் மீதேறி உலகம் முழுவதும் சுற்றிவந்து திருக்கைலாய மலையில் எழுந்தருளியிருந்த முருகப்பெருமானை எல்லாத் தேவர்களும் வணங்கி நிற்க, பிரமதேவன் மட்டும் வணங்காது அகந்தை கொண்டு நின்றான். முன்னரே குறிப்பிட்டவாறு ஆணவம் என்பது அறிவை மயக்கும் இருண்மலமாகும். பிரமனின் ஆணவத்தை அடக்கக் கருதிய முருகப்பெருமான் பிரமனைத் தலையிற் குட்டிச் சிறைசெய்து, சிவன் வேண்ட, சிறைவிடுத்த திருவிளையாடல் ஆழமான தத்துவக் கருத்துடையதாகும்.

இவையனைத்தையும் விட முருகனாடிய திருவிளையாடல்களில் முக்கியமானது, சூரபத்மனோடு யுத்தம் புரியும் போது அவனுக்குச் சிறிது நல்லுணர்ச்சியைக் கொடுத்துத் தனது விஸ்வரூபத்தைக் காட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டியருளியமையாகும். அப்பொழுது முருகப் பெருமானது திருக்கோலத்தைக் கண்ட சூரபத்மன்;

''கோலமா மஞ்சை மீது குலவிய குமரன் தன்னைப்
பாலனென் றிருந்தேன் அந்நாட் பரிசிவை உணர்ந்திலேன் யான்
மாலயன் றனக்கு மேனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகாரணமாய் நின்ற மூர்த்தியிம் மூர்த்தியன்றோ.''

என வியக்கின்றான்.

''இப்பெருமானை எவ்வளவு நேரம் தான் தரிசித்தாலும் தெவிட்டவில்லையே. என் கால்கள் இவரை வலம்வர வேண்டும்; கைகள் தொழுதல் வேண்டும்; சிரசு வணங்குதல் வேண்டும்; நாக்குத் துதித்தல் வேண்டும்; நான் தீமை முழுவதும் நீங்கி இவருக்கு அடிமையாய் வாழ்தல் வேண்டும். இவ்வாறு என் மனம் விரும்புகின்றது. ஆனால் மானம் ஒன்றே என்னைத் தடுத்து நிறுத்துகிறது'' எனத் தவிக்கின்றான் சூரன்.

இதனைக் கந்தபுராணம் பின்வருமாறு கூறும்.

''சூழுதல் வேண்டும் தாள்கள் தொழுதிடல் வேண்டும் அங்கை
தாழுதல் வேண்டும் சென்னி துதித்திடல் வேண்டும் தாலு
ஆழுதல் வேண்டும் தீமை அகன்று நான் இவற்காளாகி
வாழுதல் வேண்டும் நெஞ்சம் தடுத்தது மானமொன்றே.''

அப்பொழுது முருகப்பெருமான் தாமெடுத்த விஸ்வரூபத்தை நீக்கி பாலமுருகனாகக் காட்சி கொடுத்ததோடு, சூரபத்மனுக்குக் கொடுத்த ஞானத்தையும் நீக்கினார். அவ்வளவில் அவனும் அகங்காரம் கொண்டவனாகப் போருக்கம் பெற்று முருகனை எதிர்க்கலானான். இத்திருவிளையாடலூடாக 'அவனருளாலே அவன்தாள் வணங்கவேண்டும்' என்ற உண்மையை இறைவன் விளக்கலுற்றார்.

முருகனுக்கும் சூரனுக்குமிடையில் நடந்த யுத்தத்தில் பெருமானுடைய வேலாயுதம் சூரனை இருகூறாக்கியது. சிவனிடம் பெற்ற வரம் காரணமாக சூரன் இறக்கவில்லை. அவனுடைய இரு கூறுகளும் சேவலும் மயிலுமாகி உக்கிரத்தோடு முருகனை நோக்கி வந்தன. முருகப்பெருமான் அவன் மீது திருவருள் நோக்கஞ் செய்ய அவன் ஞானம் பொருந்திய மனத்தனாய் எம் பெருமானுக்கே யாளாகி விட்டான். ஆணவ மலம் வலிகெடுமேயன்றி அழிவதில்லை என்ற தத்துவத்தையும் இந்நிகழ்ச்சி வலியுறுத்தக் காணலாம்.

தேவர்கள் துயர் தீர்க்கக் கந்தப்பெருமானாடிய திருவிளையாடல்கள் அற்புதமானவை. தீயவரானபோதும் முருகனது பாதாரவிந்தத்தை யடைந்தால் தூயவராகி நற்கதியடைவர். இதனைக் கச்சியப்பரும் பின்வருமாறு விளக்குவர்.

''தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன் உற்றால்
தூயவராகி மேலைத் தொல்கதியடைவர் என்கை
ஆயவும் வேண்டும் கொல்லோ அடுசமர் இந்நாட்செய்த
மாயையின் மகனும் அன்றோ வரம்பிலா அருள்பெற்றுய்ந்தான்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓடக்காரன்

கவிஞர் சோ. பத்மநாதன்

நமது துன்பத்துக்கொல்லாம் காரணம் பிறவியே. பிறவி தொலைந்தாலன்றி நமக்கு நிலையான இன்பம் கிட்டாது என்ற கொள்கை சிந்தனைக்கு அடிப்படை.

பிறவிக்குக் காரணம் பற்றும் அவாவும்.

''பற்றவா வேரொடு பகையற பிறவி
போய் முற்ற...''

என்பான் கம்பன்.

பிறப்புக்கு வித்து அவா. பிறவி போக வேண்டுமாயின் அவாவை விடவேண்டும். அவாவறுத்தலை 'வேண்டாமை' என்றும் சொல்வர். அதைவிட மேலான செல்வம் இல்லை என்பது வள்ளுவர் கருத்து:

''வேண்டாமை அன்ன விழுச்செல்வம்
ஈண்டில்லை
ஆண்டும் அஃதொப்ப தில்''

பிறவியைத் துயரம் என்றும், அந்தத் துயரைத் தீர்ப்பவன் இறைவனே என்றும் மணிவாசகர் சொல்வார். இதனாலே இறைவனுக்குத் 'தீர்த்தன்' என்று பெயர்.

''ஆர்த்த பிறவித் துயர்கெட நாம்
ஆர்த்தாடும்
தீர்த்தன்...''

— திருவெம்பாவை

பிறவி என்பது நோய். அந்நோயைத் தீர்க்கும் மருந்து இறைவனுடைய திருநாமம் என்றும் கொள்வதுண்டு.

மார்பில் அம்புபட்டு வீழ்ந்து கிடக்கின்றான் வாலி.

''என் நெஞ்சை உருவும் இவ்வாயுதம் திருமாலின் சக்கரமா? நீலகண்டனது நெடுஞ் சூலமா? இந்திரன் ஏவிய வச்சிரப்படையா?'' எனத்திகைத்தான் அவன்.

தன் வலியெலாந் திரட்டி, கையாலும் காலாலும், அம்பைப் பற்றி இழுத்தான். அம்பிலே பொறித்திருக்கும் 'இராமன்' என்ற பெயரைக் காண்கின்றான். கம்பன் சொல்கிறான்:

''மும்மைசால் உலகுக்கெல்லாம்
மூலமந் திரத்தை, முற்றும்
தம்மையே தமக்கு நல்கும்
தனிப்பெரும் பதத்தை, தானே
இம்மையே, எழுமை நோய்க்கு
மருந்தினை 'இராமன்' என்னும்
செம்மை சேர் நாமந்தன்னை
கண்களில் தெரியக் கண்டான்''.

'''எழுமை' என்பது வினைப்பயன் தொடரும் ஏழு பிறப்பினை'' — பரிமேலழகர். எனவே பிறவி நோய்க்கு மருந்து இராமநாமம் என்றாகிறது.

பிறவியைக் கடல் என்று சொல்வது பிறிதொரு மரபு.

''பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்''

என்பார் வள்ளுவர். ''காரணகாரியத் தொடர்ச்சியாய்க் கரையின்றி வருதலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருங்கடல்'' என்பது பரிமேலழகர் தரும் விளக்கம். காரணம் வினை; காரியம் பிறவி. நாம் செய்யும் நல்வினை தீவினைகளால் பிறவி வருகிறது; பிறவிவருவதால் வினை செய்கின்றோம். ஆக, சங்கிலித் தொடராக பிறவி வந்துகொண்டேயிருக்கிறது.

நீண்ட நெடுங்காலம் அரசபோகந் துய்த்த தசரதன், தன் ஆன்ம ஈடேற்றம் பற்றிப் பேசுவான்.

''துறப்பெனும் தெப்பமே துணைசெய் யாவிடின்
பிறப்பெனும் பெருங்கடல் பிழைக்க லாகுமோ?

அதாவது பிறவியாகிய பெருங்கடலில் மூழ்காமல் காப்பது ''துறவு'' என்ற தெப்பம். உலகப் பற்றைத் துறப்பதன்மூலம் பிறவியிலிருந்து விடுபடலாம் என்பது கம்பர் கருத்து.

மேலே காட்டிய ''பிறவிப் பெருங்கடல்'' என்ற குறளுக்கு விளக்கந்தரும் பரிமேலழகர், ''இறைவனடி யென்னும் புணையைச் சேர்ந்தார் பிறவியாகிய பெரிய கடலை நீந்துவர்', என்கிறார். இறைவன் திருவடி தெப்பமாகிறது.

அருணகிரிநாதரும் பிறவியைப் பற்றி இதே கருத்தை உடையவர்.

''திமிர உததி அனைய நரக
ஜெனனம்''

(உததி – கடல்; ஜெனனம் – பிறவி)

ஆனால், முருகன் அவருக்கு ஓர் ஓடக்காரனாகக் காட்சி தருகிறான்.

''யாது நிலை யற்றலையும்
ஏழு பிறவிக் கடலை
ஏறவிடு நற்கருணை ஓடக்காரனும்''

நிலைகொள்ளாது சதா அலைந்து கொண்டிருப்பதனால் ''அலைகடல்'' என்பர். பிறவியும் அப்படியே; ஓயாது ஒன்றன்பின் ஒன்றாய் – வந்து கொண்டிருக்கும். பிறவிக்கடலில் கிடந்து தத்தளிக்கும் ஆன்மாக்கள்மீது கருணைகொண்டு அவற்றைக் கரையேற்றும் ஓடக்காரன் முருகன்.

இது புதுமையானதோர் உருவகம். சமுத்திரத்திலே கிடந்து தத்தளிக்கிறான அடியவன், அவன் உயிர்போகப் போகிறது. இறைவனுடைய கருணையாகிய தோணி வருகிறது. தோணியோட்டி வருபவன் வேறு யாருமல்ல, முருகனே.

''கவலைச் சாகர நீச்சுக்குளேயுயிர்
தவறிப் போமென ஓட்டத்திலோடியே
கருணைத் தோணியில் ஏற்றிக் கொள்வாய்
இன்னும் அலையாதே!.''

வைஷ்ணவ மரபிலே, குகனைப் பற்றி வியாக்கியானகாரர் சிலாகித்துப் பேசுவர். இராமனும் சீதையும் தம்பியும் கங்கையைக் கடக்க ஓடம் விட்டவன் குகன் என்னும் ''நாவாய் வேட்டுவன்'' ''ஆன்ம கோடிகளைச் சம்சார சாகரத்திலிருந்து கரையேற்றும் எம்பெருமானையே கரை சேர்த்தவன் குகன்'' என்பது வைஷ்ணவர்கள் உருகி உருகிப் பேசும் விஷயம்.

இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு. —திருக்குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# " நல்லைக் குருமணி " மணி ஐயா

"கானகதாவாரிதி"
பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா

ஈழத் திருநாட்டில் செந்தமிழ் சான்றோர்களை ஈன்றெடுத்த முதற் பெருமை நல்லூருக்கே உரியது. "நல்லூரான் திருவடியை நான் நினைத்த மாத்திரத்தே எல்லாம் மறப்பேனடிகிளியே ஏதும் அறியேனடி" என்ற பாடலுக்கு அணிசெய்கின்ற பெருமையைக் கொண்டதும் நல்லூர் தான். இப்படிப் பெருமை பெற்ற நல்லூரிலேதான் தமிழர்களின் கடைசி மன்னன் வீரத்தமிழன் சைவத்தைக் கண்போல் காத்த சங்கிலியன் அரசோச்சி மாவீரனாக மறைந்தான். வேதநெறி தழைத்தோங்க, மிகு சைவத்துறை விளங்க நல்லையம்பதி தான் பொருத்தமான இடம் எனப்போலும் இறைவன் காலத்துக்குக் காலம் நமக்காக நல்லூரில் அரும் பெரும் சைவச் சான்றோர்களை தோன்றச் செய்தார். சைவத்தையும் தமிழையும் உயிரும், உடலும் எனக் கொண்டு தம் வாழ்க்கையை எமக்காக அர்பணித்த அறிவாளி முனிவன் சுவாமி ஞானப்பிரகாசர், அடுத்து நாவலர் பெருமான் அவர்கள், பின் அன்னவர் சீரிய பணியைத் தலைமேற் கொண்டு நம் மத்தியிலே அரும்பெரும் சைவத் தொண்டாற்றிச் சேவைகள் செய்து வந்தவர்தான் நல்லைக் குரு மணியாகிய நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள். நாவலரின் மனக்குறையை தீர்த்து வைத்தபெருமை நல்லைக்குருமணியையேசாரும்.

நால்வருக்கு நன்னெறி உணர்த்திய இறைவனுக்குகிடைத்தது கல்லாலமரம், அது போலவே பல்லோர்க்கு பக்தியை விளையச் செய்கிறது யாழ்ப்பாணம் என்றால் மிகையாகாது. இலங்கையில் யாழ் திருநாட்டில் நல்லூர் பதியில் முதன் முதல் ஒரு ஆதினத்தை நிறுவிய பெருமை நல்லைக்குருமணி அவர்களுக்கே உரித்தாகும். இத்தகைய பெருமை மிக்க நல்லைக் குருமணியின் வரலாற்றை எம் அறிவுக்கு எட்டியவாறு, தொகுத்து இம்மலரிலே கட்டுரையாக எழுதவிழைகின்றேன். இதில் குறைகள் ஏதும் இருப்பின் மன்னிக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நல்லைக்குருமணி (மணிஐயர்) அவர்கள் 1918ஆம் ஆண்டு தைத்திங்கள் பூராடம் நட்சத்திரம் கூடிய சுக்கிரவாரத்தன்று சுபயோகவேளையில் யாழ்ப்பாணத்தில் வண்ணார் பண்ணையில் பிரம்மஸ்ரீ செல்லையர் தம்பதிகளுக்கு சிரேஷ்டபுதல்வராகப் பிறந்தார். அந்த ஊருக்கே சிறப்பளிக்கும் ஆலயமாய் அமைந்துள்ள வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் பணியாற்றி வந்தது அவர்குடும்பம். பூராட நட்சத்திரத்துடன் வெள்ளிக்கிழமை சேரப் பிறந்தால் குடும்பத்திற்குத் தோஷம் உண்டு என்றும், பூராடம் ஊசாடத் தீரும் என்ற பழமொழியினையும் ஆராய்ந்து இவரை வண்ணை வைத்தீஸ்வரன் வாலாம்பிகை அம்மையப்பருக்கு விற்பது எனத் தீர்

மானித்து தாய்தந்தையர் பாலாம்பிகை சன்னதியில் பிள்ளையை விற்றார்கள்.

அன்றுமுதல் தேவியின் திருவடிகளை சரணமாககொண்டு திருவுடன் கல்வியும் பொலிய வளர்ந்தார். இவருடைய இளமைத் திருநாமம் சிவசுப்பிரமணியஐயர் என்பதாகும். இவருடைய வளர்ச்சியில் தந்தை மிக்க கவனம் செலுத்தினார். இவரது கல்வியிலும் ஒழுக்கத்திலும் மிகவும் அக்கறையாகவும் கண்டிப்பாகவும் இருந்தார். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளிலும் கசடறக்கற்றுத் தேறவைத்தனர். இளமைக்கல்வியில் இவருக்கு கணிதம் கசந்தது. இவருடைய வீட்டுக்கு அடுத்த வீட்டில் இரண்டு பெண் குழந்தைகள் சங்கீதம் கற்று வந்தார்கள். அதைக்கேட்டு ஆர்வத்துடன் தாமும்பாடுவார். இதனால் சங்கீதத்தில் நாட்டம் பிறந்தது. ஏற்கனவே இவருக்கு அமைந்த கேள்விஞானத்தாலும், இசைத்தட்டுக் கேட்பதாலும் சங்கீத ஆர்வம் வளர்ந்தது இவர் ஆரம்பக் கல்வியைக் கற்றது வண்ணைவைத்தீஸ்வர வித்தியாலயம். சுவாமி விபுலானந்தா, சுவாமி அவிநாசானந்தா, சுவாமி நிஷ்வரரேஸ்வானந்தா ஆகிய பேரறிஞர்களை ஆசிரியர்களாக அடையும் பேறும் வாய்ப்பும் கிடைக்கப் பெற்றதனால் நல்லதொரு சூழ்நிலையில் அறிவுவளர்ச்சி பெறவும் உறுதுணையாக உதவியது. அன்றைய கனிஷ்டதராதர வகுப்பு பரீட்சையில் சித்தியடைந்து யாழ்ப் பாணம் இந்துக் கல்லூரியில் மேற்கல்வியை மேற்கொண்டார். வித்வான் பிரம்மஸ்ரீ கணேசஐயர் அவர்களின் பேரனாயதாலும் இயல்பிலே கல்வி வளர்ந்தது. இந்துக்கல்லூரி அவர் வாழ்வில் ஒரு புதிய திருப்பத்தைக் கொடுத்தது. பதினெட்டாம் பிராயத்தில் அவரது உள்ளத்தின் அடித்தளத்தில் புதைந்துகிடந்த அபிலாசைகள் தலை தூக்கத் தொடங்கின. சங்கீதம் முறையாகக் கற்பதில் முனைந்தார். அக்காலத்தில் அடிக்கடி சங்கீத கதாப் பிரசங்கங்கள் நடப்பதால் அவற்றைப் பார்த்து கதையும் பாட்டும் கலந்து குட்டிக் கதாப்பிரசங்கள் செய்து காட்டினார். இக்கலையில் இவர்கருத்துச் செலுத்தக் காரணமாக இருந்தவர்கள் அப்போது புகழ்பெற்று விளங்கிய சங்கர சுப்பையர் சுவாமிகளும் சங்கானைச் சுவாமிகளும் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களைப்போல தாமும் கதைசெய்ய முயலக் கூடாதா என்ற எண்ணம் உள்ளத்தில் உதித்தது. அதுவே செயலாக உருவாகத் தொடங்கியது.

இவருக்கு இராசுப்பிள்ளை ஓதுவார் என்பவரிடத்தில் சில பண்கள் பயிலும் வாய்ப்பும் அமைந்தது. அதே நேரத்தில் பள்ளிக்கூட நாடகங்களிலும் நடிக்க ஆரம்பித்தார் – நந்தனார், சத்தியவான் சாவித்திரி, பிரகலாதன் போன்ற நாடகங்களில் நடித்தார். பள்ளியில் மாணவர்களுக்கு நாடகப் பயிற்சி அளித்து வந்தார். பாரிஜாத புஸ்பகரணம், கிருஷ்ணாருச்சுனா, அல்லி அருச்சுனா, சகுந்தலை ஆகியவை இவரால் பயிற்றுவித்து மேடை ஏற்றியவைகளில் குறிப்பிடத்தக்கவை. இவை நல்ல புகழையும் தேடித்தந்தன. அப்போது இருந்த கலாசாலை அதிபர் காலஞ் சென்ற திரு. குமாரசாமி அவர்கள். இவரைத் தமது அபிமான புத்திரனாகவே நடத்தி வந்தார். இவரது திறமையை உணர்ந்து இரண்டு வருடம் வரை இலவசக் கல்வி அளித்தார். பாடசாலை ஆரம்பத்திலும், முடிவிலும் சுவாமிக்கு பூசை செய்து தேவாரமும் பாடுவார். லண்டன் மெட்றிக் பரீட்சைக்குப் படிக்கும்போது நடைபெற்ற ஒரு சம்பவம் இங்கே குறிப்பிடத்தக்கது. காலஞ் சென்ற தமிழக அரசியல் தலைவர் திரு. சத்திய மூர்த்தி அப்போது கலாசாலைக்கு விஜயம் செய்தார். அவருடைய சொற்பொழிவுக்கு முன் ''அந்தணாளன்'' என்ற பாடலை இவர் அழகாகப் பாடினார். கூட்டம் தொடங்கியதும் திரு. சத்தியமூர்த்தியைப் பார்த்து சித்திரம் வரைந்து பின்பு தயக்கத்துடன் அவரை அணுகி அச் சித்திரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்முன் நீட்டினார். அவர் இவரை அடையாளங் கண்டு ''தம்பி ரொம்ப நன்னாப் பாடுகிறாய்'' என்று முதுகில் தட்டிக் கொடுத்தார். அத்தோடு வரைந்த சித்திரத்தையும் மெச்சி தனது கையெழுத்தையும் போட்டுக் கொடுத்தார். இதேபோன்று கல்கி அவர்களின் பாராட்டையும் பெற்றார்.

அக் காலத்தில் இலங்கை வானொலியிலும் கதை, கதாப்பிரசங்கம் செய்ய வாய்ப்புக் கிடைத்தது. பின்புதன் கல்வியை விட்டு சங்கீத கதாப்பிரசங்கம் செய்வதில் கருத்தைச் செலுத்த தொடங்கினார். அப்போது இவருக்கு வயது இருபதுதான் இருக்கும். வண்ணை சிவன் கோயிலில் ஆவணி மூலத்தன்று முதல் பிரசங்கம் அரங்கேற்றம் நடைபெற்றது. கோயில் தர்மகர்த்தாவாக இருந்த பொன்னுச்சாமிச் செட்டியார் தலைமையில் இவ்வரங்கேற்றம் சிறப்பாக நடைபெற்றது. இவருடைய பிரசங்கக்கலை வளர்ச்சிக்கு வித்திட்டவர் செட்டியார் தான். அரங்கேற்றமன்று இவரது தாத்தாவாகிய காலஞ்சென்ற மகாவித்துவான், வித்வசிரோன்மணி புன்னாலைக்கட்டுவன் பிரம்மஸ்ரீ சி. கணேசையர் அவர்கள் கதையை முன் இருந்து கேட்டு பேரனைப் பாராட்டி ஆசீர்வதித்தார். அதன்பின் வேறு ஆலயங்களிலும் பிரசங்கம் பக்கவாத்திய சகிதம் செய்ய ஆரம்பித்தார்.

இந்நேரத்தில் இவரது நாடகத்திறமையை அறிந்த அமரர் கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் தமது நாடகக் கோஷ்டியில் இவரையும் சேர்த்து பிரபலப்படுத்தினார். இவரை மணி ஐயர் என்று எல்லோரும் அழைத்தனர். வட்டுக்கோட்டையில் பிரபலமான அந்தணர் குடும்பம் ''நாவன்னா'' குடும்பம. இவரது வாழ்வில் மற்றொரு திருப்பத்திற்கு இக் குடும்பம் காரணமாக அமையப்பெற்றது. இவரது நாடக நடன, சங்கீத ஆற்றலை அறிந்த வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர்கள் இவரை சங்கீத ஆசிரியராக பணிபுரிய அழைத்தார்கள். அந்தப் பணியை சிறப்பாக பத்து வருடங்கள் செய்தார். அப்படி இருந்தும் பிரசங்கம் செய்வதையும், கலையை வளர்ப்பதையும் தன் இரு கண்களாகக் கொண்டார். இப்பணியில் இருக்கும்போது அக்கால கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியாய் இருந்த திரு. கே. கனகரத்தினம் அவர்களின் தொடர்பு கிடைத்தது. அவர்களது முயற்சியால் மதுரை சன்னிதானம் அவர்களின் அறிமுகம் கிடைத்தது. அதன் பயனாக கொழும்பு சென்றார். அங்கே பல இடங்களில் கதாப் பிரசங்கம் செய்து பிரபல்யமடைந்தார். இவரது சேவையைப் பாராட்டி ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமண்ய தேவஸ்தானம் இவருக்கு பொன்னாடை போர்த்தி பொற்கிழி வழங்கி கௌரவித்தார்கள். மதுரை ஆதினம் ''முத்தமிழ் மணி பாகவதர்'' பட்டம் அளித்து பாராட்டினார்கள். அன்று தொடக்கம் எல்லோரும் C. S. S மணி பாகவதர் என்று இவரை அழைத்தனர்.

இவரது இருபதாவது வயதிலேயே திருமணம் செய்து இல்லறவாழ்வில் நல்லறம் புரிந்து ஒரு புதல்வனையும் பெற்றார். இருந்தும் இவர் மனம் கலைத்துறையையே நாடியது. கந்தபுராணம், இராமாயணம் மகாபாரதம் ஆகிய இதிகாச புராணங்களை அலசி ஆராய்ந்து தன் அறிவை மேலும் அபிவிருத்தி செய்து இலங்கையில் எல்லா இடங்களுக்கும் சென்று புகழ் பரப்பினார். மேலும் இந்தியா, மலேஷியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு அடிக்கடி சென்று தான் பிறந்த நாட்டுக்கும் சென்று வந்த நாடுகளுக்கும் பெருமை சேர்த்தார். அங்குள்ள மெய் அன்பர்கள் அளித்த அமோக ஆதரவு இவரது முன்னேற்றத்திற்கும், புகழுக்கும் துணையாய் அமைந்தது. பாராட்டுகளும், பட்டங்களும் பலவிருதுகளும் இவரைத் தேடி வந்தன என்றால் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தமிழால் கேட்கும் செவிகுளிர சிந்திக்கும் கருத்தினிக்க மக்கள் பயனடையும் வகையில் இதிகாச புராண கதைகளை தொடராகவும், தனித்தும் சங்கீத கதாப் பிரசங்கங்கள் செய்தும் தனக்கென ஒரு தனி இடத்தைப் பெற்றுக் கொண்டார். தென்னிந்தியாவில் இராமேஸ்வரம் தொடக்கம் பம்பாய் வரை இவர் சென்று பிரசங்கங்கள் செய்து ஆங்குள்ள அறிஞர்கள், ஆதீன முதல்வர்கள், கலைஞர்கள், இசை வல்லுனர்கள் யாவராலும் பாரட்டுப் பெற்றார்.

சைவமும் தமிழும் ஒன்றிணைந்து உய்வு பெற உழைக்கின்ற ஆதீனங்கள் தென்னிந்தியாவில் பல உள்ளன. ஆனால் நம் ஈழத் திருநாட்டில் அப்படி ஒரு ஆதீனம் இல்லை. நல்லை நகர் ஆறுமுகநாவலர் போன்ற பெரியார்கள் தோன்றி தமிழும், சைவமும் தழைந்தோங்க உழைத்தார்கள். ஆயினும் அத்தொண்டு மேலும் தொடர்ந்து வளர தகுந்த தாபனம் ஒன்று உருவாக வேண்டும் என்னும் உயர்ந்த எண்ணம் இவருடைய உள்ளத்திலே முதன் முதல் உதித்தது. தவமும் தவமுடையார்க்கே என்பது முதுமொழி. அந்த நேரத்தில் இந்தியா சென்றார். மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் சன்னியாசமும், ஞானதீட்சையும் பெற்று தம்பிரான் சுவாமிகளாக ஈழம் மீண்டார். அவரின் முயற்சியால் நல்லைக் கந்தன் ஆலயத்தின் அண்மையில் ஈழத்திலும் ஆதீனம் ஒன்று 1966 ஆம் ஆண்டு ஆவணி மாதம் கார்த்திகை நட்சத்திரமும் கூடிய சுபவேளையில் தாபிக்கப்பட்டது. நல்லைக் குருமணியின் தோற்றம் நல்லூர் ஆறுமுக நாவலரை நினைவூட்டியது. நாவலரைக் காணாதவர்கள் அவர் தோற்றத்தில் நாவலரைக் கண்டதுபோல் மகிழ்வுற்றனர். அவருடைய போதனை சாதனையாய் ஆயிற்று. மணிஐயர் என்றும் C. S. S. மணிபாகவதர் என்றும் முத்தமிழ்மணி என்றும் பெயர் பெற்று விளங்கியவர் நல்லைக் குருமணி யென தவக்கோலம் பூண்டு, காவியுடுத்தி, சந்நியாசியாய் குருபீடத்தில் கொலுவிருந்து அருளாட்சி புரிந்தார். நல்லை ஆதீனத்தில் அதிகாலையில் சுவாமிகள் செய்யும் ஞானப் பால் பூசையில் சிவஞானப்பால் எல்லோருக்கும் கிடைக்கும். நல்லூர் வீதியில் செய்யும் பஜனையில் ஜோதி தெரிந்தது. ஆதீனத்தில் நடக்கும் அரும் செயல்களால் உடல் வளர்கிறது; உண்மை திகழ்கிறது; உயிர் வளர்கிறது. அங்கே நடந்துவரும் மகேஸ்வர பூசையில் (அன்னதானம்) உண்டி கொடுத்தார் உயிர் கொடுத்தோர் என்ற தத்துவம் களிநடம் புரிகிறது. சுவாமிகள், கம்பராமாயணம், கந்தபுராணம், பெரிய புராணம், மகாபாரதம், திருவிளையாடற் புராணம் முதலிய இதிகாச புராணங்களை ஆதீனத்திலும், நல்லைக் கந்தன் ஆலய முன்றிலிலும், மற்றும் ஆலயங்களிலும் திரளான பக்த கோடிகள் திரண்டு செவிகுளிரக் கேட்க தனது கணீரென்ற குரலில் இசை வெள்ளம் பெருக இசைச் சொற்பொழி வாற்றி எல்லோரையும் தெய்வீக அருள் வாரிதியில் திளைக்க வைப்பார். அதுமட்டுமல்ல, இலவசமாக திருமுறை வகுப்புக்கள், பாலர் இசை வகுப்புக்கள் நடாத்தி நல்ல பயிரை வளர்க்கும் நல்லைக் குருமணி நல்லைக் கந்தன் மகோற்ஸவத்தில் ஒவ்வொரு வருடமும் தொடர் விரிவுரை செய்து நல்லைக் கந்தனின் திருவருள் நிரம்பப் பெற்றவர் ஆவர். அப்போது நல்லைக் குருமணியின் சீரிய சைவப்பணி சைவ, தமிழ் மக்களுக்கு நல்ல ஊக்கத்தையும், ஆக்கத்தையும், பரவசத்தையும் அளித்தது. நாவலர் பெருமான் நல்லூரில் பிறந்து வண்ணார் பண்ணையில் சமயப்பணி செய்தார். நல்லைக் குருமணி வண்ணார்பண்ணையில் பிறந்து நல்லூரில் சமயப் பணிபுரிந்தது குறிப்பிடத்தக்கது. இன்று ஆதீனம் அமைந்திருக்கும் இடம் புத்தூர் மழவராயர், சுவாமிகளுக்கு நன்கொடையாகக் கொடுத்துதவிய இடமாகும். இந்த இடத்தில் அழகுற ஆதீனத்தை நிர்மாணித்து கலா மண்டபமும் கட்டி, சைவத்தை மட்டும் வளர்க்காது கலை, கலாசாரம், பண்பு ஆகியவையும் மக்களுக்குத் தேவை என்று அச்சேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யையும் மேற்கொண்டார். தனக்குப் பின் தான் செய்யும் அறப்பணி தொடர ஒரு ஞானபரம்பரையை உருவாக்கும் பொருட்டு ஒரு வாரிசை உருவாக்க மறந்தாரில்லை. பல வருடங்களாக ஆதீனத்தில் தொண்டாற்றி நல்லைக் குருமணியின் உள்ளத்தைக் கவர்ந்தவரும், குருமணியின் குழந்தைபோல் வளர்ந்தவரும் மாணவருமாக அமைந்தவ ரும், ஒழுக்கம், பண்பு, பொறுமை மிக அமையப் பெற்றவருமான செல்வன் சுந்தர லிங்கம் எனும் திருநாமம் உடையவரை தேர்ந்தெடுத்து ''இளவரசு'' பட்டம் கட்டித் தம்பிரான் சுவாமிகளாக அமர்த்தினார்.

நாளும் நற்றமிழால், நல்லிசையால் பெருமான் புகழைப் பாடி சிவம் பெருக்கும் திருஞானசம்பந்தரின் திருப்பெயர் கொண்ட நல்லை ஆதீனம் மேன்மையுற்று எல்லோர்க்கும் பயன்தருவனவாய் இந்நாட்டுக்குப் பெருமை தருவதாய் அமைந்தது. ஓயாது இசைச் சொற்பொழிவாற்றி வரும் அவருக்கு வயது அறுபத்திமூன்று ஆனது. அவர் ''பீடாரோஹணம்'' அமர்ந்து பதினைந்து வருடங்கள் தாண்டி விட்டது. பீடாரோக ஹண விழா வருடாவருடம் ஆதினத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்று வந்தது. உடல் தளர்ந்தும் உள்ளம் தளராது என் கடன் நடைபெற்று வந்தது. உடல் தளர்ந்தும் உள்ளம் தளராது ''என்கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற அப்பர் வாக்குக் கமைய அருந்தொண்டாற்றி வந்தார். 1981 ஆம் ஆண்டு பங்குனித்திங்கள் திருவாதிரை நட்சத்திரம் கூடிய சுப தினத்தில் நல்லைக் குருமணியின் ஆத்மா உடலைவிட்டுப் பிரிந்து இறைவன் திருவடியை அடைந்தது. தமிழ், சைவ உலகிற்கு இது மாபெரும் துயரத்தையும், இழப்பையும் கொடுத்தது. நல்லைக் குருமணியின் சமாதி ஆதினத்தின் மேற்குப்புறத்தில் அமையப் பெற்று இன்று சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யம்பட்டு குருமூர்த்த ஆலயமாக அருள்பாலித்தவண்ணம் காட்சி கொடுக்கிறது. இன்று அவ்வாலயத்தில் மூன்று காலப் பூசையும் சைவாகம விதிப்படி நடைபெற்று வருகின்றது. நல்லைக் குருமணியின் குருபூசைத் தினத்தன்று சங்காபிஷேகமும், மகேஸ்வர பூசையும், இரண்டாவது குரு மகாசன்னிதானத்தின் அருளாணைப் படி சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

நல்லைக்குருமணி தனக்கு வாரிசாக கலைப்பணியை தொடர்ந்து செய்ய சீடர்களை உருவாக்க மறக்கவில்லை. சங்கீத கதாப்பிரசங்கக் கலை அழியாது தொடர்ந்து வளர தமிழ்மணி சு. கணேசசுந்தரனையும் அடியேனையும் உருவாக்கினார். அதன் வழியில் அடியேன் என்குருநாதராகிய நல்லைக் குருமணியின் அடிச்சுவட்டைப்பின் பற்றி தமிழுக்கும் சைவத்துக்கும் அத் தொண்டைச் செய்துவருகிறேன் என்றால் அது நான் முன்செய்த புண்ணியமும் என் குருநாதருடைய பூரண நல்லாசியுமேயாகும். இன்று ஆதீனபீடத்தை அலங்கரித்துக் கொலுவீற்றிருந்து ஆதீனப்பணியை திறம்பட செய்து வரும் இரண்டாவது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சார்ய சுவாமிகள் சிறப்பாக ஆதீனத்தை நிர்வகித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். இன்றும் நல்லைக்குருமணியை நினைவு கூரும் வகையில் நல்லை ஆதினம் எல்லோர் மனத்திலும் நீங்காத நினைவுச்சின்னமாய் அமைந்துவிட்டது. குருமூர்த்த ஆலயம், குருவருளும், திருவருளும் பொலிய சிவசிந்தையை உருவாக்குகின்றது. நல்லைக் குருமணியின் நல்லாசிகள் என்றும் யாவர்க்கும் கிடைக்க அவரின் பாதாரவிந்தங்களை என் சிரந்தாழ்த்தி வணங்கி அமைகிறேன்.

○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுக்கு அழகூட்டுவது

ஆடைகள்

ஆடைகளுக்கு அழகூட்டுபவர்கள்

நாம்

# சாரதா ஆடை அகம்

16, சிறப்பு அங்காடி
நவீன சந்தை ( உட்புறம் )

யாழ்ப்பாணம்.

---

★ கலை அழகு மிக்க

★ காலணிகளுக்கு

★ நாடுங்கள்

# நகர காலணி அகம்

140, சிறப்பு அங்காடி,
( நவீனசந்தைவெளிபுறம் )
கேணல் கிட்டு சாலை,

யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரன் பெற்ற பெருமை

த. சிவகுமாரன்

சைவ சமயத்தவர்களின் சமயம் சார்ந்த இலக்கியங்களாக பல அமைந்துள் ளன. அவற்றுள் வாழ்வையும் சமயத்தையும் இணைத்துக் கூறி பெருமை பெறுவனவற்றை பெரியார்கள் சிலாகித்து கூறியுள்ளார்கள். அவையாவன திருக்குறள் – வாழ்க்கைநூல், சிலப்பதிகாரம் – விதிநூல், சீவகசிந்தாமணி – இன்பநூல், ராமாயணம் – அன்பு நூல், மகாபாரதம் – அறநூல், பெரியபுராணம் – பக்திநூல், திருவிளையாடற் புராணம் – அருள்நூல், கந்தபுராணம் – சிவநூல்.

இவற்றுள் சைவசமயிகள் பெரிதும் போற்றுவனவும் சமயம்சார்ந்த கருத்துக் களை அதிகம் கொண்டு விளங்குவனவாக வும் அமைவன மூன்றாகும், கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் என்பவையே அவையாகும். வடமொழி பதினெண்புராணங்களில் சிவபுராணங்களில் ஒன்றாகவும், அளவில் அனைத்திலும் பெரிய தாகவும் அமைந்த ஸ்காந்த புராணமே தமிழில் கச்சியப்பரால் கந்தபுராணம் என அமைந்து சிறந்தது.

சைவ சித்தாந்தச் செழும் புதையல்கள் பலவற்றை தன்னகத்தே கொண்டு பல இனிய பாடல்களால் தத்துவ கருத்துக்க ளையும், வாழ்க்கை நெறிகளையும் நமக்கு காட்டுவது கச்சியப்பர் தந்த கந்தபுராண மாகும். அவரது கருத்துப்படி ''குமரேசன் வண்காதை'' என்பது கந்தபுராணத்தின் நாமமும் எனலாம். இத்தகைய உயர்ந்த நூலில் சிவனும் முருகனும் வேறல்லர், இரு வரும் ஒருவரே என்ற கருத்து பல இடங் களில் வற்புறுத்தப்படுகிறது. அதுமட்டு மன்றி ''கந்தன்'' என்ற பெயரோடு இப் புராணம் அமைகிறது எனில் அந்த நாமத் திற்குரிய விசேடமே தனி என்பதாகும்.

''சத்ரூன் ஷோஸய தீதி, ஸ்கந்த,,

– அமரகோசம் (வடமொழி நிகண்டு) என்ற படி கந்தன் எதிரிகளின் ஆற்றலை வற்றச் செய்பவனே தவிர அழிப்பவன் அல்ல என்பது பொருளாகும். ஏனெனில் சைவசித்தாந்தம்சுட்டுவதும் அதையேதான். ஆணவத்தை வலிகெடச் செய்யலாமே தவிர ஆணவத்தை முற்றாக அழித்துவிட இயலாது. சைவசித்தாந்தம் முப்பொருள் உண்மை கூறுவது பதியைப்போல், பசுவும், பாசமும் அழிவற்றவை. அந்த வகையில் சைவ சித்தாந்த கோட்பாட்டுக்கு எந்த மாறுபாடுமின்றி நிற்கும் உயர்புராணம் கந்தபுராணம் என்பது வெள்ளிடை மலை, கந்தபுராண கலாச்சாரம் மிகுந்த யாழ்ப் பாண மண்ணில் அதன் மையத்துறையும் நல்லூர் கந்தன் விழா மலராக இந்நூல் பொருத்தமாக வெளியிடுவதும் பாராட்டுக் குரியதே.

கந்தபுராணத்தில் சூரனை நாம் சம்பவ காண்டத்தின் இறுதியில் திருச்செந்தூரில் முருகன் தங்கியிருக்கும் போது வியாழ பகவான் வாயிலாக அறிகிறோம். அது தனியே அசுர காண்டம் எனக்குறிப்பிடப் பட்டாலும், கூர்ந்து நோக்குபவர்கள் சம் பவ காண்டத்தின் ஒரு பகுதியென உணர்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசிபருக்கும், மாயைக்கும் தோன்றும் மூன்று ஆண் பிள்ளைகளுள் மூத்தவன் சூரன், அவன்பின்னே சிங்கன், தாரகன் தோன்றுகிறார்கள். மூவரையும் மூன்று மலங்களாக குறிப்பிடுவர். சூரன் – ஆணவ மலம், சிங்கன் - கன்ம மலம், தாரகன் – மாயாமலம், முருகன் கைவேல் – ஞானசக்தி மலங்களை ஒடுக்குவது ஞானம் என்பதனை இவ்வாறாகவும் கந்தபுராணம் குறிப்பிடுகிறது.

கதையம்சத்துடன், வாழ்க்கை அமைப்புடனும் சூரன் வாழ்வை நோக்குபவர்களுக்கும் அங்கே எண்ணற்ற பயனுள்ள நெறிகளும், கொள்கை சிறப்புக்களும் காட்டப்படுகின்றன.

கந்தபுராணத்தில் சூரன் மூலம் நாம் அறிவது நன்றிமறந்த பாவம் ஒருவனை அழிக்கும் என்பதாகும். நாலாம் நாள் யுத்தம் தொடங்கப் போகின்ற விடியற் காலை நேரத்தில் அவனது மூன்றாவது புத்திரனாகிய இரணியன் தந்தையைப் பார்த்து

''ஒன்றொரு பயன்தனை உதவினோர் மனம்
கன்றிட ஒருவினை கருதிச் செய்வரேல்
புன்றொழில் அவர்க்கு முன் புரிந்த நன்றியே
கொன்றிடும் அல்லது கூற்றும் வேண்டுமோ?''

என்பதினால் அறியலாம்.

இதை சூரன் வீழ்ச்சியின் ஒரு படியாக கொண்டால், கந்தபுராணத்தை படிப்பவர்க்கு நூல் தரும் நம்பிக்கை எது என பார்க்கும்போது அற்புதமான ஒரு கருத்தை அங்கே காணலாம். வள்ளுவர் வாய்மொழிப்படி

''என்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு''

என்பார்.

ஆனால் கந்தபுராணத்தில் செய்நன்றி கொன்ற சூரனே ''வரம்பில் ஆற்றல் பெற்று உய்ந்தான்'' என்ற போது பாவம் செய்தவர்கள் கூட முருகன் கருணை பெற்றால் சூரன் பெருமை பெற்றது போல சிறக்கலாம் என்னும் நம்பிக்கை ஏற்பட வழி உண்டாகிறது.

''தீயவை புரிந்தாரேனும் முருகவேள் திருமுன் நின்றால்
தூயவராகி மேவுத் தொல்கதி பெறுவரன்றே
ஆயவும் வேண்டும் கொல்லோ அடுசமர் அன்னாள் செய்த
மாயையின் மகனுமன்றோ வரம்பில் ஆற்றல் பெற்றுய்ந்தான்''

என்ற பாடல் சூரன் பெற்ற பெருமையையும், எப்பாவம் செய்தவராயினும் மனந்திருந்தி முருகவேள் திருமுன் உற்றால்' வாழ்வு பெறுவர் எனவும் காட்டுகிறது.

சூரன் தொலையாது போர் செய்தான். தம்பியரை, புத்திரரை, உறவினரை, படைகளை இழந்து நின்றான். அப்படியும் அவன் ஆணவம் வலிகெடாது நின்றவனுக்கு முன்னே முருகன் திரும்பவும் தோன்றினார். போர்க்களத்தில் சூரன் பெற்ற பெருமையை என்னவென்பது.

முருகனை கண்களால் காணும் பாக்கியம் பெற்றான், அவர் வழங்கிய நல்லுணர்ச்சியை, ஞானத்தை சிலகணங்கள் பெற்றான். அதனால் அவன் நிலையில் எவ்வளவு மாற்றம், சக்கையாக இருந்த அவன் வாழ்வு சாறாகியது – அர்த்தமுள்ளதாகியது. மாலயன் தனக்கும் ஏனை வான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்க்கும் மூலகாரணப்பொருளை கண்களால் கண்ட பெருமையே பெரிது.

அந்த மூர்த்தியை எதிர்த்து போர் செய்த பெருமை இன்னும், முருகனை நினைக்கின்ற காலமெல்லாம், முருகனுக்கு விழா எடுக்கின்ற காலமெல்லாம் சூரன் நினைவும் கட்டாயம் ஏற்பட்டே ஆகுமன்றோ.

''நன்றிதோர் பெருமை பெற்றேன்
வீரனும் நானே யானேன்'' அவன்

கூற்றாகவும் இதை அறிகிறோம் அல்லவா!

ஐப்பசி ஷஷ்டி திதி அன்று போரில் தோற்றவன் சேவலும் மயிலுமாக முருகனை அழகு செய்து தாங்கத் தொடங்கினான். முருகன் உள்ளவரை, அவரைத் தாங்கும் மயிலாகவும், அணிசெய்யும் கொடியாகவும் சூரனும் விளங்குவானன்றோ. அது அவன் மேலநாள் செய்த தவமேயாகும்.

சூரன் மயிலாகவும், சேவலாகவும் ஆகுமுன் முறையே இந்திரனும், அக்கினியுமே அந்தப் பதவியை வகித்தனர். இந்திரன் பதவி கூட அழியக்கூடியது. ஆனால் முருகன் மயில் வாகனமாக தாங்கும் பெருமை இருக்கிறதே அது என்றும், அழிவற்றது. அத்தகைய பெருமையை சூரன் பெற்றானல்லவா? நாம் முருகனை வணங்கும்போது அவர் ஏறியிருக்கின்ற மயிலையும் சேர்த்தே வணங்குகிறோம். ''சேவலும் மயிலும் வாழ்க'' என்ற வாழ்த்தும் சூரனையே குறிக்கிறது என்றால், தீய சூரனும் தீமை அகன்று முருகனுடன் இணைந்ததால் வாழ்த்தும் பெருமையையும் வாழும் சிறப்பையும் பெற்றானெனில் சூரன் பெற்ற பெருமையை என்ன என்பது?

பலர் சூரன் இறந்துவிட்டான் எனகருதுவர். அது தவறு. அவன் வலிகெட்டு நிலை மாறினானே தவிர அழியாப் பெருவாழ்வு பெற்றான். இதனை போர் முடிந்த பின் தந்தை இறந்திருந்தால் நீர் கடன் செய்யலாம் என நினைத்து தான் ஒளித்திருந்த கடலுள் இருந்து வானத்தில் எழுந்து நின்று தன் எண்ணம் நிறைவேறாமல் – ஏனெனில் சூரன் அழியாமையால் – புலம்புகிற இரணியன் வாயால் அறியலாம்.

'ஆழியான் வேதன் அமரர்க்கிறை முதலோர்
வாழியாம் என வழுத்தியிட வைகியநீ
பூழியார் மேனிப் புராரிச்சிறுவன்தேரில்
கோழியாய் நின்று விலாவொடியக் கூவுதியோ?'

கோழிக் கொடியாகவும் சூரன் நிற்பதால் நீர்க்கடன் இயற்ற முடியவில்லை என இரணியன் ஏங்கினான். என்றாலும் இரணியன் பார்வையில் சூரனுக்கு சிறுமைபோல் தெரிந்தாலும் எம்மவர் பார்வையிலும், சித்தாந்த தத்துவ நெறியிலும் ''சூரன் பெற்ற பெருமை'' என்றே அதனைக் கொள்ளக் கிடக்கிறது.

''தீயவை புரிந்தாரேனும் முருகவேள் திருமுன் உற்றால்
தூயவராகி மேலைத் தொல்கதி பெறுவரன்றோ''

—கச்சியப்பர்.

○

*''பிறன் பொருள் கவர கையாளும் தீயவழிகளில் வாழ்வில் சூரியனை நோக்கி நிமிர்ந்துமிழ்நீர் உதிர்ப்பவன் முகத்திலேயே வீழ்வது போல வீழ்ச்சி தரும்''.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சைவ உணவின்

சுவை காண வாருங்கள்

★

# ஸ்ரீ தாமோதர விலாஸ்

239, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

○ அழகுக்கு அழகு

சேர்ப்பது எமது பணி

○ உங்கள் தேவைகளுக்கு

எம்மை நாடுங்கள்

★

# சாலினி அழகு அகம்

37, சிறப்பு அங்காடி, யாழ்ப்பாணம்.
( நவீன சந்தை உட்புறம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பி கை தொழுவோம்

ஆறு. திருமுருகன்

அருள் கொடுக்கும் தெய்வம் ஆறுமுகப் பெருமான். அண்டி வருபவர்களுக்கு அபயம் அளிப்பான். தனக்கு உவமை இல்லாதானாகத் தமிழ் தெய்வமாக விளங்குகின்ற முருகப் பெருமான் அருட்சிறப்பினை பல அனுபூதிச் செல்வர்கள் வியந்துள்ளனர். உலகம் உய்வதற்காய் உதித்த முருகனிடம் நம்பிக் கை தொழுதால் நல்வாழ்வு உண்டு என்பது முருகன் அடியார்கள் உணர்ந்த உண்மை. அத்தகைய முருகன் மேல் கொண்ட அன்பினாலும் நம்பிக்கையாலும் வணங்கி வீடுபேற்றை அடைகின்ற வாய்ப்பைப் பெறும் அடியவர்கள் தமிழ்ப்பெரும் மக்கள், அரிய பிறப்பான மானிடம் புனிதமடைவதற்கும் புகழோடு வாழ்வதற்கும் ஆத்மசுத்தி அவசியம். ஆத்ம சுத்தியினை நல்ல ஆத்மா பெற வேண்டுமாயின் பரமாத்மாவாகிய இறைவனிடத்திலே முழுமையாகப் பற்று வைத்து சரணடைய வேண்டும். இவ்வகையில் ஈழ நாட்டின் சிகரமாக விளங்குகின்ற யாழ்ப்பாணத்தில் நல்லருள் புரியும் நல்லூர் முருகன் நாமம் சொன்னாலே வாழ்வு நலம் பெறும் என்று நாலா திசைகளிலும் இருந்து அவன் திருவருள் காணத் தினம் தினம் அடியார்கள் அவன் நிழல்நோக்கி வருவார்கள்.

''நல்லூரைக் கும்பிட்டு நீபாடு
அதனாலே
நாட்டி உள்ள பிணிகளோடும்''

என்று தவத்திரு யோகர் சுவாமிகள் நற்சிந்தனைப்பாடல் மூலம் என்றோ சொல்லி வைத்தார். தேவாதி தேவர்கள் சூரபத்மனின் கொடுமை தாங்க முடியாமல் துன்புற்றபோது துன்புற்றவர்களை மீட்பதற்காக

''அருவமும் உருவுமாகி அநாதியாய்ப்
பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற ஜோதிப் பிளம்ப
தோர் மேனியாகக்
கருணை கூர் முகங்களாறும் கரங்கள்
பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்த
னன் உலகம் உய்ய''

வந்து தேவர்க்கு வாழ்வு கொடுத்து சொல்லொணாத் துன்பத்தில் அல்லல்பட்ட அடியவர்வினை அறுத்தவன் வேலவன்.

கார்த்திகைப் பெண்களின் தாலாட்டில் வளர்ந்த காங்கேயன் அவன் காத்திலுள்ள கருணை வேலைக் கை கூப்பித்தொழுதால் துதிக்கின்ற அடியவர்களுக்குத் துணையாக அத்திருவேல் அருள் வழி காட்டும்.

''துதிக்குமடியவர்க் கொருவர் கொடுக்க
இடர்
நினைக்கின் அவர்குலத்தை முதலறக்
களையும்
எனக்கோர் துணையாகவும்
தனித்துவழி நடக்குமெனத் திடத்து
மொரு
வலத்துமிரு புறத்துமரு கடுத்து இரவு
பகல் துணையதாகும்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அருணகிரிநாதர் வேலின் சிறப்பினை அழகாக எடுத்துக் கூறுகிறார். தமிழர்கள் காலங்காலமாக வெற்றிக்குரிய தெய்வமாக முருகப் பெருமானையே போற்றி வழிபட்டுள்ளார்கள். ஈழநாட்டு வரலாற்றிலும் நல்லை வேலவனை நாடாண்ட அரசனும் கை கூப்பித் தொழுது கந்தனுக்குக் கோயில் எழுப்பினான் என வரலாறுகள் கூறுகிறது. எம்மைச் சூழ்ந்த பொல்லாத வினைகளைப் பொசுக்கக்கூடிய வெற்றி வேலாயுதனை அனவரதமும் கும்பிட்டு ஆடிப்பாடிப் போற்றி வழிபடுகின்ற மரபு ஈழநாட்டில் நல்லையம்பதி முருகனுக்குப் பண்டு தொட்டு இன்றுவரை அடியார் கூடும் காட்சியினைக் காணலாம்.

பிறவிப் பெருங்கடலை நீந்துவதற்கு பேரின்பமாகிய வினையறுப்பான் திருவருள் வேண்டும். திருவாசகத்தில் மணிவாசகர்

''மீட்டிங்கு வந்து வினைப்பிறவி
சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டளிக்க
வல்லானே''

என்று பரம்பொருள் இடத்தில் கேட்பது போல பிறவித் துன்பத்தை வேல் கொண்டு வினை அறுக்கும் என்று அருணகிரியார் ''வினையோட விடுங்கதிர்வேல் மறவேன்'' என்றும் வினையறுக்கும் வேலவன் பற்றிக் கூறுகிறார்.

ஈழ நாட்டவர் வரலாற்றுப் பெருமை மிக்க நல்லை முருகன் மேல் நாள்தோறும் பக்திப்பரவசத்தோடு துதி செய்வார்கள். வருடாவருடம் இருபத்திஐந்து நாட்கள் முருகன் சந்நிதானத்தில் நடைபெறும் திருவிழாக் காணத் திரண்டு வருவார்கள். ஆடியும் பாடியும் அழுது அரற்றியும் ஆறுதல் தருகின்ற ஆறுமுகன் அருள் பெறக் காவடிகள் ஆடி அங்கப்பிரதிஷ்டை செய்து அடியழித்து கற்பூரச்சட்டி கொண்டு கந்தா முருகா என நாமங்கள் எழுப்பி நல்லை வேலவனிடம் சரணடைவார்கள். ''கருணைகூர் முகங்கள்'' கொண்ட கந்தவேள் பெருமான் மிகுந்த இரக்கம் கொண்டவர்.

தன்னை நம்பித் தொழுபவர்க்கு தாயாய் நின்று இன்னருள் புரியும் கந்தவேள் பெருமான் சூரபத்மனைக் கூட தூய நிலைக்கு ஆட்படுத்தியவன்.

தீயவை புரிந்தாரேனும் குமரவேள்
திருமுன்னுற்றால்
தூயவராகி மேலைத் தொல்கதியடை
வர்
ஆயவும் வேண்டும் கொல்லோ அடுசமர்
இந்நாட்செய்த
மாயையின் மகனும் அன்றோ வரம்
பிலா அருள்பெற்று உய்ந்தான்

என்று கந்தபுரணச் செய்யுள் கந்தனின் கருணைக்குச் சான்று பகிர்கிறது.

அறிவுத் தெய்வமாகவும், ஆற்றல் நிறைந்த தெய்வமாகவும், ஆளுமை நிறைந்த தெய்வமாகவும் விளங்குகின்ற முருகப்பெருமான் தந்தைக்கு உபதேசம் செய்தவன். அவனிடம் கரங்கூப்பி ஞான அறிவு பெற்றவர்கள் நக்கீரர். அருணகிரிநாதர், கச்சியப்பர் போன்ற பெரும்புலவர்கள் மட்டுமன்றி ஈழத்து நல்லறிஞர்கள் நாவலர் முதல் பலர் ஞானக்குமரனாகிய முருகனின் அறிவு ஞானம் பெற்று அவன் புகழைப் போற்றினார்கள்.

கலியுகவரதனாகிய நல்லூர் பெருமான் எமது நாட்டின் துன்பத்தைப் போக்கி விடிவையும் வெற்றியையும் தர வேண்டும். அவன் அருளாலே ஆகாதது ஒன்றுமில்லை நல்லை முருகன் தேரடியில் ஞான அருள் பெற்ற யோகர்சுவாமிகள் முக்காலமும் உணர்ந்தவர். நம் இனத்தின் எதிர்காலம் சபீட்சமாக அமைவதற்கு நல்லை முருகனையே கைகூப்பித் தொழுங்கள்! ஆறுமுகனைத் தொழுதால் அவலம் இல்லை; ஆறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல் உண்டு என்று பாடினார். இது மட்டுமன்றி எதிர் காலத்தில் எம்மண்ணில் நாம் படும் துன்பங்கள் என்ன என்ன என்பதை முருகன் பெயராலே முன்னமே சொல்லி வைத்தார். "பஞ்சம் வரும், செழிப்புக் குறையும். படைகள் நெருங்கி வரும், ஆனால் பக்தனே! நீ அஞ்சாதே நல்லூரான் உனக்குத் துணை செய்வான்" என்ற கருத்துப்பட யோகர்சுவாமிகள் கூறியுள்ளார்.

"நல்லூரான் திருவடியை நான் நினைத்த மாத்திரத்தில் எல்லாம் மறப்பேனடீ கிளியே; இரவு பகல் காணேனடி. ஆன்மா அழியாதென்று அன்றெனக்குச் சொன்னமொழி நான்மறந்து போவேனோடி கிளியே; நல்லூரான் தஞ்சமடி. பஞ்சம், படை வந்தாலென்ன, பாரெல்லாம் வெந்தாலென்ன அஞ்சுவோமோ நாமடி ஆறுமுகம் தஞ்சமடி" என்று என்றைக்கோ எம்மை அஞ்சாதே, நல்லை முருகனைத் தஞ்சமாய்க் கொள் எனச் சுவாமிகள் நிறைவாகக் கூறியுள்ளார்கள். இது மட்டுமன்றி நல்லூர் முருகனின் நல்லருளை நமக்குப் பக்கபலமாக பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"நல்லூர்ப் பெருமானை நாடித்
தொழுவோருக்கு
கல்லூரும் வேலோன் தன் கையைக்
கொடுதாங்கும்
வல்லூ ரவரெமை வாட்டி வதைத்
தாலும்
தொல்லூர் வடிவேலன் தோள்வலி
வெல்லுமே"

அபயம் என்று வந்தவர்க்கு ஆறுதல் தரும் ஆறுமுகப் பெருமானை நம்பி வழிபடுவோர் என்றும் நலிவுறார், திக்கற்று, திசையற்று வீடிழந்து, உறவிழந்து உரிமையின்றித் துடிக்கும் ஈழத்தமிழினத்தை இன்று நீயே முருகா காப்பற்ற வேண்டும் என நல்லூர் முருகன் இணைமணி மாலை என்ற பாமாலை நூலை இயற்றிய கவிஞர் வை. கா. சிற்றம்பலம் தனது பாடலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"நாயகமே நல்லூரா நம்பினோர்
நற்றுணைவா
தாயெனவே வந்துதவுந் தற்பரனே-
சேயே நாம்
இன்று படுந்துயர மென்றுமே பட்ட
தில்லை
என்றுதான் தீர்ப்பாய் இது"

என்று அழகாகக் கூறுகிறார். மேலும் எமது வாழ்வை நல்வழிப்படுத்தி நற்கதி அடைவதற்கும் நல்லை முருகனை நாடிடு என்று கவிஞர்

"புண்ணியஞ் செய்யவும் பாவங்கள்
தேயவும்
எண்ணிய வெண்ணியாங் கெய்தவும்
-கண்ணுதலான்
பெற்ற முருகனடி பேணிடவும் பேறளிக்கு
நற்றவர் வாழ் நல்லூரை நாடு"

என்று குறிப்பிடுகிறார்.

மீளா அடியவராய் இமைப்பொழுதும் மறவாது இரு கரங் கூப்பி நல்லை முருகனை நெஞ்சினால் துதிப்பார்க்கு நிம்மதி கெடாது என்பது நிஜம். எல்லோரது அல்லலையும் அறுத்து ஆனந்தம் ஆக்குகின்ற வள்ளி மணாளனை இம் மண்ணில் நாம் நல்ல வண்ணம் வாழ என்றும் போற்றுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளைய நாகரீகத்தின்

இன்றைய தேவைகள்

இறக்குமதி செய்யப்பட்ட ஆடைகள்

றெடிமேட் வகைகள்

அனைத்துக்கும் தனித்துவம் பெற்ற

ஜவுளி மாளிகை

# கோபிராஜ் ஆடை அகம்

4, சிறப்பு அங்காடி (உட்புறம்) யாழ்ப்பாணம்.

---

உங்களின் ஜவுளித் தேவைகளை

நிறைவு செய்வதே

எம் பணி

அனைத்து வகை ஆடைகளுக்கும்

எம்மை நாடுங்கள்.

# சிற்றி ரெக்ஸ்

40, நவீன சந்தை யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானவழி நின்ற நல்ல குருநாதன்

நல்லையா விஜயசுந்தரம்
யாழ். பல்கலைக் கழக மாணவன்

சிவபூமி என்று திருமூலரால் போற்றப்பட்டது ஈழத்திருநாடு. ஈழத்தில் சைவமும் தமிழும் தழைத்தோங்கியதை இவ் வாசகம் புலப்படுத்துகின்றது. தமிழும் சைவமும் மலரும் மணமும் போன்று விளங்கிற்று. மணம் இல்லாத மலரில் மகிழ்வில்லாதது போன்று சைவம் இல்லாத் தமிழில் மகிழ்வு ஏது!

''என்னை நன்றாக இறைவன்
படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யு
மாறே''

என்பார் திருமூலர். சைவமும் தமிழும் ஒன்றென்பது இதிலிருந்து தெளிவாகின்றது. அந்நிய நாட்டவர் வருகை சைவத்தின் பண்பாட்டுக் கோலங்களைப் பாதித்தது. இதன் காரணமாகத் தமிழ் என்றால் சைவம் என்ற நிலை சற்று பாதை மாறியது. வேற்று நாட்டுக் கலாசாரங்கள், தமிழ்க் கலாசாரத்தோடு புகுந்தது. சைவத்தின் மகிமை மங்கிவிடுமோ என்ற அச்ச உணர்வு அன்று ஏற்பட்டது. அந்நிலை ஏற்பட்டபோது சைவத்தைக் காப்பாற்ற முனைந்தவர்களில் ஈழத்துச் சித்தர்களின் பங்களிப்பு அளப்பரியது. இவர்களில் யோக சுவாமிகள் குறிப்பிடத்தக்கவர் - பற்றறுத்துப் பரமன் பதம் அடைந்தவர் அவர்.

தீயவனுக்கு நல்லவனை இனங்காண்பது கடினம். சித்தர்களைப் பித்தர்களென்று நினைக்கின்றோம் - அழைக்கின்றோம். உண்மையில் பித்தர்களாகிய எமக்குச் சித்தர்கள் பித்தர்களாகத் தெரிகிறார்கள். யோகர் சுவாமிகளின் காலத்தில் வாழ்ந்தவர்களில் ஒரு சிலரே அவரின் ஞானத் தெளிவை உணர்ந்தனர், அதனால் அவர்களும் ஞானவாழ்வை அடைந்தனர்.

''ஓராதார் உள்ளத்தில்
ஒளிக்கும் ஒளியானே''

என்று மணிவாசகர் திருவாசகத்தில் கூறியுள்ளார். ஞானிகளின் உள்ளத்தில் பிரகாசிக்கும் இறைவனை, அஞ்ஞானமென்னும் இருளால் சூழப்பட்டவர்கள் அறிய முடியாது. யோகசுவாமிகளின் தெய்வீக ஞான ஒளியை அறிய முடியாதவர்கள் அன்றும் இருந்தார்கள் - இன்றும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

ஈழத்துச் சித்தர்களில் ஒருவராக விளங்கியவர் கடையிற்சுவாமிகள். இவரின் சீடனாக இருந்தவர் தேரடித் தேசிகன் செல்லப்பா சுவாமிகள். ஒருவனுக்கு ஞானம் கிடைக்குங் காலத்தில் நல்ல குருநாதன் கிடைப்பான், யோகசுவாமிகளின் உட்கிடை ஞான ஒளியை வெளிக்கொணரக் குருவாகக் கிடைத்தவர் செல்லப்பாசுவாமிகள்.

அகச்சந்தானம், புறச்சந்தானம் இரண்டிலும் நாம் காணக்கூடிய மேலான பண்பு குருபக்தி, உலகத்திலே குருபக்தி எம்மை உய்யவைக்கும் என்பதை இந்த ஞான

பரம்பரையினர் எமக்குக் காட்டி நின்றனர். யோகர்சுவாமிகளும் தனது குருநாதனாகிய செல்லப்பாசுவாமிகள் மீது வைத்த குருபக்தியே அவரின் ஞான ஒளியைப் பிரகாசிக்க வைத்தது.

"ஆசானைக் கண்டேன் அருந்தவர் வாழ் நல்லூரிற்
பேசாதனவெல்லாம் பேசினான் – கூசாமல்
நின்றேன் நீ யாரடா வென்றே யதட்டினான்
அன்றே யான் பெற்றேனருள்"

தன் குருநாதனைக் கண்ட மாத்திரத்திலே தான் பெற்ற பேரருளை எண்ணி எண்ணி மகிழ்வதை இப்பாடல் எமக்குக் காட்டி நிற்கின்றது. குருவுக்கும் சீடனுக்கும் உள்ள தொடர்பு காந்தத்திற்கும் இரும்புக்கும் உள்ள தொடர்பு போன்றது. ஈர்க்கும் தன்மை இருவருள்ளும் இருப்பதைக் காணுகிறோம்.

தன் குருநாதனைப் பற்றிக் கூறுகின்ற யோகசுவாமிகள் இன்னொரு பாடலிலே

"பொறி வழியே போய்ப் புகுந்து புலம்பித் திரிவேனை
நெறிவழியே நிறுத்தி நீயே நானென்றுரைத்த
பெரியவனைப் பித்தனெனப் பிறர் பேசும் பெருமானைச்
செறிபொழில்சூழ் நல்லைநகர்த் தேரடியில் கண்டேனே"

என்று தன் குருநாதன் புகழ்பாடிக் கசிந்துருகும் நிலை கல்மனதினையும் கசிய வைக்கும். நாம் பொறிவழியே செல்லாது எம்மை ஒரு நிலைப்படுத்த வேண்டுமானால் குரு அருள் வேண்டும். அதனால்தான்

"குருவாய் வருவாய் அருள்வாய் குகனே"

என்று முருகப்பெருமானைக் குருவாக அழைத்தனர் நம் ஞானிகள். இன்று நாம் பொறிவழியே சென்று புலம்பித்திரிவதற்கும் குருபக்தி குன்றிப்போனது முக்கிய காரணமாகும்.

ஞானிகள் பார்வையினாலே நயன தீக்கை மூலம் பிறரை ஆட்கொண்டார்கள். அஞ்ஞானிகள் வாயினாலே பிறரைப் பகைத்துக் கொண்டனர். இந்த உலகில் ஏற்பட்ட பிரச்சனைகளுக்கெல்லாம் காரணமாக இருந்தது. நாக்கு நாவடக்கம் இல்லாததனால் எத்தனையோ குடும்பங்கள் பிரிந்து போயிற்று – மகிழ்வின்றித் துன்பத்தில் மூழ்கிற்று. இதனையே வள்ளுவனும்

"யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

என்றார். இந்த வையகத்தில் எந்த அறத்தை நாம்காப்பாற்றாவிடினும், நாவடக்கம் என்றமேலான அறத்தை நாம் காப்பாற்ற வேண்டும். இல்லாவிடில் அதனால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும். இதனை வள்ளுவன் இன்னொரு இடத்தில்

"தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்டவடு"

என்றார், உள்ளத்தில் ஏற்பட்டவடுவை மாற்ற மருந்தில்லை. இதனை யோகர் சுவாமிகள் "பேசாதிருத்தல்" மூலம் இப் பேருலகிற்கு மிகத் தெளிவாகக் காட்டியிருக்கிறார். "பேசாதிருந்தால் பிழையொன்றுமில்லை" என்ற சுவாமிகளின் கூற்று அனுபவத்தில் எவ்வளவு உண்மையென்பதை நாம் உணர்ந்துள்ளோம்.

ஆசையினால் அல்லலபடும் உலகம் இது. மண், பொன், பொருள் என்று எல்லாவற்றிலும் ஆசை. நிலையில்லாத பொருளை நிலை என்று எண்ணுகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசையின் உச்சம் அப்படி நிலைக்கவைக் கின்றது.

''ஆசை அறுமின் ஆசை அறுமின்
ஈசனோடாயினும் ஆசை அறுமின்''

என்றார் திருமூலர். இறைவனோடாயினும் ஆசைவையாதே என்பது இதில் தெளிவா கிறது. ஆசையும் அன்பும் பக்தியும் வேறு வேறு. ஆசை அழிவைத்தரும். அன்பும் பக்தியும் பேரின்பத்தை தரும். ஆண்டவன் மீதும் உயிர்கள் மீதும் நாம் அன்புவைக்க வேண்டும். அன்பே சிவம் என்பதை உணர வேண்டும் – உணர்த்த வேண்டும். இந் நிலையை தன்னின்று உணர்த்தியவர் யோகர் சுவாமிகள்.

''காயம் அழிந்து விடும்
காண்பனவும் ஒழிந்து விடும்
மாயமான வாழ்வை விட்டுக்–கிளியே
மலரடியைப் பணிவோமே''

என்பதன் மூலம் புறப்பற்றுதல்களை நீக்கி ஆன்ம ஈடேற்றத்திற்கு அருள் நெறி காட்டியவர், யோகர் சுவாமிகள். ஞானத் தின் திருவுருவாக இந்நாட்டில் அவதரித் தவர். அவரின் ஞானத்தால் ஈழத்திருநாடு புனிதம் பெற்றது. நாம் உய்யும் வழிகாட் டிய அந்த ஞானியின் திருவடியை வணங் குவோம் – போற்றித் துதிப்போம்.

''பொறிவழி போயலையாத புண்ணி
யர்க்கு மங்களம்
நெறி வழியே செல்லுகின்ற நிருபருக்கு
மங்களம்''

○

## முடியாது – முடியவே முடியாது

- ★ சிக்கனத்தைக் கடைப்பிடிக்காமல் சுபீட்சத்தைக் கொணர முடியாது.
- ★ சக்திமிக்கோரைப் பலவீனப்படுத்துவதன் மூலம் பலவீனர்களை சக்தி மிக்கோராக்க முடியாது
- ★ சம்பளம் கொடுப்பவரை முடமாக்குவதன் மூலம் சம்பளம் வாங்குபவருக்கு உதவமுடியாது.
- ★ பணக்காரரை அழிப்பதன்மூலம் ஏழைகளுக்கு உதவமுடியாது.
- ★ கடன்வாங்கிய பணத்தைக் கொண்டு பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பெறமுடியாது.
- ★ வருவாய்க்கு அதிகமாக செலவு செய்தால் சங்கடமான பின் விளைவுக ளிலிருந்து தப்பமுடியாது,
- ★ தனிமனிதனின் சுதந்திரத்தைப் பறிப்பதன் மூலம் நன்னடத்தையையும் தைரி யத்தையும் வளர்க்க முடியாது.

— ஆப்ரஹாம் இலிங்கன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொமர்ஷல் வங்கி சேமிப்பு சான்றிதழ்கள்
# COMBANK SAVINGS CERTIFICATES

## கொமர்ஷல் வங்கி சேமிப்பு சான்றிதழ் உறுதி செய்வது

- வைப்பிலிடும்போதே வளமான வட்டி
- கவர்ச்சிகரமான வட்டி வீதங்கள்
- வட்டிமீதான பிடிப்பு வரிவிலக்கு (NO WITH HOLDING TAX)
- முத்திரைத் தீர்வு விலக்கு (NO STAMP DUTY)
- கடன்பெற இலகுவான பிணை உறுதி
- நியமிக்கும் மறு உரித்தாளருக்கு பணம்

இச் சான்றிதழ்களில் முதலிட விரும்புபவர்கள் தமது அடையாள அட்டையை அல்லது கடவுச் சீட்டைக் கொண்டுவரவும்.

"சிறுதுளி பெரு வெள்ளம்"

சான்றிதழுக்கான அட்டவணை:

| நீங்கள் கொடுப்பது | | | நீங்கள் பெறுவது |
|---|---|---|---|
| 6 மாதங்கள் | 12 மாதங்கள் | 24 மாதங்கள் | |
| **14.5 %** | **15.5 %** | **16.5 %** | முதிர்ச்சியில் |
| ரூபா 465/- | ரூபா 433/- | ரூபா 375/- | ரூபா 500 - |
| ரூபா 93/- | ரூபா 865/- | ரூபா 750/- | ரூபா 1000/- |
| ரூபா 4662/- | ரூபா 4330/- | ரூபா 3760/- | ரூபா 5000/- |
| ரூபா 9325/- | ரூபா 8659/- | ரூபா 7519/- | ரூபா 10000/- |
| ரூபா 23310/- | ரூபா 21645/- | ரூபா 18797/- | ரூபா 25000,- |

வாருங்கள்! இணையுங்கள்!! வளருங்கள்!!

" உங்கள் வெற்றி எங்கள் பலம் "

# கொமர்ஷல் வங்கி

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீசாயோ வேலை நீ

மானிப்பாயூர் வே. த. இரத்தினசிங்கம்
(பிரதம இலிகிதர் (நீ. வே. ப.
யாழ். மாநகர சபை.)

## விநாயகர் துதி

முருகனை மணம்புரிய முரண்பட்ட வள்ளிதன்னை
கரிஉரு காட்டி கனியவைத்த கணபதியே!
கருதரிய ஞானவேல் கரத்தேந்தி எமைக்காக்க
வருதிரு முருகன்துதி பாடிடத் துணைநிற்பாயே.

## "முருகா – வீசாயோ வேலை நீ"

அன்றமரர் துயர்கண்டு அசுரர் கோனை
வென்றும்பர் மனங்குளிர வைத்த வேலா
இன்றெமர் படுந்துயரம் இன்னும் புரியலையோ
குன்றேறி நின்று வீசாயோ வேலைநீ.

வெல்லரிய வேலேந்தி மயிலேறி நின்று
வல்லசுர சேனையை வதைத்த வடிவேலா
அல்லலுறு நந்தமிழர் இன்னலது போக
நல்லைநகர் மேவிநின்று வீசாயோ வேலைநீ.

விண்ணதிர ஓடிவரும் வீணர்களின் வானூர்த்தி
மண்ணதிர வீசுகின்ற மாரியாம் குண்டுகள்
பண்ணுகின்ற அனர்த்தத்தை பார்த்திருப்ப தேன்முருகா
வண்ணமயில் ஏறிநின்று வீசாயோ வேலைநீ.

வெல்லரிய வீரமிகு விண்ணர்களாம் தமிழர்க்கு
சொல்லரிய தடைகளொடு படைகளும் நீங்கித்தொல்
நல்லைநகர் தலைநகராய் நமதாட்சி ஓங்கவென
வல்லவடி வேலா வீசாயோ வேலைநீ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடுமயில் ஏறிநின்று அமரர்படை சூழவிளை
யாடிவரு கின்ற வேல்முருகா உன்பாதம்
நாடிவரு கின்ற அன்பர்நலம் காக்கவரைக்
கூடிவரும் வினைதேய வீசாயோ வேலைநீ.

ஆடித்திங்கள் வளர்சஷ்டித் திருநாளில் கூவுஞ்சேவற்
கொடியேந்தி குமராநீ வருமழகு காணஇங்கு
கூடிநிற்கும் தமிழ்மக்கள் ஈழத்தாகம் தீரவெற்றிக்
கொடியேறும் நாட்காண வீசாயோ வேலைநீ.

சித்துமிகு யோகரும் சிறந்தகுரு செல்லப்பரும்
பக்திமிகு சடையம்மாவும் அருள்பெற்ற நல்லூரில்
நித்தமுனை நினைந்து நிற்போர் இருளகன்று
சித்தந் தெளிவுபெற வீசாயோ வேலைநீ.

நடந்தார் வினைதீர்க்கும் நல்லூரான் வீதியிற்றேர்
வடந்தொட்டு வினைதீர்க்க வந்தடையும் ஆடவரும் — தேர்த்
தடம்பட்ட அடிஅழைந்து துதிபாடும் அரிவையரும்
விடிவுபெறும் நெறிதுலங்க வீசாயோ வேலைநீ.

முருகாநீ குடிகொண்ட கதிர்காம மலையின்று
கருதுவோர்க் கெட்டாத காடாகி விட்டதுகண்
டுருகிஅழும் எங்கள்குரல் எட்டலையோ நின்செவிக்கு
பெருகிவரும் பகையகல வீசாயோ வேலைநீ.

முருகாமா முகம்விட்ட மாவிட்ட புரமின்று
நெருங்க முடியாது மாற்றார் குடிகொண்
டிருக்க நிலமின்றி ஏங்கிநிற்போர் இடர்களைய
திருக்கரந் தூக்கி வீசாயோ வேலைநீ.

கந்தன் துதிபாடி கனிந்துருகி நின்றார்க்கு
சிந்தை தெளிந்து மெய்ஞான ஒளிபெருகும்
முந்தை வினைகள் முனைப்பின்றி நீங்கிவிடும்
எந்தை அருள்நோக்கில் எல்லாங் கைகூடிடுமே.

தவம்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு.  — திருக்குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகா கும்பாபிஷேகம் – சில விளக்கங்கள்

''ஆடியபாதன்''

அனாதியான – ஆரம்பகாலம் நிர்ணயிக்க முடியாத மிகப் பழமைவாய்ந்த மதம் சைவம். சாசுவதமான சமயம் எனப் பொருள்பட ''சனாதன தர்மம்'' என்றும் வேதங்களின் மதம் என்னும் பொருள்பட ''வைதீகதர்மம்'' என்றும் இம்மதத்தைப் பாராட்டிக் கூறுகின்றனர். மனித பகுத்தறிவுக்கு பரிபூரண சுதந்தரத்தைக் கொடுத்து, நம்பிக்கை - வழிபாட்டு முறைகளில் எல்லோருக்கும் விரிவான சுதந்தரத்தைக் கொடுத்தும் பல்வேறு வகைகளுக்கும் இடமளிக்கும் சமயாசார சடங்குகளுக்கு - பழக்கவழக்க நடவடிக்கைகளுக்கு அனுமதித்து – சமாதானரீதியில் பண்டுதொட்டு எந்நாட்டவர்க்கும் இறையருள் பொலிகவென உலகெலாம் பரந்து, ஒரே உண்மையை பலரும் பலவாறாக தெரிவிக்கின்றனர் என்னும் பொருள்விளங்க – ''ஏகம் ஸத் விப்ரா பஹுதாவதந்தி'' எனரிக்வேதம் கூறும் உண்மையை உணர்த்தி, பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் பகவத்கீதையில் கூறுவது போன்று, ''என்னை எப்படி மக்கள் அணுகினாலும் நான் அவர்களை வரவேற்கிறேன். ஏன்? பலதிசைகளிலிருந்தும் வரும் பாதைகள் யாவும் என்னுடையவையேயாகும்'' என்பதை தெளிவாக்கி அன்றும் இன்றும் என்றுமே வாழும் சைவம் விதந்துரைத்து வழிகாட்டி நிற்கின்றது. பதியொருவன் உண்டு. எல்லாப்பொருள்களும் அவனே. ஆனால், அவை ஒன்றும் அல்ல. எங்கள் வாக்குக்கும், மனத்துக்கும், நினைப்புக்கும் எட்டாத பெரும் பொருள் அவன். அறிவுக்கும் எட்டாத அவன் தன் கருணையால் எல்லாம் காட்டுகிறான். அமுது ஊறஊற அதை நீ கண்டுகொண்டு அனுபவி என்று காட்டுகின்றான் – பக்திநெறியைக் கடைப்பிடித்து அடியவர் தூய்மையாக பசுபாசம் அற்று, சித்தமலம் அற்றுச் சிவமாகும்படி அவன் ஆட்கொள்ளுகின்றான் – எல்லா மெய்ப் பொருளும் வேதமுதற் பொருளும் செம்பொருளும் சிவமே என்பது உறுதியானது. ''குறியொன்றுமில்லாக் கூத்தனை'' தாம் கண்டுபிடித்து அனுபவித்ததைக் கூறுமிடத்து, மணிவாசகப்பெருமான் தம்மணிவாக்கால், – ''இருளிடத்தும் உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்'' என்றோதும் எம்பெருமானுக்கு புனராவர்த்தன குடமுழுக்காட்டுகின்றோமென நாம் நினைக்கின்றோம். ஆட்டுவிப்போன் ஆட்ட, முதல் நாட்டிய மன்னன் ஆட்ட, நாமெல்லோரும் ஆடுகின்றோமென்பதை மறந்து, நாம் அவனுக்கொரு பெரு முழுக்காட்டுவதாக இறும்பூதெய்துகின்றோம். அவனுக்கென ஓர் ஆலயம் அமைத்து, ஆலயம் என்பதன் பொருளே புரியாது அகங்காரம் கொள்ளுகின்றோம். ஆலயம் என்றால் என்ன? ஆண்டொன்றுக் கொருபாட்டாக மூவாயிரம் பாட்டுக்களைப் பாடிவைத்து, அப்பெருமகன் வாழ்ந்தகாலந் தெரியாது – தெரிந்துகொள்ளவும் முயற்சியாது வாழும் நாம் அவர் கூறிவைத்துள்ள ''இறைவன் வாழ்கின்றான் என்று இந்த ஊன் உடம்பை வளர்க்கின்றேன்'' என்பதை மறந்து வாழ்கின்றோம். சுற்றிலும் உள்ளவைகளை லயிக்கவைக்கும் – இணையவைக்கும் இடமெதுவோ அதுவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயமென முன்னோர் அடிச்சுவட்டில் வாழும் எமக்கு விதந்துரைக்கப் பட்டுள்ளது.

"ஆஸமந்தாத் லயந்தே அஸ்மின் இதிஆலய:"

பசுக்களாய மக்களை – உயிரினங்களை லயிக்கவைக்கும் ஆலயம் இப்படியேகட்டினாற் போதுமா?

மனிதவாழ்வுக்கு – அன்றாடாம் வாழ்க்கையை அமைதியாக நெறியுடன் நடாத்துதற்கு பல்வேறுவழிவகை முறைகளை தருவனவே வேதங்கள். அமைதியான வாழ்க்கை விதிமுறைகள் மட்டுமன்றி, பிறந்தமனிதன் அத்தருணத்திலிருந்து தன்மறைவு – தன் இறுதிமூச்சுவரை தமக்கு நன்மைதரும் வழிகளை வகுத்துக் கூறுவது வேதங்கள் என்பதை செயல்முறையில் உணர்ந்துள்ளான். தர்மம் என்ற சொல்லுக்கே – சத்தியம் என்ற உறுதிக்கேயுரிய அர்த்தங்களை எடுத்தாண்டு மக்களை வழி நடத்துவதுதான் வேதங்கள், காலநேரவரம்பு விதிகள் கட்டுப்பாடுகள் இன்றி வாழ்வதற்கு ஏற்ற நல்லுரைகளை நவில்வதுதான் வேதங்கள். இந்தவேதங்களை உள்ளவாறு பொருளுணர்ந்து – ஏதோபுரியாத விடயமென்று ஒதுக்கிவிடாது, வாழ்வில் எல்லோரும் கடைப்பிடித்து நடக்கவழிகாட்டி உதவுவன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். தனித்துவாழாது – ஒருவருடன் ஒருவர் சேர்ந்து – ஒருவருடைய உள்ளத்தோடு நாமும் இணைந்து எல்லோருமாக – உலகத்து அனைத்து சீவராசிகளும் சுகத்துடன்– நாடுநலத்துடன் வளம்பெற்று நாமும் சுகமாக வளத்துடன் வாழ வழிகாட்டுவது தான் வேதமென்பதை உணர வேண்டும். இந்த உணர்வுகளை எமக்கு ஊட்டுவதுதான் ஆலயம்.

ஆலயத்தை அமைத்து கட்டுதற்கும் மூர்த்தியை பிரதிட்டை செய்தற்கும் செய்த பின்பும் காலத்துக்குக்காலம் புனராவர்த்தன வேலைகளைகையாண்டு செய்தற்கும் சடங்குகளை முறைப்படி ஆற்றி ஆண்டிருந்து அருள்பாலிக்கும் மூர்த்தி சேவார்த்திகளுக்கு ஆற்றலையூட்டி நடக்கும் முறைகளை எம் முன்னோர் பல்லாயிரமாண்டுகளுக்கு முன்பிருந்தே வாய்வழியாக ஒருவர்க் கொருவர் வழிவழியாக போதித்தும் பிற்காலத்தில் நூல்களாக வடித்தும் உதவியவைகளை வேதங்கள் என நாம் போற்றிப் பேணுகின்றோம். மூர்த்திகளுக்கு ஆற்றலை யூட்டும் சக்தியை, வேதோக்தமான மந்திரச் சடங்குகளைக் கும்பாபிடேகங்கள் என்ற நிலைமையில் நாம் காலத்துக்குக் காலம் வேதங்கள் கூறும் விதிப்படி ஆற்றி வருகின்றோம்.

ஊருக்குள்ளே அழகுற ஆலயங்களை அமைக்கின்றோம். அவற்றுக்கு வானளாவிய கோபுரங்களை எழுப்புகின்றோம். நேரத்துக்கு நேரம் இந்த இடங்களில் இறைவன் இருக்கின்றான் என்பதை மக்களுக்குணர்த்த பெரிய கண்டாமணிகளை ஆலயங்களில் அமைத்து, அந்த மணிகளை ஒலிக்கச் செய்து, அந்த மணியோசை கேட்ட மாத்திரத்தே மக்கள் மனங்களில் இறை உணர்வை நிறைத்து உணர்வலைகள் எழும்பி வாழும் வழி வாழ உதவுவதே வேதங்கள் தரும் – தந்தவழிகளாகும். இத்தகைத்தாய ஆலயங்களில் மூர்த்திகரம் பெருக, பன்னிரண்டாண்டுக் கொருமுறை– இயலாத காலத்து முப்பதாண்டுக் கொருமுறை குடமுழுக்காற்றி, வேதோக்தமான மங்களகரத்தை ஊட்ட வேண்டுமென்பது ஆகமங்கள் காட்டும் வழியாகும். விக்கிரகப்பிரதிட்டை, குடமுழுக்கு ஆகியவற்றை விரிவாக விளக்கும் ஆகமங்கள் – இரட்சாபந்தனம், கும்பபூசை, கும்பத் தாபனம், அட்டபந்தனம் போன்ற நான்கு கிரியைகளையும் முக்கியமானவைகளாகக் குறிப்பிடுகின்றன. விக்கிரகங்கள் தங்கள் பீடங்களில் நிலைபெற்று ஸ்திரமாக இருக்க – கொம்பரக்கு, சாதிலிங்கம், தேன்மெழுகு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்காலியா தியாம் எட்டுப் பொருள்களை மரவுரலிலிட்டு, வெண்ணெய் விட்டு மாவாக இடித்து, கருவறைப் பீடத்தில் சிலையைப் பிரதிட்டை செய்து அப்பிமெழுகுவார்கள். முறைப்படியாகசாலை அமைத்து சகலவித உபசாரங்களுடன் புண்ணிய தீர்த்தங்கள டங்கிய கும்பங்களை (கலசங்களை) யாக சாலையில் பிரதிட்டை செய்து பூசித்து, ஹோமம் செய்து, முப்பத்தாறு தத்து வங்களை அடக்கியதான யாகசாலை வைபவங்கள் ஆற்றப்படும். இந்தத்தத்துவங் கள் நிறைந்த கிரியைகளை காமிகம், கார ணம் என்னும் ஆகமங்கள். அக்கினிபுரா ணம், அதர்வணவேதம், (ஸ்தாபத்திய சாஸ் திரவேதம்), பிரதிமாலட்சணம், கார்ணா கம தந்திரம். வைகானச ஆகமம், சிவா கமம், பாஞ்சராத்திர ஆகமம், தந்திரசாஸ் திரங்கள் போன்றவைகள் – ஆலய அமைப் புகள், விக்கிரக பிரதிட்டைகள், குடமு ழுக்கு முறைகள், தத்துவங்கள் யாவை யும் விரிவாகக் கூறுகின்றன. பக்த கோடி களின் அறிவு நிறைவுக்காக எம்மால் இயன்றளவு நூல்கள் கூறும் விளக்கங்கள்– பெரியோர் முன்பு எடுத்தாண்ட விளக் கங்களை சுருக்கமாக மேலேதந்து, இன் னும் ''அவனருளாலே அவன்தாள் வணங்கி'' மேலும் சில விபரங்களை – எங் கள் பெருமானின் குடமுழுக்கு வைபவங்க ளுக்கு முன்னுள்ள விபரங்களையும் பொறிக் கின்றேன். குற்றங்களைந்து குணங்கொள் ளுமாறு அப்பெருமான் கழல் பணிந்து பக் தர்களை வேண்டுகின்றேன்.

அகண்டாகாரமாக எங்கும் நிறைந்து– எப்பொழுதும் எங்கும் பரந்து, உருவ மின்றி அண்டபிண்டத்திலும் மக்கள் குலம் மாட்சி பெற்றுய்ய பிரகாசித்துக் கொண் டிருப்பது ''சிவம்''. சகல சீவாத்மாக்களுக் கும் பிறப்பு என ஒன்றுளதால் இறப்பு என்பதும் நிச்சயமானவிடயமாகும். பிறப்பு என்பது தரும்படிப்பனை மீண்டும் பிறக்காது தவிர்க்கப்படுவதாயின் அதற்கு வழிகாட்டுவது ''சைவம்''. இந்தச்சைவம் என்பது சூட்சும சரீரத்தையும் தத்துவங் களையும் உணர்த்தக் கூடியது. அழியக் கூடிய தூலசரீரத்தின் அழிவிலிருந்துதான் மங்களமென்னும் உயிர்ப்பு – பரமசுகந்தரும் வாழ்வு தோன்றுவதற்கு கைகொடுப்பது தான் சைவம், சீவாத்மாவும் பரமாத்மா வும் கலந்தனுபவிக்கும் ஆநந்தத்தையும் அந்த மங்களத்தையும் கர்ம வினைகளை நீக்கி சிவத்தை அடையும் வழியையும் காட்டுவதுதான் சைவம். இந்தச் சைவவழி பாட்டாற்றான் நலங்கள் யாவையும் தரும் சிவவழிபாட்டுக்கு நாம் இட்டுச் செல்லப் படுகின்றோம். இந்தச் சிவவழிபாட்டு முறையை கடைப்பிடித்து வாழ்வதால்தான் நாம் நலங்கள் யாவையும் அடையமுடிகின் றது. ஆன்றோர் அடிச்சுவடுகளைத் தொட ரும் எமக்கு அவர்கள் காட்டிய வழியதுவே யாகும், மக்கள் உண்மையுணர்ந்து உய்வு பெற பகவான் ஆதிசங்கராச்சாரியார் ஆறு வழிபாட்டு முறைகளை வகுத்துதவியுள் ளார்கள். இதில் சைவம் சிவத்துடன் எங் களை இணைத்து வாழ வைக்கின்றது.

ஈழத்தினைச் சிவபூமி என்று திருமந்தி ரம் தந்த பெருமைக்குரிய திருமூலநாயனார் கூறியருளினார். ஈழத்திலே நாற்புறமும் சிவாலயங்கள் விளங்கினவென்று சிங்கள ஆய்வாளர்களே தம் நூல்களில் திடமாக எடுத்தாண்டுளர். இன்று நவீன விண்வெளி ஆராய்ச்சிகள் மூலம் அறிஞர்கள் கண்ட முடிபுகளை தம் நூல்களில் எடுத்தாளும் போது அன்று அந்தவசதிகள் ஏதும் இல் லாத காலத்து தமிழன் வான்வெளி ஆய்வில் வல்லுனனாக இருந்தான் எனத்திடமாக எடுத்துக் கூறியுளர். வான்வெளியிலுள்ள நட்சத்திரக் கூட்டங்களை இருபத்தேழு மண்டலங்களாக பகுத்து ஒவ்வொரு மண் டலத்துக்கும் ஒவ்வொரு நட்சத்திரத்தை அதிபதியாக்கி, அந்த நட்சத்திர மண்டலத் திலிருந்து அடுத்துவரும் நட்சத்திரமண்டலத் துக்கு சூரியன் நகர்வதற்கு ஆயிரம் ஆண் டுகளாகின்றனவென மிகத்துல்லியமாக எம் முன்னோர் கணக்கிட்டுக் கூறியதை இன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றைய சகல வசதிகளும் படைத்த விண்வெளி ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. வைவஸ்தமனு என்னும் மன்னன் அவையிருந்த அமைச்சர்களே இந்த விண்வெளி மண்டலங்களில் சூரியன் நகரும் காலங்களை கணக்கிட்டு, ஒரு நட்சத்திர மண்டலத்திலிருந்து புறப்படும் சூரியன் இருபத்தேழு நட்சத்திர மண்டலங்களையும் சுற்றி புறப்பட்ட மண்டலம் வர 27,000 ஆண்டுகள் எனக் கூறினர் என்றும் "தொன்மனு" எனச் சேக்கிழார் பெருமான் கூறியுள்ளதோடு இம் மனுவின் காலம் கி. முன் 8756 ஆண்டு என்று இன்று ஆய்வாளர் கண்டுபிடித்துள்ளனர் என்றும் ஆய்வுரை நூல்கள் அடித்து அறுதியிட்டுக் கூறுகின்றன. மனு எனும் வேந்தன் மகளான ஈழம் என்பாள் ஆட்சிபுரிந்தமையாலேதான் தமிழ்நாடான "ஈழம்" அன்று அப்படியழைக்கப்பட்டதென இற்றைக்கைம்பதாண்டுகளுக்கு முன்பே **"தமிழன் மாட்சி"** என்னும் நூலில் தெளிவாகப் பொறிக்கப்பட்டுள்ளது. இன்றைய இலங்கைபோல் பன்னிரண்டுமடங்கு பெரிதான தொன்னிலங்கை என்பதை சிங்கள நூல்களே எடுத்தாண்டுள்ளன. அத்தகைய (இன்றைய இலங்கை 25,000 சதுரமைல் - பன்னிரன்டு பங்கும் சேர்ந்தால் மூன்று லட்சம் சதுரமைல்) நாற்பத்தொன்பது மாகாணங்கள் கொண்டது அன்றைய தமிழ்நாடு என்பதைப்பற்றிய விபரத்தையும் மேற்குறித்த நூலில் காணலாம். இராமாயணம், மகாபாரதம் போன்ற நூல்கள் - இவற்றின் நாயகர்கள் பற்றிய வரலாற்றுண்மைகள் எல்லாம் வான சாஸ்திரத்தின் துணையால் இன்று கணிக்கப்பட்டு வெளியரங்கப்படுத்தப் பட்டுள்ளன. வால்மீகி முனிவர் தந்த இராமாயணத்திலே - இராவணன் சபையிலே - சகோதரர்களான இராவணனும் கும்பகர்ணனும் பேசிக்கொண்ட மொழி "தமிழ்" என்பதை மிகத்தெளிவாக அம்முனிவர் கூறியுள்ளார். வானசாஸ்திர உதவியால் இராமன் வாழ்ந்த காலத்தை 6400 ஆண்டுகளுக்கு முற்பட்டதென உறுதிப்படுத்தியுளர். புராணக்கதையாக கூறப்படும் சிவன் - தாட்சாயணி (தட்சன் மகள்) திருமணம் கி. முன் 17,000ம் ஆண்டிலென்று இப்பொழுது கணக்கிடப்பட்டுள்ளது. சிவன் திருமணம் நடந்ததாகக் கூறப்படும் காலை சூரியன் இன்னநட்சத்திரத்தில் இன்ன பாகத்தில் இருந்தானென சமஸ்கிருத சிவபுராணம் தெளிவாக எடுத்துக் கூறுகின்றதைக் கொண்டு வானசாஸ்திரிகள் இந்தக்கணக்கை இப்பொழுது தம் ஆய்வுமூலம் வெளிப்படுத்தியுள்ளனர். தமிழின் தொன்மை, தமிழ்ப் பண்பின் தொன்மை, சிவவழிபாட்டின் தொன்மை எத்தனையோ ஆயிரமாயிரமாண்டுகட்கு முன்னையதென்பதை இன்றைய வானசாஸ்திர ஆய்வுகள் திடமாக உறுதிப் படுத்தியுள்ளதை எவரும் அலட்சியம் செய்ய-செய்துவிடமுடியாது. "தென்னாடுடைய சிவனே போற்றி-எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்னும் வாக்கையும் கூர்ந்து ஒவ்வொரு தமிழனும் ஆய்வு செய்தலவசியம். உலகம் முழுமையும் சிவமும் சைவமும் தமிழன் பண்பும் பரந்திருந்ததை இன்றைய விஞ்ஞான உலகில் பெரும் பெரும் ஆய்வுகளை நடாத்திய அறிஞர் பெருமக்கள் தங்கள் தங்கள் நூல்களில் ஆணித்தரமாக எடுத்துக்கூறியுள்ளதை உளத்தே ஒவ்வொருவரும் கொள்வதவசியம்.

சிவத்தோடு தொடர்புடைய சிவாலய குடமுழுக்கு வைபவத்தே ஈண்டுநாம் எடுத்துக் கூறுங்கால் உளத்தே இருந்த சில ஆதாரங்களை மேலே தந்துள்ளோம். ஈண்டு கூறுதற்கெடுத்த சிவாலயக் குடமுழுக்கு - அதன் தத்துவம் - அதனால் நாடும் மக்களும் அடையும் பெரும் பொருள் பற்றி ஆய்கின்றோம். ஈழத்தின இன்றைய நிலையில் சிகரமென விளங்கும் யாழ்ப்பாணத்தில் சைவமும் தமிழும் தழைத்து வாழ்ந்த - வாழ்கின்ற புண்ணியப் பூமியாம் திருநெல்வேலிப் பதியில் - இயற்கை யன்னையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னருள் நிறைந்த இடத்தில் ஸ்ரீகாயா ரோகணேஸ்வரப் பெருமான் அருள் அன்னை நீலாயதாட்சி அம்மையுடன் அருளொளி வீசிக் கொண்டிருக்கும் சிறப்புத் தலமாக அமைதிருக்கும் சிவாலயத்தில் நீண்டகால இடைவெளியின் பின்னர் மாபெரும் புனரா வர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இச் ஸ்ரீமுக ஆண்டு பங்குனித் திங்கள் பதினான்காம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை பதினொரு மணிக்கு, உத்தர நட்சத்திரத் துடன் கூடிய சுபவேளையில் பிரதிஷ்டா பிரதமகுரு; சிவாச்சார்ய சிரோமணி – சிவாகம கிரியா துரந்தரர் சிவஸ்ரீ புவன சதா சிவக் குருக்கள் யோகீஸ்வரக் குருக்களால் நிகழ்த்தப்பட்டதும் இப் பெருங் குடமுழுக்கையும் அதன் பின் நடந்த சிவவைபவங்களையும் தரிசிக்க நாமெல்லாரும் கொடுத்து வைத்தவர்கள் ஆகவும் இருந்தது இத் தலத்தே எழுந்தருளியுள்ள சிவம் தந்த செல்வபாக்கியமாகும்.

வேண்டுவார் வேண்டுவதையெல்லாம் ஈந்தருளும் சிவசக்தி மைந்தன் – பெருங் கருணைத் தெய்வம் – பிரணவ சொரூபியாக விளங்கும் வேழமுகத்தானை ஐயனும் அம்மையும் மற்றுந் தேவரும் வேண்டியாங்கு வேண்டி நின்று இக்குடமுழுக்கு – அதன் முறைகள் – தத்துவங்கள் ஆகியவற்றை எம் அன்னை தந்த அறிவுச் செல்வத்தின் சக்திக் மைய தருகின்றோம்.

''நம்பிக்கை யுள்ளவர்க்கும் நாடித்துதிப் பவர்க்கும்
தும்பிக்கை நாதன் துணை''

என எம் பிஞ்சுள்ளத்தில் அன்று அன்னை ஏற்றி வைத்ததீபம் துணைநிற்க – ஆறுமுறை பூமியை வலம் வருவதாலும் பதினாயிரந் தடவை காசியில் கங்காஸ்நானம் செய்வதாலும் கிடைக்கக் கூடிய புண்ணியங்கள் யாவும் பெற்ற தாயை ஒரு தடவை உளமார்ந்த பக்தி பூர்வமாக வணங்கினால் கிடைத்துவிடும் – எனக் கூறிய முன்னோர் அடிச்சுவட்டின் மீது நின்று அவ்வன்னையை மனத்தே அடிபணிந்து வேண்டி விளக்கங்கள் தருகின்றோம்.

## மகா கும்பாபிஷேகம்

வேண்டுவார்க்கு வேண்டுவனவெலாம் வழங்கி அருள் சுரக்கும் ஐயன் திருக் கோயில் புனரா வர்த்தன திருப்பணிகள் முறைமையாக – முழுமையாக நிறைவெய்தி நிகழ்ந்த மகா கும்பாபிஷேகம் அப் பெருமான் அருளால் இனிதே நிறைவேறிற்று ''எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க'' என்னும் தொண்டருள்ளப் பாங்கின் வண்ணம் அருட்பணிகளிலே என்றும் உளம் செலுத்தியுள்ள தொண்டர் சிந்தைகளில் கனிந்து எல்லோரும் உளமார ஏகோபித்து இத்திருத்தலப்பதி பணிகள் செயற்பட்டுள்ளன. ஈழத்துப் பழங்குடி மக்கள் – பெருங் குடிமக்கள் தம் வரலாற்றுப் பெருமைக்குச் சான்றாக ஒருமித்த ஆன்மீக உணர்வு கொண்டு அமைந்துள்ள இக்குடமுழுக்கு விழா பொலிவு பெற்றது. இப் பொலிவால் ஆலய குடமுழுக்குச் சிறப்புற நிகழ்ந்திடவும் விழாவில் கலந்து கொண்ட அன்பர்கள் அனைவருக்கும் நலங்களையும் வளங்களையும் வழங்கி – சமுதாயத்தில் பண்பு, பக்தி, நன்றி, நம்பிக்கை, விசுவாசம், மனிதாபிமானம் வளரவும் திருவருள் பாலித்த ஆலய நாயக – நாயகியையும் பரிவார மூர்த்திகளையும் வேண்டி, முதற்கண் வேண்டி – நீண்டகால ஓய்வின்பின் இப்பொழுது சிறப்பாக நடந்த இக்குடமுழுக்குப் பெருவிழா தவமுடையார்க்கே வாய்ப்ப தொன்றாகு மென்பதையும் வலியுறுத்துகின்றோம்.

பக்திநெறிக்கு எங்களை வழிநடத்தும் ஆன்மீக நிலையங்களே ஆலயங்களாகும். திருக்கோயில்களில் நித்திய – நைமித்திய பூசைகள் முட்டின்றி நடைபெற்றாலேதான் அவ்வாலயச் சூழலிலுள்ள மக்களுக்கு நலங்கள் பொலியும். நாட்டிலே வளங்கள் குன்றும்பொழுது – மக்கள் மாற்றாரால் நலிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கப்படும் பொழுது - அநீதி தாண்டவ மாடும் பொழுது ஊரிலுள்ள ஆலயங்களில் உள்ள குறைபாடுகளே காரணமென எம் முன்னோர் எடுத்தோதி வழிகாட்டி வந்துளர். அவர்கள் அடிச் சுவடுகளைப் பின் பற்றி - அவர்தம் பண்பைப் பின்பற்றி வாழும் நாமும் அவற்றை மறத்தலாகாது. முன்னோர் எமக்கு ஊட்டிய நல்வழிகளைப் பின் தொடர்ந்து செயற்பட்டு-சைவாசாரத்தில் உளமுறைந்த வள்ளல்களும் தவமுடையாரும் ஆலயப் பணியை மேலானதாகக் கருதி அவ்வப்போது ஆலயப் பணிகளை முட்டின்றி ஆற்றி வருகின்றதாலேயே இன்றும் நாம் வாழ்கின்றோம். ஆலயங்களைத் திருத்தி அமைத்தும் காலந் தாழ்ந்தாலும் ஆலயங்களில் குடமுழுக்கு, அபிஷேகம் போன்றவற்றை நடாத்தியும் முட்டின்றி விளாக்கள், பூசைகள் நடைபெறவும் தொண்டர்கள் முன்வந்து உழைக்கின்றனர்.

ஆலயங்கள் கட்டுவது பெரிதன்று. அந்த ஆலயங்களில் தங்கு தடையின்றி நித்திய - நைமித்திக பூசைகள் ஒழுங்காக - கிரமமாக நடக்க - இவற்றோடு அபிஷேக அலங்காரங்கள், சுந்தம், சுகந்தம், தீபம் ஆகியவை எதுவித முட்டின்றியும் நடக்க - இவற்றுக்கெலாம் மேலாக பன்னிரண்டாண்டுக்கு ஒருமுறை நிகழவேண்டிய மகா கும்பாபிஷேக வைபவங்கள் காலங்கடந்தாயினும் சுபமங்களமாக நிறைவேற நாம் உழைப்பதால் நாட்டுக்கும் மக்களுக்கும் பெரும் சாந்தி ஏற்படும். இவ்வாறு நடைபெறும் மகா கும்பாபிஷேக வைபவங்களில் பங்கு கொண்டு தொண்டாற்றும் தொண்டரும் செய்விப்போரும் தரிசிப்போரும் எல்லா வகைகளாலுமான குற்றங்களும் நீங்கப் பெற்று இறைவன் - இறைவி திருவருளுக்குப் பாத்திரராவர் என்பது எம் முன்னோர் கண்டு - அனுபவித்து - எமக்கு ஊட்டிய உண்மைகளாகும்.

திருக்கோயில்களில் குடமுழுக்கு வைபவங்கள் காலத்துக்குக் காலம் சீரும் சிறப்புமாக - சிவாகமங்கள் எடுத்தாளும் முறைமைப்படி கிரியைகளை நிகழ்த்தி - அற்புத சக்தியை விழைக்கும் தெய்வ சாந்நித்தியம் மிகுந்த மந்திர - தந்திர - யந்திர விதிமுறைகளுக்கமைய தெய்வத் திருவுருவங்களை வைத்து - கும்பங்களில் தீர்த்தங்களை நிறைத்து வைத்து உபாசிக்கும் காலத்தும் அவற்றிலுள்ள நீருக்கு தெய்வீக சக்தியை ஏற்றி அந்த நீரை விம்ப தம்பங்களுக்கு அபிஷேகித்து விசேட விழாவாக நடாத்தும் மகா கும்பாபிஷேகங்களின் போது யாக குண்டங்களையும் சொல்லப்பட்ட விதி முறைகளுக்கமைவாகவும் வைத்து அக்கினி காரியங்களையும் விதிப்படி ஆற்றினால் தேவர்களும் மிகப் பிரீதியடைந்து எல்லா நிகழ்ச்சிகளுக்கும் ஆசி வழங்கி சிறப்பினைப் பல்கிப் பெருக வைப்பர் என்பது உண்மையாகும். அக்கினி காரியங்கள் வேதமார்க்கம் காட்டிய சிறந்த வழிபாடாகும். வேத மார்க்கமான கர்மாக்களுக்கு அடிப்படையான கர்மா அக்கினிவழிபாடாகும். இதனை நித்திய கர்மா என்று விதித்திருப்பதோடு எந்தவித பலனையும் எதிர்பாராமல் செய்யப்பட வேண்டிய "நிஷ்காம்ய கர்மா" என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. "இந்தப் பிரபஞ்சத்தில் ஆதி அம்சமாகத் தோற்றியது அக்கினியே. அக்கினியிலிருந்து நீரும், பின்பு பூமியும் அதனின்று மரம் செடி கொடிகளும் பின்னர் மனித வர்க்கமும் உண்டாயின" என்று தைத்ரீய உபநிஷத் கூறுகின்றது.

"அக்னே ராப: அத்பியப் ரதிபி
ப்ரதிவ்யா ஓஷ தய:
ஓஷ தீப்யோ அன்னம் அன்னாத் புருஷ:"
— தைத்ரீய உபநிஷத்,

எல்லாவிதமான நன்மைகளையும் இந்த அக்கினிகர்மாவும் அதன் விளைவாக அமைந்த யாகங்களையும் எங்கள் முன்னோர் முறையாக செய்து வந்துள்ளார்கள். இந்த அக்கினி வழிபாடுகள் ஆகமவழி வந்தவைகளாகும். அக்கினிவழிபாடு செய்வ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனால் அதிர்வுகள் ஏற்படுகின்றனவென்றும் அந்த அதிர்வலைகள் பிரபஞ்சத்திலுள்ள அனைத்து உயிர்களையும் சேர்கின்றன வென்றும் அவற்றைக் காப்பாற்றும் கவச மாக- சக்தியூட்டும் வலிவுள்ள உணர்வாக எங்கும் எப்பொழுதும் நன்மைகளை உற் பத்திசெய்யும் புனிதத்தன்மையுடையவைக ளாகவும் விளங்குகின்றனவென்று நூல்கள் கூறும். ஆலயங்களில் செய்யப்படும் யாகங் களிலும் அக்கினிகர்மாக்கள் கையாளப்படு வதால் சகல சீவராசிகளுக்கும் அவை பலன் களை அளிக்கின்றன. சிவபெருமான் ஜோதி மயமானவர். அளப்பரும் ஜோதி ஜோதிப்பி ளம்பாய் இலிங்க உருவத்தில் தோன்றியவர். ''திருவையாறகலாத செம்பொற்சோதி'' என்றும் ''தெள்ளாறாச் சிவச்சோதித்தி ரள்'' என்றும் ''சோதியுட்சோதி'' என்றும் ''தீக் கூர்ந்த திருமேனி ஒருபால்மன்னி'' என்றும் பாராட்டப்படும் சிவன் அக்கினி யாகவே விளங்கியவர். உருத்ரன் என்பதும் அக்கினியையே குறிக்கும். ''உம்பரானை ருத்திர மூர்த்தியை'' என்பது நோக்குக. சிவனே அக்கினியென்பதும் யாகங்களில் அக்கினிகர்மாக்கள் செய்யப்படுவது அவசிய மென்பதும் பிறக்கின்றது. கும்பாபிஷேக வழிபாடுகளில் அக்கினியில் ஹோமம் செய் யும் பொழுது ''வஸோர்தாரா'' என ஒரு ஹோமம் செய்யப்படும். யஸுர் வேதத் திலேவரும் இந்த ஹோமம் அக்கினியும் விஷ்ணுவுமாக திகழும் இரட்டைத் தெய்வ மான ''அக்னாவிஷ்ணு'' என்னும் தெய்வத் தைக்குறித்து செய்யப்படுவதாகும்.

பசுவின் உடலெங்கும் பால் செறிந் திருப்பினும் அதன் மடியிலிருந்தே பாலைப் பெறுகின்றோம். இறைவன் எகுங்ம் எல்லா வற்றிலும் எப்பொழுதும் பரந்துறைபவனா யிருந்தாலும் ஆக்களாகிய பசுக்கள் சென்று ஒடுங்குமிடமாக ஆலயம் விளங்குகின்றது. கம்பிகளில் மறைந்திருக்கும் மின்சக்தியா னது, மின்குமிழ் மூலம்தன் ஆற்றலைக் காட்டி வெளிச்சந் தருவது போல, எங் கும் நிறைந்திருக்கும் இறைசக்தி ஆலயத் தில் எழுந்தருளி இருக்கும் உருவத்திருமேனி மூலமாகவே வெளிப்பட்டு அருள்பொழி கின்றது. அக்கினிமயமாக இருந்து குளிர்ந் திறுகிய மலையிலிருந்து எடுக்கப்படும் தேர்ந்தகல்லில் சிற்பியானவர் ஆகமவிதிப் படி, உரிய அங்க அமைப்புக்களோடு அமைத்துக் கொடுக்கும் உருவத்திருமேனிக்கு ஆச்சாரியார் தம் நிறைந்த உள்ளத்தில் ஊறும் ஆத்மீகசக்தியினால் மந்திரவலு வேற்றி பிரதிட்டை செய்வதனையே பெருங் குடமுழுக்கு, மகாகும்பாபிஷேகம் என்றெல் லாம்கூறுவர். சிவாகமங்கள் இவ்வுருவத் திரு மேனி செய்யும் முறைகளையும் பெரும் சாந்தி செய்யும் முறைகளையும் உருவத் திருமேனிகளை எழுந்தருளச் செய்யும் முறைகளையும் ஆலய அமைப்புக்களையும் விரிவாக எடுத்தோதுகின்றன.

ஆகம விதிகள் வரையறுத்துக் கூறும் நிலைப்படி கும்பாபிஷேகத்தை சீர்சிறப்பு ஒழுங்காக நடத்தக் கூடிய ஆச்சாரியா ரைத் தேர்ந்தெடுத்தலே முதற்கட்டமா கும். குருவில்லாமல் எதுவும் இயற்ற முடி யாது. மனித வாழ்வு பண்படையத்தக்க வரான குருவே முதற்றேவையாகும். ஆகம சாஸ்திர அறிவு, உளம் நிறைவான பக்தியுடைமை, செய்காரிய வல்லமை கொண்ட தகுதிவாய்ந்த சிவாச்சாரியாரை முதற்கண் தெரிந்தால் - பரப்பிரம்மமாக அமையும் அக்குருவினால் - அவர் தவவலி மையாலும் நித்திய நைமித்திய கிரியை பூசைகள் முறைமையாலும் உருவத் திருமே னியை தூய்மையாக - முறையாக அலங்க ரிப்பதாலும் அத்திருமேனி தெய்வசாந்நித் தியம் அடைந்து அருள் பாலிக்கின்றது. இதனையே ஆசாரியாவரணம் என்று பெரு மையுடன் போற்றப்படும் முதலம்சமாகும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட - பரப்பிரம்ம மாக விளங்கும் சிவாச்சாரியார் தமது முதற்கடமையாக விநாயகப் பெருமானி டமும் இறைவனிடமும் மற்றும் தேவர்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளிடமும் தருணாலயத்தில் ஆலய விக்கிரக பிரதிட்டைக்கான உத்தரவினைப் பெறுவதே அவசியமாகும். இங்கு விநாயகப் பெருமானிடம் பெறும் அனுமதியை ''விநாயகர் அனுஜ்ஞை'' என்றும் இறைவன் – தேவர்களிடம் பெறும் அனுமதியினை ''தேவானுஜ்ஞை'' எனவும் ஆகமங்கள் கூறுகின்றன. ''சிவாசாரிய அனுஜ்ஞை'' முக்கியமானதாகும். ஒழுக்கம், சீலம், கிரியைப்பயிற்சி மந்திரோச்சாடனப் பயிற்சி உடையவராக கிரியா ஆச்சாரியார் இருப்பதால் இந்த முறைகளை ஒழுங்காக – முறையாக – முறைகளைக் கைகடக்க விடாது செய்தல் வேண்டும்.

எந்த நல்லவிடயங்களை ஆரம்பித்தாலும் எதிர்பாராது சிலவேளைகளில் இடையூறுகள் உண்டாகலாம். இந்த இடத்தில் எந்தக்காரியத்தையும் நிறைவேற்றவும் விக்கினங்கள் ஏற்படாதிருக்கவும் விநாயகப் பெருமான் திருவருளைவேண்டி ''கணபதி ஹோமம்'' செய்யப்படுவதுடன் இயற்கை உற்பாதங்களேற்படாதிருக்கவும் மங்களகரமாகயாவும் நிறைவேறவும் நவக்கிரகங்களைப் பிரீதிசெய்து – ''நவக்கிரகஹோமம்'' என்பதும் முறையாக நிறைவேற்றப்படுவதும் மூன்றாவது அம்சமாகும்.

ஈண்டு மேற்கூறப்பட்ட மூன்றும் முறையாக அமந்தபின் நான்காவதாக திரவிய சுத்தி, ஆன்மசுத்தி, பூதசுத்தி இலிங்கசுத்தி, எனப்பலவகைப்படும் சுத்திகளும் நிறைவேற்றப்பட வேண்டும். சிவதர்மத்துக்கு வழங்கப்படும்பொருள் பலவகையாலும் வந்திருக்கும். மானமுள்ள தரும வழியில் நின்று வாய்மையோடு ஊனமற்ற சீர்பெறுவழியில் தேடிய பொருளே சிவதர்மத்திற்கு உகந்ததாகும். இங்குவந்து சேர்ந்த திரவியங்களை சிவசாஸ்திர மந்திரஜெபம் ஹோமம் முதலியவற்றால் சீராக்கி, கும்பநீரால் சுத்தஞ் செய்து பதினொருபாகங்களாகப் பிரித்து எசமானிடம் ஒப்படைப்பதே திரவியசுத்தியாகும். முற்பிறவியில் புத்திபூர்வமாகவோ, சிவநிந்தை, சிவசாஸ்திர நிந்தை, சிவனடியார்கள் நிந்தைகள் செய்திருந்தால் அக் குற்றங்கள் நீங்கி ஆன்மா சுத்தியடையச் செய்வது ''ஆன்ம சுத்தி'' ஆகும். நெய், தேன், பழம் இவற்றில் ஆன்ம – வித்யா – சிவ தத்துவங்களைப் பூசித்து அவற்றை இவ்வாச்சாரியார் புசித்தல் என்பது மதுபாகக்கிரியை எனப்படும். இது மேற்கூறப்பட்ட ஆன்ம சுத்திக்கு உரியதாகும். இத்துடன் பத்துவகையாக நீராடி புறச்சுத்தியையும் பெறுவதால் உடற்சுகம், பாவநீக்கம், மன ஒருமை. திரிகரணசுத்தியாவையும் ஆச்சாரியார் அடைகின்றார்.

சிவாச்சாரியார் அடுத்ததாக ''இரட்சோக்ன ஹோமசாந்தி'' செய்வார். தீயவர்களால், தீயசக்திகளால் இடையூறுகள் இந் நல்லகாரியங்களைச் செய்யும்பொழுது வந்து எதிர்ப்படாதிருக்கவே இந்தச் சாந்தி செய்யப்படுகின்றது. ஆலயத்தைச் சூழவுள்ள கிராம மக்கள் நோய், பிணி, அகால மரணம், வறுமை, தீமைகள் அற்றவர்களாக வாழ வேண்டுமென்று கிராம நன்மைக்காக – அப் பகுதி மக்களுடைய நன்மைக்காகச் செய்யப்படும் சாந்தி கிராம சாந்தி எனப்படும். உற்சவ விசேட தின காலங்களில் கிராம சாந்தி செய்யாவிடின் நாட்டில் இலக்குமிவாசம் உண்டாகாதென்று உத்தர காரணாகமம் வலியுறுத்திக் கூறுகின்றது. கிராம சாந்தி மிக அவசியமாகும். நாற்றிசைகளிலிருந்தும் வரும் தீய சக்திகளை அழிக்கும் ஆற்றலுள்ள தேவர்களை வேண்டி வேண்டுதல் செய்து செய்யப்படுவது ''திசாஹோமம்'' எனப்படும். இவ்வாறு தீயசக்திகளை நாற்புறமும் நீக்கிய பின்னர் ஆலயத்தின் வெளி வீதியில் எட்டுத் திசைகளில் நின்றும் அமைதியைக் கெடுக்கும் எண்மரான இயக்கர், அரக்கர், பூதர், பிசாசுகள், பிரம்மராட்சசர்கள், மகாகாளி, சரளி, வடுகர் ஆகிய எண்மருக்கும் பலிகொடுத்து ''நீவிர் இவ்விடத்தை விட்டு விலகி – நீங்கிப்போய் காடு மலையடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் ஆற்றங்கரை பாலைவனம் மயானம் ஆகிய இடங்களுக்குச் சென்று வசியுங்கள். இங்கே நாம் இறைவனை எழுந்தருளச் செய்யப் போகின்றோம்'' என்று ஆணையிடுவதாக பிரவேசபலி கொடுக்கப்படும். இதன் பின்னர் இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் ஆகிய அட்டதிக்கு பாலகர்களை அவ்விடத்தே வந்து வசிக்கக் கூடியதாக பூமியைச் சுத்திகரிக்கும் பொருட்டு ''வாஸ்து சாந்தி'' செய்யப்படும். வாஸ்து சாந்தி பூசை செய்யாதொழியின் தொடங்கும் கிரியைகள் பயன்தர மாட்டாவென்று சோமசம்பு பத்ததி கூறுகின்றது. வாஸ்து புருஷனுடைய தேகத்தில் வசிக்கும் தேவதைகள் பூசை செய்யப்பெற்று சுபத்தைத் தருபவர்களாக இருக்கின்றனரென அந்நூல் கூறுகின்றது. தேவ கருமங்களில் மண்டுக பதமும் தேவி காரியங்களில் பரமசாயீ பதமும் அமைத்து பூசிக்க வேண்டும். மண்டுக பதம் என்பது அறுபத்து நான்கு பதமுள்ள வாஸ்து. பரமசாயீ பதம் என்பது எண்பத்தொரு பதமுள்ள வாஸ்து. பதங்களில் ஈசானாதியாக ஈசானன் முதலிய தேவதைகளையும் மத்திபத்தில் பிரமாவையும் பூசித்து அக்கினி காரியம் செய்யப்படும். பலாசு, அத்தி, அரசு என்பனவற்றின் சிறு சாகை, இலை, தருப்பை என்பவைகளால் புருஷா கிருதியாகக் கட்டி, குண்டாக்கினியில் சுவாலிக்கச் செய்து வீதி யாகம் முதலிய இடங்களில் பாயக்கினி கரணம் செய்து ஈசான திக்கில் போடுவர். ஆலயத்தில் நடைபெறும் பெருவிளாவில் தேவர்கள் வந்து கலந்து கொள்ளவே இந்தச் சாந்தி செய்யப்படுகின்றது. இதன் பின்னர் யாகாரம்பம் ஆரம்பமாகும்.

பூமாதேவியை பூசித்து – வழிபட்டு, அப்புண்ணிய பூமியிலிருந்து பிரார்த்தனையை முடித்து பூமாதேவியின் வயிற்றிலிருந்து மண் எடுக்கப் படுவது படைப்புத் தத்துவத்தைக் குறிப்பதாகும். இதனை ''மிருத்சங்கிரகணம்'' என்று கூறப்படும். புண்ணிய தீர்த்த சமீபத்திலும் நந்தவனத்திலும் சமுத்திரக்கரையிலும் யக்ஞவிருட்சத்தின் அடிமுதலிய இடங்களிலும் மிருத்சங்கிரகணம் செய்யலாம். ஆலயத்தின் ஈசானத்தில் செய்வது ஆயுள்விருத்தியையும் அக்கினி திக்கில் செய்வது புத்திரவிருத்தியையும் மேற்கில் செய்வது மோட்சசித்தியையும் வாயுவில் செய்வது சம்பத்தையும் வடகில் செய்வது செல்வத்தையும் கொடுக்குமென நூல்கள் சிறப்பாகக் கூறுகின்றன. நிருதி திக்கிலும் கிழக்கிலும், தெற்கிலும் செய்வதை தவிர்ப்பர். கலகம், அஞ்ஞானம் போன்றதீய செயல்களை தவிர்ப்பதற்காகவே இத்திக்குகள் தவிர்க்கப்படுகின்றன. நவகோட்டம் கற்பித்து பூசித்து, அதில் பூமியை நிருதியில் சிரசும் ஈசானத்தில் பாதமும் அக்கினியில் வலக்கையும் வாயுவில் இடக்கையும் உடையதாகவும் கடி இருதயம் என்பவற்றோடு கூடினதாகப் பாவித்து அதன் வயிற்றினிடத்திலிருந்து மண்ணை எடுத்தல் வேண்டும். இந்த மண் (மிருத்திகா) எடுப்பது – நெற்றியில் எடுத்தால் கிராமத்துக்கும் முகத்தில் எடுத்தால் ஆசாரியாருக்கும், புஜத்தில் எடுத்தால் சத்திரியருக்கும், ஸ்தனத்தில் எடுத்தால் பெண்களுக்கும், மார்பில் எடுத்தால் புத்திரருக்கும் தொடையில் எடுத்தால் வைசியருக்கும் பாதத்தில் எடுத்தால் சூத்திரருக்கும் அழிவுண்டென்றும் கூறப்படுகின்றது. இந்த இடங்களை முற்றாகத்தவிர்த்தல் வேண்டும். படைப்புக்கு உரிய இடம் வயிறாகும். வயிற்றில் எடுக்கும் மண்ணுள் பாலிகை தெளித்து நவதானியங்களை இட அவை நன்குவளருவதால் தானியவளர்ச்சி, படைப்புக்கள் வளர்ச்சி உண்டாகும். பயிர் வளர்ச்சிக்குக் காரணனான சந்திரனை அப்பொழுது பூசிப்பர். இதன் பின்னர் சிவாச்சாரியார் பாலாலயம் சென்று அங்கிருந்து இறைவனை யாகசாலைக்கு அழைத்துச் செல்வதற்காக ''பிரசன்னாபிஷேகம்'' செய்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இறைவ! எங்கள் அழைப்பை
கிருபையோடு ஏற்று சகலகலா
மூர்த்திகளோடும் யாகசாலைக்கு
எழுந்தருள வேண்டும்"

எனப்பிரார்த்தனை செய்து கும்பத்தில் இறைவனை ஆவாகித்து, "கடஸ்தாபனம்" "கலாகர்ஷணம்", செய்து சகல வாத்தியங்களுடனும் வலமாக யாகசாலைக்குச் சென்று தானியபீடத்தில் கும்பத்தை வைப்பார். உருவத்திருமேனியிலிருந்து அருவுருவத்திருமேனியாகிய கலசத்தில் எழுந்தருளிய இறைவனை ஆறாதாரங்களையும் கடந்தவன் என்பதன் கருத்தாக - கூர்மாசனம் (நெல்) - அநந்தாசனம் (அரிசி) - சிங்காசனம் (கடலை) - யோகாசனம் (பயறு) - பத்மாசனம் (உழுந்து) - விமலாசனம் (எள்ளு) என்னும் ஆறாதாரங்களின் மேல் ஆசாரியார் அமர்த்துகிறார், நிஷ்களரூபத்தில் உள்ளவரைச் சகளமாகப் பூசிக்க வேண்டும், நிஷ்களத்தில் முறையே சாந்திய தீதகலை (சிரசு), சாந்திகலை (முகம்), வித்தியாகலை (மார்பு), பிரதிஷ்டாகலை (குஹ்யம்), நிவிர்த்திகலை (முழங்கால், பாதம்), புவனாத்துவா (தசை), தத்துவாத்துவா (என்பு), இந்திரியங்களாகப் பாவிக்கப்படும். சகளமாகிய கும்பத்திலும் அப்படியே வஸ்திரம் (தோல்), நூல் (நரம்பு) கடம் (தசை/என்பு), நீர் (இரத்தம்) உள்ளீடாகியலோகம் (உயிர்), மாவிலை, தேங்காய், கூர்ச்சரம் இவைமுறையே தலையும் மூடியுமாக பாவிக்கப்படும். இதன்பின்னர் ஆறாவது விடயமான பிம்பஸ்தாபனம் எடுக்கப்படும்,

பாலாலயத்திலுள்ள உருவத்திருமேனியை எடுத்துச் சுத்தம் செய்து அலங்கரித்து, வீதி கிராமப் பிரதட்சணம் செய்து வந்து யாகசாலையில் சயனாரோகணத்தில் விடுவர். புதிதாகத் தாபிக்கப்படுவதாயின் சிற்பியைக் கொண்டு கண் திறத்தலாகிய (நயனோன் மீலனம்) கிரியை செய்விக்கப்படும். குருவின் கையிலிருந்து ஆயுதத்தைச் சிற்பி பெற்று உருவத் திருமேனியைச் சுற்றித் திரையிட்டு முறையே நெற்றிக்கண், சூரிய சந்திரநேத்திரங்கள், வாய் மூக்கு காது கொப்பூழ் நகக்கண் ஆகியவற்றை இறை சிந்தையோடு திறந்து வைப்பார். திரை நீக்கும் பொழுது அவ்வுருவத் திருமேனி முன் பால், நெய், தேன், நெல், கண்ணாடி, யானை, குரு, கன்னிப்பெண், திபம், பசு, எசமான், பாஞ்சராத்ரிகம் என்பவற்றை வைத்துத் தரிசிக்கச் செய்கிறார். அதனால் பசுச்செல்வம், தானியவளர்ச்சி, இன்பவாழ்வு, வீர்யம், மனோபலம், வேதாகமநெறி, கற்பு அறிவுச்சுடர், சிவதர்மம், பஞ்சகிருத்தியம் யாவும் நாட்டில் சிறப்பாக நிலவும். பின்னர் பிம்பத்தைச் சலத்தில் மார்பளவுக்கு - (சக்தி வடிவமாகில் காதளவுக்கு) வைத்து விசேட பூசை, அபிடேகம் ஆகியன செய்வதை "ஜலாதிலாசம்" என்பர். ஒரு முகூர்த்தம் வரை விட்டு பின்னர் எடுத்து சுந்தமான தான்யத்தைப் புண்ணியாக நீரினால் தெளித்து முன் கூறிய அளவுவரை உருவத் திருமேனியை அதனுள் வைத்து எட்டுவித மலரால் அதனை அர்ச்சித்து - அதேயளவு காலம் விட்டு எடுத்து பிம்பசுத்தி செய்து வீதி கிராமப் பிரதட்சணம் செய்யப்படும். வலம் வந்த பெருமானுக்கு கண்ணூறு நீங்க ஆலாத்தி சுற்றப்படும். பின் சயனாரோகணத்தில் வைக்கப்படும். கண் திறத்தல், சலாதிவாசம், தானியவாசம், வீதிவலம், சயனாரோகணம் இவைகளைந்தும் முறையே ஒளி, உணவு, நீர், காற்று, வெளி ஆக இருக்கும் இறைவன் உயிர்களைக் காக்கின்றான் என்பதற்காகச் செய்யப்படும். அருவமாக பஞ்சபூதங்களில் வியாபித்துள்ள இறைவனை உருவத் திருமேனியில் வந்து சேரும்படி இவைகள் செய்யப்படும். நற்பயன் தரவல்ல சுபமுகூர்த்தவேளை தூபித்தாபனம், தீபத்தாபனம், யந்திரதாபனம், பிம்த்தாபனம் ஆதியன முறையாகச் செய்யப்படும். எட்டுவகைச் சரக்குகளைச் சேர்த்து இடித்து குழைவாக்கி அதனாலேயே பீடத்துக்கும் பிம்பத்துக்கும்

இணைப்பினைச் செய்வதே அஷ்டபந்தனம் எனப்படுகின்றது. பீடபந்த இணைப்பு இல்லாத மூர்த்திக்குச் செய்யப்படும் பூசைகள் யாவும் பயன்தரமாட்டாவாம்.

தர்ப்பையடிமண், புற்றுமண், நாவலடி மண், ஆலடிமண், வில்வத்தடிமண், துளசியடிமண் ஆகியவற்றை எடுத்து கலசத்திலே இட்டு நீராலே நிறைத்தும் அரசு, ஆல், அத்தி, நாவல், மா ஆகிய இவற்றின் தளிரையும் பட்டையையும் எடுத்து இடித்து வேறோர் மண்கலசத்திலே இட்டு நீர் நிறைத்து பூசித்து ஆன்மவித்தியா சிவத்துவ வடிவங்களாக பிம்பத்துக்கு அபிஷேகிக்க வேண்டும். இதன் பின்னர் தமக்கும் எசமானனுக்கும் மூர்த்திக்கும் இரட்சாபந்தனம் செய்து கொண்டு யாகபூசையை சிவாச்சாரியார் ஆரம்பிப்பார். கும்பமாகிய அருவுருவத் திருமேனிக்கும் தருணாலயத்திலே வீற்றிருக்கும் உருவத்திருமேனிக்கும் பஞ்சவர்ணநூல் அல்லது தருப்பைக்கயிற்றால் தொடர்வுபடுத்தி விதிமுறைப்படி ஹோமகுண்டத்திலே அக்கினியை உண்டாக்கி அக்குண்டத்தையும் கும்பத்தோடு தொடர்பை சிவாச்சாரியார் உண்டாக்குவார். இந்த இடத்திலே ஆகுதி செய்த பின்னர் சுருக்க சுருவத்துடன் நூலைத் தொட்டபடி தருணாலயம் சென்று பிரம்ம - விஷ்ணு - உருத்திரபாகங்களாகப் பிரித்து பூசித்து சுருக்சுருவத்தில் எஞ்சியிருக்கும் நெய்யை அவ்வப்பாகத்தில்விட்டு பரிசாகுதி என்னும் கிரியை மூன்று முறை செய்யப்படும். யாக சாலையில் நின்று நிகழ்த்திய ஹோமப் பலன் முழுமையும் அருவமாயிருந்து உருவமான பிம்பத்தில் நின்று அருள்புரியட்டும் என்னும் நோக்கோடுதான் அருவமான சிவாக்கினியில் ஹோமம் செய்து பரம்சோதியாகிய உருவத்திருமேனியில் எஞ்சிய நெய்யை விடுதலாகும், இவ்வாறாக பிம்பஸ்தாபனக்கிரியாதிகள் முடிந்தபின்னர் கும்பாலபிஷேகம் நடைபெறும்.

கும்பாபிஷேக யாகபூசை மூன்று, ஐந்து, ஆறுகால முறையில் நடைபெறும், இறுதியாக விசேட பூர்ணாகுதியை முடித்து, பூசையை நிறைவேற்றி, தீபாராதனைகள் செய்து, யாத்திராதானங்கள் கொடுத்து, வாத்திய கோஷங்களுடன் தூலலிங்கரும்பத்தை எடுத்து தூபி அபிஷேகம் நடைபெறும். அதன்பின்னர் தருணாலயத்தில் எழுந்தருளியுள்ள உருவத்திருமேனிக்கு அருளமுதமாகிய கலசநீரினால் பெருங்குடமுழுக்கு எனப்படும் மகாகும்பாபிஷேகம் நடைபெறும். பாதாளத்திலிருந்து வானளாவி அவனியெலாம் வியாபித்து நிற்கும் மகாலிங்கத்தின் சிரசில் தேய்ந்து வளராத சந்திரன் விளங்குவதும் அச்சந்திரனிலிருந்து இறைவன் சடா மகுடத்தின் மேல் அமுதநீர் பெருகிக் கொண்டேயிருப்பதுமான அருங்காட்சியே மகாகும்பாபிஷேகக்காட்சியாகும்

மகா கும்பாபிஷேகத்தை நடாத்தும் சிவாச்சாரியார் ஐந்தெழுத்தை நடு நாயக மந்திரமாகவுள்ள ஸ்ரீமகா ருத்திரத்தை ஓதிக்கொண்டே பெருங்குடமுழுக்காட்டுவார். இடைவிடாது அருளமுதம் பொழிய பூசை ஹோமங்களால் அருளமுதமாக மாறியகலச நீரை இறைவன் திருமுடியிலிருந்து அபிஷேகம் செய்யப்படுவதாலேயே இதனை மகா கும்பாபிஷேகம் என்பர். திருஷ்டிதோஷம் நீங்குதற்கு என்னும் பாவனையில் உரிய கிரியை முறைப்படி சிவாச்சாரியார், நிறைகுடம் – தீபம் – ஸ்வஸ்திகம் – சங்கு – இரட்டைச்சாமரம் – இடபம் – கண்ணாடி – சுமங்கலி – கன்னிப்பெண் ஆகிய தசதர்சனங்களை இறைவனுக்குக் காட்டி தாமும் தரிசிக்கின்றார். இறைவனுக்கு இந்த அபிஷேகம் முடிந்த பின்னர் – எள், நெய், கோசலம், கோமயம், பால், தயிர், இளநீர், பஞ்சாமிர்தம், தேன், கரும்பு, பழவகை ஆகியவற்றால் இறைவனுக்கு அபிஷேகம் செய்யப்படும். இது மகாபிஷேகம் என்னும் எட்டாவது அம்சமாகும்.

இறைவன் அக்கினிக்கண்ணும் அக்கினி மயமுகமும் உடையவர். அக்கினிதேவனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழு நாக்குகள் உள. இச்சிவாக்கினியில் இங்கே கூறப்பட்ட எள், நெய், கோசலம், கோமயம், பால், தயிர், இளநீர், பஞ்சாமிர்தம், தேன், கரும்பு, பழவகை ஆகிய வற்றை விசேட ஹோமமாகச் செய்து அமுதமயமான கலச நீரால் அபிஷேகம் செய்யப்படுவதால் உருவத்திருமேனியில் மறைந்திருக்கும் பரஞ்சோதியாகிய அக்கினிக்கு ஆயிரம் நாக்குகளும் இம் மகாபிஷேகத்தால் நிறைவுறுகின்றது.

''அபிஷேகப்பிரியா சிவா; அலங்காரப் பிரியா விஷ்ணு'' என்னும் மகாவாக்கியப் படி பெரும் சாந்தி இம்மகாபிஷேகத்தால் உண்டாகின்றது. இம்மகாபிஷேகத்தின் பின்னர் நாற்பத்தைந்து நாட்கள் திரைபட்சிகம் என மூன்று பட்சங்கள் தொடர்ந்து அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். பொருள் வசதிக்குறைவு அல்லது வேறு காரணங்களால் இந்த அபிஷேகம் இருபது நாள் அல்லது பத்து நாள் தொடர் அபிஷேகமாகவும் நடைபெறலாம். மூன்று பட்சமும் பூர்த்தியாக நடக்கும் காலத்தில் நாற்பத்தைந்தாம் நாள் சங்காபிஷேகம் நடைபெறும். அபிஷேகப்பிரியரான சிவனுக்கு எத்தனை நாட்கள் அபிஷேகம் செய்யினும் அவருக்கு பிரியமாகவே இருக்கும். இந்த மகாபிஷேகம், மண்டலாபிஷேகம் ஆகிய கிரியைகள் கும்பாபிஷேகத்தை தொடர்ந்து நடைபெறுவது இறைவன் திருவருள் நிறைவை உண்டுபண்ணுவனவாக அமைவனவாகும்.

கண்குளிர்மை, ஞாபகசக்தி, கூந்தல் வளர்ச்சிக்கும்,
பேன் சொடுகு, அழுக்கு அறவே இல்லாமல் செய்வதற்கும்
கேசம் உதிர்வதை தடுப்பதற்கும்
நீங்கள் பாவிக்க வேண்டியது.

காவேரி சீயாக்காய்ப் படவுர்

மக்கள் நலனிற்கும் இயற்கை அளித்த
சீதனமாகிய இயற்கைப் பொருள்களைக் கொண்டு
தயாரிக்கப்படுவது.
ஷம்போ போலல்லாது பன்மடங்கு பலனைத் தருவது.

கந்தசாமி அன் சன்ஸ்
(உரிமையாளர் - க. கந்தசாமி)
15, ஆடியபாதம் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

# திருமுருகன் திருவருள்

சி. சி. வரதராசா

" நல்லூரான் திருவடியை
நான் நினைந்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி — கிளியே
இரவு பகல் காணேனெடி "

இவ்வாறு நல்லூர் முருகன் பெருமையைப் பாடியுள்ளார் எங்கள் குருபரன் தவயோகி யோகசுவாமிகள். சைவ மக்கள் இறையருள் பெற்று இன்பம் அடைவதற்கு வழிகாட்டிய பல யோகிகளையும், சித்தர்களையும், ஞானிகளையும், தொண்டர்களையும், பக்தர்களையும், எமக்கருளிய பெருமை நல்லூர்க் கந்தனின் திருவருளேயாகும். நாம் இறையருள் பெற்று பேரின்பப் பெருவாழ்வை அடைவதற்கு அருள் புரியும் தோற்றத்தை நல்லூரில் கண்டு நிறைவு பெறலாம்.

நமக்கெல்லாம் அடிக்கடி துன்பம் உண்டாவதற்குக் காரணம் நாமே செய்த தீவினைகளேயாகும். " தீதும் நன்றும் பிறர்தர வாரா ". எமது தீவினைப் பயனிலிருந்து நாம் விடுபட வேண்டுமெனில் கலியுகவரதனாகிய கந்தப்பெருமானின் திருவருளே துணைபுரியும்.

முருகப் பெருமானே சிவபெருமான். இவர் வேறு, அவர் வேறு அன்று என்ற உணர்வுடனும், நாமெல்லாம் அவரின் அடியவர்கள் - எல்லோரும் முருகப் பெருமானின் அன்பர்களே என்று கருதி ஆலயப் பணிகளில் பணிவுடனும் பக்தியுடனும் செயற்பட்டால் " தெய்வம் மானுஷ ரூபணே ", என்ற வாக்கின்படி மனித வடிவிலே முருகன் எளிதில் நமக்கு தன்னருள் தருவான். எமது இந்து இளைஞர் பேரவைத் தொண்டர்கள் இதனை நன்குணர்ந்து நல்லூர்த் திருவிழாக் காலங்களில் பணியாற்றி வருகின்றார்கள்.

நல்லூர் முருகனை தரிசனம் செய்து வழிபடுவோர் உற்சவ நாட்களில் திருப்புகழ், கந்தர் அனுபூதி, திருமுருகாற்றுப் படை, முருகநாம பஜனை முதலியவற்றை கூட்டாகச் சேர்ந்து பாடிப் பரவசத்துடன் வழிபடுவதாலும் அவனது அருளை இலகுவில் பெறலாம்.

" கூறு மடி யார்கள் வினை தீர்க்கு முகமொன்றே. " ஆம். தொண்டர்களின் வினைகளை ஆறுமுகக் கடவுளின் ஒரு முகம் தீர்க்கிறது என்பது அருணகிரியாரின் வாக்கிலிருந்து புலனாகின்றது. அஞ்சுமுகம் தோன்றின் ஆறுமுகம் தோன்றும், நல்லூர் முருகன் ஆலயத்தில் சரியைத் தொண்டும் கிரியைத் தொண்டும் செய்து நாம் திருவருள் பெறுவோமாகுக.

" எவ்வுயிரும் தன்னுயிர்போல் எண்
ணியிரங்கவும் நின்
தெய்வ அருட்கருணை செய்யாய்
பராபரமே "

— தாயுமானவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகா — உன் வேல் போற்றி !

அழகா — உன் மயில் போற்றி !!

சண்முகா — உன் சேவற் கொடி போற்றி !!!

## க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்

என்றும்

உங்கள் தேவைகளுக்கு

- ○ விளைவு சூடம்
- ○ அபிஷேகச் சாமான்கள்
- ○ ○ புதுமனை அத்திபாரப் பொருள்கள்
- ○ நாள் சரக்குகள் — குங்குமப்பூ
- ○ ○ விவாக முகூர்த்தப் பொருள்கள்
- ○ ○ அஷ்டபந்தன மருந்துத் திரவியங்கள்
- ○ பச்சைச் சந்தனம் — மைசூர் சந்தனம்
- ○ ○ ஆயுள்வேத மருந்துகள்
- ○ மருந்துச் சரக்குகள்
- ○ வாசனத் திரவியங்கள்

வைத்தியர்களுக்குத் தேவையான

☐ சூரணம் ☐ தைலம் ☐ எண்ணெய் வகைகள் ☐ லேகியம்

☐ பஸ்பம் ☐ செந்தூரம் ☐ குளிசை வகைகள்

எப்பொழுதும் பெற்றுக் கொள்ள

# க. செ. கைலாசம்பிள்ளை
# அன் சன்ஸ்

மருந்துச் சரக்கு வியாபாரம்

4, பலாலி வீதி, 2 ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(ஆரியகுளம் சந்திக்கு அண்மையில்)

76 (5), மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைப் புலவர் - திரு. க. சி. குலரத்தினம்

"யாழ்ப்பாடி"

யாழ் மாநகரமன்றின் சைவசமய விவகாரக்குழு நாவலர் மண்டபத்தில் ஆதிசங்கராச்சாரியார் வழிவந்த காஞ்சிபுரமாச்சாரிய சுவாமிகள் ஞாபகார்த்த விழாவை கடந்த ஜனவரி மாதத்தில் கொண்டாடியது. நூறாண்டு நிறைவாழ்வு வாழ்ந்த காஞ்சி சங்கரபீடத்தின் அறுபத்தெட்டாவது பீடாதிபதியாக இருந்தவர் ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள்தான் நூறாண்டு சிறப்பாக வாழ்ந்து நிறைவு கொண்டாடப் பெற்றவர். சங்கர மடத்துக்குள்ளே – தொழிலதிபர் பிர்லா இரண்டுகோடி ரூபா செலவில் கட்டிக் கொடுத்த மண்டபத்திற்குள் ஸ்ரீ காஞ்சி முனிவர் அடக்கம் செய்யப்பட்டுள்ளார். ஒன்பதடி அகலமும் எட்டடி ஆழமும் கொண்ட குழியில் – உட்கார்ந்த நிலையில் உடல் வைக்கப்பட்டு, சந்தணக்கட்டைகளும் மூலிகைகளும் உப்பும் கொண்டு அக்குழி நிரப்பபட்டுள்ளது. சங்கர மடத்திலே எண்பத்தேழு ஆண்டுகாலம் மடாதிபதியாக இருந்தவரும் இவரேயாவர். 1993 மே மாதம் இவரது நூறாண்டு பிறந்த தின விழா மகோன்னதமாகக் கொண்டாடப்பட்டது. இவர் 8-01-1994 பகல் 2 மணி 58 நிமிட வேளையில் இயற்கையெய்தினார். இவர் 1894 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் தேதி விழுப்புரம் என்னும் ஊரிலே இந்தியாவில் பிறந்தவர். இவரது இயற்பெயர் – பெற்றோரிட்ட நாமம் சுவாமிநாதன் என்பது. இவரது பதின்மூன்றாவது வயதில் 67 ஆம் மடாதிபதியாக இருந்த ஸ்ரீ மகாதேவ சுவாமிகள் இவரை தமது வாரிசாக தேர்ந்து (1907 ஆம் ஆண்டு) இவருக்கு சந்திர சேகரேந்திரசரசுவதி என்று பெயர் சூட்டப் பெற்றார். இவர் வாரிசாக தேர்ந்தெடுக்கப்பட்ட எட்டாம் நாள் ஸ்ரீ மகாதேவ சுவாமிகள் இயற்கையெய்திய தால் இவரே மடாதிபதியானார். அன்று முதல் எண்பத்தேழு (87) ஆண்டுகள் மடாதிபதியாக இருந்து தொண்டாற்றி நிறைவடைந்தார்.

காஞ்சிப்பரமாச்சாரிய சுவாமிகள் 20-05-1894 இல் மத்தியானம் 1.30 இற்கு இந்தியாவில் விழுப்புரத்தில் ஜனனமானார். இவருடைய சாதகம் —

| | | | |
|---|---|---|---|
| வெள் இராகு | 9 | சூரி புதன் வியா | 11 |
| செவ் | கிரக நிலை | | 12 |
| 6 | | | இலக் |
| 5 | சந் | 3 | கேது சனி |

| | | | |
|---|---|---|---|
| சூரி புத | 5 | 6 | வியா கேது |
| செவ் வெள் | அம்ச நிலை | | 8 |
| 2 | | | 9 |
| இலக் இராகு | சந் | 11 | சனி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் பிறந்த காலையில் சனி மகாதெசையில் 4 வருடங்கள் 7 மாதங்கள் 9 நாட்கள் இருப்பில் இருந்துள்ளன. பிறப்புச் சாதகத்தில் கிரகநிலை அமைப்புக்கள் மிகவும் பலமாக அமைந்துள்ளதைக் காணலாம். ஆன்மீகம் சிறக்க அமைந்து, நிறை ஆயுட்காலத்துடன் ஞானத்துடன் இவர் பல்லோராலும் பராட்டப்படக்கூடியாங்கு தொண்டுகளாற்றியுள்ளதை கிரக அமைப்புக்கள் உறுதி செய்கின்றன. இவர் 8-01-1994 இல் காலமாகிய பொழுது வியாழ மகா தெசையில் வெள்ளி புத்தி நடந்து கொண்டிருந்துள்ளது. இப்புத்தி முடிவதற்கு ஆறுமாதங்கள் மூன்று நாட்கள் இருக்கும் பொழுது இவர் காலமானார்.

இலக்கினாதிபன் சூரியன் பத்திலே புத்திகாரகனாய புதனுடன் இணைந்து பலத்துடன் அமைந்ததுடன் ஐந்தட்டமாதிபனாய ஞானகாரகன் - ஆயுள்தானாதிபன் வியாழனும் பரிவர்த்தன யோகபலத்துடன் சேர்ந்துள்ளான். அம்ச நிலையில் இலக்கினாதிபன் நாலாதிபனாகி ஏழில் இங்கும் பரிவர்த்தன யோக பலத்துடன் அமைந்துள்ளான். இவை காரணமாக பூரண ஞானமும் ஞாபகசக்தியையும் கொண்டவராக இவர் விளங்குவதற்கு பொருத்தமாயிற்று. உலகின் பதினேழு மொழிகளுடன் பூரணமான சமஸ்கிருத ஞானத்தையும் கொண்டவராக இவர் விளங்கினார். மோட்சாதிபனாய பன்னிரண்டாதிபன்நாலில் கேந்திரம் பெற்று, வர்க்கோத்தம பலம் பெற்று அமைந்ததும் ஆத்மீக நெறியில் பெரும் வாழ்வை வழங்க உதவியுள்ளது. ஆறு, ஏழாதிபதியான சனியும் நான்கு, ஒன்பதாதிபனாய செவ்வாயும் வர்க்கோத்தமபலம் பெற்றமைந்தமையும் இவரின்ஞான உன்னத வாழ்வுக்கு உதவியுள்ளன. ஆச்சாரிய பெருமானார் தபம், சக்தியாவிலும் முன்னேறவும் உதவியுள்ளன. பிதிர் - சுகஸ்ரீயத்தானாதி செவ்வாய் யோககாரகனாகி - வர்க்கோத்தமபலம் பெற்று - பத்தாம் வீட்டை நோக்கியுள்ளதோடு தமது பூரண செல்வாக்கையும் செலுத்தி வலுப்படுத்தியுள்ளது. மேலும் இச்செவ்வாய் இலக்கினத்தையும் இலக்கினாதிபதியையும் இரண்டாதிபதியையும் ஆண்டிருந்த ஆறு - ஏழாம் அதிபன் சனியையும் கூட நோக்கியுள்ளமையும் பத்திலிருந்த வியாழன் சந்திரனையும் சனியையும் நோக்கியுள்ளமையையும் அவதானிக்கலாம். சந்திரனுக்கு மாரகத்தனாதிபதியாகிய வியாழன் அட்டமாதிபனுமாகி (ஆயுள்தானாதிபன்) தன் ஆயுள்தானத்தை வெள்ளிக்குக் கொடுத்து பரிவர்த்தன யோகம் பெற்றுள்ளதும் வியாழமகாதெசையில் வெள்ளி புத்தியில் சனிசித்திரம் / புதன்சித்திரம் அமைந்த காலத்தில் உடல்நலிவுற்றும் பின் காலமாகியமையும் சிறிது காலம் சுகயீனமுற்றிருந்தமையும் ரோகத்தானாதியான சனி மாரகத்தானமாய இரண்டில் - புதன் வீட்டில் அமைய, ஆயுள்தனாதியான வியாழனுடன் புதன் ஆயுள்தானத்தில் பரிவர்த்தனம் பெற்றிருந்த வெள்ளியின் வீட்டில் அமைந்திருந்தமையும் யாவையும் மிகத்தெளிவாக விளக்குகின்றன. இங்கு வெள்ளி ஆயுள்தானத்தில் பலத்தோடு இருந்த போதிலும் பலம்பெற்ற ஒரு மாரகாதியாகவும் விளங்குபவர் - இராகுவுடன் கூடி இருந்தவர் - ஆறாம் ஏழாம் அதிபனாகிய சனி (ஆயுள்காரகன்) யினால் இரண்டிலிருந்து பார்க்கப்பட்டதுடன் அம்சலக் கினத்திற்கு மாரகாதிபனாக சனி அமைந்துள்ளதுடன் அங்கு ஆயுள்தானாதியை சந்திரன் பன்னிரண்டிலிருக்க நோக்கியுள்ளமையும் அவதானிக்கப்பட வேண்டியதாகும். நவாம்ச இலக்கினத்தின் படியும் அமைப்பின் படியும் சந்திர இலக்கினத்தின் படியும் வியாழன் மாரகனாகவே பலம் பெறுவதோடு அவனது மகாதெசையும் நடைமுறையிலமைந்து இருக்க - நவாம்சத்திலும் வெள்ளி ஆறாதிபனாகவந்து செவ்வாயுடன் கூடியிருந்துள்ளமையையும் நோக்கவே வேண்டும். அவனே புத்திகாரனாக அமைந்துள்ளதும் முறையான மாரகதத்துவத்துள் அமைந்தவனாகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலோகாயத நிலையில் எத்தனையோ மாற்றங்கள் – இடர்கள் ஏற்பட்ட போதி லும் பதின்மூன்றாம் பராயத்தில் பட்ட மேற்ற பரமாச்சாரியார் அவர்கள் தாம் பட்டமேற்ற காலம் முதல் ஒருநாள் கூட தவறாது தமது கடமைகளை – அனுட்டா னங்களைத் தவறவிடவில்லை. அத்துடன் நிற்காது – தம்மைத்தரிசிக்க என்றும் எந்நே ரமும் வந்துகொண்டிருந்த – எல்லாத்துறை களையும் எல்லா நாடுகளையும் சேர்ந்த பக்தகோடிகளுக்கு தரிசனம் வழங்கி யும் அவர்களுடன் அன்புடன் ஆதரவாக உபச ரித்து வரவேற்று பேசியும் தினசரி எட்டு மணித்தியாலங்களுக்கு குறையாது தியான நிலையைக் கடைப்பிடித்தும் வாழ்ந்துள் ளார். இவரது ஜெந்மசாதக கிரக வலிமை கள் இவற்றையெல்லாம் மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. இத்தகைய வலிமை மிக்கார் ஒருவரது ஞாபகார்த்தவுரையை, பல்கலைப் புலவர் என்றும், மனிதகுலமணி விளக்கென்றும், தன்னம்பிக்கையுடைய கருத் துச் சிந்தனையாளர் என்றும் கடவுட் சிந் தனையாளரென்றும், மூதறிஞரென்றும் பன் மொழிப் புலவரென்றும், மொழி பெயர்ப் பாளரென்றும் மரபுவழி சமய – தழிழ்கல்வி பெற்று தமிழுக்கும் சைவத்துக்கும் தொண் டாற்றும் தூய்மையாளரென்றும், ஆசிரிய ரென்றும், கல்வித்திணைக்கள எழுத்தாள ரென்றும், பல்வேறு நூல்களையும் வெளி யிட்டு வழிகாட்டிய வெளியீட்டாள ரென் றும். விரிவுரையாளர்– மேடைப்பேச்சாளர் என்றும் இன்னோரன்ன பாராட்டுக்களுக் கெல்லாம் தகுந்தவரான – தகுதிதேடிப் பொருந்தியவரான பேரறிஞர் க. சி. குலரத் தினம் மாநகர மன்றம் கொண்டாடிய ஸ்ரீ சங்கராச்சாரியார் ஞாபகார்த்த விழா விலே சிறப்புரையை நிகழ்த்தினார். இந்த ஞாபகார்த்தவுரை இரண்டுமணி நேரத் திற்கு மேல் நிகழ்த்தப்பட்டது. எத்த னையோ விடயங்களை எல்லாம் சிறப்பாக எடுத்துக் காட்டி – அடிக்கடி எம்மையும் சுட்டிக்காட்டியும் உரை நிகழ்த்தினார். இந்தவிழாவுக்குப் பின் இப்பெருமகனார் வேறு விழாக்களில் கலந்து கொள்ளவே யில்லை என்பது எம் உள்ளத்தே சிந் தையைக் கிளறி இரத்தமயமாக்கிக் கொண் டுள்ளது.

ஞாபகார்த்த விழா ஆரம்பமாவதற்கு முன்பும் சிறுக ஆரம்பமாகிநடந்து கொண் டிருக்கும்போதும் ஒருமணிநேரமாக எம் முடன் பல்வேறு விடயங்களுடன் ஸ்ரீ சங்க ராச்சாரியாரைப் பற்றியும் ஆழமாகப்பேசிக் கொண்டிருந்தார். 1938 ஆம் ஆண்டு திரு நெல்வேலி அம்பாள் ஆலயத்திற்கருகாமை யில் நாம் ஒரு தமிழ் மலையைசந்தித்து சில விடயங்களை வாதாடிவிட்டுவரும் வேளை இளைஞராக இருந்த இவர் ஆசி ரியகலாசாலைப் பெரியோருடன் நின்ற காலையில் எம்மை முதன் முதலில் சந்தித் தார். இளைஞனாகிய நான் களையுடன் நடந்து வருவதைக்கண்டு அவர் கேட்ட கேள்விக்கு அளித்தபதில் அவரைத் திகைப் பூட்டியதால், தம் முன்நின்ற பெரியோருக்கு எம்மைச்சுட்டிக்காட்டி நான் கூறியவிடயத் தினை (1938 இல் ஈழகேசரிபத்திரிகையில் இச்சந்திப்புக்கு ஒருவாரம் முன்னதாக வெளிவந்திருந்த யாழ்ப்பாண இடப்பெயர் ஆராய்ச்சிக்கட்டுரை பற்றியும் அதனை எழுதியவரை சந்தித்து திரும்புவதையும் கூறியதனை) - எடுத்துரைக்க, இவர்கள் மத் தியிலிருந்த மயிலிட்டி திரு. சுவாமிநாதன் எம்மை அடையாளம் கண்டு கொண்டார். இதுவே இப்பல்கலைப்புலவரை நாம் முத லில் சந்தித்தது. இதன்பின்னர் நாமும் கந்தர்மடவாசியாகியதால் அடிக்கடி சந்தித் தோம். அக்காலையில் அவரது ஆயுள் எல் லையை எழுபத்தெட்டாம் அகவையில் முடிவுறுமென்று கூறப்பட்ட சம்பவத்தை அந்த ஞாபகாா த்தவுரைக் கூட்டத்தில் எமக்குக் கூறி விளக்கங்களை கேட்டார். நளவருடம் ஐப்பசித்திங்கள் மூன்றாம் தேதி திங்கட்கிழமை (19-10.1916) பூசநட்சத் திரத்திலே பிறந்த இப்பேரறிஞர் எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வின்படி எழுபத்தெட்டாம் வயதில் ஆயுள் பூர்த்தியாகுமென முப்பத்தைந் தாண்டுகளுக்குமுன் கூறப்பட்டதைக் சுட்டியே அவர் பேச்சு இருந்தது. படுக்கையில் படுத்து - மற்றோர் பேச்சுக்கு ஆட்பட்டு இம்மண் மண்ணோடு சேருமா என்பதுதான் அவர் கவலையாக இருந்தது. தாம் தொடங்கிய பிரசுரங்கள் பல எழுத்துப் பிரதிகளாகவே அச்சேறாதிருப்பதும் அவர் கவலைக்கு காரணமாகவும் இருந்தது. ஏற்கெனவே வெளிவந்த நூல்கள் போன்று மற்றஎழுத்துப்பிரதிகளும் நூல்களாக அமைவதற்கு தக்கநடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் முன்பு போல தமக்கு உதவிதேவையென்றும் அவர் கேட்டவற்றை செய்வதாக ஒப்பினோம். அதுவே எங்களது கடைசிப் பேச்சாவும் அமையுமென்று அன்று சிறிதும் நாம் சிந்தித்தோமில்லை. இது நிகழ்ந்தது 12-0'-1994 மாலை. 6-02-1994 இரவுவந்த தகவல் எமக்கு திகைப்பூட்டியது. இத்துணைவிரைவில் எங்கள் தமிழ்ப்பேரறிஞனை -''செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்'' தந்த முதுபெரும் எழுத்தனை - ''தமிழ் தந்த தாதாக்கள்'' தந்த ஆய்வாளனை-''சைவம் வளர்த்த சான்றோர்கள்'' வெளிவரமுன்னரேகாலன் தம்வயப்படுத்திய செய்தி திடுக்கிடவைத்தது. உடல் நலிவுகாரணமாக உடன் செல்லவியலாதவிடத்தும் விடியுமுன் ஆங்குச்சென்று அப்பெருமகன் பூதவுடலைத் தரிசித்தோம். அவர் முகத்திலே பூரண நிம்மதி நிறைந்திருந்தது.

பழம் பதியான கந்தர் மடத்தைச் சார்ந்த திரு. சதிரவேலு சின்னையா - பொன்னு தம்பதிகளுக்கு மகனாக 19-10-1916 இல் இவர் பிறந்தார். இவர் பிறந்தது தமிழ் நள வருடம் ஐப்பசித் திங்கள் 3 ஆந் தேதி திங்கட்கிழமையாகும். அன்று பூசம் நட்சத்திரம். இவருடன் எண்மர் பிறந்து, பின் ஐவராகி, ஐவரில் மூவர் மீந்தனர். இளமையில் தந்தையை இழந்தமையால் குடும்பப் பொறுப்பு இவரது தமையனார் திரு. குலசேகரத்திடம் அமைந்தது. இவர் தமையனார் - சக்கடத்தார் கா. அருளம்பலம் அவர்கள் மகள் பொன்னம்மா என்பாரை துணைவியாக கொண்டார். அண்ணியாரின் ஆதரவுடன் இவரது கல்வி மேன்மையுற்றது. ஆரம்பக்கல்வி ஆனைப்பந்தியிலும் பின்னர் இந்துக் கல்லூரியிலும் தொடர்ந்து பரமேஸ்வராக் கல்லூரியிலுமாக அமைந்தது. இங்குதான் இவரது தமிழ்க்கல்வி - ஆன்மீக கல்வி பெரிதும் வளர்ச்சி பெற மாவைக்கவுணியன் என்று சிறப்புற அழைக்கப்பட்ட ஸ்ரீ நவநீத கிருஷ்ண பாரதியார் தொடர்பு இவருக்குண்டாயிற்று. தொடர்ந்து ஆசிரிய பயிற்சிக் கலாசாலை பெருமக்கள் தொடர்பும் பரமேஸ்வராக் கல்லூரி அதிபர் - முகாமையாளர் திரு. சு. நடேசபிள்ளை தொடர்பும் அமைந்தன. ஆசிரிய கலாசாலை அதிபர் திரு. சுவாமிநாதன், பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை, அளவெட்டி திரு. கைலாசபிள்ளை ஆகியோர் தொடர்புகளும் இவரைப் படிப்படியாக உயர்நிலைக்கு வழிவகுத்தன. நல்லூர் செல்லப்பாசுவாமிகளின் அன்புச் சீடர் சிவயோகசுவாமிகளது அன்புக்கும் இவர் பாத்திரரானார்.

விடயங்களை கிரகிக்கும் ஆற்றல் - எழுத்தாற்றல் - ஆய்வுத்துறை ஞானம் - யாழ்ப்பாண பாரம்பரியங்களை எவர்க்கும் தெளிவாக விளக்கும் ஆற்றல் - அறிவுக் களஞ்சியமாக - தமிழையும் சமயத்தையும் பிணைத்து வாழ்ந்த மேதையாக, புண்ணியப் பிறவியாக, சமுதாயத் தொண்டனாக, இளைஞருக்கு மட்டுமன்றி மற்றோருக்கும் வழிகாட்டும் வழிகாட்டியாக - மேடையிலே பேசும் பேச்சாற்றல் நிறைந்தவராக - எதனையும் நுட்பமாக எடுத்துரைக்கும் ஆற்றல் கொண்டவராக - கேட்போரைச் சிந்திக்க வைப்பவராக - வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டியவராக இவர் விளங்கினார். தன்னம்பிக்கையும் ஆற்றலும் நிறைந்து விளங்கிய இவர் கல்வித் துறையில் பல்வேறு நூல்களை வெளியிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் சமுதாயத்துக்குதவியும் அதிபர் பரம்பரைகளை – அவர்கள் ஆக்கங்களை ஆய்ந்தாய்ந்து உண்மைகளை தெளிவுற நூல்களாக எழுதி வெளியிட்டும் தொண்டுகளாற்றியுள்ளார். என்ன விடயத்தைப் பற்றியும் அவருடன் போய் பேசினாலும் அவற்றுக்கெல்லாம் தக்க விளக்கங்களை எடுத்துக்கூறி தெளிவுற வைக்கும் தகைமை கொண்டவர். இவர் ஒரு நடமாடும் பல்கலைக் கழகமாக விளங்கினாரென்றால் அது மிகையன்று. இவர் தாம் வாழ்ந்த காலத்துள் எப்படி வாழ்ந்தார் என்பதை உலகறியச் செய்துள்ளாரென்று துணிந்து கூறலாம். செந்தமிழ் வளர்த்த செம்மலாக விளங்கும் இப்பெரியார் தாம் பிறந்த மண்ணுக்கு – தமது இனத்துக்கு – தமது மதத்துக்கு தமது சமுதாயத்துக்கு ஆற்றியுள்ள தொண்டுகள், சேவைகள், பணிகள் அளப்பரியன. பழமையுடன் நிற்காது – புதுமையை மட்டும் தழுவாது எல்லா இடத்தும் எல்லாவற்றையும் நுணுக்கமாக எடுத்தாண்டு - அவை மக்கள் சமுதாயத்துக்கு – இன்றைக்கு மட்டுமன்றி வருங்காலத்தும் பயன்தரவல்ல ஆக்கங்களைத் தந்துள்ளார். என்றும் இளைஞனாக– தமிழில் தொண்டாற்றும் அகத்தியனாக – பல் பொருள்களையும் விளக்கும் ஆற்றலுடைய கலைக் களஞ்சிய அகராதியாக இவர் விளங்கினாரென்று துணிந்து கூறலாம்.

இவர் வாழ்வில் தம் இளைய சகோதரர் திரு. கனகசபாபதியின் இரண்டு பெண் மக்களையும் பந்தபாசத்தோடு கல்விச் செல்வமூட்டி, வாழ்க்கையில் அவர்களை அமைத்து வாழவைத்த தியாகசீலர். சமீப காலத்தில் யாழ்ப்பாணத்திற்குள் புகுந்த சாத்தான்களால் ஒருமகள்கைம்மை நோற்க நேர்ந்தது பரிதாபமாகும். சாத்தான்படையினர் தேவையற்ற ஒரு படுகொலையை இங்கு செய்து அப்பெண்ணின் மாங்கல்யத்தை அழித்துவிட்டனர். இது இப் பெருமகனாருக்கு பெரும் வேதனை கொடுத்த சம்பவமாகும். தாம் எழுதிச்சேகரித்து வைத்துள்ள எழுத்துப் பிரதிகளை நூல்களாக்கி அவற்றில் வரும் வருமானங்களை இப் பெண்ணுக்கும் அவர்குழந்தைக்கும் கொடுக்க வகைசெய்ய வேண்டுமெனும் நினைவு இவரிடம் நிறைந்திருந்தது. எதிர்பாராது திடீரென அமைந்த இவர்முடிபு இதனை செயற்படுத்தவிடவில்லை. இவரது அன்பர்கள் இணைந்து செயற்பட்டு அவர் விட்டுச் சென்றுள்ள கையெழுத்துப் பிரதிகளை நூல்களாக்கி – வருங்காலச் சந்ததியினருக்கு இப்பெருநூல்களை உதவச் செய்வதோடு இச் சிறு குடும்பத்தின் நிம்மதியான வாழ்விற்கும் வழி வகுப்பது இப் பன்மொழிப் புலவருக்கு நாம் செய்யும் பெரும் கைம்மாறாகும். இவர்விட்டுச் சென்ற இடைவெளி நிரம்புவது – நிரப்புவது கஷ்டமாகும். இவர் நினைவு இம் மண்ணுள்ளவரை நிலைக்கும் என்பது திண்ணம். எங்களுக்கு அவர் உறுதுணை வேண்டிய இவ்வேளையில் எம்மை விட்டு இவர் பிரிந்தது வேதனையூட்டினும் அவர் ஞாபகமாக அவர் விட்டுச் சென்ற கடமைகளை தொடர்ந்தாற்றுவதன் மூலம் இவர் ஆத்மசாந்திக்கு வழிவகுப்பதாக அமையும். இதற்கு இறை துணையை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

## தாயை ஒருமுறை வணங்கினால்

*ஆறுமுறை பூமியை வலம் வருவதாலும் பதினாயிரந்தடவை காசியில் குளிப்பதாலும் பலநூறு முறை சேதுஸ்நானம் செய்வதாலும் கிடைக்கக் கூடிய புண்ணியங்கள் யாவும் பெற்றதாயை ஒருதடவை பக்தி பூர்வமாக வலம் வந்து வணங்கினால் கிடைத்து விடும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள் பொலியும் ஆறுமுகனின் கருணை பெருக

*

'பாட்டா' ஏஜன்ஸி

## யாழ் ரேப் செறிக்

இல. 11, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

---

குகன் அடியாருக்கு அவனருள் பெருகுக.

## ELAVARASI TEXTILE

நம்பிக்கை - நாணயம் - கைராசி
எண்ணற்ற ரகங்களில் இணையற்ற டிசைன்களில்
திருமணம் மற்றும் விசேட முகூர்த்த
பட்டுப் பிடவைகளை
உங்கள் மனம்போல தெரிவுசெய்ய
ஏற்றதோர் ஒப்பற்ற எழிற்கூடம்
நிறைவாக தேர்ந்தெடுக்க

## இளவரசி ரெக்ஸ்ரைல்ஸ்

57, நவீனசந்தை - உட்புறம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்றிடுவோம் வாரீர்

திரு வே. த. இரத்தினசிங்கம்

எங்களிரு கண்களென நம்தமிழர் போற்றும்
எழில்தமிழும் சைவமுமிங் ஏற்றம்பெற வேண்டி
சங்கமாம் சமயவிவ காரக்குழு சமைத்து
சமயநெறி துலங்கபல நற்பணிகள் ஆற்றி
தங்கமலர் அனையநல்ல குமரன்மலர் சூட்டி
தரணியெல்லாம் புகழ்மணக்க நற்சேவை ஆற்றும்
எங்கள்யாழ் நகராட்சி ஏற்றமுடன் திகழ
எழில்முருகன் புகழ்பாடி ஏற்றிடுவம் வாரீர்.

## முருகன் பிள்ளைத்தமிழ்

''மணி'' என்னும் சொல் ஒவ்வோர் இல்லத்தினும் தெய்வமணியாய் ஒலிக்கும் சுப்ரமண்யக்கடவுளை தத்தம் இல்லத்தில் குழந்தையாகப் பெற்று மகிழ்ச்சி அடைய விரும்புவர் பெற்றோர்கள், கவிஞர்களோ கந்தமூர்த்தியை குழந்தைத் தெய்வமாக்கி பிள்ளைத்தமிழ்ப்பாடி மகிழ்கின்றனர். தெய்வத் தமிழ் மொழியில் கந்தசுவாமியை பாராட்டிப்பாடிய பிள்ளைத்தமிழ்பாடலொன்றினை இங்கே காணலாம்.

''கூனல் இளம்பிறை வேணியர் அஞ்சலி கொண்டே இன்பான
கோதில் அரும்பொருள் ஓதி மகிழ்ந்த குழந்தாய்! எந்தாய்! முன்
கானவர் அங்கனை யான சௌந்தரியே காண்பார் என்றே மென்
காலில் விழுந்தொரு மாலின் மயங்கிய கந்தா! செந்தூரின்
மான மிகுந்தெதிர் சூரனை வென்றுயர் மஞ்சா டும் சோலை
வாவி விளம்பல ஆகு பரங்கிரி வந்தாய்! அம்தாது
தேனவர் அம்புய ராதம் உறும்குக! செங்கோ செங்கீரை!
சேவல் அரும்பு பதாகை பெறும் கீர!! செங்கோ செங்கீரை!''

— அருணாசலக்கவிராயர்
(திருப்பரங்குன்றப் பிள்ளைத்தமிழ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ ஆங்கில மருந்து வகைகளும்
★ பால்மா, பாடசாலை உபகரணங்கள்,
★ அன்பளிப்பு பொருள்கள் ஆகியவற்றை
★ நியாய விலையில் பெற்றுக்கொள்ள
சிறந்த இடம்

# ஜீவா மருந்தகம்

226, சேர். பொன். இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.
( பல்கலைக்கழக முன்பாக )

தரமான சுவையான சுகாதார விதிகளுக்கு அமைய
சிற்றுண்டி உணவு வகைகளை
தயாரித்து வழங்கும்

## அபிராமி விலாஸ் நிர்வாகத்தினர்

திருமண வைபவங்கள் மற்றும் முக்கிய
விஷேட வைபவங்களுக்கு சகலவிதமான
சிற்றுண்டி வகைகளும் காலை மதியம் இரவு உணவுகளும்
ஆடர்களுக்கு செய்து கொடுக்கப்படும் என்பதை
அன்பர்களுக்கும், நண்பர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும்,
அறியத்தருகின்றோம்.

# அபிராமி விலாஸ்

212, 214. இராமநாதன் வீதி,
திருநெல்வேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனினும் இனிய

**ஐஸ்கிறீம் வகைகள்**

★ பொம்பே சுவீற்ஸ் ★ புருட் மஸ்கட்

மற்றும்

உங்கள் அபிமானம் பெற்ற

**றிக்கோ கோப்பியை**

உங்கள் முன்னிலையில் அரைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

# செந்தாமரை

( றிக்கோ )

## குளிர்த்தடாகம்

370, கேணல்கிட்டு சாலை (ஆஸ்பத்திரி வீதி,) யாழ்ப்பாணம்.

---

எங்களிடம்

○ டொபி வகைகள்

○ இனிப்பு வகைகள்

○ பிஸ்கட் வகைகள்

○ பால்மா வகைகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும்

பெற்றுக் கொள்ளலாம்.

# விஜயா களஞ்சியம்

64, ஆஸ்பத்திரி வீதி, தொலைபேசி: 24184 யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கில மருந்து

வகைகள் அனைத்திற்கும்

நாடவேண்டிய

ஒரே நிறுவனம்

↓

**RATNAM PHARMACY & GROCERY**

388, HOSPITAL ROAD,
JAFFNA.

---

சுவையான தரமான

❋ ஐஸ்கிறீம் வகைகள் ❋

❋ குளிர்பான வகைகள் ❋

❋ கேக் வகைகள் ❋

❋ சிற்றுண்டி வகைகள் தயாரித்து வழங்குவதில் ❋

யாழ் நகரில் முன்னணி வகிப்பவர்கள்

ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இன்றே விஜயம் செய்யுங்கள்

**ராஜா கிறீம் ஹவுஸ்**

36, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவநாகரீக - கவர்ச்சி மிக்க

ஆடை அணிகளுக்கு

நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

V

# பாலேந்திரா

170, நவீன அங்காடி, யாழ்ப்பாணம்.

★ யாழ் நகரில்

மக்கள் தேவையை உணர்ந்து

மக்களுக்காக நடாத்தப்படும்

வியாபார நிறுவனம்

தனித்துவமான பலசரக்கு மாளிகை

★

# அம்பிகை களஞ்சியம்

304 ( 110 ) மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

55 வருட சேவை

★ தன்னிகரற்ற சேவையில்

★ தன்னிறைவு காண்கிறது.

★

சன்லைட் றெக்கிளீனஸ்

( சூரியப் பிரகாஷ் )

மின்சார நிலைய வீதி,

( பழைய பஸ் நிலையம் முன்பாக )

யாழ்ப்பாணம்.

கிளை: கச்சேரியடி - யாழ்ப்பாணம்.

உங்கள் சேவையே

எங்கள் திருப்தி

ரட்ணம் ஆடை அகம்

177, சிறப்பு அங்காடி,
( நவீனசந்தை உட்புறம் )

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சண்முகா சரணம்

ஆறுகோணமாய் ஆறெழுத்தாகி
ஆறு சிரமும் அழகிய முகமும்
ஆறிரு செவியும் அமர்ந்த மார்பும்
ஆறிரு கண்ணும் அற்புத வடிவும்
சரவணை தந்த சடாட்சரப் பொருளே
சடுதியில் வந்து தமிழரைக் காப்பாய்
பொங்கிடும் உனதருள் பொலிக எங்கும்

வடமாகாண மக்களுக்கான சேவை
குமரனருளால் தொடர்கின்றது.

நியாய விலையில் பொருள்களை கொள்வனவு செய்ய

# வீ. எஸ். பி. குறூப்

266 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**உங்கள் விருப்பு — எங்கள் நிறைவு**

# V. S. B. GROUP

266 A, Stanley Road, Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லை கந்தன் அருளால் சமாதானம் நிலவட்டும்

THIRUPATHY TEX

நவீனரகங்கள் — மலிவானவிலை

எல்லாவகையான பிடவை வகைகள்

★ காஞ்சிபுரம் ★ மணிப்புரி ★ கைத்தறிவகைகள்

மணமக்களுக்குரியவைகளுக்கும்

★

திருப்பதி ரெக்ஸ்

33, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

முருகனடியார்க்கு மங்களம் பொங்குக

NEW SIVAJAM TEXTILE

திருமணம் மற்றும் முகூர்த்த வைபவங்களுக்கு
எண்ணற்ற ரகங்களில் - இணையற்ற டிசைன்களில்
பட்டுப்புடவைகளை உங்கள் எண்ணம் போல்
தேர்ந்தெடுக்க

● நம்பிக்கை ● நாணயம் ● கைராசி

நிறைந்த ஆடையகம்

நியூசிவாயம் ரெக்ஸ்ரைல்ஸ்

இல. 58, நவீன சந்தை, - உட்புறம் யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MENAN TRADING CO.

No: 82, 4 th Cross Street, Colombo II

No: 208, Prince Street. Colombo II

**GENERAL MERCHANTS**
**&**
**COMMISSION AGENTS**

DEALERS IN LOCAL FOOD PRODUCTS

யாழ். மாநகராட்சி மன்ற சைவசமய

விவகாரக் குழு வெளியிடும்

" நல்லை குமரன் மலர் "

சிறப்போடு வெளிவர வேண்டுமென

உளமார வாழ்த்துகின்றோம்.

V

## மேனன் ரேடிங் கோ

## M. T. C.

T. P. 324092


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீகுமாராயநம:

கவர்ச்சிமிக்க

அச்சுவேலைகளை

நியாயமான கட்டணத்தில்

திருப்திகரமாக செய்வதற்கு

எப்பொழுதும்

நாடுங்கள்

# சாந்தி அச்சகம்

நாச்சிமார் கோவிலடி,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சுத்தமான புண்ணாக்கு
★ காவடிமார்க் கற்பூரம்
★ கோழித்தீன் பாக்கு
★ வாட்பிளேட்
★ கொழும்புச் சீமேந்து
★ பலசரக்கு பொருள்கள்

மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

C. M. Suganthini

சி. எம். சுகந்தினி

மாட்டுத்தீன், கோழித்தீன், பலசரக்கு பொருள்கள் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

---

உங்களின் வீட்டுப்பாவனைக்கு வேண்டிய
எஸ் - லோன் பைப்வகைகளுக்கும்,
நீர் இறைக்கும் இயந்திரங்களுக்கும்,
மின் பொருட்களுக்கும்
நாடவேண்டிய ஸ்தாபனம்.

நியூரோன் எலெக்ரிக்கல்ஸ்

141, 143, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய அறிமுகம்

நவ நாகரீகத்துக்கேற்ப ஆடைகள் தைத்துப்
பெற்றுக்கொள்ளலாம்.

# சிற்றி போய் ரெயிலர்ஸ்

**(நகரப் பையன் தையலகம்)**

**181, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.**

---

வாடிக்கையாளர்களுக்கு ஓர் அன்பான அறிவித்தல்

இதுவரை காலமும்

## கிறீன்சியஸ் ரெயிலறிங்

என்ற பெயரில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம்
28-3-94 திங்கட்கிழமை தொடக்கம்

## குமார் தையல் அகம்

என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்
கொள்கிறோம்.

# குமார் தையல் அகம்

உரிமையாளர்: சி. சூரியகுமார்

இல. 11 (34) பெரியகடை, யாழ்ப்பாணம்.

# கல்யாணி கிறீம் ஹவுஸ்

73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

- ஐஸ்கிறீம் வகைகள்
- ஐஸ்கோப்பி — ஐஸ்ஜெலி
- சொக்லட் கிறிப்ஸ் — ஸ்ரோபரி கிறிப்ஸ்
- குளிர்பான வகைகள் — சிற்றுண்டி வகைகள்

பிறந்ததினம் — திருமணம் மற்றும் - ஏனைய வைபவங்களுக்கு
கேக்வகைகளைகுறித்த நேரத்தில் செய்து பெற்றுக்கொள்ள
யாழ்நகரில் சிறந்த இடம்

## KALYANI CREAM HOUSE

73, Kasthuriar Road — Jaffna.

" அன்னக்கந்தன் அருள் எங்கும் பொலிக "
யாழ் நவீன சந்தையில் இதுவரை காலமும்

**அலங்கார் புடவை மாளிகை**

என்ற பெயரில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம்
இப்பொழுது

**ரேவதி வண்ண ஆடையகம்**

என்ற புதிய பெயர் மாற்றத்துடன்
தொடர்ந்து உங்கள் அனைத்து புடவைத் தேவைகளையும்
பூர்த்தி செய்ய இயங்கி வருகிறது!

# ரேவதி வண்ண ஆடையகம்

23, சிறப்பு அங்காடி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லைக் குமரன் மலர்
சிறப்புற வாழ்த்துகின்றோம்.

# கணபாலா களஞ்சியம்

24, மேல்மாடி சிறப்பு அங்காடி, யாழ்ப்பாணம்.
( நவீன சந்தை )

விநியோகஸ்த்தர்கள்:- கேமாஸ் மார்கட்டிங் பிரைவேட் லிமிட்.

# SANGEETHA

DEALERS IN QUALITY TEXTILES

வெளிநாட்டில் இருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
புடவை வகைகளை ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள
நாட வேண்டிய ஸ்தாபனம்.

# சங்கீதா

180, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரன் அருள் பொலிகவென

வாழ்த்துகின்றோம்

கண் வைத்தியர்களின் சிபார்சுக்கேற்ப

சிறந்த தொழில் நுட்பவியலாளரினால்

குறித்த நேரத்தில் சிறந்த முறையில்

மூக்குக் கண்ணாடி

வழங்குபவர்கள்

★

இறக்குமதி செய்யப்பட்ட பிறேம்களுக்கும்

போட்டோகிறே (Photo Gray)

கண்ணாடிகளுக்கும்

நாடுங்கள்

எரிக் கணேஸ்

இல: 566, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது

விளம்பரதாரர்களை

ஆதரியுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தானம்

பவ வருஷம் மஹோற்சவ

# விசேஷ தினங்கள் 1994

## 12-08-94 — 07-09-94

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12-08-94 | வெள்ளி | கொடியேற்றம் | பகல் | 10.00 | ( 1 ஆம் திருவிழா ) |
| 21-08-94 | ஞாயிறு | மஞ்சம் | மாலை | 5.00 | ( 10 ஆம் திருவிழா ) |
| 28-08-94 | ஞாயிறு | கார்த்திகை உற்சவம் | மாலை | 5.00 | ( 17 ஆம் திருவிழா ) |
| 31-08-94 | புதன் | சந்தானகோபாலர் உற்சவம் | காலை | 7.00 | ( 20 ஆம் திருவிழா ) |
| | | கைலாசவாகனம் | மாலை | 5.00 | ( 20 ஆம் திருவிழா ) |
| 01-09-94 | வியாழன் | கஜவல்லி-மகாவல்லி உற்சவம் | காலை | 7.00 | ( 21 ஆம் திருவிழா ) |
| | | வேல் விமானம் | மாலை | 5.00 | ( 21 ஆம் திருவிழா ) |
| 02-09-94 | வெள்ளி | தெண்டாயுதபாணி உற்சவம் | காலை | 7.00 | ( 22 ஆம் திருவிழா ) |
| 03-09-94 | சனி | சப்பறம் | மாலை | 5.00 | ( 23 ஆம் திருவிழா ) |
| 04-09-94 | ஞாயிறு | தேர் | காலை | 7.00 | ( 24 ஆம் திருவிழா ) |
| 05-09-94 | திங்கள் | தீர்த்தம் | காலை | 7.00 | ( 25 ஆம் திருவிழா ) |
| 06-09-94 | செவ்வாய் | பூங்காவனம் | மாலை | 5.00 | ( 26 ஆம் திருவிழா ) |
| 07-09-94 | புதன் | வைரவர் உற்சவம் | மாலை | 5.00 | ( 27 ஆம் திருவிழா ) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லை குமரன் மலர்

சிறக்க பங்களித்த உங்களுக்கு எங்கள் உளங்கனிந்த

# நன்றிகள்

- 1994 ஆம் ஆண்டின் நல்லை குமரன் மலர் சிறப்பு ஆசிச் செய்திகள், வாழ்த்துக்கள் வழங்கிய பெருமக்களுக்கும் –
- பல சிரமங்கள் மத்தியிலும் தங்கள் ஆக்கங்களைத் தந்துதவி ஊக்கமு முரனுமுட்டிய எழுத்தாட்சிப் பெருமக்களுக்கும் –
- இம் மலருக்கு பல்வேறு வழிவகைகளிலும் ஆலோசனைகளை வழங்கி வழிகாட்டிய ஞானதீபங்களுக்கும் –
- மலரின் செலவை ஓரளவு ஈடுசெய்ய விளம்பரந்தந்துதவிய வணிகப் பெருமக்களுக்கும் –
- பல்வேறு வழிகளிலும் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஒத்துழைத்து உதவிகள் வழங்கியோருக்கும் –
- மலரை அழகுற அச்சிட்டுதவிய பதிப்பகத்தாருக்கும் எங்கள் உளங் கனிந்த பெருநன்றிகளை ''**பகன்**'' அருள் வேண்டி வாழ்த்தி சமர்ப்பிக் கின்றோம்.

கௌரவ பதிப்பாசிரியர்
சைவசமய விவகாரக் குழு

''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லைச்
செய்ந்நன்றி கொன்ற மகற்கு'' — திருக்குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவினால் நடாத்தப்பட்ட போட்டிகள் - 1993


## சைவ சமய அறிவுப் போட்டி - 1993
(முதலாமிடம் பெற்றவர்கள்)

அதிமேற் பிரிவு



செல்வி தங்கவேலு தவனேஸ்வரி
யாழ். இராமநாதன் கல்லூரி

மேற் பிரிவு



செல்வன் குணநாதன் சுதர்சன்
யாழ். இந்துக் கல்லூரி

மத்திய பிரிவு



செல்வன் கிருஷ்ணபிள்ளை குருபரன்
யாழ். இந்துக் கல்லூரி

கீழ்ப் பிரிவு



செல்வன் குணரெட்ணம் செந்தூரன்
யாழ். இந்துக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்ணிசைப் போட்டி - 1993
### (முதலாமிடம் பெற்றவர்கள்)

மேற் பிரிவு



செல்வி குமாரசுந்தரம் நீதிமதி


செல்வி விக்ரர் வடிவாம்பிகை
யாழ். இராமநாதன் கல்லூரி


செல்வி சோமசுந்தரம் பகவதி
யாழ். மகாஜனக் கல்லூரி

## பேச்சுப் போட்டி - 1993
### (முதலாமிடம் பெற்றவர்கள்)

மேற் பிரிவு


செல்வன் இலங்காபதி ஸ்ரீதரன்
யாழ். மத்திய கல்லூரி

கீழ்ப் பிரிவு


செல்வன் கணேசன் சுஜீவன்
யாழ். இந்துக் கல்லூரி

கீழ்ப் பிரிவு


செல்வி சண்முகரத்தினராசா மாதுமையாள்
யாழ். வேம்படி மகளிர் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## கட்டுரைப் போட்டி - 1993
### (முதலாமிடம் பெற்றவர்கள்)

மேற் பிரிவு



செல்வி கிருஷ்ணபிள்ளை மலர்ச்செல்வி
*யாழ். மகாஜனக் கல்லூரி*

கீழ்ப் பிரிவு



செல்வி மகேந்திரராசா துஷிதா
*யாழ். வேம்படி மகளிர் கல்லூரி*

## கவிதைப் போட்டி - 1993
### (முதலாமிடம் பெற்றவர்கள்)

மேற் பிரிவு

செல்வன் சயனொளிபவன் முகுந்தன்
*யாழ். இந்துக் கல்லூரி*

கீழ்ப் பிரிவு



செல்வன் மகேந்திரராசா பிரவீணன்
*யாழ். யூனியன் கல்லூரி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லை குமரன் மலர் 1994



வெளியீடு:
யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற
சைவ சமய விவகாரக்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org